# சுருள்மலை

கலைஞர் மு.கருணாநிதி

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

# சதுரகிரிமலை

# முகமறியாத



# தீராவிடப்பயணிகள்

34, சிந்தாமணி :: திருச்சி–2.

இரண்டாம் பதிப்பு — 1968

உரிமையுடையது.

விலை ரூ. 2—50.

# அறிமுகம்

**கதை சொல்லும் முறை பலவகை!**

திடீரென்று ஒரு வீட்டில் நடு ராத்திரியில் ஒரு பயங்கர சப்தம் கேட்கிறது. தெருவிலுள்ளோர் அனைவரும் பரபரப்போடு அங்கு ஓடுகிறார்கள். வீட்டுக் கதவு திறந்திருக்கிறது. விளக்கு மங்கலாக எரிகிறது. யாரோ முணகிடும் சப்தம் காதில் விழுகிறது. சிறிது நேரத்தில் அந்த ஒலியும் நின்று விடுகிறது. விளக்கைப் பெரிதாக்கிப் பார்த்தால் சுந்தரவடிவுடையாள் ஒருத்திப் பிண மாகக் கிடக்கிறாள். அவளை ஊரார் அறிவர். ஊருக்கே அவள் மகாலட்சுமி எனப் போற்றிப்புகழ்வர். அவள் பிணமாகிவிட்டாள். அவள் கணவனையோ காணவில்லை. அவன் எங்கே போனான்? அவள் ஏன் கொலை செய்யப்பட்டாள்? இந்தக் கேள்விக் குறி களிலேயிருந்தே கதையின் சிக்கல்கள் ஆரம்பமாகிவிடும்.

நல்ல நிலாக் காலம்! வானம், வெள்ளியை உருக்கி வார்ப் பது போல் உலகமெங்கும் ஒளிபெற்றுத் திகழ்ந்தது. புள்ளி னங்கள் தங்கள் கூடுகளில் தங்கி ஓய்வு பெற்றுக்கொண்டிருந் தன. அந்தக் கிராமமே அமைதி மங்கையின் அணைப்பில் மயங்கி மயங்கி நினைவிழந்திருந்தது. தெருக்களில் குங்கும நிறத்துப் பாதிரிப் பூக்கள் இறைந்து கிடந்தன. நீல நில வொளியில் தன்னந் தனியாக ஒரு அழகி மெல்ல நடந்து கொண்டிருந்தாள். அவள் யார்? அவள் முகத்திலே வேதனை ரேகைகள் படர்ந் திருக்கக் காரணம் என்ன? இப்படியும் கதைகள் துவங்குவ துண்டு.

கதையின் மையக் கட்டத்திலேயிருந்து தொடங்கி, முன்னும் பின்னும் வாசகர்களை இழுத்துச் செல்லும் முறையில் கதையில் நடமாடுபவர்களைப் பற்றிய குறிப்புகள் முன் கூட்டியே அறிவிக்கப்பட வேண்டியதில்லை.

'சுருளிமலை' கதை, நிகழ்ச்சிகளின் மையக் கட்டத்திலேயிருந்து உருவாவதில்லை. ஒரு சிற்றூரின் வரலாற்று மையத்திலேதான் தோன்றுகிறது. அந்த ஊரிலுள்ள முக்கிய புள்ளிகளின் மத்தியில் சுழன்றேடும் நிகழ்ச்சிகளே சுருளிமலை கதையின் கருப் பொருள். அதனல் அவர்களைப் பற்றிய அறிமுகம் மிக அவசியமல்லவா ?

எல்லா குக்கிராமங்களையும் சிற்றூர் என்றே அழைக்கிறோம். ஆனல் இந்தக் கதையிலே வரும் சிற்றூருக்குப் பெயரும் சிற்றூரே !

இப்போது சிற்றூரில் நுழைவோம். கட்டை வண்டியில் ஏறிக்கொண்டுதான் அந்த ஊருக்குள் பிரவேசிக்க வேண்டும். அல்லது நடந்து செல்லவேண்டும். அவ்வளவு நொடி நிறைந்த பாதை. குறுக்கும் நெடுக்குமாகப் பெரும் பெரும் பள்ளங்கள். இன்னல் பலவற்றைக் கடந்துதான் இன்பம் பெறவேண்டியிருக்கிறது என்ற இலக்கணத்தை மெய்ப்பது போல் அழகும் வளமும் மிக்க ஊர் சிற்றூர். ஊரின் முகப்பிலேயே செவ்விளநீர்க் குலைகளுடன் வான்நோக்கி வளர்ந்திருக்கும் தென்னஞ்சோலை ! அதனுள் அமர்ந்து விட்டால் மேனியை மெல்ல வருடித் தாலாட்டும் குளிர் தென்றல் ! அதைக்கடந்து உட்சென்றல் எடுப்பான சிவன் கோயில் — காளி கோயில் - மாரிகோயில் ! திருக்குளம்— அதனைச்சூழ்ந்து நான்கு தெருக்கள் ! பட்டு விரித்தாற்போல் பச்சைப்புற்றரைகள் ! அவைகளையொட்டித் தலையாட்டும் தங்க நிற நெல் மணிகள் குலுங்குகின்ற எழிற் கழனிகள் !

சிவன் கோயில் மணியோசை-இசை முழக்கம்—காளி மாரி கோயில்களில் பம்பை, உடுக்கைகளின் ஓங்கார ஒலிகள்-செக்காடும் சப்தம்—கூடைக்காரிகளின் வியாபாரக் குரல்கள்—கோலியடிக்கும் பிள்ளைகளின் இரைச்சல் - மாந்தோப்பின் நடுவில் அமைந்த பள்ளிக்கூடத்தில் பையன்கள் முழங்கும் வாய்ப்பாடு

பாடத்தின் "கோரஸ்"! இப்படி ஊரே உயிர்ப்புள்ளதாகக் காட்சி யளிக்கும். அந்த ஊரில் நம் கதைக்குத் தொடர்புடையவர்களில் தலையானவர்களைத் தேடுவோம். முதலில் நம் கண்ணில் படுவது, அதோ அந்தக் கோயில் காளைதான்!....

● சிவன் கோயில் காளை 'சிவா' என்றால் அதை யாரும் வெறித்துக் கூடப் பார்க்கமாட்டார்கள். பார்ப்பது 'பாபம்' என்பது மாத்திரமல்ல; அவ்வளவு பயம் அந்த ஊராருக்கு அதன்மீது! வீதியில் கம்பீரமாக ராஜ நடை போட்டுக்கொண்டு அது செல்லும்போது வீட்டோரங்களிலும், வேலிப் பக்கங்களி லும் ஒதுங்கி நின்று வியர்வையால் மேனியை ஈரமாக்கிக் கொள் வர், அவ்வூரார்! கொழுப்பேறிய உடல்-இரும்பினும் வலுவான கொம்புகள் — கருநீலமெனப் பளபளக்கும் ரோமம் அடர்ந்த தோல்-அந்த முரட்டுக் காளையின் கண்களிலே மட்டும் ஒரு கனிவு தென்படுகிறதென ஊரார் சொல்வர். ஆனல் அருகே நெருங்க அஞ்சுவர். பற்று, பாசம், பந்தம், சொந்தமெல்லாம் மனித இனத்துக்கு மட்டுந்தானு தனியுடைமை? மாடுகளுக்கு அவையெல்லாம் இல்லேயா என்ன? சொல்லப்போனல் மனிதனை விட அதிகமாக உழைக்கின்றன; அவனைவிட அதிகமாகத் தன்னை வளர்த்தவனிடம் விசுவாசம் காட்டுகின்றன.

பலநாள் வளர்த்துப் பணத்துக்காக வேருருவனிடம் விற்று விட்டால் சாமான்யத்தில் அந்த வீட்டைவிட்டு நகரு கிறதா மாடு! எத்தனை தடவை தன்னை வாங்கியவனை ஏமாற் றிவிட்டு முதலில் இருந்த இடத்துக்கு ஓடிவந்து விடுகிறது! விற்றவன் விரட்ட விரட்ட, இறுதியில் அதுவாக ஒரு முடி வுக்கு வந்து...தன்னை வெறுத்துப் பணத்தைப் பெரிதென மதித்தவனைவிட, பணம் கொடுத்துக் தன்னை விரும்பியவனை மேலென்ற தீர்மானம் செய்து கொண்டோ என்னவோ...வாங் கியவனிடமே அன்பு காட்டத்தொடங்கி விடுகிறது. அந்த மாட்டினத்தில் சிறப்பும் செழிப்பும் மலிந்த குடும்பத்தில் பிறந் ததுதான் கோயில் காளை சிவா! சிவாவை மக்கள் ஆண்ட வனின் வாகனமென்றே கருதி மரியாதை செலுத்தினர். ஆனல் அதைத் தனக்கு வாகனமாக்கிக்கொண்டான். ஒரு சுட்டிப் பயல்—அவன்தான்.....

● 'சுருளிமலை' யென்றதும் யாரோ பெரிய கொள்ளைக் காரன்-பக்காத் திருடன் என்றெல்லாம் எண்ணத் தோன்றும். பக்தர்கட்கோ, "சுருளிமலை மீதில் மேவும் சீலா! உன்னைத் தோத்தரித்தேன் சுப்ரமண்ய வேலா!" எனப்பாடத் தோன்றும் சுருளிமலைச்சாரல் இன்றைக்கும் திருடர்களும் குற்றவாளிகளும் மறைந்து வாழ்வதற்கான வசதியை அளித்துகொண்டிருக்கிறதென மதுரை மாவட்டத்தார் கூறுகிறார்கள். நமது சுருளிமலையோ திருடர்களையும் குற்றவாளிகளையும் சந்தியில் நிறுத்துகின்ற முயற்சிக்குத் தன்னையே அர்ப்பணிக்கின்றன.

சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். தாய், தந்தை, ஒரு சகோதரி அவர்களே அவனுக்கிருக்கிற ஆதரவு. கோயில் காளை சிவாவைத் தவிர அவனுக்கு அந்த ஊரில் யாருமே நண்பர்கள் கிடையாது. சிவாவுக்கு அடுத்தபடியாக அவன் பிரியம் வைத்திருப்பது மூங்கிலால் செய்யப்பட்ட புல்லாங்குழல்மீது தான்! சிவாவும், குழலும் இருந்துவிட்டால் அவனுக்குப் பசியேகூடத்தெரிவதில்லை. பதினான்கு வயதுகூடச் சரியாக நிரம்பாத அவன்பால் குடும்ப பாரம் முழுவதையும் போடுவதற்கு விரும்பாவிட்டாலும், அவனிடமிருந்து சிறு உதவிகளையாவது எதிர்பார்த்தது அந்த ஏழைக் குடும்பம். அவனோ கோயில் காளை போலக் கவலையற்றுத் திரிந்தான். தந்தை திட்டுவார்—அடிக்க ஓடுவார்—அக்காள் அதைத் தடுத்து அழுவாள்—தாயோ வேதனைக்களமானாள். சோகப்புயலானாள். ஆனால் பெயர் என்னவோ பூஞ்சோலைதான்!...

● மண் மிதித்து, பானை சட்டிசெய்து, வயிறு வளர்க்கும் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு, உழைப்பொன்றே உலக இன்பமெனக்கொண்டு, நாற்பது ஆண்டுகளுக்கு மேல் நகர்த்திவிட்ட பெருமாட்டி—அன்பின் திரு உருவம்—குணக் குன்று—குடும்பத்தின் நிலை விளக்காய் ஒளிவிட்டுப் பெருமை கொண்ட பெண்ணரசு! பொன்னையா வீடென்றால் புரியாது யாருக்கும்—அவன் மனைவி பூஞ்சோலை பெயராலேதான் வீட்டுக்குப் பெயருண்டு அவ்வூரில்! யார் வீட்டில் உடல் நலிவு என்றாலும்

பூஞ்சோலை அங்கிருப்பாள். பிள்ளைப் பேரு? பூஞ்சோலை அடியெடுத்து வைத்தாலே போதும்—சுகப் பிரசவந்தான் எனப் பெரியோர்கள் புகழ்ந்திடுவர். பொங்கலுக்குப் புதுப்பானை, புதிய சட்டி பூஞ்சோலை கையால்தான் வாங்கவேண்டும் என்ற பேச்சு அந்த வட்டாரம் முழுவதிலும் அடிபடும்.

மஞ்சள் முகத்தில் எடுப்பான குங்குமத் திலகம்—பெரு நோக்கு—சாந்த முகம்—குடும்பத்தின் கவலையால் உள்ளத்தில் புயல்! சுருளிமலை அடங்காத பிள்ளையாகி விட்டானே என்ற ஏக்கம்—மகளுக்கு ஏற்ற வரன் கிட்டவில்லை என்கின்ற துக்கம்—அழகு திருக் குமாரிக்கு அணிகலன்கள் பூட்டிப் பார்க்க வேண்டுமென்கின்ற தனியாத ஆசை—மண்ணுலே செய்வ தென்றால் மலைபோல குவித்திருப்பாள் அணிமணிகள்! பொன்னுலன்றே செய்ய வேண்டும்—அதனுல்தான் போலும் மனத் திருப்திக்காக மகளுக்குப் பொன்மணி என்று பெயராவது வைப்போம என்று வைத்துவிட்டாள்.....

பூவார் சோலைப் புது மயில்! பொங்கும் இளமை எங்கும் சிந்தக் காட்சி தரும் கட்டழகு! மொட்டவிழா மல்லிகைபோல் பல் வரிசை-வட்ட நிலா மண்மீது வந்ததுபோல் முகப் பொலிவு! அந்த அழகுச் சிலை மண்மீதும், சுடு நெருப்பின் ஜுவாலைதனை வீசுகின்ற சூளை மீதும் உழன்றதாலே இயற்கை எழில் மறைத்து ஏழை வீட்டு முற்றத்திலே ஏங்கியது. உலகம், தன் வீட்டோடும் —வீட்டுக்கருகே யிருக்கும் பானை வேகும் சூளையோடும்—அந்தப் பானைகளை விற்று வரத் தான் நடந்து செல்லும் ஊர்களோடும் முடிந்து விடுவதாகவே அவளுக்குத் தோன்றும். உடம்பு முடியாத தந்தை—உழைத்து உழைத்து உருமாறி விட்ட தாய்—ஊர் சுற்றும் தம்பி — இவர்களுக்கிடையே குடும்பப் பாசமெனும் கயிற்றினுல் சுற்றி விடப்பட்ட பம்பரமாகச் சுழன்றுள் அந்தப் பாவை — பளிங்குச் சிலை!

கவலையெல்லாம் மறந்த அளவில் களிப்பு ஒருநாள் அவளை ஆட்கொள்ளும்—அதுதான் என்றைக்காவது அவள் தம்பி, பலமுறை கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஊதுகின்ற புல்லாங்

குழல் எழுப்புகின்ற இன்ப ஓசை! அவள் அப்போது கலாபமா வாள்—அதைக் கண்டு தாய் கண்களைக் குளமாக்கிக் கொள்வாள் —"என் தங்கத்தை அடையும் பாக்கியம் யாருக்குக் கிடைக் கிறதோ?" எனக் கேட்டுக் கொள்வாள்.

அப்போது, உள்ளிருந்து பொன்னையாவின் "லொக் லொக்" என்ற இருமல் சப்தம்—அவன் படும் மரணவஸ்தை—அவர்களை வீட்டுக்குள் ஓடச் செய்யும்!... ... அந்த இருமலினூடே தந்தை, மகனைக் கண்டிக்கத் தொடங்குவான். இருமல் அதிகமாகும். தன்னுல் தந்தைக்கு உயிர் வாதனை என நினைத்து சுருளிமலை வெளியேறுவான். அவனைத் தொடர்ந்து ஓடிக் கண்ணீருடன் திரும்புவாள் பொன்மணி! இந்த விசித்திரமான குடும்பத்தைப் பற்றித் தினந்தோறும் பலரிடம் திரும்பத் திரும்ப விமர்சனம் செய்யாவிட்டால் தூக்கமே வராது, தீச்சட்டி சிங்காரத்துக்கு!...

● பெயர் மட்டும் அல்ல; ஆளைப் பார்த்தாலே நெருப்பைப் பார்ப்பதுபோல்தான் இருக்கும். யாராயிருந்தாலும் எரிந்து விழுந்துதான் பேசுவான். எடுப்பான தோற்றமும் மிடுக்கான நடையும் கொண்ட அவனைக் கண்டு ஊரிலேயுள்ளவர்கள் சிறிது அச்சங் கொள்ளவே செய்வர். பேச்சு, தோற்றம், நடை உடை பாவனைகள்—இவைகளையெல்லாம் கண்டு அவனை ஒரு துஷ்டன் என்று யாரும் தீர்மானித்து விடக்கூடாது. கள்ளமில்லாத உள்ளம்—என்ன பேசுகிறோம், ஏன் பேசுகிறோம், நாம் இப்படிப் பேசுவதால் யார் யாருக்கு மனசு புண்படும் என்பதைப்பற்றி யெல்லாம் கவலைப் படமாட்டான். நினைத்ததை நினைத்து முடிப் பதற்குள் வெளியே சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் தலையிலும் இருதயத்திலும் ஏதோ பெரிய பாரம் அழுத்துவது போலிருக்கும் அவனுக்கு!

காளி கோயிலில் ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழா வில் கதாநாயகனே தீச்சட்டி சிங்காரம்தான்! சிற்றூர் காளி கோயிலுக்கு மட்டுமல்ல; ஐம்பது மைல் சுற்றளவில் உள்ள எல்லா ஊர்களிலும் திருவிழாக் காலங்களில் தீச்சட்டி தூக்கி ஆடுவதற்கு சிங்காரத்திற்கு ஏகப்பட்ட கிராக்கி!

நல்ல வருமானம் — அநேகமாக மாதந்தோறும் அவனுக்கு வேலையிருக்கும். தீச்சட்டி தூக்குகிற நேரமின்றி மற்ற நேரங்களிலும் தீச்சட்டி ஆட்ட உடைகளை அணிந்து கொள்வதில் அவனுக்கு அடங்காத ஆசை. ஊரார் அவனைப் பார்த்து சில சமயங்களில் "காத்தவராயா! மதுரை வீரா!" என்றுகூட கேலியாக அழைப்பார்கள். இவன் எப்படி பார்வையிலும், நடை முறையிலும் நெருப்போ, அதுபோலவே அந்த நெருப்பில் பட்டதும் 'குபீர்' எனப் பற்றிக் கொள்ளும் கற்பூரமாக இருந்தாள் அவன் தங்கை!...

● உணர்ச்சி வசப்படும் காட்சியைக் கண்டாலோ— அல்லது அப்படியொரு செய்தியைக் கேட்டாலோ போதும்; கற்பூரத்திற்கு சாமி ஆவேசம் வந்துவிடும். பிறகு உடுக்கு பம்பை எல்லாம் எடுத்து வர வேண்டியதுதான்! அரைமணி நேரமாவது ஆடி ஓய்வாள்; அதற்குள் அவசர அவசரமாக அபிலாஷைக்காரர்கள் குறி கேட்க ஓடி வருவார்கள் அவளும் ஆடிக்கொண்டே குறி சொல்லுவாள். கற்பூரத்தின் மகிமை அந்த வட்டாரத்திலேயே பரவி இருந்தது. வயது பதினெட்டுக்குள்ளே தானிருக்கும்—பேரழகு எனக்கூற முடியாவிட்டாலும் கவர்ச்சிக்குக் குறைவின்றிக் காணப்படுவாள். கண்களிலே அவளுக்கு ஒரு மயக்கும் சக்தியுண்டு. அவளது சிவந்த முகத்திலே நிரந்தரமாக அமைந்த ஒரு கருமையான மரு அவளுக்குத் தனிக் கவர்ச்சியைத்தான் தந்தது. எரிந்து விழும் அண்ணனைப் போலவே அவளும் "வெடுக், வெடுக்" என்று பேசுவாள். அவளைத் தேவதையின் அவதாரம என்று கருதிக்கொண்டு அனைவரும் பக்தி செலுத்தினர்களே தவிர, அவள் நல்லவளா கெட்டவளா என்று ஆராயவதற்கு யாருமே முன் வரவில்லை. தேவ அம்சத்தைப்பற்றி ஆராய்வது பாபமல்லவா? அதனால் போலும்! தேவ அம்சம—தெய்வீகப் போர்வை — அவைகளிலேயிருந்து சமுதாயத்தை விடுவிக்க வேண்டுமென்ற நினைப்புடைய இளைஞன் ஒருவன் அந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்த பிறகு ஊரிலே புரட்சி ஆரம்பமாகி விட்டது என்று கூறலாம்...

● புரட்சி ஏற்படுத்தக்கூடிய தோற்றமோ, முக அமைப்போ சிறிதுமில்லைதான் அவனிடம்! புரட்சிக்காரன் என்றால் தீச்சட்டி சிங்காரத்தைப் போலவா இருக்க வேண்டும்? அமைதி நிறைந்த வதனமும், அதைவிட மென்மையான சொல்லுங் கொண்டு உலகத்திலே பெரும் புரட்சியை மூட்டிவிடவில்லையா கௌதம புத்தர்! காட்டாற்றிலே வெள்ளம் கரைபுரண்டு வருகிறதென்றால் அதற்காக நடைபெறும் ஆரம்பப் புரட்சி எவ்வளவு அமைதியாக யாருக்கும் தெரியாமல் நடந்து விடுகிறது! கடல் நீரைக் கதிரவன் நீராவியாக்குவதும், நீர் மேகங்களில் குளிர் காற்று மோதுவதும் எவ்வளவு அமைதியாக நடைபெறுகிற புரட்சிகள்! மழை பொழிந்து, உலகம் வெள்ளக்காடாகும் வரையில், கடல், கதிர், காற்று இவைகள் நடத்திய அமைதியான புரட்சிக் கட்டத்தையாருமே கவனிப்பதில்லையே!

அந்த அமைதியான புரட்சியின் விளைவு உலகைப் பெரிதும் வாழ்விப்பதாகவும், சிறிதளவு அழிப்பதாகவுமே முடிகிறது; அது தவிர்க்க முடியாதது! அது போலவே மிருதுவான உள்ளத்திலேயிருந்து புரட்சிக கனல் புறப்படுகிறது. அப்படியொரு உள்ளந்தான் சிற்றூரில் முதன் முதலாக அடியெடுத்து வைத்தது. ஆசிரியர் அறவாழியை அந்த ஊர் மக்கள் சற்று ஆச்சரியத்துடன் வரவேற்றார்கள். ஏனெனில் இதுவரை அவர்கள் ஒரு இளைஞரை ஆசிரியராகக் கண்டதில்லை. தலை நரைத்த, கொட்டை கட்டிய கிழடுகளையே கண்டு கண்டு, ஆசிரியர் இப்படித்தானிருக்க வேண்டுமென்று தீர்மானித்திருந்தவர்கள் அந்த ஊரார். அவர்கள் அறவாழியை வியப்போடு நோக்கினர். அறவாழி ஊருக்கு வந்த அன்றைக்கே சிறு சச்சரவு — அதற்குக் காரணகர்த்தா, கரகமாடி கண்ணன்...

● அழகானவன் — அரும்பு மீசையும் அரிமா நோக்கும் கொண்ட வாலிபன்—ஆழ்ந்த பக்திமான் — பூக்கரகம் எடுத்து ஆடுவதில் அவனுக்கு நிகரான திறமைசாலி யாருமே இல்லையெனப் புகழ் பெற்றவன். பரம்பரை வழக்கம்—பழமை—இவைகளில் அசைக்க முடியாத பற்றுதல் கொண்டவன். எடுப்பார்

கைப்பிள்ளை ! யார் எதைச் சொன்னலும் அதைக்கேட்டு நடக்கக் கூடிய சுபாவம். அவனுக்கும் தீச்சட்டி சிங்காரத்துக்கும், அந்த ஊரிலே பரம்பரைப்பகை ! அவர்கள் பாட்டன் பூட்டன் காலத்திலேயிருந்து இரண்டு குடும்பங்களுமே தீச்சட்டி ஆட்டம் கரக ஆட்டம் இவைகளிலே போட்டிபோட்டு சண்டையிட்டுக் கொண்டு விலகி வாழ்பவை. எல்லாச் சண்டைகளையும் தீர்த்து வைக்கும் பஞ்சாயத்தார் பரமசிவம் இவர்கள் சண்டையைத் தீர்க்க முடியாமல் திணறுகிறார்...

● வெகுளி ! வெளுத்ததெல்லாம் பால் அவருக்கு ! ஊரிலே அவர் வீடு பரம்பரைப் பணக்காரவீடு. சுத்தக் கருமி – சுருட்டு ஒன்றை அணைத்து அணைத்து மூன்று நாளைக்குப் புகைப்பார். ஏழை விவசாயிபோலத் தோற்றமளிக்கும் அவருக்கு எழுபது ஏக்கராவுக்கு மேல் நிலபுலம், தோட்டம் துரவுகள் உண்டு.

"எல்லாம் ஆண்டவன் தந்தது" என்ற வாசகத்தை ஒரு நாளைக்கு ஆயிரம் தடவையாவது உச்சரிக்கும் அவருக்கு ஒரு பைத்தியத்தை மகனுகத் தந்து விட்டார் ஆண்டவன். பைத்தியக்கார மகனைப்பற்றி விளக்கம் எதற்காக உங்களுக்கு ! கதையில் பல இடங்களில் வரப்போகிறான்—அப்போது சுவைக்கலாம் அவனது செயல்களையும் பேச்சுக்களையும் !

ஓரளவுக்கு அறிமுகம் முடிந்து விட்டது. இடையிடையே பலர் வருவர் ; போவர்

# சுருளிமலை

## 1

வழக்கம்போலவே வேப்பமரத்து மேடையிலமர்ந்து புல்லாங்குழல் ஊதிக்கொண்டிருந்தான் சுருளிமலை

காலை நேரங்களில் அந்தமேடை ,அவனுக்கு மட்டுமே சொந்தம். மாலை நேரத்தில் ஊராருக்கு அதுவே காற்று வாங்குமிடமும், பொழுது போக்குமிடமும், ஊர்வம்பு பேசுமிடமுமாகும். இன்றியமையாத சமயங்களில் அந்த மேடையில் தான் ஊர்ப் பஞ்சாயத்து நடைபெறும். ஆண்டுக்கொரு முறை நடைபெறும் அம்பு போடும் உற்சவத்தின்போது குதிரை வாகனத்தின்மீது சாமியை அலங்கரித்து அங்கே தான் கொண்டுவந்து இறக்கி பூஜைகள் நடத்துவார்கள்.

இப்படி ஊருக்கு மிக சிறப்பான வேப்ப மரத்தடியில் காலை நேரப் பொழுதை சுருளிமலை கழித்து வந்தான். செழித்து வளர்ந்த அந்த வேம்பு, ஒரு விதவை! ஆமாம்; திருமண மான அடுத்த இரண்டொரு நாட்களிலேயே வேம்பின் கணவன் அரசு, பட்டுப் போய்விட்டான்! அரசில்லாத வேம்பு, தன்னந்தனியாக வளர்ந்து சுருளிமலையின் குழலோசையைத் தினந்தோறும் சுவைத்துக் கொண்டிருந்தது. அதன் உடலிலும், கிளையிலும், இலையிலும், காயிலும், பூவிலுமுள்ள கசப்பு கூட மறைந்து போயிருக்கும் எனக் கற்பனை செய்தால் அது மிகையாகாது; அவ்வளவு இனிப்பான இசையை அது பருகியிருக்கிறது! மரம், செடிகள் சுவாசிக்கின்றன என்பதைக் கண்டு பிடித்தான பிறகு, அவைகள் ஒலியைக் கேட்கவும் செய்கின்றன வென்று யாராவது ஒருவன் ஆராய்ச்சி முடிவை அறிவிக்காமலா இருக்கப் போகிறான்—என்ற எண்ணத்தாலோ என்னவோ—சுருளிமலை, வேம்படியில் வேய்குழலில் தன்னை மறந்து மூழ்கிவிடுவான். இசைவாணர்கள், குழலோர் இசைக்கென அமைத்துக் கொண்ட இலக்கணம் பற்றிய அரிச்சுவடியே அவனுக்குத் தெரியாது.

"வா நிலத்தைக் கேடின்று வளர்த்து, ஆங்கு ஈர நிலத்தின் எழுத்தெழுத்தாக வழுவின்று இசைக்கும் குழலோன் தானும்,"

—என்று இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தில் குழலோனுக்குரிய இலக்கணச் சிறப்பு வகுத்திருப்பதை அவன் உணர மாட்டான். சிலப்பதிகாரம் என்றுலே என்னவென்று புரிந்து கொள்ள முடியாத தமிழ் இளைஞன்தான் அவன்.

குயில் கூவுகிறது—மயில் ஆடுகிறது—சிந்து பாடும் அருவியென வர்ணிக்கிறேம். குயிலோ, மயிலோ, அருவியோ இசை இலக்கணம் கற்று சங்கீத இன்பத்தைப் பொழிபவை அல்ல. ஆனலும் குயிலின் பாட்டை, மயிலின் ஆட்டத்தை மனிதர்கள் தரும் கலை விருந்துக்கு உவமையாக்கி விடுகிறுர்கள்; கற்பனையாளர்கள். அது போன்ற ஒரு கவர்ச்சியும், கேட்போரை வயப்படுத்தும் சக்தியும் சுருளிமலையின் குழலோசையிலே இருந்தது!

தாளம் தவருமல், ராகம் பிசகாமல், சுருதி விலகாமல் ஆந்தைபாடினுல் "ஆகா, என்னே இசை இலக்கணம்!" என்று வியப்படைவாருண்டோ? "லயம்" வழுவாத, "பாவம்" நழுவாதவாறு நடனமாடினுலும் வான்கோழியை மெச்சுவாரும் உளரோ?

மயிலுக்கும் குயிலுக்கும் உள்ள இயற்கைச் சிறப்பு, எப்படியோ சுருளிமலையின் குழலிசைக்கும் இருந்தது குளுகுளுவென வீசும் வேப்பமரத்து மென் காற்ருடு அந்த இனிய நாதமும் கலந்து, காலை நேரத்தில் கழனி நாடிச் செல்வோருக்கும்—உழைப்பு தர ஓடுவோர்க்கும் புதிய தெம்பை அளிக்கும்.

ஒரு சிலர் அவனைப் பார்த்து முணு முணுக்காமல் இல்லை. "பெரிய கிருஷ்ண பரமாத்மா இவரு — கோகுலத்திலே குழல் ஊதுராரு!" எனக் கேலி பேசுகிற பெரிய மனிதர்களிடத்திலே அவன் எப்படி மதிப்புரை பெற முடியும்.

"பொன்னையாவுக்கும் பூஞ்சோலைக்கும் வந்து பிறந்ததே பிள்ளை—குலம், கோத்திரம், குடும்பம் எல்லாத்தியும் மறந்துட்டு குழல் ஊதுது, குழல்!" எனக் கிண்டல் செய்தவாறு போகிறவர் களை சுருளிமலை கவனிக்காமலில்லை.

அந்தப் பேச்சுக்களையெல்லாம் அவன் மிக அலட்சியமாகக் கருதினான். அவைகளுக் கெல்லாம் பதில் சொல்லி பகையை வளர்த்துக் கொள்ள விரும்பவில்லையோ என்னவோ, அவனுண்டு — வேப்பமரம் உண்டு என்ற அளவில் காலங் கடத்தி வந்தான். இள ரத்தம், துடிப்பு நிறைந்த பருவம், இவைகளுக்கு இயற்கை யாக இருக்கக் கூடிய பரபரப்பு, படபடப்பு எதுவுமே யில்லை அவனிடம்!

பதினான்கு வயது இளைஞன் — பழுத்த கிழவரைப்போலவே அமைதியாகக் காணப்படுவான். முகத்தின் அழகு, அகத்தின் பிரதி பலிப்புத்தானே — அவனது அமைதி கலந்த ஆழ்ந்த பண்பை உணர்வதற்கு யாருமில்லைதான் அவ்வூரில்! அதனால் சிலர் அவனை சோணிப்பிள்ளையென்றும் அழைத்தார்கள்.

அவன் தவழ்ந்தாடும் பருவத்தில் பல் முளைத்தவுடனே, வீட்டில் பால் கொழுக்கட்டை சுட்டு சாமிக்குப் படைத்தார்கள். அப்போதே அவனுடைய குணம் எப்படியிருக்குமென்று அவன் தாய் கண்டு பிடித்து விட்டதாகப் பிறரிடம் பெருமையடித்துக் கொள்வாள். குல தெய்வத்துக்கு நேரே கொழுக்கட்டைப் படையலைப் போட்டு, ஒரு முறத்தில் விளையாட்டுப் பொம்மை, ஒரு ரூபாய் நாணயம், கத்தி, ஒரு கொழுக்கட்டை எல்லாவற்றை யும் வைத்து, குழந்தை சுருளியைத் தவழவிட்டு, அவன் அந்தப் பொருள்களில் எதை ஆவலோடு எடுக்கிறான் என்று சோதித்துப் பார்த்தார்கள். குழந்தை தவழ்ந்து கொண்டேபோய் கொழுக் கட்டையைத் தான் எடுத்தது. அது முதலே இது சாப்பாட்டு ராமனுகத்தான் இருக்குமென்று அக்கம் பக்கத்தாரும் தாயாரும் முடிவு கட்டி விட்டார்கள். அந்த முடிவின்படியே அவனை வளர்க் கவும் தொடங்கினர்கள். அவனும் எதைப்பற்றியும் கவலை கொள் ளாமல், எந்தப் பொறுப்பிலும் தன்னை சிக்க வைத்துக் கொள் ளாமல் வளர்ந்தான்.

எப்பொழுதும் புன்முறுவல் பூத்திருக்கும் முகமும் ஆழ்ந்த யோசனையை வெளியிடுவது போன்ற விழிகளும் கொண்ட இளைஞன், என்றும்போல் அன்று காலையிலும் குழலிசையில் தன்னை மறந்து மூழ்கியிருந்தான்.

அதிகாலையில் வீட்டிலிருந்து புறப்படும்போது, அவனுக்கு முன் எழுந்து வீடு வாசல் பெருக்கி, தெருவில் கோலம் போட்டு விட்டு, பானை செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்த அவன் அன்புச் சகோதரி பொன்மணி "சாப்பிடாமல் போகாதே எங்கும்! நல்ல பழையதும், எருமைத் தயிரும், தொட்டுக் கொள்ள கிடாரங்காய் ஊறுகாயும் வைத்திருக்கிறேன். சாப்பிட்டுவிட்டுப்போ!" என்றாள்.

"கொஞ்ச நேரம் கழித்து சாப்பிடுகிறேன் அக்காள்!" எனக்கூறிவிட்டு நடந்த அவனைத் தடுத்து, "தம்பீ, கொஞ்சம் இங்கேயே உட்கார்ந்து குழலூதேன்!" என்று அவள் கோரிக்கை விடுத்தாள்.

"அதெல்லாம் முடியாது!" என்று சர்வசாதாரணமாகக் கூறிவிட்டு வேப்ப மரத்தடிக்கு வந்துவிட்டான். அங்கே இசை முழக்கம் செய்தான். இடையிடையே வேப்பமரத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டான்.

அப்படி அண்ணாந்தபோது முதல் தடவை அவன் முகத்தில் வியப்பு ஏற்பட்டது!

"அடுத்த தடவை சிறு பீதி தலை நீட்டி உடனே மறைந்தது!

மூன்றுவது தடவை அலட்சியமாகப் பார்த்தான்!

பிறகு மேலே நிமிர்ந்து பார்க்கவேயில்லை; குழலூதுவதில் முழுக் கவனமும் செலுத்தி விட்டான்!

"ஆகா! பலே! பலே!! பிரமாதம்!" எனக் கைதட்டிய வாறே அங்கே வந்தான், தீச்சட்டி சிங்காரம்.

"வாண்ணே! எங்க ரொம்பநாளாய்க் காணேம்?" என ஆவலுடன் கேட்டான் சுருளிமலை.

"அட போப்பா — அதேயேன் கேக்கிறே? பதினேந்து ஊரிலே தீச்சட்டி ஆட்டம்! எல்லா ஊர்க்காரப் பயலும் தீச்சட்டி

சிங்காரந்தான் வேணுங்கிறான்! நான் ஊருக்கென்று ஒருத்தன்; யாருக்கென்று ஆடுவேன்? போய்த் தொலைந்தேன். இன்னைக்குத்தான் திரும்பினேன். ஒரு விஷயம் தெரியுமா தம்பீ; அதுக்குத்தான் உங்க வீட்டைத் தேடிகிட்டு வந்தேன்," எனப் பீடிகை போட்டான் சிங்காரம்.

"எங்க வீட்டைத் தேடிகிட்டு வேப்பமரத்தடிக்கு வந்துட்டீங்களே! அதிருக்கட்டும்; என்னண்ணே விஷயம்?" — சுருளிமலையின் கேள்வியிலேயுள்ள ஆவலைக் கண்டுபிடித்த சிங்காரம் நீண்ட முன்னுரையோடு பேச்சைத் தொடர்ந்தான்.

"காட்டூர் காளிகட்டித் திருவிழாவுக்குப் போயிருந்தேன். அடடா! எக்கச்சக்கமான கூட்டம்-எள் விழ இடமில்லையென்றுல் பார்த்துக் கொள்ளேன்!"

சுருளிமலை குறுக்கிட்டு, "எள்விழ ஏன் இடமில்லை? ஜனங்கள் தலையிலே விழுந்தா தாங்க முடியாதா என்னு, எள் விழுவதை?" என்று கேட்டதும்.

"அடேய்! குறுக்கே பேசாதே! விஷயத்தைக் கேளுடா தம்பி! காட்டூர் முடிந்து கனியா குறிச்சி போனேன். சமயபுரம் போனேன். எல்லா எடத்திலும் ஏகக் கூட்டம்! நம்ப தீச்சட்டி ஆட்டத்துக்கு ஏகப்பட்ட மதிப்பு! நாலு நாள் தொடர்ந்தாப் போலே காலையிலே கப்பரைச் சட்டியைக் கையிலே எடுத்து, பத்து மைல் சுற்றளவுக்கு நடந்தே போய் ஆடணுமனு முடியிற வேலையா? நாலாம் நாள் காலையிலே தீச்சட்டி எடுத்து ஆடிக்கிட்டேயிருக்கும்போது எனக்கு ஒரேகளைப்பு! ஒரே மயக்கம்! எதிர்த்தாப்போல ஒரு பெண்ணு—அழகான குட்டி! அவளையே பாத்துகிட்டு என்னை மறந்து ஆடிகிட்டேயிருந்தேன்....." என்று பேச்சை நீட்டிய சிங்காரத்திடம் சுருளிமலை,

"அடடா! என்னண்ணேயிது, எனக்கிட்ட வந்து இதெல்லாம் பேசிகிட்டு....." என்று வெடுக்கென்று பதிலுரைத்து எழுந்தான்.

" சரி, சரி, கேளுடாப்பா.....எப்படியோ ஆடிக்கிட்டு இருக்கும்போது கை தவறித் தீச்சட்டி கீழே விழுந்து சிதறிப் போச்சு ! அதோட என் மானமும் போச்சு !"

" தீச்சட்டி உடைஞ்சா மானம் ஏன் போகுது ? "

" அட மண்டுப் பயலே ! உனக்குத் தெரியாதா ? தீச்சட்டியை அவ்வளவு நெருப்போடக் கையிலே தூக்குகிறேமே ; அது கையிலே சுடுறதே இல்லியே—எப்படின்னு நினைச்சுகிட்டு இருக்கே ? "

" காளியம்மன் சக்தின்னு நினைச்சுகிட்டிருக்கேன் ! "

" என்னுத்த அம்மனோட சக்தி யிருந்தாலும் நம்பளோட ஜாக்ரதையும் கொஞ்சம் வேணும் தம்பி ! "

" எப்படிண்ணே ? "

" தீச்சட்டிக்கு அடியிலே சூடு அதிகமா இறங்காதபடிக்கு பருத்திக் கொட்டையைக் கொட்டி வச்சுக்குவோம். இல்லேன்னு கை அவ்வளவுதான் ! "

" பருத்திக் கொட்டையா ? "

" ஆமாண்டா ஆமாம்—அந்த ரகசியந்தான் அங்கே அம்பலமாயிட்டுது ! என்னைப் பெருமையோடவும் பிரியத்தோடும் பாத்துகிட்டு, தீச்சட்டியிலே இருக்கிற எண்ணை மாதிரி உருகிக்கிட்டிருந்த அந்த அழகான சின்ன பொம்பளை "களுக்" குண்ணு சிரிச்சிட்டா ! "

" அப்புறம் ? "

" அப்புறம் என்ன ? இந்த ஊருக்கு ஏதோ ஆபத்து வரப்போகுது ; அதான் தீச்சட்டி கை தவறி விழுந்து அம்பாள் அபசகுனம் காட்டியிருக்கிறுள்—அப்படின்னு கதை விட்டேன். எல்லாரும் நம்பி பயந்தாங்க ! என்னோட அம்பாள் மாத்திரம் சுப சகுனம் காட்டிப்பிட்டு மறைஞ்சுட்டா ! "

அவன் பேச்சில் சுருளிமலைக்கு வெறுப்பு மேலிட்ட போதிலும் அதை வெளியில் காட்டிக்கொள்ள இயலவில்லை. அதோடு, சிங்காரத்தின் மீது வீசிய சாராய வாடை காலையில்

இளம் போதையில் அவன் இருக்கிறான் என்பதையும் அவனுக்கு உணர்த்தியது.

"சரி, சரி....அப்புறம்?" என்று எழுந்தான் சுருளிமலை.

"எனக்கு அவசரமா ஒரு தீச்சட்டி வேணும்—அம்மாகிட்ட போயி, நான் சொன்னதாச் சொல்லி ஒரு தீச்சட்டி சீக்கிரம் தயார் பண்ணி இரண்டு நாளில் கொடுக்கச் சொல்லு!

"நீயே அம்மாகிட்ட போயி கேளு—போ!"

"ஏன்? நீ எங்க பெரிய கலெக்டர் வேலைக்குப் போறியோ?"

"ஆமாம்; கலெக்டர் வேலையைவிடப் பெரிய வேலை ஒன்று இருக்கு. அதை கவனிக்கப் போகிறேன்!"

"அப்படிப்பட்ட வேலை என்னடா தம்பீ?"

"கொஞ்சம் அண்ணாந்து பார் மரக்கிளையை!" என்று சுருளிமலை அமைதியாக மேலே சுட்டிக் காட்டினான் சிங்காரம் அண்ணாந்து பார்த்தான். திடுக்கிட்டான். 'ஆ' என்று அவனையறியாமல் அலறி விட்டான். மரக் கிளையில் ஒரு இளம் பெண் தூக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்தாள்.

---

"என்னடா பாவிப் பயலே இது? இவ்வளவு நாழி எனக்கிட்டே சொல்லவே யில்லையே "நீ நான், ஒரு மடையன்; இவ்வளவு நாழி இதை கவனிக்காம உனக்கிட்டே வம்பு பேசிக்கிட்டு இருக்கேன். ஏன்டா பிள்ளையாண்டான்! தூக்கு மாட்டிக்கிட்டு தொங்குறு ஒருத்தி; அதைப் பத்திக் கவலைப்படாம புல்லாங்குழல் ஊதிக்கிட்டு இருக்கியே ... என்னடா ... அடடா உயிர் இருக்குமோ என்னமோ தெரியலியே!" எனப் பரபரப்புடன் மரத்தில் ஏறத் தொடங்கினான் சிங்காரம்.

"சரியண்ணே! நீ இதைக் கவனி; நான் போயி பஞ்சாயத்தாரை அழைச்சுட்டு வர்ரேன்" என்று சுருளிமலை வேப்பமரத் தடியை விட்டகன்று பஞ்சாயத்தார் வீடு நோக்கிப் புறப்பட்டான்.

பஞ்சாயத்தார் பரமசிவம், வீட்டுத் திண்ணைப் புறத்தில் தன் அருமருந்தன்ன மைந்தனின் சேட்டைகளைத் தாங்கிக்கொண்டு

"அட ஈஸ்வரா" என்று தலையில் கை வைத்தவாறு உட்கார்ந் திருந்தார்.

"அப்போ! அப்போ! உலகத்தை யாரப்பா தூக்கிக்கொண் டிருக்கிறுங்க?"

"ஆண்டவன் தூக்கிக்கிட்டு இருக்காருடா...சும்மாகிட!"

"அவருக்குக் கழுத்தை வலிக்காதா அப்போ?"

"வலிக்கும்போது, தோள்மாத்திக்குவாரு — சும்மா இரு!"

"ஒரு நாளைக்கு ஆண்டவன் உலகத்தைப் பொத்துன்னு கீழே போட்டா என்னுப்பா ஆகும்?"

"அப்படிப் போட்டால்தான் தேவலையே—என் சங்கடம் தீரும்—நிம்மதியாப் போகும்; உன் தொல்லையில்லாம!"

"எப்போ! ஆண்டவனுக்கிட்ட சொல்லி,உலகத்தைத்தூக்கி என் தலையிலே வைக்க சொல்லப்பா!"

"அதான் உன் தலையிலே உலகத்தை வச்சிருக்காரே! பிறகென்ன..... மூளையையா வச்சுருக்காரு?...உலகத்தில் இருக் கிற மண்ணு பூரா உன் தலையிலேதானே!"

—என்று தன் தலையிலே அடித்துக்கொண்டார் பஞ்சாயத் தார். நாள் முழுவதும் வீட்டிலேயிருக்கிற நேரமெல்லாம் பஞ் சாயத்தாருக்குத் தலைவேதனைதான்.

அன்று 'அதிகாலையிலேயே வேதனை ஆரம்பமாகி விட்டதே கடவுளே' யென்று பெருமூச்சுவிடும் போதுதான் சுருளிமலை அங்கு வந்து வேப்பமரத்தில் ஒரு பெண் தூக்கு மாட்டிக் கொண்டு தொங்குகிற செய்தியைச் சொன்னான். பஞ்சாயத்தார் பரபரப்புடன் வேப்பமரத்தடிக்குப் புறப்பட்டார். செய்தி பர விடவே அவரோடு ஊராரும் பின் தொடர்ந்தனர்.

அதற்குள், மரத்திலேறிய சிங்காரம் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்க்க முடியாமல் அவள் முகம் மேலாக்குத் துணி யால் மூடப்பட்டிருப்பதைக் கண்டான். அவசர அவசரமாக கயிற்றுச் சுருக்கை விடுவித்து, அவளைக் கீழே இறக்கினான்.

அதற்குள் பஞ்சாயத்தாரும் மற்றவர்களும் அங்கே வந்து சேர்ந்தார்கள். சிங்காரம் அந்தப் பெண்ணுடைய முகத்தை மூடியிருந்த துணியை விலக்கினான். அவ்வளவுதான்; "அய்யோ!" என்று அலறிவிட்டான்!

அவனை ஊரார் கவனித்து என்னவென்று கேட்பதற்குள் "அய்யோ, நீயா?" என்று உரக்கக் கூவி, தலை சுற்றிக் கீழே சாய்ந்து விட்டான் சிங்காரம்.

## 2

அவள் அவனுக்கு அறிமுகமானவளாய்த்தானிருக்க வேண்டும். அவள் பிணமானதைக் கண்டு மூர்ச்சித்துப்போய் விட்டான் என்றால் அவளுக்கும் அவனுக்கும் உறவுகூட இருக்க வேண்டும். அந்த உறவும் உள்ளங்கள் ஒன்றி விட்ட இன்ப உறவாக இருக்கு மென்பதற்கு அறிகுறியாகத்தான் சிங்காரம் போட்ட கூச்சல் அமைந்து விட்டது. கையிலே தீச்சட்டியேந்திக் கர கரவெனப் பம்பரம் போல் சுழன்றாடும் சிங்காரத்திற்கு சமயபுரத்திலே புது அனுபவமே ஏற்பட்டது என்று கூறலாம். ஆடும்போது சட்டி கீழே விழுந்து சிதறி விட்டது என்பதுகூட அல்ல அந்த அனுபவம்.

அது கை தவறுகிற அளவுக்கு அவனுக்கு மையல் மூட்டிய ஒரு வாலைக் குமரியை அவன் அந்த ஊரில் சந்தித்தான்... பம்பையும் தவுலும் போட்டி போட்டுக் கொண்டு முழங்கின. வாத்தியங்களின் ஒலியால் எழுகிற உணர்ச்சிக்கு மேலும் வலுவூட்டுவதுபோல் சாம்பிராணிப் புகை தெருவெங்கும் மணம் பரப்பியது.

வேப்பிலைக் கொத்துக்களைக் கைகளில் பிடித்து ஆடிக் கொண்டும், விபூதியை வாயால் ஊதி ஊதி நாலா பக்கங்களிலும் ஓடிக் கொண்டும் ஒரு பயங்கரமான பக்தியைப் பரப்பும் கைங்கரியத்தில் குட்டிப் பூசாரிகள் எல்லாம் ஈடுபட்டிருந்தார்கள். "தாயே! தாயே! லோக மாதா! காளீ! மாரீ! தேவீ!" என்ற முழக்கங்கள் வேறு பாமர மக்களுக்குப் பக்திப் போதையூட்டி அவர்கள் தலையைக் கிறு கிறுக்க வைத்தன.

அந்தச் சூழ்நிலையிலேதான் தீச்சட்டி சிங்காரம் தான் கற்றவித்தையைக் காட்டி அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டிருந்தான். மெள்ள மெள்ள தீச்சட்டி ஊர் வலம் பல தெருக்களைக் கடந்து கடைசித் தெருவின் கோடிக்கு வந்து விட்டது. அந்தக் கோடியில் கொஞ்ச நேரம் ஆட வேண்டுமென்று கோவில் நிர்வாகிகள் அவனைக் கேட்டுக் கொண்டார்கள்.

"ரொம்பக் களைப்பாயிருக்கு, கொஞ்சம் தண்ணி வேண்டும்" என்று கூறிக்கொண்டே கண்ணடித்துக் காட்டினான் சிங்காரம். கண்ணடித்துக் கேட்கும் தண்ணீர் எப்படிப்பட்ட தென்று புரிந்து கொண்ட நிர்வாகிகள் ஒரு கோப்பையில் 'அதை'க் கொண்டு வந்து கொடுத்தார்கள். சிங்காரம் அதை அருந்திவிட்டு ஆடுவதற்குத் தயாராகிவிட்டான். அதற்குள் அந்தத் தெருவிலேயுள்ளோர் தீச்சட்டிக்கு எண்ணெய் ஊற்று வதற்கு வரிசை வரிசையாக வர ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு வரும் தாங்கள் கொண்டு வந்த கிண்ணத்தில் உள்ள எண் ணெயை சட்டியில் ஊற்றுவார்கள். உடனே சிங்காரம் அவர் கள் நெற்றியில் விபூதி, குங்குமத் திலகங்களையிட்டு ஆசீர் வாதம் செய்து அனுப்புவான்.

அப்படி வந்த வரிசையிலே தான் அவன் உள்ளத்தைக் கவர்ந்துவிட்ட 'அவளு'ம் இருந்தாள். அவள் எண்ணெயை ஊற்றியதும், அவள் நெற்றியில் சிங்காரம் குங்குமத் திலகத்தையிடுவதற்கு முயன்றான். ஏனே அவன் விரல்கள் நடுங்கின. சமாளித்துக்கொண்டு குங்குமத்தை வைத்துவிட் டான். ஆனல் அருகே இருந்தவர்கள் எல்லாம் சிரித்துவிட் டார்கள். அவன் ஆச்சரியத்தோடு பார்த்தான். குங்குமப் பொட்டு அவள் நெற்றியிலே இல்லை; மூக்கின் நுனியிலே இருந்தது. அவனுக்கும் வெட்கம்; அவளுக்கும் வெட்கம்: வேடிக்கை பார்த்தவர்களுக்கு விஷயம் விபரமாகப் புரியவில்லை. கோயில் நிர்வாகிகளோ, "தண்ணீர் தந்த தடுமாற்றம்" எனத் தங்களுக்குள் சிரித்துப் பேசிக்கொண்டனர்.

அவள் மூக்கிலிருந்த குங்குமத்தைத் துடைத்துக் கொண்டே வீட்டு வாசலில் போய் நின்றுகொண்டு ஆட்டத்தைக் கவனிக்க ஆரம்பித்தாள். சிங்காரமும் புதிய உற்சாகத்தோடு ஆட ஆரம்பித்தான். ஆட்டக்காரனின் காலே ஒடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்ட வாத்தியக்காரர்களின் கைகள் ஒடிந்து போகிற அளவுக்கு அவ்வளவு அற்புதமாக ஆட ஆரம்பித்தான்.

தீச்சட்டியில் கொழுந்துவிட்டெரியும் தீயின் சிகப்பு நாக்குகள் உமிழும் புகை, வான் நோக்கி எழுகின்ற காட்சியும், அந்தப் புகை மண்டிலத்திற்குக் கீழே அவன் சுழன்று சுழன்று ஆடுவதும் அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு புதிய உணர்வைத் தோற்றுவித்தே யிருக்கவேண்டும் இல்லாவிட்டால் அவள் கண்களில் அந்தப் புத்தொளி எழக் காரணமேயில்லே. சிங்காரத்தின் கையிலே இருப்பதல்ல தீச்சட்டி; தன் இதயத்திலே ஜுவாலே யெழுப்பி வெம்மையைக் கொட்டுவதுதான் உண்மையான தீச்சட்டியென அவள் கற்பனே செய்து கொண்டாள். சிங்காரம் புதிய புதிய ஆட்டங்கள் ஆடினுன். ஆச்சரியமான நடைவரிசைகள் போட்டான். தீச்சட்டியை மிகப் பயங்கரமாக எரிய விட்டான் அவன் ஆடிய இடத்தில் அரை அடி ஆழத்தில் பெரிய குழியே ஏற்பட்டுவிட்டது.

"இவனு ஆடுகிருன்? அம்பாள் ஆட்டிவைக்கிருள்!" என்றனர் பக்தர்!

"அதுவல்லவோ ஆடுகிறது!" என்றனர் தண்ணீர் கொடுத்த நிர்வாகிகள்.

எதுவுமே காரணமில்லே; எதிரே நிற்கும் ஏந்திழைதான் காரணம் என்பதை சிங்காரம் சொல்லவில்லே. அவன் அநாயாசமாக ஆடிக் கொண்டிருந்தான்.

கடைசலிட்டு உருவாக்கியது போன்ற வடிவம்—மேனியெங்கும் இளமையின் பூரிப்பு—இருகோவைப் பழங்களைப் பொருத்தியது போன்ற உதடுகள்—எலுமிச்சம் பழ நிறம்—அவளுக்கு அருகாமையில் திண்ணையில் ஒரு பூனைக்குட்டி. அதைத்

தூக்குவதும் அதன் மென்மையான உடலைத் தடவிக் கொடுப்பதும் பிறகு அதைக் கீழே விடுவதுமாக அவள் சிங்காரத்தின் ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தாள். கண்கொட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தால் பக்கத்திலிருப்பவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயம்! களங்கமில்லாமல் அவ்வாறு பார்ப்பவர்கள் அருகிலிருப்பவர்களைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். உள்ளத்தில் ஏதோ ஓர் உணர்ச்சி பொங்கிக் கிளம்புவதை மறைக்க முடியாதவர்கள் பக்கத்திலுள்ளவர்களுக்குப் பயப்படுவது இயற்கைதானே! கமல மலர், கதிரவனிடம் காதல்கொண்டு மலர்கிறது என்பது கவிஞர்களின் கைச்சரக்கு! ஆம்பல், நிலவைத் தழுவிட மலர்கிறது என்பதும் கற்பனையாளனின் கனவேதான்! "காதல்" என்ற வார்த்தைக்கு அங்கு பொருளுமில்லை; வேலையுமில்லை!

அவளுக்கு மட்டுமென்ன; "காதல்" என்ற வார்த்தை தெரியுமா? தெரியாது! ஆனாலும் அவனைக் கண்ட அவள் உள்ளத்தில் ஒரு விதப் புது மலர்ச்சி ஏற்பட்டு விட்டது. அல்லி, தாமரைகளின் மலர்ச்சியில் "காதல்" அடிப்படையாக அமைவதில்லை. இயற்கை நியதி அது! அவள் கொண்ட மலர்ச்சியிலோ காதல் எனும் உணர்வு ஊமை நிலையிலே அடங்கிக்கிடந்து அவளை அவன்பால் சேர்க்கத் துடித்தது.

பசியெடுத்தக் குழந்தை "சோச்சி" என்கிறது. "சோச்சி" என்றால் சோறு! அந்தச் சோறு, அரிசியால் ஆக்கப்படுகிறது. அரிசி, நெல்லிலே கிடைக்கிறது. நெல் விளைக்க எவ்வளவோ பேர் வியர்வை சிந்த வேண்டியிருக்கிறது என்பதையெல்லாம் குழந்தை அறிந்திருப்பதில்லை. அறிந்திருக்கும் நாமே, சோறு தின்னும் நேரத்தில் அது கிடைத்த விதம்பற்றி சிந்திப்பதில்லை. அதுபோலவே அவள் அவனிடம் தன்னைப் பறிகொடுத்தாள். அதற்குப் பெயர் "காதல்" என்று சொல்ல அவளுக்குத் தெரியாது. "சோச்சி" கேட்கும் குழந்தை நிலையிலேயே இருந்தாள். பூனையை முகத்தோடு முகம் வைத்து இறுக அணைத்துக் கொண்டாள். பாவம், அது "மியா" என்ற ஒலியோடு அவள் கரத்திலிருந்து விடுபட்டு கீழே குதித்தது. அது குதித்த வேகத்

தில் அதன் காலில் சிக்கி அவளது நீல நிற மேலாடை கீழே நழுவிற்று. பூனையைவிட்டு, மேலாடையைச் சரி செய்து கொள்ள அவள் கைகள் அவசரமாக ஓடின. அதற்குள் "தடார்" என்ற சப்தம்! சிங்காரத்தின் கையிலே இருந்த தீச்சட்டி கீழே விழுந்து நொறுங்கி விட்டது. அவள் "களுக்" என்று சிரித்து விட்டாள். அவளுக்குப் புரிந்துவிட்டது; தீச்சட்டி எப்படிக் கீழே விழுந்தது என்பது! எல்லாம் இந்தப் பூனை பண்ணிய குறும்பு என்று மனதிற்குள் நினைத்தவாறு மீண்டும் ஆடை திருத்தி நின்றாள்.

பூனை திண்ணையிலேதான் உட்கார்ந்திருந்தது. சிங்காரம் தன் தவறுதலை வெளிக் காட்டிக்கொள்ள அஞ்சி, "ஊருக்கு ஏதோ ஆபத்து வரப்போகிறது! அதனால்தான் இந்த அப சகுனம்!" என்று ஓர் அதிர்ச்சி வேட்டை வெடித்தான். பக்தர்கள் தொங்கிய முகத்துடனும் பீதி நிறைந்த கண்களுடனும் அதை விட்டு நகர்ந்தனர். "தாயே! அம்பிகே! எங்களைக் காப்பாத்தும்மா!" என்று கோயிலை வலம் வர ஆரம்பித்தனர்.

சிங்காரம், அவன் தங்கியிருந்த இடத்தில் இருப்புக் கொள்ளாமல் அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருந்தான். "அவள் யார்?" என்ற கேள்விக்கு அவன் யாரிடம் பதில் பெற இயலும்! யாரையாவது போய் இதைக் கேட்டால் அவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ? அப்படிக் கேட்பதாயிருந்தாலும் என்ன அடையாளம் சொல்லி அவளைப்பற்றி விசாரிப்பது?

திடீரென அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. "தவறி மூக்கிலே குங்குமம் இட்டேனே—அந்தப் பெண் யார்?" என்று கேட்டுவிடுவது எனத் தீர்மானித்துக் கொண்டான். கோயில் நிர்வாகி யொருவரிடம் மெதுவாகப் பேச்சைத் தொடங்கினான். அவர் விளக்கம் தந்தார்.

"அவளைப் பற்றி நானும் விசாரித்துக் கொண்டுதானிருக்கிறேன். அவள் இந்த ஊருக்கு வந்து ஒரு மாதமாகிறது. யாரும் அவளுக்குத் துணையிருப்பதாகவும் தெரியவில்லை. தனிமையில் தான் அந்த வீட்டில் வாழ்ந்து வருகிறாள். சிலபேரை விட்டு விபரங் கேட்கச் சொன்னேன். அவர்கள்மீது எரிந்து விழுந்து

வாயில் வந்தவாறு பேசி அனுப்பிவிட்டாள். யாரோடும் அவள் அதிகமாகப் பேசுவதே இல்லையாம். அடுத்தவீட்டு எதிர்த்த வீட்டுப் பெண்களோடுகூட அவள் கல கலப்பாகப் பேசுவது கிடையாது என்று கேள்விப்பட்டேன். இதற்குமேல் அவளைப் பற்றி எனக்கொன்றும் விபரம் தெரியாது. அவள் பெயர் மட்டும் மைனுவாம்!"

நிர்வாகி கொடுத்த விளக்கம், சிங்காரத்துக்கு ஆச்சரியமாக இருந்தது. இன்னும் ஆவலைத்தூண்டியது. சிற்றூரில் "சிடு மூஞ்சி" என்ற பெயர் அவனுக்குத்தான் உண்டு. அவளும் தன்னைப் போலவே இருக்கிறாளேயென்று உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டான். எப்படியாவது அவளை நேரில் சந்தித்து விடுவது என்று முடிவு கட்டிக்கொண்டான்.

மைனு! அவன் மனதில் புயலைக் கிளப்பி விட்ட மங்கை! அவளைக் காண அவன் புறப்பட்டு விட்டான். அடர்ந்த இருள்— அந்த ஊரில் மயான அமைதி நிலவிக் கொண்டிருந்தது. சிங்காரம் யாருமறியாமல் புறப்பட்டு அவள் வீடு நோக்கி நடந்தான்! யாராவது பார்க்கப்போகிறார்களே என்ற பயம் அவனைத் தடைப்படுத்தவில்லை. காரணம்; கொலை செய்யக்கூடத் துணிவைக் கொடுக்கக் கூடிய மதுவை வேண்டிய மட்டும் அருந்தியிருந்தான். குடிகாரனுக்குத்தான் எத்தனை பாதுகாப்பு! குடித்தவனுக்கு புதிய தைரியம் பிறக்கிறது — அதோடு மாத்திரமா? அவன் ஏதாவது தவறு செய்து விட்டாலும் "அய்யோ பாவம்; குடிவெறியில் செய்து விட்டான்!" என்று சமுதாயத்தில் சில நேரங்களில் மன்னிப்பும் கிடைத்து விடுகிறது.

அந்தப் பாதுகாப்புகளுடன் சிங்காரம், மைனுவின் வீட்டுப் படியை மிதித்தான். கதவு சாத்தப்பட்டிருந்தது. மெதுவாகத் தள்ளிப் பார்த்தான். திறக்கவில்லை. இன்னும் கொஞ்சம் வேகமாகத் தள்ளினான். உள்ளே ஏதோ சப்தம் கேட்டது. கதவு திறந்து கொண்டது. சப்தம் எதுவுமில்லை; கழன்றிருந்த தாழ்ப்பாள்தான் கீழே விழுந்திருக்கிறது.

மதுபோதையிலும் சிங்காரம் நிதானமாக நடந்து கொண்டான். உடனே உள் நுழையவில்லை. எழுந்த ஒலிக்கு ஏதாவது

எதிரொலி கேட்கிறதா என்று கவனித்தான். பூனைக்குட்டியின் "மியாவ்" சப்தம் மட்டும் ஒருமுறை கேட்டுப் பிறகு அடங்கி விட்டது.

"ஸ்! அதான் தின்னுட்டியே...தூங்கு! தூங்கு!" என்று அவள் தூக்கக் கலக்கத்தில் கூறியதும் அவன் காதில் விழுந்தது.

பிறகு மெதுவாக கதவை அகலத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். பாயொன்றில் மைனு தூங்கிக் கொண்டிருந்தாள். அருகே பூனையும் உறங்கிக்கொண்டிருந்தது. இரவு நேரத்தில் பூனை விழித்திருந்து எலி தேடும் என்பார்களே; இந்தப் பூனை சுகமாகப் படுத்துத் தூங்குகிறதே என வியப்பு கொண்டான். வயிறு பிதுங்குகிற அளவுக்கு ஆகாரம் கொடுத்து விட்டால் பிற கேன் விழிப்பு — அலைச்சல் — எல்லாம்! அரைப் பட்டினி கால் பட்டினிக்குத்தானே அந்தத் தொல்லையெல்லாம்!

சிங்காரம், "மைனு!" என்று கூப்பிடலாமா என நினைத்தான். நா எழவில்லை. அவள் முகத்தையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். அவள் கழுத்தைப் பார்த்தான். மணிகள் கோர்த்த மாலைகள் அணிந்திருந்தாள் தன்னந்தனியாக அந்த வீட்டில் அவள் உறங்குவது ஒரு அழகாகவே இருந்தது. அவன் கையிலேயிருந்த தீச்சட்டி நழுவி விழுந்து சிதறுவதற்குக் காரணமாயிருந்த இளமையின் பூரணப் பொலிவை விழியால் விழுங்கினான். அந்த உடலில் நடுக்கம் பிறக்க ஆரம்பித்தது. மதுவெறி தணியத் துவங்கியது. அவளது கழுத்தின் பின்புறத்தில் ஏதோ "பள பள" வென்று மின்னியது. குனிந்து உற்று நோக்கினான். அவள் போட்டிருந்த மாலையில் கோர்க்கப்பட்டு, பின் கழுத்தின் பக்கமாகத் தலையணையில் படிந்திருந்த தாலிதான் அது!

அவள் கழுத்தில் தாலியைக் கண்டதும், சிங்காரத்தின் போதை முழுவதும் எங்கேயோ பறந்து போயிற்று. வீட்டை விட்டுப் போய்விடத் திரும்பினான். கால் இடறிய காரணத்தால் ஒரு பாத்திரம் பெரிய ஒலியுடன் உருண்டது. விருட்டெனப் பாய்ந்தது பூனை! சிங்காரத்தின் கழுத்திலே கூரிய நகங்களால் பிராண்டியது. மைனு திடுக்கிட்டு விழித்து, ஓடிப்போய் கதவை சாத்திக்கொண்டு, "யாரது? நில்!" என்று கத்தினாள்.

## 3

மைனுவின் கூச்சலைக் கேட்டு சிங்காரம் சிறிது திடுக்கிட்டானுயினும் வெளியே ஓடி விட முயலாமல் புதிய தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அப்படியே நின்று விட்டான்.

மைனுவும் அவனை உற்றுப் பார்த்தாள். "தெரியவில்லையா யாரென்று? விளக்கை எடுத்து முகத்தைப் பாரேன்!" என்று சாவதானமாகச் சொன்னுன் சிங்காரம். வீட்டுக்குள்ளே நுழைந்த ஒரு ஆடவன், அகப்பட்டுக் கொண்ட பிறகும், நிதானமாகவும், துணிவாகவும் பேசுவது அவளுக்குப் புதிராகத் தோன்றியது. மாடத்தில் மங்கலாக எரிந்து கொண்டிருந்த விளக்கை எடுத்து அவன் முகத்துக்கு நேரே பிடித்தாள். அவள் கரம் அவனையறியாமல் நடுங்க ஆரம்பித்தது. திடீரென அவள் கண்கள் தரையை நோக்கிக் கவிழ்ந்தன. இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. இரவு நேரத்தில் யாரோ ஒருவன்—கொலைகாரனே, கொள்ளைக்காரனே திடீரென்று வீட்டுக்குள் புகுந்து விட்டான் என்ற அதிர்ச்சியிலேகூட அவளுக்கு ஏற்படாத நடுக்கமும், தடுமாற்றமும்—அவன் யாருமில்லை; சிங்காரந்தான் எனத்தெரிந்த பிறகு அவளை ஆட்டிப் படைக்கத் துவங்கின. அவளாலேயே கட்டுப் படுத்த முடியாமல் நாக்கு குழறிற்று. மார்கழி மாதத்தில் வைகறைக் குளிரில் குளத்தோரத்தில் அமர்ந்திருப்பவருக்கு ஏற்படும் உதறல் அவளது ஒவ்வொரு அங்கத்திலும் தாண்டவமாடியது. விளக்கொளியும் அவளோடு சேர்ந்து நடுங்கியது. அவள் நிலையை சிங்காரம் புரிந்து கொண்டான். தன்னுடைய திடும் பிரவேசத்தால் ஆபத்து ஏதும் நிகழ்ந்து விடாது என்ற நம்பிக்கை பிறந்து விட்டது அவனுக்கு.

மெதுவாக, "மைனு!" என்ருன்.

"என் பெயர் எப்படித் தெரியும் உங்களுக்கு?"—அவள் இது போலக் கேட்கவில்லை. வியப்பை விழிகளில் நிறைத்துக் கொண்டு அவனை ஒருமுறை பார்த்தாள்.

"என்மேல் கோபமா?" என்று அவளிடம் நெருங்கினன். அவள் அவனை விட்டு சுவற்றுப் பக்கம் போனாள். மனித ஜாதியின் மர்மங்களைப் புரிந்து கொள்ளாத பூனைக் குட்டி, ஒளியுமிழும் கண்களால் அவர்களை மாறி மாறிப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது. சிங்காரம் இன்னும் நெருங்கினன். மைனாவின் கண்களிலேயிருந்து நீர் பெருகிற்று.

"ஏன் அழுகிறாய்?" என்ற வாறு சிங்காரம் அவள் கரத்தைப் பிடித்தான். அவள் விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டாள். அந்த அழுகை, சிங்காரம் இன்னும் அதிகமாக அவளைத் தொட்டு ஆறுதல் கூறுவதற்கான வாய்ப்பை அளித்தது.

"அழாதே! அழாதே!... இப்படி உக்காரு!"

சிங்காரம் அவன் தோளில் அணைத்தவாறு அவளைக் கீழே உட்காரவைத்தான். அவளும் தலைகுனிந்துவாறு உட்கார்ந்து கொண்டாள். நெளி நெளியாகச் சுருண்டிருக்கும் அவளது கருங் கூந்தலைக் கையால் கோதிய சிங்காரத்திற்கு அந்த விரல் களின் வழியாக மின்சாரம் பாய்ந்து தன்னைப் பிரக்ஞை இழக்கச் செய்வது போன்ற உணர்ச்சி பீறிட்டுக் கிளம்பியது. ஆனால் அந்த நிலையில் அவன் மிருகமாக மாறிவிட விரும்பவில்லை. சிங்காரத்தின் தோற்றம் — பேச்சு — நடை, உடை, பாவனை — வாயிலிருந்து வீசும் கள் வாடை இவைகளைக் கவனிப்பவர்களுக்கு சிங்காரம் ஓர் அழகான பெண்ணின் பக்கத்தில் மனிதப் பண்போடு அமர்ந்திருந்தான் என்பது நம்ப முடியாத சேதி யாகத்தானிருக்கும். அழகிய உருவும் — அந்தஸ்து ஆஸ்தி மிகுந்த நிலையும் — பார்ப்பதற்குப் பசுவின் தோற்றமும் உடைய எத்தனையோ பேர் பகல் நேரத்துப் பத்தினிகளாகவே தான் இருக்கிறார்கள் என்பதை ஆடவர் பெண்டிர் இரு சாராரிலும் சகஜமாகக் காண முடிகிறது. இதை யாரும மறுக்க முடியாதது போலவே பார்வைக்குப் புலிபோல் காட்சியளிக்கும் சிங்காரமும் இயற்கையாகவே இழிகுணமற்றவன் என்பதையும் யாரும் மறுத்துவிட இயலாது.

அவள் அழுவதை நிறுத்தவில்லை. அவளை எப்படியாவது பேச வைக்க வேண்டுமென்று சிங்காரம் தீர்மானித்துக் கொண்டான்.

"கொஞ்சம் தண்ணி வேணும்!"

மைனு, எழுந்து மண்குடத்திலேயிருந்த தண்ணீரை ஒரு குவளையில் பிடித்து வந்து அவனிடம் கொடுத்தாள். கொடுக்கும்போதும் அவள் கைகள் நடுங்கின.

குவளையை உதட்டில் வைத்து நீர் பருகிய சிங்காரம், "தூதூ! ...அப்பா! அப்பா!" என்று சப்தமிட்டு தண்ணீரையெல்லாம் கீழே துப்பி விட்டு, வாயைத் துணி கொண்டு பரபரப்போடு துடைத்துக்கொண்டான்.

மைனுவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. உப்பு வைத்திருந்த படியைக் குவளையென்று நினைத்து அதிலே தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து விட்டாள். பட படப்பிலே நடந்துவிட்ட தவறு! "மன்னிச்சுக்குங்க! வாய் கொப்பளிக்க வேற தண்ணி வேணுமா? என்று புன்முறுவலோடும்—அந்தப் புன்முறுவலை உடனே மறைக்கும் சோகப் பார்வையோடும் கேட்ட மைனுவை இறுகத் தழுவிக்கொள்ளத் துடித்தது சிங்காரத்தின் நெஞ்சம். ஆயினும் அவள் கழுத்திலே மின்னுகிற தாலி, அவன் பாய்ச்சலைத் தடுத்திடும் உயர்ந்த வேலியாகக் குறுக்கே நின்றது.

"தண்ணி வேண்டாம்—இப்போது எனக்கு வேண்டிய தெல்லாம் நீ ஏன் அழுகிறே என்ற காரணந்தான்!" என்று சிங்காரம் தழுதழுத்த குரலில் அவள் முகத்தைப் பார்த்தவாறு பதில் கூறினான்.

அவ்வளவு நேரத்துக்குப் பிறகு, தொடர்பில்லாத கேள்வியாக — அவளுக்கே தேவையற்றது என்று தெரிந்தும்கூட — ஒரு கேள்வி பிறந்தது; "நீங்க ஏன் இங்க வந்தீங்க?" என்று!

"தீச்சட்டி ஆடும்போது நீ ஏன் என்னை அப்படிப் பாத்தே? அதனுல்தான் வந்தேன்?"

"தயவு செஞ்சு போய்டுங்க!"

"ஏன் மைனு — என்னைப் போகச் சொல்றே?"

"உங்க காலைப்பிடிச்சு கெஞ்சுகிறேன்; தயவு செஞ்சு போயிடுங்க!"

"போகமாட்டேன். உன்னைப் பத்தி எனக்கு விவரம் தெரிஞ்சாகணும். என் ஆசையை நிறைவேத்திட்டுப் போகத் தான் வந்திருக்கேன்னு நினைக்காதே! முதல்ல நான் வந்தது உன்னைப் பார்க்கணும் என்கிற ஆவலாலே! இப்ப, உன்னைப் பார்த்த பிறகு நீ யாரு; ஏன் இப்படி அழுது அழுது உருகிப்போறே—அப்படிங்கிற விஷயமெல்லாம் எனக்குத் தெரியணும்; மைனு—தெரியணும்!"

"என்னைப்பத்தி நீங்கதெரிஞ்சு என்ன பண்ணப்போகிறீங்க?"

"உனக்கு உதவி செய்ய முடியாத அளவுக்கு—அப்படி சக்தியற்றவன்னு என்னை நினைக்கிறியா!"

"அய்யோ—நாம் ரெண்டுபேரும் ஏன் சந்திச்சோம்? அடதெய்வமே—என் வாழ்க்கையை குட்டிச் சுவராக்கினது போதாதா? இப்ப இது வேற விபரீதமா?"

"மைனு! உன் வாழ்க்கை குட்டிச்சுவராகி விட்டதா?... குட்டிச்சுவருக்குக் காவலாக ஒரு கழுதைபோல நான் இருக்கிறேன்—கவலைப்படாமல் ஏங்கிட்டே விஷயத்தைச் சொல்லு!"

"நான் கல்யாணமானவள்!"

"தெரியும் எனக்கு!"

"தெரியுமா? எப்படி?"

"உன் கழுத்திலே இருக்கிற தாலியை முன்னுலேயே பாத்துட்டேன்!"

"ஆ—தாலியைப் பார்த்துட்டீங்களா?"

"ஏன்—புருஷன் கண்ணுக்குத் தவிர வேறயாரு கண்ணுக்கும் தெரியாத சந்திரமதி தாலியா உன் தாலி?"

வழிந்த கண்ணீரால் நனைந்திருந்த அவள் உதடுகளில் குறுஞ் சிரிப்பு மின்னி மறைந்தது.

"தாலியைப் பார்த்த பிறகுமா என்னைத் தொட்டீங்க?"

"தாலி போட்டுக் கொண்ட பிறகு நீ மாத்திரம் என்னை உயிரை வாங்குகிற மாதிரிப் பார்க்கலாம்; நான் மாத்திரம் உன்னைத் தொடக்கூடாதோ?"

"என்னை நானே மறந்து தப்பு பண்ணி விட்டேன். மன்னிச்சுடுங்க. தயவு செஞ்சிபோய்டுங்க. என்னைக் காப்பாத்துங்க!"

"உன்னை ஒரு தொந்தரவும் செய்றது இல்லை—கடவுள் மேல் சத்தியம்! இதோ, ஒதுங்கி உட்கார்ந்துக்கிறேன். நீ விஷயத்தைச் சொல்லு; உன் புருஷன் இப்ப எங்கே?"

"உயிரோடதான் இருக்கார்!"

"அது தெரியுது; நீ மஞ்சள் குங்குமத்தோட இருக்கும் போதே அது தெரியுது! எந்த ஊர்ல இருக்காரு?"

"கோயம்புத்தூருக்குப் பக்கத்திலே பேரூர்ல இருக்காரு!"

"அப்பறம் ஏன் அவரை விட்டுட்டு இப்படி வந்தே?"

"தெய்வம் என் தலையிலே அப்படி எழுதியிருக்கு; அதனால் வந்தேன்!"

"புருஷனுக்கும் உனக்கும் ஏதாவது சண்டையா?"

"அய்யோ—தங்கமானவர் அவரு! அவருக்கும் எனக்கும் சண்டை ஏன் வரப்போகுது!"

"தங்கமான புருஷன்னு நீயே சொல்றே—அப்பறம் ஏன் இப்படி ஆச்சு? ஓகோ! மாமியாருக்கும் உனக்கும் ஒத்துக் கொள்ள வில்லையோ? அடாடாடா!.....இந்த மாமியாருங்க மருமகள்களைப் படுத்துற பாடு...ரொம்பக் கொடுமை! தானும் ஒரு காலத்திலே மருமகளாயிருந்தோம்கிறதையே மறந்துடுராங்க! உன் மாமியாரும் அப்படித்தானு மைனு?"

"அய்யோ, எனக்கு மாமியாரே கிடையாதே!"

"நாத்தனரு யாராவது...?"

"அதுவும் இல்லிங்க!"

"அப்பறம் என்னு தகராறு? புருஷன், இந்தக் கண்ணகியை விட்டுட்டு யாராவது மாதவி வீட்டுக்கு....."

"அதெல்லாமில்லே.....அவர் அப்படியெல்லாம் போகக் கூடியவரல்ல!"

"வேறு என்னதான் காரணம்? நீ சொல்லித்தான் ஆக வேண்டும்!"

"அய்யோ—அந்தப் பேச்சை அதோட நிறுத்துங்க...நான் அதை நினைச்சு நினைச்சு அழுதது போதும்—அந்தக் கதையை மறுபடியும் சொல்லி, ரெண்டுபேரும் சேர்ந்து அழவேண்டாம்!"

மைனுவிடமிருந்து எப்படியும் அவளது சோகக் கதையின் மர்மத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று சிங்காரம் துடியாய்த் துடித்தான். வேறு வழியின்றி அவளும் சொல்ல ஆரம்பித்தாள்; இடையிடையே விம்மி விம்மி அழுதவாறு;

"நான் பிறந்தது சிங்காநெல்லூர்—பஞ்சாலைத் தொழிலாளி என் அப்பா—ஒரே பெண் அவருக்கு நான். ஆலை வேலையில் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு நானும் அப்பாவும் வயிறு கழுவி வந்தோம். எனக்கோ வயது பதினைறைத் தாண்டி விட்டது. ஆண் பிள்ளைகளின் பார்வை என்மீது விழத் தலைப் பட்டது. காச நோயினுல் கஷ்டப்படும் அப்பாவுக்கு, எப்படியாவது அவர் கண் மூடுவதற்குள் எனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்துவிட வேண்டுமென்று ஒரே ஆசை அடித்துக் கொண்டது.

"நானும் கல்யாணம் செய்து கொள்ளவேணும் என்கிற முடிவுக்கு வந்துவிட்டேன். அப்பா எங்கெங்கோ மாப்பிள்ளை பார்த்தார். அவர்களை யெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் எனக்குப் பிடித்தமான மாப்பிள்ளையை நானே தேர்ந்தெடுத்து அப்பாவிடம் சொன்னேன். அப்பாவும் என் இஷ்டத்துக்கு விரோதமாக எதுவும் சொல்லாமல் சரியென்று தலையசைத்தார். என் கணவரை எங்கே எப்படித் தேர்ந்தெடுத்தேன் என்று சொல்ல வில்லையே...ஒரு நாள் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் ஆண்டுவிழா அதிவிமரிசையாக நடத்தினர்கள். அந்தக் கொண்டாட்டத்தில் நாடகமொன்றும் ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். "அல்லி அர்ச்சுனை" நாடகம்! அதில்

அர்ச்சுனனுக நடித்தவரின் நடிப்பு அபாரமாக இருந்தது. அவர் மேடைக்கு வந்தாலே ஒரு களை! ஒரே கரகோஷம்! சுருள் கம்பிபோல வளர்ந்து அடர்ந்து காதுகளை மறைத்துக் கொண்டு கழுத்தைத் தொடுகிற அழகான கேசம்! முத்துக்களை எடுத்து வரிசையாக அடுக்கி வைத்ததுபோல பற்கள்! செக்கச் சிவந்த மேனி! கச்சிதமான மீசை! – கம்பீரமான பார்வை! அவர் அல்லியைக் கொள்ளை கொண்டதாகத்தான் கதை! ஆனல் அவர் என்னை அப்படியே கொள்ளை கொண்டு விட்ட தாக எண்ணினேன்.

"நாடகம் முடிந்தது. வீட்டுக்கு வந்தேன். இரவெல் லாம் தூக்கம் வரவில்லை. ஒரே "அல்லி அர்ச்சுனை" கனவு தான்! மறுநாள் அப்பாவிடம் கொஞ்சமும் வெட்கமின்றி நான் அந்த அர்ச்சுனனைத்தான் கல்யாணம் செய்து கொள் வேன் என்று முடிவாகக் கூறிவிட்டேன். அப்பா, அந்த நடி கரைப்பற்றி விசாரித்தார். அவர் பெயர் ராஜபார்ட் பீதாம்பர பாகவதர்! "மகளே! நான் போய் பீதாம்பரத்தைப் பார்த்து வருகிறேன். கல்யாணம் முடிகிற வரையில் விஷயம் ரகசிய மாக இருக்கட்டும். ஒரு வேளை அந்த பாகவதர் சம்மதிக்க வில்லை என்றால் ஊரிலே நம்மைப்பற்றி கிண்டலாகப் பேசு வார்கள்!" என்று கூறிவிட்டு அப்பா புறப்பட்டார். அதற்குள் நான் என் அர்ச்சுனரின் விலாசத்தைக் கேட்டறிந்து, என் னுடைய போட்டோப் படம் ஒன்றையும் வைத்து என்னை எப் படியும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவசரமாகக் கடிதம் எழுதினேன். என் படத்தைப் பார்த்த அவர், அப்பாவிடம் தன்னுடைய சம்மதத்தை அறிவித்து கல்யாணத்துக்கு நாளும் குறித்துவிட்டார்.

மாப்பிள்ளை வீடான பேரூரிலேயே கல்யாணம் சிக்கன மாக நடந்து முடிந்தது. மாப்பிள்ளை கோலத்திலேகூட என் கணவர் அர்ச்சுனனைப் போலவே ராஜபார்ட் உடையில் இருந்து என்னை அதிகமயக்கத்தில் ஆழ்த்தினர்.

கல்யாணத்தன்றைக்கே 'முதல் இரவு' ஏற்பாடு செய் யப்பட்டுவிட்டது. வாழ்க்கையில் நானகத் தேர்ந்தெடுத்துக்

கொண்ட என் இஷ்ட தெய்வத்தைத் தனியாக சந்திக்கப் போகிறோம் என்ற அளவில்லாத சந்தோஷத்தோடு படுக்கை யறையில் அடியெடுத்து வைத்தேன். என் உடம்பெல்லாம் ஏதோ ஒரு உணர்ச்சியால் பரபரப்படைந்தது. அவர் நிலைக் கண்ணாடிக்கு நேரே நின்று தன் அழகைப் பார்த்துக் கொண் டிருந்தார். நான் உள்ளே சென்றதும் என் கையைப் பிடித்து அருகே அழைத்து கட்டிலில் உட்கார வைத்தார். நாணம் தாங்கமுடியாமல் நான் உட்கார்ந்தேன் — என்னை, நானே அல்லி ராணியாகக் கற்பனை செய்து கொண்டேன். பழங்கள் சாப்பிட்டோம். பால் அருந்தினோம். அவர் அங்கிருந்த விளக்கை வாயால் ஊதி அணைத்துவிட்டார். கூடத்துக் கடி காரத்தில் மணி ஐந்து அடித்தது. விழித்துக்கொண்டேன். அறைக்குள்ளே வெளிச்சம் பரவியிருந்தது. அவர் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார். கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த முக்காலியில் ஏதோ ஒரு பொருள் பளபளவென்று மின்னியது. அதை கவனித்துப் பார்த்தேன். இரண்டு வரிசைப் பற்கள்! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது அவரைக் கூர்ந்து கவனித் தேன். அவருடைய வாயிலேயிருந்த பற்கள்தான்!

"அய்யோ! பொக்கை வாய்க்கிழவரா என் கணவர்?" என்ற ஆத்திரத்தோடு—சிறிது நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு உட்கார்ந் திருந்தேன். புரண்டு படுத்தார். காதுப்புறம் தொங்கிக்கொண் டிருந்த சுருள் கேசம் சற்று விலகியது. காது பளபளவென்று மின்னியது. கவனித்தேன். விளக்கையேற்றிப் பார்த்தேன். பெருவியாதியின் ஆரம்பம்! அதைத்தான் அந்த அழகான கேசத்தால் மறைத்துக் கொண்டிருக்கிறார். கேசத்தை கையால் விலக்கிப் பார்த்தேன். என்ன கொடுமை—முழுவதும் கையோடு வந்துவிட்டது. ஒரே வழுக்கைத் தலை! அவர் புரண்டு எழுந் தார். அதற்குள் நான், விளக்கைக் கீழே வைத்துவிட்டுத் தூங்குவதுபோல் பாசாங்கு செய்தேன். அவசர அவசரமாகத் தலையைச் சரிசெய்துகொண்டு, முக்காலியில் இருந்த பற்களை யும் எடுத்து வாயில் பொருத்திக்கொண்டு, நிலைக்கண்ணாடிக்கு நேரே நின்று அலங்காரத்தில் ஈடுபட்டார்.

'என்னுல் படுத்திருக்க முடியவில்லை. அப்போதுதான் விழிப்பது போல எழுந்தேன். 'மைனு' என்று அன்போடு கூப்பிட்டவாறு அருகே வந்தார் அந்த அர்ச்சுனர்! என் கன்னத்தில் காலே முதலம் ஒன்றும் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு, அழுகையையும ஆத்திரத்தையும் அடக்கிக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தேன். வெளியே வந்த என் காதில்.....

" அய்யய்யோ!" என்ற ஒப்பாரி சப்தம் கேட்டது!

" என்னவென்று கேட்க ஓடினேன். என் அப்பா விடியற் காலேயில கடைசித் தடவையாகக் கண்களேமூடிவிட்ட காட்சியைத் தாழ்வாரத்தில் கண்டேன்....."

## 4

" கல்யாணத்துக்கு மறு நாளே வீட்டில் ஏற்பட்ட அசம்பாவிதமான சாவுச் செய்தியால் உறவினர்கள் எல்லாம் அங்கலாய்த்துக் கொண்டனர். மாப்பிள்ளே குடும்பத்துக்கு ஆகாத ஒன்று நடந்து விட்டதாக ஒருவருக்கொருவர் முணு முணுத்துக் கொண்டனர். கல்யாணத்துக்கு வந்திருந்த என் சொந்தக் காரர்கள் சிலரைத் தவிர மற்றயாவருமே என்னேச் சற்று வெறுப்போடுதான் பார்த்தார்கள். அப்பாவின் பிணத்தின் மீது விழுந்து அலறினேன். என் சோகம் இரட்டிப்புப் பங்காக மாறுவதற்குக் காரணம் இருந்ததைத்தான் நீங்கள் அறிவீர்களே, இப்போது! நல்ல வேளேயாக நான் திகுத் தெரியாத காட்டில் அகப்பட்டுக்கொண்டு திகைப்பதை என் தந்தை அறிந்து வேதனேப்படாமலேயே போய்விட்டார் என்ற திருப்தி ஏற்பட்டது எனக்கு. சாயங்காலத்திற்குள் அப்பாவின் தகனக் கிரியை எல்லாம் முடிந்துவிட்டது.

" இருள் வேகமாகப் பரவிக்கொண்டிருந்தது. என் வாழ்க்கையில் அதற்கு முன்பே இருள் மூடிக்கொண்டது. நானுகத் தேடிக்கொண்ட வேதனேயை நினேத்து நினேத்து அழுதேன். என் கணவர் உட்பட அனேவருமே அப்பாவை நினேத்துத்தான் அழுது புலம்புகிறேன் என்று எண்ணிக்கொண்டு ஆறுதல் சொல்ல ஆரம்பித்தார்கள். வீட்டில் துக்கமெல்லாம் கொண்டாடி பத்து நாட்கள் கழித்த பிறகு மறுபடியும் என் கணவரைத்

தனியறையில் சந்திக்க வேண்டிய பயங்கரமான நேரம் நிச்சயம் வருமே—அய்யோ; அதை நினைத்தாலே எனக்குத் தலைசுற்ற ஆரம்பித்துவிட்டது. பத்து நாள் கழித்துத்தானே அந்த நெருக்கடி வரப்போகிறது; அதுவரையில் அவர் வீட்டிலேயே இருந்து சமாளித்துப் பார்ப்போமே—என்று முதலில் நினைத்தேன். ஆனால் வேறொரு பயம் வந்து என்னைச் சூழ்ந்து கொண்டது. அந்தப் பத்து நாளில் அவர் என்னோடு பழகுவதில் என்னிடம் மிகுந்த அன்பையும் பிரியத்தையும் காட்டி, ஒரு கணவனிடத்தில் ஒரு பெண்ணுக்கு ஏற்படுகிற பாசம் இல்லாவிட்டாலும், ஒரு வயதான பெரியவரிடத்தில், தகப்பனிடத்தில், பாட்டனிடத்தில் ஏற்படுகிற பற்றேனும் பாசமோ எனக்கு அவர்மீது ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்று சந்தேகப்பட்டேன். மிகவும் பயந்தேன்.

நான் நினைத்தது போலவே அவர் என்னிடம் தந்தை இறந்ததுபற்றிக் கவலைப்படாதேயென்று ஆறுதல் சொல்ல முன்வந்தார். நாடகத்திற்காக மனப்பாடம் செய்திருப்பாரோ என்னவோ தெரியவில்லை; 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?' என்று பாட்டெல்லாம் சொல்லிக்காட்டி எனக்குத்தேறுதல் கூறினார்.

நான் முடிவு செய்துவிட்டேன்; இனி ஒருக்கணமும் அவரோடு வாழ்வதில்லையென்று! இந்த முடிவு பெரிய மனப் போராட்டத்திற்குப் பிறகு தான் தோன்றியது என்பதையும் நீங்கள் உணரவேண்டும்.

"அவர் உன் கணவராயிற்றே—அவருக்குத் துரோகம் செய்யலாமா?" என உபதேசம் செய்தது மனம். பிறகு அதே மனம், செய்தால் என்ன? அவர்மட்டும் வெளி வேஷத்தால் உன்னை மயக்கித் துரோகம் செய்யவில்லையா? என்று சமாதானமும் கூறியது.

"அடிமுட்டாளே! அவரா உன்னிடம் வந்து என்னைக் கல்யாணம் செய்துகொள் என்று கேட்டார். நீதானே தேடிப் போனாய்! இப்போது அவரைக் குற்றம் சுமத்துவது முறையா?" என்ற ஒரு கேள்வி என் நெஞ்சில் தோன்றும். உடனே; அதற்குப் பதிலும் உதயமாகிவிடும்.

"தேடிப்போனது உண்மை என்றுலும், அந்தக் கிழவர், தான் யார் என்ற சுய உருவத்தைக் காட்டியிருப்பாரேயானுல் இப்படி ஒரு ஏமாற்றமும். ஏக்கமும் பிறந்திருக்காதல்லவா? அதனுல் அவரே குற்றவாளி!

"ஆமாம்; இதுதான் நானே வழக்காடி, நானே வழங்கிக் கொண்ட தீர்ப்பு! தீர்ப்பின்படி நான் அவரைவிட்டு உடனடி யாக வெளியேறிவிடவேண்டும்.

"அன்றிரவே என் பயணத்திற்கு ஆயத்தமாகி விட்டேன். எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர் அறைக் குள்ளே படுத்திருந்தார். எனக்கு எப்படித் தூக்கம் வரும்? மெதுவாக எழுந்தேன். என் தந்தையின் பினம் காலையில் வைக்கப்பட்டிருந்த கூடத்தில் மினுக் மினுக் என எரிந்து கொண்டிருந்த விளக்கிற்கு ஒரு கும்பிடு போட்டேன். கொல் லைப்புறக் கதவைத் திறந்துகொண்டு வெளியே புறப்பட்டேன். அது வரையில் கதவண்டை உட்கார்ந்து வெளியே போவதற்கு வழி பார்த்திருந்த இந்தப் பூனையும் என் பின்னுல் வெளியே வந்தது. தனியாகப் போவானேன் என்று என் கனவர் வீட்டுச் சொத்தான பூனையையும் தூக்கிக்கொண்டேன்.

"அடுத்த கேள்வி, எங்கே போவது என்று! சிங்கா நல் லூருக்கே போய் விடுவோம் என்று முதலில் நினைத்தேன். ஊர் வாயை மூட முடியாதே என்ற அச்சம்—கனவர் கண்டு பிடித்து விடுவாரே என்ற திகில்—அதனுல் அந்த எண் ணத்தை மாற்றிக்கொண்டேன். எங்கெங்கோ அலைந்தேன். கடைசியில் இநத ஊர் வந்து சேர்ந்தேன். குடியிருப்பதற்குக் குறைந்த வாடகையில் இந்த வீடும் கிடைத்தது. கையிலிருந்த கொஞ்சம் பணம்—போட்டிருந்த நகை நட்டுகளை விற்றதில் கிடைத்த பணம்—அதை வைத்துக்கொண்டு வயிறு கழுவி வரு கிறேன். போதுமா; இன்னும் சொல்லவேண்டுமா என் கதையை?" என்று அழுதவாறு மௌனம் முடித்தாள்.

"இனிமேல் உன் கதையை நான் சொல்லுகிறேன்!" சிங்காரம் கனைத்துக்கொண்டு ஆரம்பித்தான்.

என்ன சொல்லப் போகிறான் என்று அவளும் ஆவலோடு எதிர்பார்த்தாள்.

"மைனு என்ற பெண், நாடகக்காரனின் வெளி வேஷத்திலே ஏமாந்து, அவனையே கல்யாணம் செய்து கொண்டு, அவனது சுயரூபம் தெரிந்தபிறகு அவனை விட்டு ஓடிவந்து விட்டாள். அப்படி ஓடி வந்தவள் ஒருநாள் தீச்சட்டி சிங்காரம் என்ற ஒரு வாலிபனை சந்திக்க நேரிட்டது. இருவருடைய கண்களும் காதல் பாஷை பேசிக்கொண்டன. சந்தித்த அதே நாள் இரவு சிங்காரம் அவளுடைய வீட்டுக்குத் தைரியமாக வந்தான். அவள் அவனிடம் தன் வாழ்க்கை முழுவதையும் சொன்னாள். அதைக் கேட்ட சிங்காரம் மனம் உருகி, நெஞ்சம் இளகி, "கவலைப்படாதே பெண்ணே! உன்னை நான் வைத்துக்காப்பாற்றுகிறேன்!" என்று கையடித்துக் கொடுத்தான். அவளும் சம்மதித்தாள். பிறகு இருவரும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார்கள்."

சிங்காரம், இதுபோலக் கதையைக் கூறி அவள் முகத்தைப் பார்த்தான். மைனுவின் கன்னங்களில் சிவப்பேறியது. தலை தானாகக் குனிந்து கொண்டது. அது, சம்மதத்தின் அறிகுறி எனப் புரிந்து கொண்ட சிங்காரம், அவள் தோள்மீது தன் முகத்தைப் பதித்தான்.

அவளும் அவன் முகத்தைக் கையால் வருடியவாறு, "என்னை மனைவியாகவே ஏற்றுக்கொண்டு எப்போதும் காப்பாற்றுவீர்களா?" என்று கண் கலங்கக் கேட்டாள்.

சிங்காரம், தழுதழுத்த குரலில், "கடவுள்மேல் சத்தியமாக உன்னை மறக்கமாட்டேன்!" என்று உறுதி கொடுத்து அவளை அப்படியே அள்ளி அணைத்துக் கொண்டான்.

அவள், அவன் பிடியிலேயிருந்து விடுபட்டு, தெருக் கதவின் தாழ்ப்பாளைச் சரிசெய்து சாத்திவிட்டு, மீண்டும் அவனிடம் வந்தாள். பூனை மெதுவாக அடுப்படிக்குச் சென்று அந்தக் கதவு கதப்பில் படுத்துக் கொண்டது.

மைனு, தன்னை சிங்காரத்திற்கு ஒப்படைத்துவிட்ட பூரிப்பில் மயங்கிக் கிடந்தாள் தன் வாழ்வில் மறுமலர்ச்சி தோன்றி விட்டதாக இன்பக்கனவு கண்டாள். சிங்காரத்தின் வாயிலிருந்து லேசாக வீசிக்கொண்டிருந்த மதுவாடை மாத்திரம் அவளுக்கு அவ்வளவு பிடித்தமானதாக இல்லை. அதையும் அவனிடம் அவள் சொல்லி விட்டாள்.

"குடிகாரன் என்று பயப்படாதே! பொழுது விடிந்தால் இந்தப் பேச்சு மறந்துவிடும என்றும் சந்தேகப்படாதே! சாராயத்தைவிட உன்னை நான் அதிகமாக நேசிக்கிறேன். எந்தக் குடிகாரனும் இது போலச் சொல்லமாட்டான் அதனுல் என்னை நமபு! குடித்துப் பழகிவிட்ட என்னை இனிமேல் மாற்றவே முடியாது!" என்று மனந்திறந்து சிங்காரம் பேசி, அவளையும் ஒப்புக் கொள்ளச் செய்துவிட்டான்.

"ஏன் மைனு, முதலில்தான் வேஷம் போட்டவனைப் பார்த்து அர்ச்சுன ராஜன் என்று நினைத்து ஏமாந்துபோனுய் — இப் போதும என்னைத் தீச்சட்டி ஆட்டத்தில் பார்த்ததும் எனமீது ஆசைகொண்டு விட்டாயே; இதிலும் ஏமாந்திருந்தால் என்ன செய்வாய்?"

சிங்காரத்தின் இந்தக் குறும்புத்தனமான கேள்விக்கு மைனு தன் உதடுகளால் பதில் சொன்னுள். ஆனுல் அந்தப் பதிலில் வார்த்தைகள் உதிரவில்லை. ஒலி மட்டுமே எழுந்தது.

தீச்சட்டியின் ஜுவாலையிலேயே கிடந்து வெந்துகொண் டிருந்த சிங்காரத்துக்கு மகிழ்ச்சியூட்ட ஒரு குளிர்ந்த மாந்தோப்பு கிடைத்து விட்டது. மைனுவுக்கும் ஒரு ஆதரவு கிடைத்து விட்டது அவள் உள்ளத்தில் கப்பிக் கொண்டிருந்த அந்தகாரம் விலகி விட்டது. ஆனந்தத்தால் துள்ளியது நெஞ்சம் மறுநாள் காலையிலே சிங்காரம் சிற்றூருக்குப் புறப்பட வேண்டும். போய் இரண்டு நாளில் திரும்பி வந்து, மைனுவையும் அழைத்துக் கொண்டு சிற்றூரிலேயே குடித்தனத்தைத் துவங்க வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டது. பிரியா விடைபெற்று, சிங்காரம் விடியற்காலையில் அவளை விட்டுப் பிரிந்து கோயில் நிர்வாகி தனக்கு ஏற்பாடு செய்திருந்த வீட்டுக்குப் புறப்பட்டான்.

ஆயிரமாயிரம் இன்ப நினைவுகள் உள்ளத்திலே அலைமோத மைனு, வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினுள். படுத்திருந்த பாயைத் தொட்டுக் கும்பிட்டு, தலையணைக்கு முத்தமீந்து, இரண்டையும் சுருட்டி வைத்தாள். அடுப்படியில் படுத்திருந்த பூனைக் குட்டியைத் தூக்கி அதன் மெல்லிய ரோமத்தைத் தடவித் தடவி, மார்போடும் முகத்தோடும் அதை அணைத்துக்கொண்டு குதியாட்டம் போட்டாள். வீட்டு வாசலுக்குத் தண்ணீர் தெளித்துப் பெருக்கினுள். என்றுமில்லாதவாறு பெரியதும், அழகியதுமான கோலமொன்று போடவேண்டும் என்ற திட்டத்தோடு கோலமாக்கிணைத்தோடு தெரு வாசலை முற்றுகையிட்டாள் அவள் வாசலில் வைத்த ஒவ்வொரு புள்ளியிலும் சிங்காரத்தின் கம்பீரமான முகத்தைக் கண்டாள். கோலத்திற்கென வளைந்து வளைந்து செல்லும் கோடுகளில் எல்லாம் அவள், தன் வாழ்க்கையின் வளைவை எண்ணுவாள். வளைந்த கோடுகள் இணையும் இடத்தில் எல்லாம் தானும் சிங்காரமும் இணைந்ததை எண்ணி மகிழ்வாள். பெரியதும், அழகு செறிந்ததுமான கோலம் போட்டு முடிந்தது. ஊருக்குப் போகும்போது சிங்காரம் இந்தப் பாதையில்தானே போவார்; போகும்போது கோலத்தைப் பார்ப்பார்; அப்படிப் பார்க்கும்போது இதையும் பார்க்கட்டும் என்று, தீச்சட்டிபோல சிறுகோலம் ஒன்று போட்டு, தீயின்மீது ஒரு மலர் தெரிவது போலவும் சித்தரித்தாள். அவளுக்கே அது புதுமையாகவும் அற்புதமாகவும் தெரிந்தது. கோலத்தை திருப்திக்கு ஏற்றவாறு முடித்து விட்டோம் என்ற ஆனந்தத்தில் கோல மாக் கிணைத்தோடு தலைநிமிர்ந்தாள்.

நிமிர்ந்தவள் திடுக்கிட்டாள். கண்கள் சுழன்றன அவளுக்கும் அவனையே அவளால் நம்பமுடியவில்லை. எதிரே பீதாம்பர பாகவதர் அவனையே வைத்த கண் எடுக்காமல் பார்த்துக்கொண்டு நின்ருர். மைனு, ஒன்றும் பேசவில்லை. பேசவும் நா எழவில்லை. கோலமாக் கிணம் அவனை அறியாமல் கீழே விழுந்து மாவு வாசலெங்கும் சிதறி, கோலத்தை அலங்கோலமாக்கியது

அவள், வீட்டுக்குள் போய்விட்டாள். பீதாம்பரமும் அவளைத் தொடர்ந்து உள்ளே போனுர். அவள் உள்ளே சென்று அப்படியே அசைவற்று நின்ருள். அவள் கண்கள் கலங்கி

யிருந்தன. அதை பீதாம்பரம் கவனிக்கத் தவறவில்லை. அவள் சொல்லாமலே பீதாம்பரம் வீட்டுக்குள் உட்கார்ந்தார். அவரைப் பார்த்த பூனை கத்திக்கொண்டு அவரிடம் ஓடிவந்தது.

"அட, நீயும் இங்கதான் இருக்கியா?...உனக்குக் கூடவா என்னைப் பிடிக்கவில்லை? என் வீட்டு சோற்றை எவ்வளவு நாள் தின்றுய்; திடீரென்று புது சிநேகிதம் கிடைத்ததும் வந்து விட்டாயா?" என்று பூனையை இழுத்துத் தடவிக்கொடுத்தார் பீதாம்பரம்.

"உட்காரேன் மைனு – ஏன் நிற்கிறுய்?" என்றுஅன்போடு அவளை உட்காரச் சொன்னுர். அவள் உட்காரவில்லை.

"காலங்காத்தாலே ரொம்ப தூரம் நடந்தது பசி தாங்க முடியவில்லை...ஏதாவது இருக்கிறதா? போடுகிறுயா?" என்று மிகச் சாதாரணமாய் கேட்டார் அவர்.

மைனுவால், பீதாம்பரத்தின் போக்கைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

"சரி; உனக்கேன் சிரமம்—இருந்தால் நானே போட்டுச் சாப்பிடுகிறேன்!" எனக் கூறியவாறு பீதாம்பரம் அடுக்களையில் உள்ள பானையிலேயிருந்து பழைய சோற்றை எடுத்துத் தட்டிலே போட்டுக்கொண்டு மைனுவுக்கு எதிரே உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார். அவரோடு, அதே தட்டில் பூனையும் சாப் பிடத் தொடங்கியது.

மைனுவுக்கு நிற்க முடியவில்லை. உடலெங்கும் நடுங்கியது. ஆயினும் வலுவில் மன உறுதியை வரவழைத்துக் கொண்டு சமாளித்துக்கொள்ள முயன்றுள்.

"உப்பு இருக்கிறதா?" என்றுர், பீதாம்பரம்!

உப்புக் கிண்ணத்தை மைனுவே எடுத்து அவருக்கு அருகில் வைத்தாள். "கொஞ்சம் போடு உன் கையாலேயே; அளவாக!" என்று பீதாம்பரம் கோரிக்கைவிடவே, அவளும் பழைய சோற்றில் உப்பைப்போடத் தொடங்கி, கிண்ணத்தையே கை தவறிக் கவிழ்த்து விட்டாள். பீதாம்பரம் அதுகண்டு, "கல கல" வென நகைத்தார்.

## 5

"இதைக்கூட நான் சாப்பிடக்கூடாது என்றுதானே உப்பைக் கொட்டிவிட்டாய்? பரவாயில்லை — 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்று பழமொழி — நான் எப்போதும் உன்னை நினைத்துக் கொண்டே யிருப்பேன்" என்று குத்தலாகவும் குறும்பாகவும் பிதாப்பரம் பேசிக் கொண்டே போனார். இந்த இக்கட்டான நிலைமையைச் எப்படி சமாளிப்பதென்றே மைனுவுக்குப் புரியவில்லை.

"ஏன் எரு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய்? எத்தனையோ நாட்களுக்குப் பிறகு கணவன் வந்திருக்கிறேன்; வாயெல்லாம் பல்லாக என்னை வரவேற்க வேண்டாமோ?" என்றார் பீதாம்பரம்.

அதற்கு அவள், அவளையறியாமலே வெடுக்கென்று பதில் கூறிவிட்டாள்.

"வாயிலே பல் இருந்தாவுல்ல அப்படி வரவேற்கலாம்!" என்று!

பீதாம்பரம், அவள் நினைப்பதைப் புரிந்து கொண்டார். ஆனலும் அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல் "உனக்கா பல் இல்லே? அடுக்கு முல்லை போல அழகாக இருக்கிறதே!" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

"இதெல்லாம் போலிப் பல்! ஊரை ஏமாற்றுவதற்காகக் கடையிலே வாங்கியது!" என்றாள் மைனு — கோபமாக! எப்படியோ அவள் பேச ஆரம்பித்தால் போதும் என்று எதிர் பார்த்த பீதாம்பரம் மகிழ்ச்சி யடைந்தார். இருவரிடையே உரை யாடல் வளரலாயிற்று.

"நீ நளாயினி நாடகம் பார்த்திருக்கிறாயா மைனு?"

"இல்லை-நான் அல்லி அர்ச்சுனா நாடகம் மட்டுமே பார்த்து ஏமாந்திருக்கிறேன்!"

"அல்லி அர்ச்சுனா, காதல் கதை! நளாயினிதான் உண்மை யான பதி பக்தியை விளக்கும் கதை!"

"நீங்கள் வன்னித் திருமணம் நாடகம் நடத்தியிருக்கீங்களா?"

"இல்லை ..."

"பொய் சொல்றீங்க! நீங்கதான் வள்ளித் திருமண நாடகத்தை தலைகீழே நடத்தியிருக்கீங்களே?"

"தலைகீழுவா? எப்போது? எங்கே?"

"எப்போதா? மறந்தா விட்டீங்க? உங்க வாழ்க்கையில் தான் நடத்தியிருக்கீங்க, பழைய வள்ளித் திருமணத்திலே வேலன் விருத்தனு வருவான். நீங்க நடத்தினதிலே விருத்தன், வேலனு வந்திருக்கான் — இல்லியா?"

"மைனு! முருகப் பெருமான், வள்ளியை நேரடியாக வந்து திருமணம் செய்து கொள்ளாமல் விருத்தனைப் போல வேஷம் போட்டு வந்தானே; எதறகாக? மனித வாழ்வின் உண்மையை விளக்கும் தத்துவமாக்கும் அது! வாலிபம் என்றைக்கு மிருக்காது — ஒரு நாளைக்கு மனிதனைக் கிழட்டுத்தனம் சூழ்ந்து கொள்ளும் என்பதை எடுத்துக் காட்டி வள்ளியின் மனசை உறுதிப்படுத்துவதற்காகவே விருத்தன் வேடம்!"

"என்னைக்காவது ஒருநாள் வாலிபம் மறையத்தானே போகுதுன்னு நினைச்சு வள்ளி அந்த முருகனைக் கிழவனுகவே இருக்கச் சொல்லவில்லையே — வாலிபனுக வந்த பிறகுதானே கல்யாணம் செய்து கொண்டாள்!"

"அவர் கடவுள் — அதனுல் விருத்தன், வேலனுக மாறி விட்டார்!"

"அப்படின்னு கடவுள் கதையைச் சொல்லி சாதாரண மனுஷாளுக்கு உதாரணம் காட்டாதீங்க!"

"சுற்றி வளைப்பானே ... மைனு — நீ சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்ததற்குக் காரணம் என்ன?"

"இதை நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்து கொண்டிருக்க வேணும்!"

"நீ தான் எனக்குக் கடிதம் எழுதினுய். என்மீது ஆசை கொண்டு விட்டதாகவும் அதை மாற்றிக் கொள்ள முடியா தென்றும் கெஞ்சியிருந்தாய் உன் படத்தை வேறு அனுப்பி என்னே மயக்கினுய் உன் இஷ்டப்படி கல்யாணம நடந்த பிறகு ஓடிவந்து விடுவதென்ருல் இது நியாயமா ?"

"பசும்புல் தரையென்று நினேச்சு, படுகுழியிலே விழுந்த யானே எப்படியாவது தப்பிக்க மாட்டோமான்னுதானே தவிக் குது ! அது மாதிரிதான் என் கதையும் !"

"மைனு ! உன் கழுத்திலே கிடக்கிற மாங்கல்யத்துக்காவது மதிப்பு கொடுத்துப் பேசு நான் மானம் அவமானத்தை விட்டுட்டு உனக்கிட்ட பிச்சை கேட்க வந்திருக்கிறேன். பீதாம்பர மென்ருல் ஊரெல்லாம் பேரு — புகழ் ! அதை கெடுத்து விடாதே ! பீதாம்பரம் பெண்சாதி, யாருடனே ஓடிவிட்டான் என்று ஊர் ஜனங்கள் பேசினுல் அதைவிட நான் தூக்கு மாட்டிக் கொண்டு செத்துப் போகலாம் !"

"மன்னிச்சுக்கிங்க ! என்னே மறந்துடுங்க !"

"முடியவே முடியாது ! உன்னே என்னுல் மறக்கவே முடியாது ! பாலவனமாக இருந்த என்னுடைய நாடக வாழ்க் கையை நினேத்து நினேத்து அழுது புலம்பியிருக்கேன் ஆனுல் அது எல்லாம் மறந்து போகிற அளவுக்கு உனக்கும் எனக்கும் கல்யாணம் நடந்தது. மைனு ! திருமணத்தன்று நீ மகிழ்ச்சி யாகத்தான் இருந்திருப்பாய். ஏனென்ருல் அப்போதெல்லாம் நீ என்னே மன்மதன் என்றல்லவா நினேத்துக்கொண்டிருக்கிருய் ! உன் மகிழ்ச்சியெல்லாம் அப்போது நான் கொண்ட மகிழ்ச்சி யோடு போட்டி போட்டிருக்கவே முடியாது ! எட்டாத பழம் நொண்டிக்குக் கிடைத்துவிட்டது என்று பெருமைப்பட்டுக் கொண்டேன். எப்படியும் விஷயம் வெளிச்சமாகி விடும்—பிறகு நீயும் என்ன இருந்தாலும் நம் கணவர்தானேயென்று சமாதான மாகி விடுவாய் என்று ஒரு நம்பிக்கை யிருந்தது எனக்கு. அந்த நம்பிக்கையிலும் ஆனந்தத்திலும் மண்ணேப் போட்டு விட்டாய் இப்போது !"

"என்னைக் குற்றவாளியாக்கி நீங்கள் தப்பித்துக்கொள்ளப் பாக்கிறீங்களா? நீங்களும் முன்னெருகாலத்திலே நலல வாலிபரா இருந்திருப்பீங்களே; அதை நினைச்சுப்பாருங்க! வெட்கத்தை விட்டுவிட்டுக் கேக்கிறேன்—அதைப் போல இள வயசுக்கார ஒரு பெண்ணுக்கு என்னென்ன எண்ணங்கள் தோணும்! அதுக்கெல்லாம் நீங்க தகுதியானவர்தானு? யோசித்துச் சொல்லுங்க!"

"யோசிப்பதென்ன? குருடனுக்கிட்ட கேட்டாலும் நான் தகுதியல்ல என்றுதான் சொல்லுவான், மைனு! தகுதி—தரம்—இதெல்லாம்பற்றிப் பேசி உன்னை இணங்க வைக்க வரவில்லை நான்! என்னை நீயேவந்து கல்யாணம் செய்து கொண்டாய். நீயே இப்போது கைவிட்டுவிட்டாய்! இது நியாயமா—என்றுதான் உன்னிடம் மன்றுடிக் கேட்டு மீண்டும் உன்னை அழைத்துப் போக வந்திருக்கிறேன்!"

"எனக்கும் உங்களுக்கும் கல்யாணம் என்று ஒரு நிகழ்ச்சியே நடக்கலேன்னு நினைச்சுக்கிட்டு இருந்துடுங்க!"

"மருந்து சாப்பிடும்போது குரங்கை நினைத்துக் கொள்ளாதேயென்று யாரோ ஒரு மருத்துவன் சொன்னதும; அது போல்தானிருக்கிறது இதுவும்!"

"வீணுப் பேசிகிடடு இருக்கிறதிலே என்ன பிரயோஜனம்?

"அதான் நானும் சொல்றேன்; உடனே என்னோடு புறப்படு!"

"முடியாது! முடியாது! என் உயிர் போனலும் சரி; உங்களோட இனி வாழ முடியாது!"

"வாழ வேண்டாம்! சும்மா என் வீட்டிலே வந்து இரு. ஊர் வாயையாவது மூடுவதற்கு உதவியாக இருக்கட்டும்"

"இதுவரைக்கும் ஊர்வாய், அடங்கியா இருக்கும்? இந்நேரம் என்னைப்பத்தி எவ்வளவோ பேசியிருப்பாங்க. இனி மேல்தானு பேசப் போருங்க!"

"நீ சிங்காநல்லூருக்குப் போயிருக்கிறுய் என்றுதான் ஊரிலே பிரஸ்தாபம்! கல்யாணம் பண்ணின நோம் நல்ல நேரம் இல்லே. அதனுல் சொந்த ஊருக்குப் போய்விட்டு ரெண்டுமாசம் கழித்து வருவாய் என்றுதான் கேட்டவருக்கெல்லாம் சொல்லி வைத்திருக்கிறேன்!"

"நான் சொல்றதைக் கேளுங்க புருஷனுடு வாழ திருப்தியில்லேன்னு மனைவி சொல்லும்போது. மேலும் மேலும் பிடிவாதம் பண்றதிலே என்னங்க லாபம்?"

"திருப்தியோடு வாழ வேண்டாம. அதிருப்தியோடு வாழ! எப்படியோ நீ என் வீட்டிலே இருந்தா போதும்!"

"பொம்மை மாதிரி உங்கவீட்ல் இருக்கணுமா?"

"ராணி மாதிரி இரு!"

"பிராணி மாதிரிதான் இருக்கலாம்! பிராணிக்குக்கூட என்னேப் போல கஷ்டகாலம் வராது!"

"உன்னே எங்க வீட்டு எஜமானி மாதிரி நடத்துரும். என்னே உன் அடிமை மாதிரியே நடத்து! இதைவிட நான் இன்னும் என்ன சொல்றது மைனு?"

"வீட்ல வந்து எல்லாவற்றையும் ஆட்டிப் படைச்சு அரசாட்சி பண்ணனும்னு நினேக்கிறேன்? பிச்சைக்காரியா திரிவேன்—உங்க வீட்டு வேலேக்காரியாக்கூட இருப்பேன்—ஆனு மனசுக்குத் திருப்தியில்லாம எதுக்காக எனக்கு எஜமானி உத்தியோகம்?"

"உன் மனசுக்குத் திருப்தியாத்தானே இருக்கணும். இதோ இப்பவே சத்தியம் செய்து கொடுக்கிறேன், என் குலதெய்வத்தின்மேல் ஆணே! என் தொழில்மீது ஆணே! உன்னே நான் தொடுவதே இலே. என் மகளேப் போலவே நடத்துகிறேன் போதுமா?"

மகளேப் போல நடத்துவது உண்மையானுல், இப்போதே என்னே மகளேப் போல நடத்துங்கள். மகளுக்குக் கல்யாணமாகி மாபபிள்ளே வீட்டுக்கு வந்திருக்கிருள். அப்பா—

—நீங்கள் மகளைப் பார்க்க வந்திருக்கிறீர்கள் என்று கற்பனை செய்துகிட்டு, நீங்க மாத்திரம் ஊருக்குப் போங்க!"

"மைனு! நீ என் மகள்தான்—என்னை மன்னித்துவிடு!"

மைனு, சற்றும் எதிர்பாராத நிலையில் பீதாம்பரம் அவள் காலில் விழுந்துவிட்டார்; அவளால் ஒன்றும் செய்ய முடிய வில்லை மீண்டும் அசைவற்றுப் போனுள். பீதாம்பரம் தன் காலில் விழுந்து கெஞ்சுவதாகவே அவளுக்குத் தோன்ற வில்லை தன் கணவன் பயங்கர விசுவரூபம் எடுத்து, காய்ச்சிய இரும்பாலான கரத்தால் தன்னை அலக்காகத் தூக்கி நரநர வென்று பிழிவது போலவும், தன் விலா எலும்புகள் நொறுங்கி, இருதயம் நசுங்கி, ரத்தம் பீறிட்டெழுவது போலவும அவ ளுக்குத் தோன்றியது. அவன் அவளை அடித்திருக்கலாம். வெட்டியிருக்கலாம். மண்டையை உடைத்திருக்கலாம் அதை யெல்லாங்கூட அவளால் தாங்கிக் கொண்டிருந்திருக்கக் கூடும். காலடியில் அவன் சுருண்டு கிடப்பதை அவளால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை கண்ணீர் அவளையறியாது பெரு கிற்று. மெல்லிய குரலில் "எழுந்திருங்கள்!" அன்று அவரது தோள்பட்டையைப் பிடித்துத் தூக்கினுள்.

"உண்மைதான் மைனு! உன்னை என் மகளாகவே நடத்து வேன். நம்முடைய கல்யாணத்தை மறக்கச் சொன்னையே; நிச்சயம் மறந்துவிடுகிறேன். நீயும் மறந்துவிடு. மகளும் தந்தையுமாக வாழ்வோம் இன்னும் சொல்கிறேன்; மகளே! உனக்கேற்ற ஒரு வாலிபனையும் திருமணம் செய்து வைக் கிறேன்!"

அழுதபடி பீதாம்பரம் இதைச் சொல்லி முடிப்பதற்குள், மைனு அவரது கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு "அய்யோ! என்னை மன்னித்து விடுங்கள்: இப்படியெல்லாம் சொல்லாதீர்கள்!" என்று கதறித் துடித்தாள். பீதாமபரத்தின் முகத்தைப் பார்க்கவே இப்போது அவள் அஞ்சி நடுங்கினுள். தன்னை உயிரோடுவைத்து அணு அணுவாகச் சித்திரவதை செய்யும் பேய் என்று யாரைக் கருதினுளோ; அந்தப்பேய்

அவள் எதிரே நின்று கெஞ்சும் தோரணையில் அவள் உயிரை யாசிப்பதுபோல் ஒரு சமயம் தோன்றியது அடுத்தகணம்; அன்பின் அரவணைப்பில் அந்தப் பேயை அறியாமலே அதன் கொடிய கூரிய நகங்கள் அவள் நெஞ்சைக் கிழித்து இருதயத் தைப் பொத்தலாக்கி விட்டதுபோலவும் இருந்தது. முதல் நாள் இரவு அவள் உள்ளம், உடல் எல்லாம் பாழ்பட்டு விட்டதை எண்ணிக் கொண்டாள். வியர்வை கொட்டியது. மீளாத பாபக் குழியில் விழுந்து விட்டோம் என்ற ஒரு பய உணர்ச்சி மேலும் அவளை ஆட்டிப்படைத்தது. பித்தம் கொண்டவள் போல் ஆனாள்.

"என்னைத் தொடாதீர்கள்—நான் பாபி—நான் பாபி!" என்று கத்தினாள்.

"மைனு! மைனு!" பிதாம்பரம் அழைத்தார்.

மைனு, வெறி கொண்டவள்போல ஓடத் தொடங்கினாள். பீதாம்பரம் பின் தொடர்ந்தார். ஆனால் அவரது பருவம், அவள் ஓட்டத்தைத் தடுக்க உதவி செய்யவில்லை. மைனு, நேராகக் கோயில் நிர்வாகி வீட்டுக்குள் ஓடினாள். அங்கே நிர்வாகி மட்டுமே இருந்தார். "தீச்சட்டி சிங்காரம் இருக் கிறாரா?" என்று பரபரப்போடு கேட்டாள். நிர்வாகி, ஒரு விநாடி தாமதித்தார், பதில் சொல்ல! பிறகு அவர், "சிங்காரம் தானே? உள்ளேயிருக்கிறார்!' என்று கூறினார். மைனு வீட்டுக்குள்ளே ஓடினாள். வீட்டுக்குள் யாருமே காணப்பட வில்லை ஒரே அமைதியாக இருந்தது. திருப்பி வாயிற்புறம் ஓடிவந்தாள். வாயிற்கதவு தாள் போடப்பட்டிருந்தது. எப்படி வெளியே போவது? விழித்தாள்! கடகடவென சிரித்துக் கொண்டே, கோயில் நிர்வாகி அவளை நெருங்கினார். மைனு, பெருத்த கூச்சல் போட்டாள்.

அந்தக் கூச்சல் யார் காதிலும் விழவில்லை. நிர்வாகியின் கைகளில் மைனு சிக்கினாள். எத்தனையோ நாளாக நிர்வாகியின் நெஞ்சில் மூண்டுகொண்டிருந்த நெருப்பு அப்போது தான் அணைந்தது. மூன்றுவது முறையாக அவள் கற்பு களங்கப் படுத்தப்பட்டது!

கோயில் நிர்வாகி அவளைப் பார்த்து வெற்றிப் புன்னகை புரிந்தார் அவளும் சிரித்தாள். நிர்வாகி, கூடத்திலேயிருந்த பெரிய மரப்பெட்டியைத் திறந்தார். அதற்குள்ளே அழகான செல்லப் பெட்டி யொன்றிருந்தது. அதிலேயிருந்து இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து மைனுவிடம் நீட்டினர்.

அவள் 'போதாது' என்பது போல் தலையசைத்தாள். நிர்வாகி மீண்டும் சென்று பெட்டியைத் திறந்தார். மைனு. எதிர்பார்த்த சமயம் கிடைத்து விட்டது. அருகேயிருந்த எண்ணெய் வழியும் குத்துவிளக்கை அவசர அவசரமாகத் தூக்கினாள். தூக்கிய வேகத்தில் நிர்வாகியின் பிடரிமீது ஓங்கி அடித்தாள். நிர்வாகி "அய்யோ" என்று கத்திய சப்தம்கூட வெளியே கேட்கவில்லை. செத்தானு. பிழைத்தானு அந்தச்சண்டாளன் என்று அவள் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடிவந்தாள். வீட்டு வாயிற் புறத்திலிருந்து வெறிக்கப் பார்த்தாள். பீதாம்பர பாகவதர் தன் பிரியத்துக்குரிய பூனைக்குட்டியைத் தூக்கிக் கொண்டு தூரத்தில் போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. பின்னாலேயே ஓடினாள். அவரோ திரும்பாமல் நடந்துகொண்டிருந்தார்.

ஓடியவள் ஏதோ ஒரு நினைவில் நின்றாள். அரைப் பின் தொடர அவளுக்கு இஷ்டமில்லை வெறிபிடித்தவள்போல எதிரேயுள்ள பரந்த வெளியை உற்று நோக்கினாள். உடம்பெல்லாம் எரிவது போலவும் உள்ளத்தில் தழலைக் கொட்டியது போலவும், உணர்ச்சி அவளை ஆட்டிப் படைத்தது. அவளாகவே "பாபி! பாபி!" என்று பெருமூச்சோடு கலந்து முணு முணுத்துக் கொண்டாள். வாழ்க்கை முகப்பில் எவ்வளவோ உற்சாகத்தோடு காலெடுத்து வைக்கிறேம் என்ற மகிழ்ச்சியில் கர்வத்தோடு நுழைந்த காரிகை, கசங்கிய மலராய்—கருகிய தளிராய் சூன்யமாகத் தோன்றும் எதிர்காலத்தை நீர் மல்கிய கண்களோடு வரவேற்க வேண்டிய நிலைபெற்று விட்டாள்.

இனி அவளுக்கு யார் துணை? தீச்சட்டி சிங்காரம்தானு? அவனிடம் சென்று எப்படித் தன் நிலையை விவரிப்பது? "கனவனை வெறுத்தேன். காதலனுய் உன்னைப் பெற்றேன். காமுகன்

ஒருவனின் ஆசைக்கும் உடன்பட்டேன்" என்ற செய்தியை அவனிடம் போய்க் கூறுவதா? சே! சே! அதைவிட உயிரை விட்டுவிடலாமே — அதுதான் சரியான முடிவு! ஆனால் சாவதற்குள் ஒருமுறை சிங்காரத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்காதா? அவனைப் பார்த்த ஆறுதலுடனாவது சாகக்கூடாதா? அதற்கு வழி? அவள் தீர்மானம் செய்து விட்டாள். அவனைப் பார்த்தே தீருவதென்று!

சிற்றூர் நோக்கி அவள் கால்கள் நகர்ந்தன. கல்லும் முள்ளும் காடுமுரடான பாதையும் அவளை என்ன செய்யும்? சாவதற்கு முடிவு கட்டியாகி விட்டது—இனி இந்த சரீரம் என்ன ஆனால்தான் என்ன? முள் கிழித்துத் தோள்பட்டைப் பக்கம் ரத்தம் கசிகிறது அதோ கோயில் நிர்வாகியின் பல் பட்டு அவள் கன்னத்திலே ரத்தம் கட்டியிருக்கிறது முள் உண்டாக்கிய காயத்திலிருந்து கசியும் ரத்தத்தில் எந்தக்களங்கமும் இல்லை. பிரசித்தி பெற்ற ரத்த ஆராய்ச்சி நிபுணர்கள் பரிசோதித்துப் பார்த்தாலும் அது தூய்மையான ரத்தம் மென்றே கூறுவர்.

ஆனால் வெளிப்படாமல் கன்னத்தில் கட்டிக்கொண்டிருக்கிறதே ரத்தம்—கோயில் நிர்வாகியின் பல்லால் ஏற்பட்ட வினை—அந்த ரத்தம் பயங்கரக் கிருமிகளை உற்பத்தி செய்யக்கூடிய சாக்கடைத் தண்ணீராக ஆகிவிட்டது. அதனால்தான் அவள் முள் கிழித்து ஒழுகும் குருதியைப்பற்றிக் கவலைப்படாமல் நடந்தாள்.

பூனையின் பாதத்தைவிட மிருதுவான அவன் பாதத்தில் பருக்கைக் கற்கள் குத்துவது அவள் கண்களில் வெளிப்படும் கலக்கத்திலிருந்து நன்றாப் புலப்படுகிறது அதையும் அவள் லட்சியம் செய்யவில்லை. இந்த உடம்பு எப்படிக் கெட்டால் என்ன? நாளைக் காலையில் சுட்டுப்பொசுக்கி சாம்பலாக்கி விடுவார்கள் தற்கொலைப் பிணம் என்பதற்காக டாக்டர்கள் அறுத்துப் பார்ப்பார்கள். பிரேத விசாரணை செய்யும் அந்த டாக்டர்களுக்கு திறமையிருக்குமேயானால் கைக் கெடிகாரம் ஓடுகிறதா என்று பார்ப்பதற்குக் காதிலே வைத்துக் கவனிப்பதுபோல பிரேத விசாரணையின் போது இருதயத்தையும் எடுத்துக் காதிலே வைத்துக் கேட்டால்

தற்கொலைக்கான உண்மைக் காரணத்தை அது அவர்களிடம் நிச்சயம் சொல்லிவிடக்கூடும். தங்கம், பொன், மலர், மாணிக்கம் என்றெல்லாம் வர்ணிக்கிற உடலை, மண்மீது கிடத்தி, வரட்டியை அடுக்கி, நெருப்பையும மூட்டி, இருந்த இடம் தெரியாமல் ஆக்கி விடுவார்கள் அதற்குள் எவ்வளவு கல் குத்தினுல் என்ன? முள் கிழித்தால் என்ன? சரீரம் முழுவதுமே புண்பட்டுப் போனுலும் கவலையில்லை. சிங்காரத்தைக் கடைசித் தடவையாகப் பார்ப்ப தற்குக் கண்கள் மட்டும் மிச்சமிருந்தால் போதும் அவளுக்கு!

எண்ணங்கள் — பெருமூச்சுக்கள்— எதிரேயுள்ள எந்தத் தடையைப்பற்றியும் கவலைப்படாத தைரியம்—எல்லாம் சேர்ந்து அவளைச் சிற்றூருக்குக் கொண்டுவந்துவிட்டன.

சிற்றூரின் எல்லையிலுள்ள ஒரு பிள்ளையார் கோயில் மண் டபத்துக்கு அவள் வந்து சேர்ந்தாள். மண்டபத்திலிருந்து யாரோ பாடுவது அவள் காதில் விழுந்தது;

" சாலையிலே ரெண்டு மரம் சர்க்காரு வச்ச மரம்
ஓங்கி வளர்ந்த மரம் — தங்கரத்தினமே!
உனக்கேத்த தூக்கு மரம் — என் பொன்னுரத்தினமே!"

— இந்தப் பாடலைத் திருப்பித் திருப்பி ஒரு குரல் பாடிக் கொண்டிருந்தது. மைனு அந்தப் பாடலில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து நின்ருள். உடனே இன்னெரு பாடல்!

" யாரடி கள்ளி நீ...? கூறடி கொள்ளிக்காய்ப் பிசாசே!" /

என்று உரக்கப் பாடியபடி அவளெதிரே வந்து நின்ருன் பஞ்சா யத்தார் பரமசிவத்தின் செல்வத் திருமகன். அவனுக்கு பைத்திய மென்ற விபரம் அவளுக்கு எப்படித் தெரியும்? அவளேதான் இப்போது முக்கால் பைத்தியமாக ஆகிவிட்டிருக்கிருளே!

" இதுதானே சிற்றூர் என்பது " — அவனைப் பார்த்து மைனு மெதுவாகக் கேட்டாள்,

" ஆமாம்! இதுதான் சிற்றூர்! நான்தான் பஞ்சாயத்தார் மகன்! என் பெயர் சிரஞ்சீவி! உனக்கு என்ன வேண்டும்?"

— பைத்தியம், உளர ஆரம்பித்தது. அவளுக்கோ அது புரியவில்லை.

"தீச்சட்டி சிங்காரத்தின் வீடு எங்கேயிருக்கிறது?"—ஆவலோடு கேட்டான்.

"இந்த ஊரில்தான் இருக்கிறது. தீச்சட்டி சிங்காரத்தின் ஊரும் இந்த ஊர்தான். என் ஊரும் இந்த ஊர்தான். சிங்காரத் தோட பெண்டாட்டி ஊரும் இந்த ஊர்தான்!"

பைத்தியத்தின் பதில் அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

"என்ன? சிங்காரத்துக்குக் கல்யாணமாயிட்டுதா?"

"ஏன்— நீ கல்யாணம் பண்ணிக்கலாம்னு பாக்கிறியா? அதான் முடியாது. சிங்காரத்துக்குக் கல்யாணமாகி ஒரு பிள்ளை கூட பிறக்கப்போவுது."

"நிஜமாவா? உண்மைதானு நீ சொல்றது?"

"அரிச்சந்திரனோட மகனுக்கும் நான். உனக்கிட்ட ஏன் பொய் சொல்றேன். சிங்காரத்துக்குக் கல்யாணம் ஆயிட்டுது. இனிமேல் கருமாதிதான் பாக்கி!"

"அப்படியா? அட தெய்வமே!"

"தெய்வம் வேணுமா உனக்கு? இதோ கோயிலுக்குள்ளே யிருக்கு. போயி பேசிகிட்டு இரு. நான் போறேன்."

"போறேன்டி போறேன்டி கட்ட பொம்மு!
போருக்குப் போறேன்டி கட்ட பொம்மு!
போகவிடை தாயேண்டி வெள்ளாயம்மா!
போனுல் திரும்ப மாட்டேண்டி வெள்ளாயம்மா!"

யாடிக்கொண்டே சிரஞ்சீவி அதைவிட்டு ஓட்டம் பிடித்தான்.

மைனுவுக்கு ஏமாற்றத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி தாங்க முடியவில்லை. சாவதற்கு முன்பு யாரைக் கடைசி முறையாகக் காணவேண்டுமென்று ஓடோடி வந்தாளோ, அவன் தன்னை ஏமாற்றிவிட்ட எத்தன் என்று முடிவுகட்டிக் கொண்டாள்.

பைத்தியத்தின் உளரல் அவள் நெஞ்சில் பெரியதோர் குமுறலை உண்டாக்கியது. சிங்காரத்தை இனி எதற்காகக் காண வேண்டும்? மைனுவின் மனம் மரத்துப்போய் விட்டது எவ்வளவு நேரம் அந்த மண்டபத்திலேயே உட்காந்திருந்தாள் என்று அவளுக்கே தெரியாது. உலகம் இருட்ட ஆரம்பித்தது. இருட்டிப்போன தன் வாழ்விலும் ஒரு நள்ளிரவு அமைதியை விரைவிலே ஏற்படுத்த அவள் அவசரப்பட்டாள்.

தனக்காக இந்த உலகத்தில் ஒருவன் கவலைப்படுவான்—தன் பிணத்தின்மீது கண்ணீர் கொட்டுவான் என்று எதிர்பார்த்தாள்; அந்தச் சிங்காரமும் இப்போது துரோகியாகி விட்டான் அவளுக்கு. மனங்கொண்ட மட்டும் அவனை சபித்தாள். ஏதோ கண்ட இடத்தில் பசியை அடக்கிக்கொள்ளத் தன்னைக் கடைப் பொருளாக மதித்துவிட்ட கயவன் என்று அவனை விமர்சனம் செய்தாள்.

அவள் அவனைச் சபித்துக்கொண்டிருந்த அதே நேரத்தில் தான், சிங்காரம் தன் தங்கை கற்பூரத்துடன் ஊர் சுற்றும் பயணத்தைப்பற்றி விவரித்துக்கொண்டிருந்தான். எல்லா ஊர் களிலும் அவனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரங்களையும், பரிசுகளையும் பற்றி ஆனந்தம் பொங்கத் தங்கையிடம் அளவளாவிக் கொண்டிருந்தான். அவனது ஆனந்தத்திற்கே அடிப்படை யாக அமைந்தது மைனுவின் சந்திப்பல்லவா? அந்தச் சந்திப் பையும், சந்திப்பில் ஏற்பட்ட தீர்மானத்தையும் எப்படித் தங்கை யிடம் கூறுவது என்று அவனுக்குப் புரியவில்லை.

அவள், தீச்சட்டி உடைந்ததுபற்றி மிகவும் கவலைப்பட்டாள். "மறுநாளே தீச்சட்டி வாங்கினால்தான் குடும்பத்துக்கு நல்லது; இல்லாவிட்டால் மிகவும் பாபம் சம்பவிக்கும்!" என்று அண்ணனிடம் பயமுறுத்தினாள்.

எப்படியாவது பேச்சோடு பேச்சாக மைனுவைப்பற்றிக் கூறி, அவளோடு குடித்தனம் நடத்துவதற்குக் கற்பூரத்திடம் சம்மதம் பெற்றுவிடவேண்டுமென்று துடித்தான் சிங்காரம். மெதுவாகப் பேச்சையும் ஆரம்பித்தான். கற்பூரத்தின் கல்யாணத்திலிருந்து பேச்சைத் தொடங்குவதே நல்லது என்று கருதினான் போலும்.

"வயது ஆகிக்கொண்டே போகிறது. சீக்கிரம் இந்த வருஷமாவது உனக்குக் கல்யாணத்தை முடிக்கவேண்டாமா?" என்று தொடங்கினன்.

"ஆரம்பிச்சுட்டியா கல்யாணப் பேச்சை! சரிதான் வாயை மூடு!" என்று வெடுக்கென்று பதில் சொல்லிவிட்டு, "எனக்கென்ன அவசரம்! முதலில் நீ கல்யாணம் செய்துகொள்ள சம்மதம் கொடு — நான் ஒரு அழகான பெண்ணு பார்த்து வச்சிருக்கேன்!" என்று சிரித்துக்கொண்டே கூறினள் கற்பூரம்.

"பெண்ணு நீ பார்ப்பதா? கற்பூரம். உனக்கு அந்தச் சிரமம் இல்லாம நானே பார்த்துட்டேன்!" என்றான் சிங்காரம்.

அவள் விருப்பப்படியே பேச்சு தொடர்ந்தது.

"எங்கே யண்ணே பார்த்திருக்கிறே? எந்த ஊர்? யார் பெண்ணு?"

"சுற்றுப்பயணத்திலே தான் பார்த்தேன். ரொம்ப அழகான பெண்ணு. தங்கமான குணம். பெயரு மைனு!"

"தாயார் தகப்பனார் யாரு?"

"தாயார் தகப்பனார் இல்லே!"

"அண்ணன்.....தம்பீ?"

"யாருமில்லே!"

"பிறகு? அனுதைப் பெண்ணு?"

"ஆமாம்—அனுதை மாதிரி தான்! கணவன் இருந்தான்—அவனும் இப்ப இல்லே"

"என்னது?"

"ஆமாம்! அவள் கல்யாணமானவள்!"

"ஆ! வாழாவெட்டியா!"

கற்பூரம், உணர்ச்சி வசப்பட்டுவிட்டாள். உணர்ச்சிவசப்படும்பொழுது வழக்கமாக வரும் ஆவேசம் வந்துவிட்டது அவளுக்கு! சாமியாட ஆரம்பித்துவிட்டாள். கற்பூரத்துக்கு

ஆவேசம் வந்தால் அவ்வளவுதான், வீட்டு உத்திரம் வரையில் எழும்பிக் குதிப்பாள். பரணியில் ஏறி உட்கார்ந்து கொள்வாள். பத்திரகாளியின் ஆவேசம் என்று ஊரார் கூறுவார்கள். குறி கேட்க ஓடிவருவார்கள். சிங்காரத்துக்கு கற்பூரத்தை எப்படி சமாளிப்பது என்பது பெரிய பிரச்னையாகி விட்டது. ஊர் மக்கள் கூடிவிட்டால் என்ன செய்வது? எல்லோரிடமும் தன் ரகசியத்தை அவள் கூறிவிட்டால் சங்கடமாகி விடுமே — அதற் காகக் கதவை இழுத்து சாத்திக்கொண்டு, கற்பூரத்தை நோக்கி கரங்குவித்து, "அம்மா, தாயே! பத்ரகாளி! என்னை மன்னிச்சுடு!" என்று மன்றாடினான்.

"மன்னிக்கிறேன்! அடேய்—அவளை மறந்துடுறியா? மறந் துடுறியா?" என்று கற்பூரம் கத்தினாள். கத்திக்கொண்டே சிறிது நேரம் கழித்து மயங்கிக் கீழே விழுந்தாள்.

சாமி, மலையேறி விட்டது! சிங்காரத்திற்கு சிறிது சங்கடம் விட்டது. வழக்கம்போல அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவித்தான். கற்பூரம் கண்களைக் கசக்கிக்கொண்டே எதிரே யிருந்த அண்ணனைப் பார்த்தாள். அவள் கண்களி லிருந்து நீர் வழிந்தது. "அழாதே கற்பூரம்!" என்றான் பரிவோடு சிங்காரம்.

"அண்ணு! அந்த வாழாவெட்டியை மறந்துடு. அதெல் லாம் நம்ம குடும்பத்துக்கு ஆகாது. நான் உனக்கு அருமை யான பெண்ணு பாத்து வச்சிருக்கேன்!" என்று தழுதழுத்த குரலில் கூறினாள் கற்பூரம்.

"யார் அப்படிப்பட்ட அதிசயப் பெண்ணு?" என்று வெறும் போடு கேட்டான் சிங்காரம்.

"நம்ப பூஞ்சோலையம்மா மகள் பொன்மணி!" என்றாள் பூரிப்போடு கற்பூரம்.

"பொன்னும் வேண்டாம்; மணியும் வேண்டாம்; எனக்கு என் மைனுதான் வேண்டும்!" என்று வேகமாக வெளியே நடந் தான் சிங்காரம்.

அப்படியா? உன் இஷ்டம்—நான் உயிரோடு இருந்து உன் பெண்டாட்டியைப் பார்க்கமாட்டேன்; அது மாத்திரம் சத்தியம்!" என்று கூச்சலிட்டாள் கற்பகம்!

சிங்காரம், மன உளைச்சலைத் தணித்துக் கொள்ள கொஞ்சம் மருந்து தேடலாம என்று பக்கத்துத் தெரு நோக்கி நடந்தான்.

## 7

மைனுவுடன் வாழ்க்கை தொடங்குவதற்குத் தன் சகோதரியே முதல் தடையாக முளைத்து விட்டதை நினைத்து நினைத்து வரண்டுபோன நெஞ்சத்தை புளித்துப்போன மதுபானத்தால் நனைத்து ஈரமாக்கி விட முடியும் என்று சிங்காரம் நம்பினான் நிலை மறக்கும் வரையில் நன்றாகக் குடித்தான். போதை தெளிந்த பிறகு மீண்டும் வேதனைகள் மூலை முடுக்குகளிலேயிருந்து தலைநீட்டி முளையைக் குடையும் என்பதை சிங்காரம் மட்டுமல்ல; மதுபானத்தைக் கவலை தீர்க்கும் மருந்து எனக்கருதும் அனைவருமே மறந்து விடுகிறார்கள்.

பொழுது விடிய விடிய போதையும் குறைந்தது. இரவு தன் தங்கை கற்பூரத்திடம் மைனுவைப் பற்றிக் கூறியதும் அதற்கு அவள் கூறிய பதிலும் அவன் நினைவுக்குத் திரும்பின. மைனுமீது அவன் கொண்டு விட்ட மையல், தங்கையின் தடைகளை யெல்லாம் உடைத்தெறியக் கூடிய வலிமை வாய்ந்தது என்ற உணர்ச்சி மேலோங்கி, அவனை நிமிர்ந்து நிற்கச் செய்தது.

எப்படியும் மைனுவுடன் சிற்றூர் குடும்ப வாழ்க்கையை சிங்காரமாக ஆரம்பிக்க வேண்டும். அதற்கு எந்தப் பக்கமிருந்து எதிர்ப்பு வந்தாலும், எதிர்ப்பவர்கள் யாராயிருந்தாலும் கவலைப் படப் போவதில்லை. மைனு அழகான பெண் மாத்திரமல்ல; அன்பும் நல்ல பண்பும் கொண்டவள்—வாழ்க்கையிலே எதிர் பாராத ஏமாற்றத்தால் திடுக்கிட்டுப் போயிருப்பவள். அவளுக்குத் தன் ஒருவனைத் தவிர வேறு ஆதரவே இல்லை. தானும் கைவிட்டு விட்டால் அவள் பைத்தியமாக மாறி விடுவாள். உடனே குடித்தனத்திற்கான ஏற்பாடுகளைக் கவனித்தே தீர வேண்டும் என்றெலலாம் தீவிரமாகயோசித்து முடிவெடுக்கலானான் சிங்காரம்.

இரவு அவன் நன்றாகக் குடித்திருந்தபோது மைனாவை நினைத்து மயான காண்ட மெட்டிலே காதல் கீதமே பாட ஆரம்பித்துவிட்டான். அவனுடைய கூட்டாளிகள் தடுத்திராவிட்டால் தள்ளாடித் தள்ளாடி நடந்தாவது தப்பித்தவறி வேப்பமரத்தடிப்பக்கம் போயிருப்பான்.

தற்கொலைக்குத் தயாராகி விட்ட மைனாவைப் பார்த்திருப்பான். மைனா, அவன்மீது கொண்ட சந்தேகம் நிவர்த்தியாகியிருக்கும். கோவில் நிர்வாகியின் கோணல் சேட்டையை அவள் கூறியிருப்பாள். சிங்காரத்தின் ஆத்திரம் நிர்வாகியின் மீது திரும்பி அது பல விபரீத விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும். இப்படி எதுவுமே நடக்காமல் அவனை முடக்கிவிட்டது மயக்க உணர்ச்சி! வேம்பில் கரும்பு தொங்குவது போல் அவள் தொங்கி விட்டாள். சிங்கா நல்லூரில் பிறந்தாள். சிந்தை மணக்கும் சீரானவாழ்வு எய்தியதாகப் பெருமகிழ்வுகொண்டு வாழ்க்கையின் முதற்படியில் கால் வைத்தாள்.

பாசி பிடித்த அப்படியிலிருந்து வழுக்கித் தலைகுப்புறவிழுந்து மூர்ச்சையானாள். பின் கண்திறந்து பார்க்கும்போது வரண்டு போன நாவில் ஒரு துளி தேன் விழுந்ததுபோல சிங்காரம் வந்தான். தேன் துளிமீது தேள் விஷம் கொட்டியது போல் கோயில் நிர்வாகி குறுக்கிட்டான். மைனா அடியோடு பாழ்படுத்தப்பட்டு விட்டாள். அவளுக்கு இனிமேல் உலகத்திலே ஆதரவு அந்த கனமான வேப்பமரக் கிளைதான். அவளுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பு, அந்த இரண்டு முழக் கயிற்றோடு முடிந்து விட்டது. அந்த இருட்டில் அவள் எவ்வளவு துணிச்சலாக வேப்பமரத்தின் மீது ஏறினாள்!

அவள் எதற்காகப் பயப்பட வேண்டும்? தவறிக் கீழே விழுந்துவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சவேண்டுமா என்ன? அப்படி விழுந்தாலும் அவள் விரும்பியபடி உயிர் போய்விடப் போகிறது. ஆகவே மளமளவென்று மரக் கிளையில் தொத்தினாள். கயிற்றைக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு மரக்கிளையில் இணைத்தாள் "அப்பா!" என்று விம்மும் குரலில் ஒருமுறை கூவினாள். அந்த ஒரு வார்த்தையில் தான் எவ்வளவு கதை அடங்கியிருக்கிறது. மகளின் சந்தோஷம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அவன் தந்தை எவ்வளவு கஷ்டப்பட்டார்! மகளின் மனதுக்குப் பிடித்த மணவாளனைத்

தேர்ந்தெடுத்தோம் என்பதிலே அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சி ! நல்லவேளை ; அவர் இந்தக் கொடுமையை யெல்லாம் பார்க்காமலே கண்களை மூடிவிட்டார் என்ற ஆறுதல் கலந்த பெரு மூச்சு வெளிப்பட்டது. அதுதான் அழகி மைனுவின் கடைசி மூச்சு போலும் !

அடுத்த கணம் கிளையிலிருந்து குதித்து கயிற்றிலே ஊசலாடினாள். சில விநாடிகள் உயிர்த் துடிப்புக்குப் பிறகு மைனு அமைதி பெற்றாள்.

இப்போது அவள் நெஞ்சிலே துயரமில்லை. பீதாம்பர பாகவதரின் உருவம் அவள் கண் எதிரே வந்து மிரட்டுவது இனி முடியாது. கோயில் நிர்வாகியின் பயங்கர உருவத்தை நினைத்து நினைத்துப் பயப்படும் அவள் மனக்கண் அறவே மங்கி விட்டது !

தீச்சட்டி சிங்காரத்தைப் பற்றிய நினைவு அலைகள் எழுவதற்கு இனி இடமே இல்லை. அவள தன்னை விடுவித்துக் கொண்டாள். ஆனால் சிங்காரத்தைத் துடிக்க வைத்துவிட்டுப் போய்விட்டாள். அவளை விட்டுப் பிரிந்து வந்தது முதல் அவளது பெயரையே மந்திரம்போல் உச்சரித்துக் கொண்டிருந்த அவனுக்கு தலையிலே இடி விழுந்தது போலாயிற்று அந்தக் காட்சி. குடித்தனம் நடத்துவதற்கு அவன் போட்ட திட்டங்கள் எல்லாம் சுக்கல் சுக்கலாக உடைந்து சிதறிவிட்டன.

நினைவிழந்து விழுந்த அவனை அருகாமையில் யார் வீட்டுக்காவது உடனே தூக்கிக் கொண்டு போகும்படி பஞ்சாயத்தார் பரமசிவம் அவசரப்பட்டார் மருத்துவரை அழைக்க ஒரு ஆள் ஓடினான். அதற்குள் சிங்காரத்தை பூஞ்சோலையின் வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு போய் படுக்க வைத்தார்கள்.

பூஞ்சோலையம்மாள் பதறிப் போய் அவன் மயக்கம் தீர்வதற்காக ஏதேதோ சிகிச்சைகள் செய்தாள் ஒன்றும் பயன்பட வில்லை. அண்ணனுக்கு ஏற்பட்ட ஆபத்தைக் கேள்விப்பட்ட கற்பூரம் பூஞ்சோலை வீட்டுக்கு ஓடினாள் அங்கே சிங்காரம் அசைவற்று வீழ்ந்து கிடக்கும் காட்சியைப் பார்த்ததுதான் தாமதம் ; உணர்ச்சி வசப்பட்டு விட்டாள். ஆவேசம் வந்து விட்டது.

அவளைக் கவனிக்கும் வேலை பெரிதாகிவிட்டது. பூஞ் சோலைக்கும் பொன்மணிக்கும்!

"ஆஹோய்! ஏ, மக்களா! இது தெய்வத்தோட குத்தம்! தெய்வத்தோட குத்தம்! இந்த ஜீவனுக்கு ஒரு குறைவும் வராது; பயப்படாதிங்க! பயப்படாதிங்க!" — என்று கத்த ஆரம்பித்தாள கற்பூரம்

கிழவர் பொன்னையா, 'லொக், லொக்' என்று இருமிக் கொண்டே மெதுவாக எழுந்து மாடத்திலுள்ள விபூதிக் கிண்ணத்தை கற்பூரத்திடம் நீட்டினர். கற்பூரம், விபூதியை வாரி யிறைத்து சிங்காரத்தின் தலையிலும் இரண்டு மூன்று பலமான அடிகள் கொடுத்து விட்டுப் பிறகு ஆவேசம் ஆயாசமாக மாறவே, அப்படியே ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

அதற்குள் மருத்துவர் வந்து விட்டார் மயக்கம் தீர்வதற் கான மருந்துப் புகை சிங்காரத்தின் மூக்கு வழியாகப் பிரயோகிக் கப்பட்டது.

இந்தச் சமயம், கற்பூரத்திற்கும் ஆவேச உணர்ச்சி அறவே தணிந்துவிட்டது. ஆயினும் அவள் அசைவற்று உட்கார்ந்திருந் தாள் அவள் மூளை பலமாக வேலை செய்தது தனக்கு வரும் ஆவேசத்தை ஒரு நல்லகாரியத்திற்குப் பயன்படுத்தலாம் என்று திட்டமிட்டாள். இதுவரையில் அவளுக்கு ஆவேசம் வருவது அவளையறியாமலேயே வந்துவிடும் திடுக்கிடும் நிகழ்ச்சி, அதிகப் பயங்காமான செய்தி — இவைகளால் அவள் நிலையிழந்து விடுவாள் சாமியாடத் தொடங்குவாள். இப்போதோ அவள் வேண்டுமென்றே தந்திரமாக சாமியாட முடிவு செய்தாள்.

இரவு தனக்கும் தன் அண்ணனுக்கும் நடைபெற்ற வாக்கு வாதம் அவள் ஞாபகத்தில் இருந்தது அதிலிருந்து அவள், தூக்கு மாட்டிக் கொண்டது அந்த மைனுவாகத்தானிருக்கு மென்று யூகித்துக் கொண்டாள். அண்ணனுக்கும் பொன் மணிக்கும் முடிச்சு போடவேண்டும் என்று கற்பூரத்திற்கு ஆசை யல்லவா? அதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று அவள் தீர்மானித்தாள்.

மருத்துவர் முயற்சியால் சிங்காரம் மெதுவாகக கண்களைத் திறப்பதற்கும், மறுபடியும் கற்பூரம், "ஹோய்" என்று கத்திக் கொண்டு சாமி ஆட ஆரம்பிப்பதற்கும் சரியாக இருந்தது.

"ஏ மக்களே! கேளுங்க ... ... இந்த ஜீவனுக்கு ஏற்பட்டிருக்கிற ஆபத்து, சாதாரண ஆபத்தல்ல! வேப்ப மரத்தடியிலே தூக்கு மாட்டிக்கிட்டாளே ... ... அவளோட உயிரு பேயா மாறி இந்த ஜீவனைத் தொத்திக்கிட்டுது! ..." என்று கற்பூரம் கூச்சல் போட்டாள்.

அதுகேட்ட, சிங்காரம் ... ... "ஆமாம்" ஆமாம்! என்னைத் தான் தொத்திகிட்டுது! என் மைனுகிட்ட என்னை விடுங்க! மைனு! மைனு!! என்று அலறியவாறு எழுந்து ஓட முயன்றான்.

அவனை மற்றவர்கள் விடவில்லை. பிடித்துப் படுக்க வைத்தார்கள். கற்பூரம் தொடர்ந்தாள்.

"பார்த்தீங்களா, பார்த்தீங்களா, பேய்ச் சேட்டையை! மக்களே! இந்த ஜீவனை வெளியே விடக்கூடாது! பத்து நாளைக்கு இந்த வீட்டை விட்டு வெளியே போகக்கூடாது இந்த ஜீவன்! அப்படி வெளியே போனால், இந்த ஜீவன் மேலிருக்கிற பேய், இந்த வீல இருக்கிற யார் மேலாவது தொத்திக் கொள்ளும்.. பத்து நாளைக்கு இங்கேயே படுக்க வைத்து மந்திரம் — தந்திரம் — மருத்துவம் செய்து பேயை அணு அணுவாகக் கொல்ல வேண்டும். அப்பத்தான் இந்த ஜீவனும் பிழைக்கும்! வீட்ல இருக்கிறவங்களும் தப்ப முடியும்!"

கற்பூரம், சாமியாடிக் கீழே விழுந்தாள். சாமி, மலையேறி விட்டது ஒரு விதமாக!

பூஞ்சோலைக்குத் திகில் பிடித்துக் கொண்டது. சிங்காரம் வெளியே போனால் வீட்டிலிருப்பவரைப் பேய் பிடித்துக் கொள்ளுமே என்ற பீதி அந்த அம்மாளை ஆட்டிப்படைத்தது.

மலையேறிய கற்பூரமோ, ஒன்றுமறியாதவன்போல பூஞ்சோலையிடம், தாவிச் சென்று "அய்யோ! எங்க அண்ணனுக்கு என்ன?" என்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள்.

சிங்காரம், "மைனு! மைனு!" என்று எழுவதும் சுற்றியிருப்போர் அவனைப் பிடித்துப் படுக்க வைப்பதும் பெரிய வேலையாகி விட்டது.

கற்பூரம், அண்ணனை வீட்டுக்கு அழைத்துப்போக வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள். பூளுசோலை முடியவே முடியாது என்று மறுத்து, குலதெய்வம் கூறியதுபோல பத்து நாளைக்குத் தன் வீட்டிலேயே இருந்து சிங்காரம் சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

கற்பூரத்திற்கு உள்ளுக்குள்ளே மகிழ்ச்சி. அண்ணனும் பொன்மணியும் நெருங்கிப் பழக சந்தர்ப்பம் ஏற்படுமென்றும் அதிலிருந்து இருவரும் ஒருவரை யொருவர் நேசித்து திருமணத்திற்குத் தயாராகி விடுவார்கள் என்றும் கற்பூரம் வகுத்த திட்டத்தின் முதற் கட்டத்திற்கு அமோக வெற்றி கிடைத்துவிட்டது. அவளையறியாமல் வரும் ஆவேசம் இது வரை அவளுக்குப் பெருத்த வேதனையாக இருந்தது. இப்போதோ அதைத் தன் நன்மைக்காகப் பயன் படுத்திக் கொண்டோம் என்ற பூரிப்பு ஏற்பட்டது அவளுக்கு

சிங்காரம், தன்னை வெளியே விடும்படிக் கெஞ்சினான். அழுதான். புலம்பினான். யாரும் கேட்கவில்லை. மிரட்டிப் பார்த்தான். திட்டினான் - திமிறினான். அதெல்லாம் பேய்ச் சேட்டையென்று தங்கள் முடிவுக்கு ஆதாரமாக்கிக் கொண்டார்கள் சுற்றிருந்தோர்!

சிங்காரத்தின் கோபம், அதிகரித்தது. துள்ளி யெழுந்து தடுத்து நிறுத்தியவர்களைத் தாக்கிவிட்டு வெளியே ஓட எத்தனித்தான். அவனுக்குத் தடை பலமாயிற்று. எல்லோருமாகச் சேர்ந்து, அவன் கையையும் காலையும் கட்டிப் போட்டார்கள். ஒரு கயிற்றுக் கட்டிலில் அவன் கிடத்தப்பட்டான். அண்ணனை இம்சிப்பது பார்ப்பதற்குக் கஷ்டமாக இருந்தாலும், அதன் பலனை நினைத்து உள்ளுக்குள்ளே மகிழ்ச்சியடைந்தாள் கற்பூரம். இனி, எதுவும் முடியாது என்று தெரிந்துகொண்ட சிங்காரம், அமைதியாகப் படுத்துவிட்டான் தன் தங்கைமீது வருகிற ஆவேசத்தை முதன் முறையாக இப்போதுதான் அவன் சபித்தான்.

சிங்காரம் அமைதி பெற்றதும் ஒவ்வொருவராகப் புறப்பட்டனர். நானேக்கு நல்ல மந்திரவாதியாக அழைத்து வந்து சிங்காரத்தின் பேயை ஓட்டி விடலாம் என்று சிலர் உறுதியளித்துச் சென்றனர். கரகமாடிக் கண்ணன் பேய் ஓட்டுவதில் வல்லவன்; அவன் பார்த்தால் பேய் பறந்துவிடும் என்று ஒரு அபிப்பிராயம் கூறப்பட்டது.

அந்தச் சேதி காதிலே விழுந்ததும் சிங்காரம், "ஹா! என்ன சொன்னுய்?" என்று அலறினுன், ஆத்திரமாக! கண்ணனுக்கும் தன் வீட்டுக்கும் உள்ள பரம்பரைப் பகையை நினைத்து, சிங்காரம் அப்படிக் கத்தினுன்.

ஆனுல் மற்றவர்கள், "அது பேயின் குணம்" என்று தீர்மானம் செய்துகொண்டனர். கொஞ்சம் கொஞ்சமாக கூட்டம் கலைந்தது. கற்பூரம் மாத்திரம் அண்ணனுக்குப் பக்கத்தில் முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். பூஞ்சோலையும், பொன்மணியும் திகிலடைந்தவர்களாய்க் காணப்பட்டார்கள். பொன்னையாவுக்கு எல்லாம் புதுமையாய்த் தோன்றின போலும்; "ம்...ஈஸ்வரா!.....ஈஸ்வரா!" என்று முனகிக்கொண்டார்.

வீட்டுக்கு வெளியே குழலோசை கேட்டது. சுருளிமலைதான் வருகிருன் என்று பொன்மணி ஆவலோடு எதிர்பார்த்தாள். சுருளிமலை, எதைப்பற்றியும் கவலைப்படாத நிலையில் அநாயாசமாகக் குழலை ஊதியபடி திண்ணையில் உட்கார்ந்தான்

பொன்மணி ஓடிவந்து, "தம்பீ! என்ன ஆச்சு?" என்று கேட்டாள்.

"என்ன ஆச்சு? செத்தவள் பிழைத்துக் கொண்டாள்!" என்ருன் சுருளிமலை.

"ஆ! பிழைத்துக் கொண்டாளா?"—பொன்மணி ஆச்சரியத்தால் வாய் பிளந்தாள்!

## 8

சுருளிமலை, வழக்கமான அலட்சியத்தோடு பதில் சொன்னான்; "ஆமாம்; செத்தவளோட வாய் பேசினாலும் பரவாயில்லியே; அவளுடைய முந்தாணியில்ல பேசுச்சாம்!"

பொன்மணி, இன்னும் வியப்போடு "என்னடா தம்பீ என்னென்னமோ சொல்றே-புரியும்படியா சொல்லு!" என்று ஆவலைக் கொட்டினாள்.

"செத்தவங்க, தான் செத்ததும் இல்லாம ஊர்ல இருக்கிற வங்களையும் ஆபத்திலே மாட்டி விட்டுப் போய்ட்டாங்களே!" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான் சுருளிமலை.

"நீ விபரமாச் சொல்லப் போறியா இல்லியா? என்று சற்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் சகோதரி.

"தூக்கு மாட்டிக்கிட்ட பிரேதத்தை பஞ்சாயத்தார் மூலமா போலீஸ்காரங்க வந்து எடுத்துக்கிட்டுப் போனுங்க! அங்க போயி பிரேதத்தை விசாரணை பண்ணினுங்களாம். அதுக்குப் பேரு பிரேத விசாரணையாம். தற்கொலைதான்னு முடிவு செஞ்சாங்களாம். அந்த சமயம், திடீர்னு பிரேதத்தோட முந்தானையிலே ஒரு முடிச்சு தெரிஞ்சுதாம். அதை அவிழ்த்துப் பார்த்தா அதிலே ஒரு கடிதம் இருந்துதாம். அதைப் படிச்சாங்களாம்."

"அதிலே, "நான் தற்கொலை செய்துகொண்டதற்குக் காரணம்; அந்தப் பாவி தீச்சட்டி சிங்காரந்தான்'—அப்படின்னு எழுதியிருக்குதாம்."

இதை அவன் சொல்லி முடிப்பதற்குள், பொன்மணிக்கு உடம்பெல்லாம் நடுக்கமெடுத்து நாக்குழறிவிட்டது

"அய்யய்யோ! இது என்னடா புது வம்பு! தம்பீ, அவர் இங்க நம்பவீட்லதானே இருக்காரு..." என்று பீதியோடு கூறினாள். சுருளிமலை பரபரப்படையாமல் உள்ளே எழுந்து சென்றான்.

அவனைக் கண்டதும் சிங்காரம், "சுருளிமலை! மைனு எங்கே? என் மைனு எங்கே?" என்று கத்தினான்.

"மைனுவாவது — குருவியாவது!" முணுமுணுத்தான் சுருளிமலை.

"ஒண்ணும் சொல்லாதேடா கண்ணு! அண்ணனுக்கு பேய்ச் சேட்டை! தூக்கு மாட்டிக்கிட்டவள் பேயா மாறி அண்ணன் மேல தொத்திகிட்டாள்!" என்று சமாதானம் கூறினாள் கற்பூரம்.

"ஊம்! தொத்திக்கிட்டது மாத்திரமா—உங்க அண்ணனே யும் கூடவே அழைச்சிகிட்டு போய்டுவா போலிருக்கு! இவரால் தான் தற்கொலை பண்ணி கிட்டேன்னு, பழியை இவர்மேல் சுமத்தி கடிதாசு எழுதி வைத்திருக்கிறுளாக்கும்."

சிங்காரம் திடுக்கிட்டான்.

"ஆ! என்மைனுவின் சாவுக்கு நானு காரணம்? அய்யோ—கடவுளே! நான் ஒரு பாவமும் அறியேனே! மைனு! மைனு!! என்னுலயா நீ செத்தாய்! எனக்கு ஒன்னுமே புரியலியே! தயவு செய்து என்னே அவிழ்த்து விடுங்களேன்!!

அவன் அலறலே அடக்கியவாறு, கற்பூரம் "என்னண்ணே உனக்குப் பைத்தியமா? உளராதே! மைனுவாவது மண்ணுங் கட்டியாவது!...தெய்வமே! தெய்வமே! இப்படி எழுதலாமா எங்க தலையிலே! ஆபத்தில் காப்பாத்தப் போனதுக்கு அவதூறு வந்து சேர்ந்துதே!...அதோட அண்ணன் மூஞ்சியும் கெட்டுதே! ஏ, பிசாசே!...எங்க அண்ணனே விட்டுப்போறியா இல்லையா?" என்று தன் கூச்சலே ஆரம்பித்தாள்.

அவனே அடக்குவது பூஞ்சோலைக்குப் பெரிய வேலையாகப் போய்விட்டது. தெருப் பக்கம் நாலைந்து பேர் நடந்துவரும் ஒலி கேட்டு சுருளிமலை வாயிற்புறம் திரும்பினுன். கனமான பூட்சுகள் காட்டாந்தரையில் படுவதால் எழும்புகின்ற பயங்கர சப்தமுடன் போலீசார், வீடு நோக்கி வருவதைக் கவனித்தான் அவன். மள மளவென்று தெருவுக்கு வந்து போலீசாரை எதிர்பார்த்து நின்றுன்.

போலீசார், சுருளிமலையிடம் "எங்கே அவன்?... என்று வினவினர்.

"யார்?" என்றுன்.

"அவன் தான் தீச்சட்டி சிங்காரம்!"

"சிங்காரமா? அந்த ஆளுக்குப் பிசாசும், பைத்தியமும் சேர்ந்து பிடிச்சு இப்பத்தானே இந்தப் பக்கமா ஓடினுரு! சீக்கிரம் போங்க, பிடிக்கலாம்!" என்று சாதாரணமாகச் சொன்னுன் சுருளிமலை.

போலீசார் அவன் காட்டிய திக்கில் விரைந்து சென்றனர். அவர்கள் போனதும் சுருளிமலை, உள்ளே சென்று கதவைத் தாழ் போட்டான். அம்மாவையும் அக்காளையும் கூப்பிட்டான். "ஆபத்து! ஜாக்ரதை! இவரை வெளியே போகவே விடக் கூடாது. போனுல் அவ்வளவுதான்!" — என்று எச்சரித்தான். "பொன்னையாவுக்குப் போலீசாரை ஏமாற்றுவது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. லொக் லொக்" என்று இருமிக் கொண்டே சுருளிமலையைக் கூப்பிட்டு, "அடேய்! நமக் கேண்டா இந்த வம்பு வழக்கெல்லாம்!" என்று அதட்டினுர்.

சுருளிமலை, அப்பாவுக்கு பதில் சொல்லவில்லை. அவருடைய பேச்சைக் கணக்கிலே சேர்க்காதவன்போல், கற்பூரத்தைப் பார்த்து—"நீ உன் வீட்டுக்குப் போ! எல்லாம் நாங்க பார்த்துக் கிரேும்— நீ யாருக்கிட்டேயும் எதையும் உளராதே! நீயும் வீட்ல இல்லேன்னு போலீசுக்கு சந்தேகம் அதிகரிக்கும்," என்று அறிவித்தான்.

கற்பூரமும் தான் எதிர்பார்த்தபடி சந்தர்ப்பம் கிடைத்தது என்ற திருப்தியும், எதிர்பாராத குற்றச்சாட்டு அண்ணன் மீது சுமத்தப்படுகிறதே என்ற ஏக்கமும் ஒன்றை யொன்று மோதிட, அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு, இஷ்ட தேவதையைப் பிரார்த்தனை செய்து விபூதி யெடுத்து அண்ணனின் நெற்றியில் தடவிவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டாள், கொல்லைப்புற வழியாக!

சுருளிமலை சிறிது நேரம் மௌனமாக சிங்காரத்திற்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். தன் பேச்சுக்கும் கூச்சலுக்கும் அந்த வீட்டில் மதிப்பில்லாமல் போய் விட்டது என்பதையும், தன் புலம்பலை பேய்க் கூச்சல் என்று அவர்கள் கருதியிருப்பதையும் எண்ணி எண்ணி உள்ளுக்குள் வேதனைப் பட்டுக் கொண்டிருந்த சிங்காரம், மெதுவாக அன்புடன் சுருளிமலையை "தம்பி!" என்று அழைத்தான்.

உடனே பூஞ்சோலை பயந்துபேய் சுருளிமலையின் கையைப் பிடித்து "அடடா! நீ இங்கே உட்காராதே! மெதுவா பேசி கிட்டே பிசாசு உன்மேலே பாய்ந்துவிடும்!" என்று இழுத்துக் கொண்டு அடுக்களைப் பக்கம் போய்விட்டாள்.

சிங்காரம் மௌனமானான். அவன் கண்களிலிருந்து நீர் பெருகி, காதோரத்தில் வழிந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் கையை அசைக்க முடியாமல் தவித்த அவனது சங்கடத்தைப் பொன்மணி பார்த்து விட்டு அருகே வந்தாள். தனியாக வருவதற்கு அவளுக்கு அச்சந்தான். இருந்தாலும் அச்சத்தையும் மீறிக்கொண்டு இரக்க சுபாவம் தலையெடுத்தது. "அழாதீங்க!" என்று கூறி அவன் கண்ணீரை ஒரு துணியால் துடைத்து விட்டாள்.

என்ன காரணத்தாலோ, வீட்டுக்குப்போன கற்பூரம் திரும்பி வந்தவள், அந்தக் கண் துடைக்கும் காட்சியைப் பார்த்துவிட்டு உள்ளுக்குள் பேரானந்தமுடன் யாருக்கும் தெரியாமல் மறுபடியும் போய்விட்டான். அவளுக்கு நம்பிக்கை தோன்றிவிட்டது. பொன்மணிக்கும் சிங்காரத்திற்கும் எப்படியும் நேசம் முற்றிவிடும் என்று அவள் கணக்குப்போட்டு தன் தந்திரத்தைத் தானே பாராட்டிக் கொண்டாள். வாழாவெட்டியான மைனுவுக்குத் தன் அண்ணன் கணவனுகக் கூடாது என்று நினைத்தாள். நினைத்த மறு நாளே மைனு, தன் குடும்ப கௌரவத்தில் குறுக் கிடாமல் இந்த உலகத்தை விட்டே போய்விட்டது அவளுக்கும் பெரிய திருப்தி.

பொன்மணிதான் சிங்காரத்திற்கு மனைவியாக வேண்டு மென்று கற்பூரத்திற்கு ஏன் அவ்வளவு கவலை? பொன்மணி, பேரழகி! அந்த அழகுப் பதுமை தன் தமயனுக்குப் பெண்டாக வேண்டுமென்று நினைத்தாளா? அல்ல—அழகுக்காக அல்ல! பொன்மணி, அருங்குணவதி! குணத்திற்காகத் தன் குடும் பத்து மணப்பெண்ணுக வேண்டும் அவளென்று கருதினாளா? இல்லை — குணத்திற்காக இல்லை! பின் எதற்காக? பொன் மணியை எப்படியாவது தன் அண்ணனுக்கு முடிச்சுப்போட வேண்டும் என்று விரும்பினாளே தவிர, அண்ணனுக்கும்

பொன்மணியைத் திருமணம் செய்து வைக்கவேண்டுமென்று அவள் ஆசைப்பட்டதில்லை சுருக்கமாகச் சொன்னால் அவள் ஆவல் எல்லாம் பொன்மணியின் திருமணத்தைப் பற்றியது தானே தவிர, அண்ணன் சிங்காரத்தின் திருமணத்தைப்பற்றிய தல்ல!

அண்ணனிவிட அப்படியென்ன ஒரு தோழியிடம் அவ்வளவு அக்கரை அவளுக்கு? பொன்மணியை இன்னொருவன் விரும்புகிறான். அவளுக்காகத் தவங்கிடக்கிறான். அவள் கண் அசைந்துவிட்டால் போதும்; காலடியிலேயே கிடந்து ஆயுள் முழுதும் அடிமை வேலை பார்க்கவும் அவன் தயாராக இருக் கிறான். அவன் பொன்மணியை அடையக்கூடாது என்பது கற்பூரத்தின் எண்ணம். அவனை, அடைந்தால் பொன்மணியை அடைவேன், இல்லையேல் சாவேன் என்று சபதம் செய்து கொண்டிருக்கிறான். பொன்மணியிடம் அவன் காதல் பிச்சை கேட்ட காட்சியை கற்பூரம் நேரிலேயே கண்டிருக்கிறாள், தான் பொன்மணியிடம் கெஞ்சுவதை யாருமே பார்க்கவில்லை யென்று தான் அவனுக்கு நினைப்பு — ஆனால் இடிந்துபோன மண்டபத் தின் இடுக்கு வழியே இரு விழிகளையும் செலுத்தி கற்பூரம், அந்தக் காதல் யாசகத்தை இமைகொட்டாமல் பார்த்திருக்கிறாள்.

பக்கத்து ஊரிலே சென்று பானை சட்டிகளை விற்று வருவ தற்காக அதிகாலையிலேயே வீட்டை விட்டுப் புறப்பட்டாள் பொன்மணி. பெரிய கூடை நிறையப் பானைகளை அடுக்கிக் கொண்டு, ஒரு கையால் தலையிலுள்ள கூடையைப் பிடித்து, இன்னொரு கையை அழகாக அசைத்துக் கொண்டு அவள் நடந்துபோகும் எழிலே அலாதி! வெண்ணீர்ப்பானை முதல், கடுகு வைக்கும் கலயம் வரையில் எல்லாவற்றையும் தட்டிப் பார்த்துவிட்டுக் கடைசியில் ஒரு சட்டியை முக்காலணுவுக்கு வாங்கிக் கொண்டு, கொடுத்த காசில் சந்தேகமுள்ள ஒரு காலணு வைத் தட்டிப் பார்த்தால் "அடியம்மா! செல்லாக் காசாம் — தட்டிப் பாக்கிறதைப் பாரு!" என்று கோபித்துக் கொள்ளும் உலகத்திலே எல்லோரிடமும் நல்ல விதமாகவும் ஆனால் கண்ணி யம் கெடாமலும் நடந்துகொண்டு பொன்மணி மண்பாண்ட வியாபாரத்தை வெற்றிகரமாகச் செய்து வந்தாள்.

அன்றைக்கும் அதே உற்சாகத்துடன்தான் வியாபாரத்திற்குக் கிளம்பினாள். என்றும்போல் பக்கத்து ஊர் வெள்ளிச் சந்தையில் சரியான வியாபாரம். காசை முடிந்துகொண்டு, களிப்பை அடக்கமுடியாமல், வெறுங் கூடையுடன் ஊருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தாள்.

என்றுமில்லாத அதிசயமாக அன்றைக்கு வழியிலே அதிக ஜன நடமாட்டமில்லை. பொழுது போவதற்குள் வீட்டிற்குத் திரும்பிவிட வேண்டுமென்று வேகமாக நடந்தாள். பாதி தூரம் வருவதற்குள்ளாகவே வானம் இருண்டது. இடியும் தொடர்ந்து மழைத் தூறலும் தொடர்ந்தன!

பொன்மணி இன்னும் வேகமாக நடந்தாள். மழை கனமாகவே வந்துவிட்டது. பொன்மணியின் உடையெல்லாம் நன்றாக நனைந்து தந்தம் போன்ற அவள் அங்கங்கள் கான் போரைக் கொல்லும் விதத்தில் அழகு சிந்திக்கொண்டிருந்தன. முழங்காலுக்குமேல் ஆடையை ஒரு கையால் பிடித்துக்கொண்டு கூடையைத் தலையில் கவிழ்த்தவாறு ஓட்டமும் நடையுமாக மழையைச் சமாளிக்கப் பார்த்தாள்.

அப்போது அவளுக்குப் பின்னே ஒரு வண்டிவரும் ஓசை கேட்கவே சாலையோரத்தில் ஒதுங்கி நின்றாள். வண்டி நின்றது. "பொன்மணி! வண்டியில் ஏறிக்கொள்ளேன். அடடா! நன்றாக நனைஞ்சுட்டியே ..."; —என்று அனுதாபத்துடன் கீழே இறங்கினான் கரகமாடிக் கண்ணன்.

பொன்மணிக்கு வெட்கம் தாங்கவில்லை. கூடையால் முகத்திலிருந்து இடுப்புவரையில் மறைத்துக்கொண்டு பேசாமல் நடந்தாள்.

கண்ணன் அவளைத் தொடர்ந்து, "அடடா! பைத்தியமா இருக்கியே — சும்மா வண்டியிலே ஏறிக்க! நான் வேணும்னு கண்ணை மூடிக்கிறேன். நீயேன் வீணு கூடையைக் குடையா யிடிச்சுகிட்டு கஷ்டப் படுறே!" — என்றவாறு அவள் கையிலிருந்த கூடையை வாங்கி, வண்டியில் வைத்துக்கொண்டு அவளையும் ஏறிக்கொள் என்ற ஜாடை செய்தான், கண்களை மூடிக் கொண்டதுபோல் பாசாங்கு செய்து!

பொன்மணிக்கு வண்டியில் ஏற இஷ்டமில்லை. சுற்று முற்றும் பார்த்தாள். ஒரு பாழடைந்த கோயில் மண்டபம். விர்ரென அந்த மண்டபத்திற்குப் பாய்ந்தோடினாள். பழமை யாகிவிட்ட அந்தக் கோயில், ஓரளவு மழையைத் தடுக்க உதவியது. ஆனால் கண்ணன் விடவில்லையே — அவனும் மண்டபத்திற்கு ஓடி வந்தான். இப்போது பொன்மணிக்கு முகம் விகாரமாக மாறிவிட்டது. இதுவரையில் அவனது பேச்சிலும் நடத்தையிலும் கண்டுபிடிக்க முடியாத அர்த்தத்தை இப்போது அவன் மண்டபத்திற்கு வந்ததும் அவள் கண்டுபிடித்து விட்டாள்.

"பொன்மணீ!" என்றான்

"போதும்! போதும்!! போய் விடுங்கள்; தயவுசெய்து!" என்று கடு கடுத்தாள்.

"என்னைப்பத்தி உனக்குத் தெரியாது! அல்லும் பகலும் உன்னையே நினைச்சு நினைச்சு அனலிலே புழு மாதிரி உருகு றேன் — இதோ பாரு; இவ்வளவு மழை பேயுது! இந்த ஈரத்திலே கூட என் உடம்பு கொதிக்குது! எத்தனையோ நாளா தவம் இருக்கிறேன்; உன்னை தரிசனம் பண்ணனும்னு! இன்னைக்குத்தான் தெய்வம் கிருபை பண்ணியிருக்கு ... —

"தெய்வத்துப் பேரை அனுவசியமாக இழுக்காதிங்க! எது வும் பேசமா போய்டுங்க! இதெல்லாம் நல்லா இல்லே!"

"நல்லா இல்லையா? என்னைப் பாரு பொன்மணி! என்னுட்டம் ஆணழகன் இந்த ஊரிலேயே இல்லேங்கிறுங்க ... என் அரும்பு மீசை துடிக்கிறதைப்பாரு ... — ... இதையெல்லாம் நானே சொன்னு நல்லா இருக்கா? நீயில்ல சொல்லணும்! ஒரு வார்த்தை சொல்லு; உன்னை நான் கல்யாணம் செய்து கிட்டா, தலையிலே கரகத்தையா தூக்கி வச்சுகிட்டு ஆடுவேன் — உன்னையே தூக்கி வச்சுகிட்டு, கங்கையை வச்சுகிட்டு ஆடுற பரமசிவன் மாதிரி ஆடுவேன்!"

"வீண்பேச்சு பேசாதிங்க! அப்புறம் நான் பொல்லாத வளாயிருப்பேன்; ஆமாம்!"

"பொல்லாதவளா? என்ன செய்வே? .. ... அடேய் அற்பப் பதரே!—என்று என்னைக் கட்டித் தழுவி, கன்னத்தைக் கிள்ளி ...

"சீ! சீ! சீ! நிறுத்துங்க! மரியாதையாப் பேசுங்க!"

"மன்னிச்சுக்க பொன்மணி! என்னை நீதான் காப்பாத்தணும்! செய்தா உன்னைக் கல்யாணம் செய்றது; இல்லேன்னு பிரமச்சாரியாவே இருக்கிறது ... இது சத்தியம்! என்ன சொல்றே?"

பொன்மணி, சிறிது நேரம் மௌனமாக ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்; மழை விட்டிருந்தது. சிறிது தூறல் மட்டுமே விழுந்து கொண்டிருந்தது.

"யாருமே இல்லே இங்கு! வெட்கப்படாதே!" — என்று அருகே நகர்ந்தான் கண்ணன். அவனுக்குத் தெரியாது, கற்பூரம் மழைக்காக மண்டபத்தில் ஒதுங்கி அந்த நாடகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த செய்தி!

கண்ணன் அருகே வந்ததும் பொன்மணி அவனை ஆத்திரத்தோடு பார்த்து "கல்யாண விஷயமெல்லாம் என் பெற்றோர்களிடம் பேசுங்க! என்கிட்ட பேசி என்ன புண்ணயம்!", என்று கூறிவிட்டு வேகமாக ஓட ஆரம்பித்தாள்.

அதற்குமேல் அவளைத் தொடர்ந்து தொல்லை கொடுக்க கண்ணன் விரும்பவில்லை. பொன்மணிக்குத் தன்மீது அன்பு இருக்கிறது; அதைக் காட்டிக் கொள்ளாமல் இருக்கிறாள் என்று எண்ணிப் பூரிப்படைந்தான்.

அவனுடைய வண்டியும் சேறு நிரம்பிய சாலையில் மெதுவாக நகர்ந்தது.

நீண்ட பெருமூச்சோடு, கற்பூரம் மண்டபத்திலிருந்து வெளியே வந்தாள். அப்போதே அவள் தீர்மானம் செய்து விட்டாள்; பொன்மணியை எப்படியாவது கண்ணனுக்குக் கிடைக்காமல் செய்துவிட வேண்டுமென்று!

காரணம்; கற்பூரம் அந்தக் கண்ணனின் அழகில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தாள்.

## 9

கண்ணனுக்குத் தன்மீது காதலும் மோகமும் கரை புரண்ட வெள்ளமெனத் தோன்றிட வேண்டுமானுல் இடையே பொன் மணி தடையாக நிற்கக்கூடாது. அவளைப் பற்றிக் கண்ணன் நினைக்காத அளவுக்கு அவள் வேறொருவனுக்குச் சொந்தமாகி விடவேண்டும். அப்படிப்பட்ட கண்ணைக் கவரும் கட்டழகி, தன் சகோதரனுக்குத்தான் மனைவியாகி விடட்டுமே யென்று கற்பூரம் கொண்ட எண்ணத்திலும் தவறில்லை. கண்ணன்மீது அவள் வைத்திருக்கும் ஆசை அளவிலடங்காது. அவனது கம்பீரத் தோற்றத்திற்குத் தன்னையே காணிக்கையாக்கத் தவமிருந்த கற்பூரத்திற்கு ஒரு புதிய நம்பிக்கையும் உதயமாயிற்று.

அண்ணனுக்குப் பிடித்துள்ள பேயை விரட்ட ஊரார் சிலர் சொன்ன யோசனை, அவளது உள்ளத்தைக் குடையலாயிற்று. கரகமாடிக் கண்ணனை அழைத்துவந்து பேயோட்டினுல் சிங்காரம் சுகம் பெறுவான் என்று எழுப்பப்பட்ட யோசனைதான் அது.

'கண்ணன் குடும்பத்திற்கும் தன் குடும்பத்திற்கும் எவ்வளவு காலமாகப் பகை—போய் அழைத்தால் அவன்பேயோட்டுவதற்கு வருவானு?" — என்ற கேள்விகளும் தொடர்ந்து கிளம்பின. அவன் அப்படி வராமலிருக்க வேண்டுமென்பதையே அவள் விரும்பினுள். காரணம்; பொன்மணியும் அவனும் வீட்டிலேயே சந்தித்துவிடக்கூடாதே என்பதுதான்! ஆனுல் அண்ணனுக்குப் பேய் பிடித்திருப்பதாகச் சொல்லப்படும் சாக்கில் கண்ணனை ஒரு முறை பார்த்துப் பேசுவதற்குத் தனக்கு சந்தர்ப்பம் ஏற்படுமே யென்று ஆழ்ந்து சிந்தித்து முடிவு கண்டாள். அவள் முடிவு சரியானது என்ற தெளிவும் திருப்தியும் பெற்ருள்.

அண்ணனுக்குப் பேயுமில்லை; மண்ணுங்கட்டியுமில்லை. பேயோட்ட அழைத்தாலும் கண்ணன் வரப்போவதில்லை. ஆகவே, தான் போய் கண்ணனைத் தாராளமாக அழைக்கலாம். அந்தப் பெயரில் அவனேடு பேசுவதற்கு இடம் ஏற்படும்.

கற்பூரத்தின் தீர்மானம் உடனடியாக அமுலாக்கவும் பட்டது. பூஞ்சோலை வீட்டிலிருந்து கிளம்பியவள், நேராக கண்ணன் வீடு நோக்கி நடந்தாள். தன் தந்தையர் காலத்திலேயே இரண்டு

வீடுகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லே. இப்போதோ அணை போடமுடியாத அன்பு வெள்ளம், பரம்பரைப் பகையை அறவே மறந்திடச் செய்தது.

வீட்டுத் திண்ணையிலே மாரியம்மன் தாலாட்டுப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த கண்ணனுக்குக் கற்பூரம் தன் வீடு நோக்கி வருவது ஆச்சரியமாக இருந்தது. தன் வீட்டுக்கு வர மாட்டாள் என்ற தைரியமும் பிறந்தது. அவளை ஏன் கவனிப் பானேன் என்ற அலட்சியத்தோடு புத்தகத்தைப் பார்ப்பது போல பாசாங்கு செய்து ஓரக்கண்ணை தெருப்பக்கம்வீசினான்.

கற்பூரம், தங்கு தடையின்றி கண்ணன் வீட்டு வாயிற்படியை மிதித்து, திண்ணைப் பக்கம் வந்தாள். அதற்குமேல் கண்ணனுல் சும்மாயிருக்க முடியவில்லே. அவளைப் பரபரப்புடன் வெறிக்கப் பார்த்தான். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது அவனுக்கு. மீண்டும் தலையைத் திருப்பிக்கொண்டு புத்தகத்திற்குள் விழிகளை நுழைத்துக் கொள்ளப் பெருமுயற்சி செய்தான். ஆனுல் முடிய வில்லே. கற்பூரமே பேச ஆரம்பித்து விட்டாள்.

"வந்தவுங்களை வான்னு கூப்பிடக் கூடாதா? ஏன்னு கேட்டக்கூடாதா?"

கண்ணனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. கற்பூரமா அப்படிப் பேசுகிறுள்? நம்பமுடியவில்லே அவனுல். மௌனமா யிருந்தான்.

"பெரிய ஆபத்து! எங்க அண்ணனுக்குப் பேய்ச் சேட்டை சொம்ப முத்திப் போயிட்டுது..."

"இது என்ன வம்பெழவு! யாருக்குப் பேய் பிடிச்சா எனக்கென்ன?"

"ஆயிரம் விரோதமிருந்தாலும் ஆபத்திலே உதவக் கூடாதா? ஆபத்துக்குப் பாவம் இல்லேன்னு சொல்வாங்களே!"

"நல்லாயிருக்கு நியாயம் — வெட்கம், மானம் இருக்கவேண் டாமா உங்களுக்கு? என்னைக் கூப்பிடுவதற்கு எந்த முகத்தோடு வந்தாய்?"

"இதோ, இந்த முகத்தோடுதான்! ஏன்; இந்த முகம் பிடிக்கலியா உங்களுக்கு?"

கற்பூரம், பேச்சின் போக்கை தனக்குச் சாதகமாக இழுத்துக் கொள்ள முயன்றுள். பேச்சின் உட்கருத்தைப் புரிந்துகொள்ள அக்கறை எடுத்துக் கொள்ளாமலே கண்ணன் விடையளித்தான்.

"யாரோ ஒரு அப்பாவிப் பெண்ணைக் கொன்னு தூக்கு மாட்டினுன்; சண்டாளன் — அதற்குப் பலனை அனுபவிக் கிருன். போலீஸ் ஸ்டேஷனில் கிடக்கிற பயலுக்கு பேயோட்டு றத்துக்கு நீ என்னைக் கூப்பிட வந்துட்டே .... ... தூ! வெட்க மில்லை ...?"

"போலீஸ் ஸ்டேஷன்லியா? ...இல்லை...இலை அண்ணன் பூஞ்சோலையம்மா வீட்டிலேதான் இருக்கார். இதை யாருகிட்ட யும் சொல்லிடாதிங்க! உங்களுகிட்ட மாத்திரம்தான் இந்த ரகசியத்தைச் சொல்லி யிருக்கேன். ஏன்னு; உங்கமேலை எனக்கு நிறைய நம்பிக்கை!"

சிங்காரம் பூஞ்சோலையம்மாள் வீட்டிலே யிருக்கிருன் என்ற செய்தி காதில் விழுந்ததும் கண்ணனுக்குப் பொன்மணியின் நினைவுதான் பறந்து வந்தது. இப்போது அவனுக்கு சிங்காரத் திற்கு பேயோட்டுவதற்கு சம்மதம் தரலாம் என்ற எண்ணம் தோன்றி விட்டது. அப்போதுதானே அந்த வீட்டில் இருக்கும் பொன்மணியைக் கண் குளிரக் காணலாம்–முடிந்தால் பேசலாம் —நெருங்கலாம்— ஏன்; திருமணத்தையே முடித்தும் விடலாம் — மளமளவென்று மனமானிகையைக் கட்டிவிட்டான்.

கற்பூரத்தைப் பார்த்து,... "ம்!.. என்ன செய்வது? தீமை செஞ்சவுங்களுக்கும் நன்மையே செய்யின்னு பெரியவங்க சொல் வாங்க! சரி, சரி ... ... வந்து பேயோட்டுறேன்!" என்று கூறினுன்.

கற்பூரத்திற்குப் பூரிப்பு ஏற்படவில்லை. ஆனலும் சந்தோஷம் படுவதுபோல் காட்டிக் கொண்டாள். அவன் வரமாட்டான் — வராமலிருப்பதே நல்லது என நினைத்திருக்க அவளுக்கு கண்ணனின் தீர்மானம் கலக்கத்தை உண்டுபண்ணியது — என்

செய்வது; இனிமேல் "வராதே!" என்று தடுக்க முடியுமா? சமாளித்துக் கொண்டாள் கற்பூரம். நன்றி தெரிவிக்குப் பாணியில் தன் இருதயத்தைத் திறந்து காட்டி நாணம் குழைத்து கண்ணனிடம் பேசினாள்.

"நான் நம்பவே இல்லே நீங்க சம்மதம் தருவீங்கண்ணு! ஆகா... "சம்மதம்" என்ற ஒரு வார்த்தைக்காக நான் எவ்வளவு தவி தவித்தேன் தெரியுமா?

அவளது வார்த்தைகளைக் காதில் வாங்க அவனுக்கு நிதானமில்லே தன் விருப்பத்துக்குரியவளே வீட்டிலேயே சென்று பார்க்கக்கூடிய வாய்ப்பு வலுவிலே வந்திருக்கிறது. அதைத் தவறவிடாமல் உடனே செல்லவேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான். வீட்டுக்குள்ளே ஓடி, உடை மாற்றிக் கொண்டான். உடுக்கு எடுத்துக் கொண்டான். பொன்மணியின் வீடு நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

கற்பூரத்தோடு வரும் கண்ணனே சுருளிமலே வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டு சென்றான். கண்ணன் வீட்டுக்குள்ளே தன் விழிகளே அலையவிட்டு பொன்மணியைத் தேடினான். அவள் எங்கேயோ மறைந்து கொண்டாள். அதில் கற்பூரத்திற்கு ஒரு திருப்தி!

சிங்காரம் படுத்திருக்கும் இடத்திற்குக் கண்ணன் வந்தது தான் தாமதம்; எங்கிருந்து அந்தப் புதிய பலம் பெற்றானே தெரியவில்லே; சிங்காரம் தூள் தூளாகக் கைக் கட்டுகளே அறுத்தெறிந்துவிட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். ஆனல் கால் கட்டு அவனே மேலே விடவில்லே.

"அடே துரோகி! இங்கே எங்க வந்தே? பேய் ஓட்டுவவதற்கா? எனக்குப் பிடிச்ச பேயை உன்னுல் ஓட்ட முடியுமா? நீ என்ன பெரிய மந்திரவாதியா? மாயா ஜாலக்காரனு? மடையன் — முட்டாள் — நிற்காதே! ஓடிப்போ!!" என்று கத்த ஆரம்பித்தான் சிங்காரம்.

"நிலையைத் தந்திரமாக தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளத் துணிந்த கண்ணன், "ஏ அப்பா! இது பெரிய பிசாசு தான்! எல்லோருமா சேர்ந்து முதல்ல இதைக் கட்டிப்போடுவோம்— பிறகு என்னுடைய வேலையை ஆரம்பிக்கிறேன்!" என்று கூறவே, சிங்காரம் பதைபதைப்போடு தன் காலிலுள்ள கட்டுகளை அவிழ்க்கத் தொடங்கினான்.

ஆனால் அதற்குள், கண்ணன் அவனைப்பிடித்துக் கட்டிலோடு சேர்த்து இறுக்கக் கட்டிவிட்டான். சிங்காரத்தின் மீதுள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள இதுதான் தருணமென்று பெரிய பிரம்பொன்றை கையிலே எடுத்து சிங்காரத்தின் உடல் முழுமையும், காயப்படுத்தினான். 'விர், விர்' என்று பிரம்பு அடிகளின் ஒலி முழங்கியது. சிங்காரம் துவண்டு போனான்.

கற்பூரத்தால் அதைத் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. அவள் கட்டிய கற்பனைக் கோட்டையால் தன் அண்ணன் படும் வேதனையை நினைத்துக் கண்ணீர் விட்டாள்.

"நிறுத்துங்க! அடிக்காதிங்க! அவர் இனிமேல் தாங்க மாட்டார்!" என்று கற்பூரம் ஓடிப்போய் கண்ணனின் கையைப் பிடித்துக்கொண்ட பிறகே பிரம்படிகள் நின்றன.

அதன் பிறகு, கண்ணன் பூஜையை ஆரம்பித்தான். பூஜை முடிவதற்குள் எப்படியாவது பொன்மணியைப் பார்த்துவிட வேண்டுமென்று துடித்தான்; முடியவில்லை. முடியாதது மட்டுமல்ல; அவனுக்கு சிங்காரத்தின்மீதும் சந்தேகம் முளைத்து விட்டது. சிங்காரம் அங்கேயே இருந்தால் ஒருவேளை பொன் மணியை அவன் மயக்கி விடுவானே என்ற பயம் வேறு ஏற்பட்டது அவனுக்கு.

பூஜை முடிந்ததும் மறுநாள் வந்து பூஜை வைப்பதாகச் சொல்லி, கண்ணன் விடை பெற்றுக்கொண்டான். ஆனால் அவன் நேராகக் சென்ற இடம் வீடல்ல; 'அவுட் போஸ்ட்' போலீஸ் ஸ்டேஷனுக்கு வேகமாகச் சென்றான். அங்குள்ள அதிகாரியிடம், சிங்காரம் பூஞ்சோலை வீட்டிலிருக்கிற தகவலைத் தந்த பிறகே அவனுக்குத் தூக்கம் வந்தது.

## 10

எவ்வளவோ காலமாக ஒருவர் முகத்தில் ஒருவர் விழிப்பது கூட பாவம் என்று கூறி, பகையை வளர்த்து வந்த இரண்டு குடும்பங்களும் இந்தச் சம்பவத்தின் மூலமாகவாவது உறவு கொண்டாடிவிட்டது என்று மகிழ்ச்சியடைந்தாள் பூஞ்சோலையம் மாள். ஆனால், அவளுக்கு சிங்காரம் படுகின்ற வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளையறியாமல் கண்கள் கலங்கிவிட்டன. கணவன் பொன்னையா வேறு இதையெல்லாம் விலைக்கு வாங்கப்பட்ட வம்பாகக் கருதி முகத்தை சிடுசிடு என்று வைத்துக் கொண்டிருப்பது அவளுக்குப் பெரிய சங்கடமாகி விட்டது.

கற்பூரம், கன்னத்தில் கைவைத்தவாறு ஆழ்ந்தசிந்தனையில் மூழ்கிவிட்டாள். தானே உண்டாக்கிக் கொண்ட சிக்கலான பிரச்னையிலிருந்து தன்னை எப்படி விடுவித்துக் கொள்வது என்பதே அவளது தீராத கவலையாகிவிட்டது.

பொன்னையா, 'லொக், லொக்' என இருமிக்கொண்டே சங்கடத்தையும் மன எரிச்சலையும் எதிரொலிக்கும் பெரு மூச்சுக் களை இடையே விட்டுக்கொண்டிருந்தார்.

சிங்காரமோ, ஆத்திரமும் உடல்வலியும் பொறுக்கமாட்டாமல் உறுமியவாறு படுத்திருந்தான்.

கண்ணனின் பேயோட்டும் பூஜை நடைபெறும் வரையில் அடுக்களைப் பக்கம் ஒளிந்திருந்த பொன்மணி, பிறகு மெதுவாக வெளியே தலை நீட்டினாள். கற்பூரம் அவளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

பூஞ்சோலை, கற்பூரத்தைப் பார்த்து "ஏண்டியம்மா கவலை புடிச்சிப் போயி உட்கார்ந்திருக்கே! அந்தப் புள்ளையாண்டான் உடம்பெல்லாம் புளியம்பழம் மாதிரி தடிச்சுக் கிடக்கு... கொஞ்சம் உள்ளே போயி மஞ்சப்பத்து அறைச்சுகிட்டு வாயேன். வீக்கத் திலே போடலாம்!" என்று கூறவும் கற்பூரம் எழுந்து எதிரே வந்த பொன்மணியையும் துணைக்கு அழைத்துக் கொண்டு அடுக் களைக்குள் பிரவேசித்தாள்.

பொன்மணியே மஞ்சளைப் பொறுக்கி யெடுத்து அறைக்க ஆரம்பித்தாள். அவளருகே கற்பூரம் உட்கார்ந்து கொண்டு பேச்சுக்கொடுக்க நேரத்தை எதிர்பார்த்திருந்தாள். பொன்மணி மஞ்சளை அறைத்து முடித்துவிட்டு அதை அம்மியிலிருந்து வழிப்பதற்காகக் குழவிக்கல்லைத் தூக்கும்போது அது அவள் கையிலே விழுந்து சிறு காயத்தை உண்டாக்கி விட்டது. அவசர அவசரமாக அவள் கையைப் பிடித்துவிட்டு தண்ணீர் கொட்டி சிகிச்சை செய்து, "அய்யோ பாவம் — எங்களாலே உனக்கெல்லாம் எவ்வளவு கஷ்டம்!" என்று நொந்து கொண்டாள் கற்பூரம்.

"இதிலென்ன பெரிய கஷ்டம்! ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்றது உலக சகஜந்தானே!" என்று புன்னகை புரிந்தாள் பொன்மணி.

"அதிருக்கட்டும் — அந்தக் கண்ணன் உள்ளே வந்ததும் நீ எங்கேயோ பதுங்கிக் கிட்டியே; ஏன் பொன்மணி?" என்று ஆவலோடு ஒரு கேள்வியைப் போட்டாள் கற்பூரம். அதற்குப் பொன்மணி பதில் கூறவில்லை.

பதிலை வரவழைப்பதற்குக் கற்பூரமேமுயன்றாள். "வெட்கமா?" எனக் கேட்டாள். பதில் இல்லை.

"ஏதாவது கோபமா?" என்று வினவினாள். பதில் இல்லை.

"ஓகோ, ஒரு சமயம் கல்யாணப் பேச்சு கீச்சு அடிபடுகிறதோ?" என்று கேட்டதும், "இந்தா! அதெல்லாம் பேசாதே! வேற ஏதாவது பேசு!" என்று வெடுக்கென்று பதிலுரைத்து, மஞ்சளை அடுப்பில் சூடு காட்டக் கிளம்பினாள் பொன்மணி.

"அடாடாடா! எங்க அண்ணனுக்கு வேலை செய்றதிலே எனக்குக்கூட இவ்வளவு பதட்டமில்லை! உனக்கில்லே ஒரே துடிப்பா இருக்குது!" எனக் கிண்டலாகக் கற்பூரம் கூறி, பொன்மணியின் முகக் குறிப்பை அவசர அவசரமாகக் கவனித்தாள்.

"என்ன இது; இப்படியெல்லாம் பேசுறே — நம்ப விஷயத்துக்கு ஆம்பளைங்க பேரையெல்லாம் இழுக்கிறியே; ஏன்?" என்று கடிந்து கொண்டாள் பொன்மணி.

"நல்லா இருக்கு போ! ஆம்பளையில்லாம பொம்பள வாழ்ந்துட முடியுமா? ஏதோ நல்லதோ கெட்டதோ; ஆம்பளைக்கு ஒரு பொம்பள; பொம்பளைக்கு ஒரு ஆம்பளைன்னு அன்னைக்கே ஆண்டவன் தலையிலே எழுதித்தானே அனுப்புருன்!"- இப்படி வேதாந்த விசாரணையில் இறங்கினாள் கற்பூரம்.

பொன்மணி, அதற்குப் பதில் கூறுமல், மஞ்சள் சூடாகிறதா என்பதை கவனித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பொன்மணி; நான் பேசுறது உனக்குப் பிடிக்கலியா? ஒரேயடியா மௌனம் சாதிக்கிறியே! கல்யாண விஷயம், ஒரு பாட்டியும் ஒரு வயசுப்பெண்ணும் பேசும்போதுதான் வயசுப் பெண்ணுக்குப் பிடிக்காதது மாதிரி பேச்சு அமையும். நம்ப ரெண்டு பேருமே வயசுப்பெண்கள்; மனம் விட்டுப் பேசலாமே..." என்றாள் கற்பூரம்.

"மனம் விட்டுப் பேசறது அப்பறம் இருக்கட்டும்; முதல்ல மஞ்சப்பத்தைத் தயார் பண்ணலாம்!" — பொன்மணி அலட்சியமாக விடையளித்துக் காரியத்தை கவனித்தாள்.

"ம்...புரியுது; புரியுது! புரியுதும்மா புரியுது! கண்ணுலயும் வாயாலயும் பதில் சொல்லமாட்டேன்; காரியத்திலே காட்டுறேன் பார்; என் மனசை! அப்படிங்கிறுப்லே இருக்கு உன் செய்கை!" என்று கூறி கேலியாகச் சிரித்த கற்பூரத்தின் உள்ளத்தை சரிவரப் புரிந்துகொள்ள முடியாமல், "இப்ப என்ன சொல்றே? கொஞ்சம் புரியும்படியா சொல்லு!" என்று முகத்தைக் கோணிக் கொண்டாள் பொன்மணி.

"சொல்லுவானேன்? போகப் போகத் தெரியுது" என்றாள் கற்பூரம்

"கிடக்கட்டும்! யார் அவள் தூக்கு மாட்டிக்கொண்டவள்? அவள் என்னமோ உங்க அண்ணன் மேலே பழியைப் போட்டிருக்காளே; என்ன சமாச்சாரம்? விபரமாச் சொல்லேன்!", என்று பொன்மணி கேட்டதும், கற்பூரம், "உம்...! அப்படிக் கேளு! என் ராஜாத்தி; அப்படிக்கேளு! நீ கேட்பாய்ன்னு எனக்கு முன்னமே தெரியும். எப்படிடா கேக்கிறதுன்னு

இத்தனை நாழி வெட்கப்பட்டுக்கிட்டு இருந்தே; இப்ப கேட்டு விட்டே! பரவாயில்லை! அதைப்பத்திக் கவலைப்படாதே! எப்படியோ சனியன் ஒழிஞ்சுது!" என்று சற்று நடுக்கத்தோடு கூறினாள். பொன்மணியிடமிருந்து எதிர்பார்ப்பதற்கு மாறுக ஏதாவது பதில் சூடாக வந்து விடுமோ என்ற அச்சம் வேறு அவளுக்கு.

"நான் கேக்கிற கேள்விக்கும் நீ சொல்ற பதிலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா?" என்று பொன்மணி எழுந்தாள்.

"இரு இரு" என அவள் கையைப் பிடித்து உட்கார வைத்து, கற்பூரம். "சம்பந்தம் நிறைய இருக்கு! அதாவது உனக்கு ஏற்பட இருந்த போட்டி ஒழிந்து விட்டது!" என்றாள்.

"போட்டியா? எனக்கா?" — பொன்மணி ஆச்சரியப்பட்டாள்.

"ஆமாம்; தூக்கு மாட்டிக் கொண்டவள், என் அண்ணனைக் கல்யாணம் செய்துகொள்ளத் துடியாய்த் துடித்தாளாம்! அண்ணன் அவளைப் பார்த்து "என்னை மறந்துடு! எனக்காக வேறேரு இடத்திலே பெண் பிறந்திருக்குது' என்றாராம்!"

"என்னது? இப்பதான் பெண் பிறந்திருக்குதா? அப்ப உங்க அண்ணனுக்கு எத்தனை வயசிலே கல்யாணம்?"

"ஓகோ ... குறும்பு வேறயா உனக்கு? பெண் பிறந்து ரொம்ப நாள் ஆகுது? மூக்கும் முழியும் கடைஞ்சு வச்ச சிலை மாதிரி! எங்க அண்ணனுக்கு ஏத்த அழகு - குணம் குடும்பம் எல்லாமே ஏகப் பொருத்தமா அமைஞ்சிருக்கு!"

"அப்படியா? அப்பேற்பட்ட இடம் எது?"

"பயப்படாதே' உனக்குப் போட்டியா ஒருத்தியும் வரமாட்டாள். சாட்சாத் நீயேதான்!"

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும், பொன்மணி சடக்கென்று அதை விட்டு எழுந்தாள். கையிலிருந்த மஞ்சளைக் கொண்டுபோய் தாயாரிடம் கொடுத்து, "இந்தாம்மா! இதைப் போடு!" என்று கூறிவிட்டு வேறு பக்கம் போய்விட்டாள்.

அடுக்களையிலிருந்து வந்த கற்பூரம், கூடத்தில் பொன் மணியைக் காணுமல் சிறிது கலவரமடைந்து அண்ணனிடம் வந்து சேர்ந்தாள். அவனுடைய வீக்கங்களுக்கு அவளும் பூஞ்சோலையுமாகச் சேர்ந்து மஞ்சள் பத்து போடத் தொடங்கினர்கள். உடலில் கை படுவதையும் சிங்காரத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒருவாறு பத்து போட்டு முடித்துவிட்டு பூஞ்சோலையம்மாள் பெருமூச்சு விட்டாள். கற்பூரம் தன் கைகளை நன்றுகக் கழுவிக்கொண்டு, சுற்று முற்றும் விழியோட்டி, பொன் மணியைத் தேடிப் பார்த்தாள். அவள் கிடைக்கவில்லை.

பிறகு அவள் பூஞ்சோலையிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போய் ஆடுமாடுகளுக்குத் தீனியைக் கவனித்துவிட்டு வருவதாகப் புறப்பட்டாள். அவள் உள்ளத்திலே பெருங் குழப்பம்! தான் எண்ணியபடி ஏதாவது நடக்குமா? அல்லது எல்லாம் தலைகீழாக மாறிவிடுமா? இப்படி மனப் போராட்டம்! எவ்வளவு பெரிய சுமையை அவளாகத் தூக்கித் தலையிலே வைத்துக் கொண்டாள்; பாபம்!

கண்ணன், பொன்மணியை மறக்கவேண்டும்; பொன்மணி தன் அண்ணனை மணக்கவேண்டும்; இந்த விளைவால் தனக்குக் கண்ணன் கிடைக்க வேண்டும் — இப்படிச் சிக்கலான ஏற்பாடு ஒன்றிற்காக அவள் தன் தலையை உடைத்துக்கொண்டாள். அவளையறியாமல் அவளுக்கு ஒரு நம்பிக்கை மட்டும் உதித்தது. அந்த நம்பிக்கை ஏற்பட்ட அற்பத் துணிவோடு அவள் வீடு நோக்கி நடை போட்டாள். எதிர்காலக் கனவுகளில் ஆழ்ந்திருந்த அவள், தன்னை கண்ணன் கவனித்துக்கொண்டு பூவரசு மரத்தடியில் நிற்பதைப் பார்க்கவில்லை.

அவள் பார்க்காதவரைக்கும் நல்லது என எண்ணி, அவளைப் பின் தொடர்ந்து நடந்தான் அவன், கற்பூரம் வீட்டுக்குள் நுழையும்போது தற்செயலாகத் தெருப் பக்கம் திரும்ப, கண்ணன் நிற்பதைப் பார்த்துவிட்டு ஆச்சரியத்தால் மெய் மறந்தாள். தேடியலைந்த செல்வம், வாசல் தேடி வந்து விட்டதாகத் தீர்மானித்துப் பூரிப்பு கொண்டாள், அவளால் பேச முடியவில்லை.

கன்னம் சிவந்துவிட்டது, தலை தானே கீழே குனிந்துகொண்டது தட்டுத் தடுமாறி "வாருங்கள்!" என அழைத்து உள்ளே சென்றாள்.

அவனும் வீட்டுக்குள் சென்றான். பரபரப்போடு பட்டுப் பாயை எடுத்துக் கூடத்தில் விரித்தாள். கையும் ஓடாமல் காலும் ஓடாமல் அங்கு மிங்கும் தேடி வெற்றிலைத் தட்டை எடுத்து எதிரே வைத்தாள்.

"என்ன கற்பூரம், இப்ப எப்படியிருக்கிறது, சிங்காரத்துக்கு?" என்று பேச்சைத் தொடங்கினான் கண்ணன்.

"நீங்க பார்த்த பிறகு சௌகரியம் ஆகாம இருக்குமா?" — தழுதழுத்த குரலில் தந்தாள் அவள்.

"அது என்னு பேயி, அதிசயமான பேய்! எங்கேருந்து பிடிச்சுது அது...வேடிக்கையான பேய்!"

"உங்களுக்குத் தெரியாதா என்னு? எப்படியோ நீங்கதான் அண்ணனைப் பூரணமா குணப்படுத்தனும். நான் உங்களைத்தான் நம்பிக்கிட்டு இருக்கேன்!"

அப்படியா? நானும்கூட உன்னைத்தான் நம்பிக்கிட்டு இருக்கேன் கற்பூரம்!"

"நம்பினவளை நீங்கள் நட்டாற்றில் விடாமல் இருந்தால் போதும்!" — இதைச் சொல்லும்போது கற்பூரத்தின் குரல் கம்மியது.

"நான் யாருக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டேன்!"

"நீங்கள் மகா உத்தம புருஷர்! இல்லாவிட்டால் அவ்வளவு பெரிய பகையை மறந்துவிட்டு நான் அழைத்தவுடன் ஓடி வருவீர்களா?"

"கற்பூரம்! நான் ஏன் ஓடி வந்தேன்? எதற்காகப் பகையை மறந்தேன்? அதை நீ புரிந்து கொண்டிருக்க முடியாது!"

"ஓளவுக்குப் புரியாமல் இல்லை. உங்கள் மனசில் இப்படி ஒரு நினைப்பு இருப்பது எனக்கு இத்தனை நாளும் தெரியாமல் போச்சேயென்றுதான் கவலைப்படுகிறேன்!"

"கற்பூரம்!"

"நெருப்பில்லாமல் கற்பூரம் எரியுங்களா?..."

கற்பூரம் அதன் பிறகு பேச வில்லை. அசைவற்று இருந்தாள். அவளையே விழுங்கிவிடுவதுபோல் பார்த்தான் கண்ணன் பிறகு அவனே சென்று கதவைத் தாளிட்டான்.

கதவைத் தாளிட்டு அவன் திரும்பியதும் திடீரென்று அவன் காலடியில் விழுந்து, "என்னை மறந்துவிடாதீர்கள்! என் உயிர், உடமை எல்லாம் உங்களுக்கே அடைக்கலம்" என்று கெஞ்சியழுதாள் கற்பூரம். அவளைத் தூக்கித் தோள்மீது சாய்த்துக் கொண்டு ஆறுதல் கூறினான். அவளது அழகிய கன்னங்களில் உருண்டு வரும் கண்ணீர் முத்துக்களைத் தன் சூடான உதடுகளால் ஒத்தி எடுத்தான்.

கற்பூரம், தன்னை அவனிடம் ஒப்படைத்துவிட்டாள். அவள் உள்ளத்திலே பொங்கி யெழுந்த இன்ப வெள்ளத்தை வர்ணிக்க இயலாது. "கனவு பலித்தது கடவுளே!" என்று கடவுளை வாழ்த்தினாள். சிரமத்திற் கிடையேதான் வகுத்த திட்டம் இவ்வளவு விரைவில் — இத்துணை வெற்றிகரமாக முடியுமென்று அவள் எதிர்பார்க்கவில்லைதான்.

நெடு நேரம் இன்ப வாரிதியில் திளைத்திருந்த அவர்கள் மௌனத்தில் தனி உற்சாகம் கண்டனர். நீண்ட பொழுதிற்கும் பின் உலகம் ஒன்றிருப்பதை உணர்ந்தனர். "என்னை மறக்கமாட்டீங்களே?" என்று இதழசைத்தாள் அவள்.

"நிச்சயமா மறக்க மாட்டேன். ஆனா ஒண்ணு! எனக்காக நீ ஒரு உதவி செய்யணும் கற்பூரம்!" என்றான் கண்ணன்.

"என்ன உதவி? சொல்லுங்க...என் உயிரையே உங்களுக்காகக் கொடுக்கிறேன்!" என்றாள்.

"சத்தியமா?" என்று கேட்டான், அவளைத் தழுவிக் கொண்டு, "உங்கள்மேல் ஆணையாக!" என்றாள்.

"எப்படியாவது, அந்தப் பூஞ்சோலை மகள் பொன்மணியை எனக்கு சம்மதிக்க வைக்க வேண்டும் — அது உன்னால்தான் முடியும்!" என்று கண்ணன் அவள் கூந்தலைக் கோதிக் கொண்டே கூறினான்.

"ஆ!"

கற்பூரம் அலறினுள்! அவள் தீடீரென உணர்ச்சி வசப்பட்டால் என்ன ஆகும்.

## 11

வழக்கமாக வரும் ஆவேசம் வந்து விடவே கற்பூரம் என்றைக்கு மில்லாத படபடப்போடு சாமியாடத் தொடங்கினுள். "அடேபாவி! பழிகாரா! உன்னே என்ன பாடு படுத்துகிறேன் பார்! நம்பியவளுக்கு துரோகம் செய்த உன்னே சபிக்கிறேன். நீ நாசமாய் போக! அடேய்! இந்த ஜீவனுடை மனசை அறியாமல் பாப வார்த்தை பேசிவிட்டாய்! ஆய்! ஊய்!" என்று அவள் கத்திக்கொண்டே தலைவிரி கோலமாய்த் தாண்டவமாடுவதைக் கண்டு கண்ணன் சற்று மிரண்டுவிட்டான்.

உடனே அவன் சமாளித்துக் கொண்டு, "தாயே! மன்னித்து விடு...தேவி! மன்னித்து விடு! அபச்சாரம்.....அபச்சாரம்" என்று கன்னத்தில் போட்டுக்கொண்டான்.

ஒருவழியாக கற்பூரத்தின் மீது வந்த சாமி, மலையேறியது. கண்ணன் அவளை ஆசுவாசப்படுத்தி "பெரிய பைத்தியமாயிருக்கியே — சும்மா உன்னை வேடிக்கை பாக்கிறதுக்காக விளையாட்டு காட்டினு — நீ ஒரே அடியா உண்மைன்னு நம்பிக்கிட்டு குதிக்கிறியே! எந்தக் காதலனுவது தன் காதலிக்கிட்ட வந்து இன்னெருரு பெண்ணுக்கு தூதுபோகச் சொல்லுவானு? உன் மனசை அறியிறத்துக்காக ஒரு போடு போட்டேன். அதுக்குள்ள அந்த அவசரகார சாமி ஓடியாந்துட்டுதே!" என்று கேலி செய்தான்.

கற்பூரத்திற்கு சந்தேகம் தீரவில்லை. விழிகளை விஞக்குறிகளாக்கி அவன் மீது வீசியெறிந்தாள். "கண்ணல்ல — கோபிக்காதே கற்பூரம்! என்னை சத்தியமாக நம்பு! வேண்டுமென்றேதான் விளையாடினேன். நீ பயந்துட்டே! பயப்படாதே தங்கம்!" — கண்ணன் சமாதான வார்த்தைகளைக் குவித்துக் கற்பூரத்தை மறுபடியும் தன் தோள்மீது சாய்த்துக் கொண்டான். அவளும் அவனை நம்பிவிட்டாள்.

"நமது தொடர்பை உங்க அண்ணன் சிங்காரம் ஏற்றுக் கொள்வானு? ஊஹூம்; ஏற்றுக் கொள்ளவே மாட்டான் அவன் மகா முரட்டு மனுசன். அவனை மீறி நாம் எப்படித்தான்

ணுகப் போகிறமோ ; தெரியவில்லை !'' யென்று கண்ணன் அங்கலாய்த்துக் கொண்டதைப் பார்த்து கற்பூரம், "கவலைப்படாதீங்க— எங்க அண்ணன் மனசைத் திருப்புறது என்வேலை'' என்று உறுதிக்கொடுத்தாள்.

மனக்கதவை விரியத் திறந்து வைத்துக்கொண்டு பொன்மணியின் பிரவேசத்திற்காகக் காத்திருக்கும் கண்ணனுக்கு கற்பூரத்தின் உள்ளத்திலிருந்து வெளிப்படும் ஆசை நிறைந்த வார்த்தைகள் எதுவும் சுவைக்கவில்லை.

கிட்டாத ஒன்றிற்காக எட்டி எட்டிப் பார்ப்பதும், கடினமின்றிக் கிடைத்ததை அலட்சியமாகக் கருதுவதும் சிலரது பண்பல்லவா ? கிட்டாத பழத்தைப் புளிக்கும் என்று சொல்லுகிற தந்திரம் கூட கடைசி முயற்சியின் தோல்விக்குப் பிறகு தானே தோன்றுகிறது ! அதனால் கண்ணன் இன்னும் தான் களைத்து விடவில்லை, யென்று உறுதி பூண்டிருந்தான். எப்படியும் பொன்மணியைத் தன் ஆசைக்குப் பணிய வைத்து, அவள் கழுத்தில் ஒரு கயிற்றையும் கட்டிவிட வேண்டுமென்று அவன் கட்டியக் கோட்டை நிச்சயம் இடிந்து விழாது எனும் தைரியம் கொண்டிருந்தான்.

கற்பூரம் அவனது இலட்சிய முகடு அல்ல ! பாலைவனத்துப் பயணத்தில் கிடைத்த பேரீச்சை மர நிழல் ! அவ்வளவு தான் ! அந்த அளவே அவன் அவளிடம் ஆசை காட்டினான்.

சிங்காரத்தையும் கண்ணனையும் அருகருகே நிற்க வைத்துப் பார்க்கிறவர்கள், சிங்காரத்தை மிகக் கொடியவனாகவும், கண்ணனை உத்தமனாகவும் வர்ணிப்பர். சிங்காரத்தின் தோற்றமும், பயங்கரக் குமிழ் விழிகளும் அவனை ஒரு முரடனாகவே சித்தரித்துக் காட்டும். அழகில் ஆபத்து ஒளிந்திருக்கும் என்பதற்குக் கரகமாடி கண்ணன் எடுத்துக்காட்டு ! அதைத் தான் கற்பூரத்திடம் அவன் காட்டிய களங்கம் மண்டிய அன்பு எதிரொலித்துக் கொண்டிருந்தது. மனித சமுதாயத்தில் சர்வசாதாரணமாகக் காணப்படுகிற இரு குணச் சித்திரங்கள் தான் சிங்காரமும் கண்ணனும் !

நாடகங்களில், கதைகளில், படக் காட்சிகளில் வருகின்ற வில்லன்கள் பார்ப்பதற்கே நடுக்கம் தரும் விதத்தில் இருப்பார்கள். கதாநாயகர்களான நல்ல பாத்திரங்களோ அழகான வர்களாகக் காட்சி தருவார்கள். ஆனல் சிற்றூரில் சிங்காரமும் கண்ணனும் அந்தக் கற்பனேயாளர்களுக்கு நேர்மாருன வகையில் உலாவிக்கொண்டிருந்தார்கள்.

அந்த இரு குணமுடையோருக்கும் இடையில் தனிக்குணம் கொண்டவளாய் கற்பூரம் திகழ்ந்தாள். அவனிடத்தில் அன்பு கொழிக்கும் நெஞ்சமும் இருந்தது. அதே சமயம் அந்த நெஞ்சு நஞ்சு கொட்டுவதாகவும் மாறிக்கொண்டது. காதலுக்காகத் தவறு செய்வதை அவள் குற்றமாகக் கருதவில்லே. அத் தவறின் விளேவாகத்தான் தனக்குக் கண்ணன் கிடைத்தான் என்று பூரித்துப் போயிருப்பவளுக்கு அவனது மனதில் சுற்றுக்கொண்டிருக்கும் மலேப்பாம்பின் வடிவம் எப்படித் தெரிய முடியும்!

மறுபடியும் சந்திப்பதாக வாக்களித்துக் கண்ணன் கற்பூரத்தை விட்டுப் பிரிந்து போனன். அவளுக்கு மனம் ஒரு நிலேயில் இல்லே தான் கண்டதும் அனுபவித்ததும் கனவா— என்ற ஐயம் எழுகிற அளவுக்குக் கற்பூரம் மெய்மறந்து நின்ருள்.

மஞ்சள் பத்தையும் மீறிக்கொண்டு கிளம்பிய வலியைப் பொறுக்கமாட்டாமல் படுக்கையில் முனகியவாறு மெதுவாகப் புரண்டு கொண்டிருந்தான் சிங்காரம். எங்கேயோ போன பிள்ளே இன்னும் வீட்டுக்கு வரக்காணேம் என்று வாய்க்குள்ளேயே கூறிக்கொண்டு பூஞ்சோலேயம்மாள் படுத்தவள் தான், நன்ருகக் குறட்டை விட்டுத் தூங்கிவிட்டாள். பொன்னேயாவையும் இருமல் தொந்தரவு படுத்தாததால் அவரும் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார்

பொன்மணி, கூடத்தையொட்டியே அறைக்குள்ளேபடுத்து ஏதோ குரு குருவென்று யோசனே செய்து கொண்டிருந்தாள். எவ்வளவோ முயன்றும் அவளுக்குத் தூக்கம் வரவில்லே. முனகிக்கொண்டிருந்த சிங்காரத்தின் நிலேமை அவளுக்குப் பெருங் குழப்பத்தை உண்டுபண்ணியது. கற்பூரத்தின் சூசப்

மான பேச்சுகளைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்துப் பெரு மூச்சு விட்டாள். சிங்காரம் தன் வீட்டில் வைக்கப்பட்டிருப் பதே கற்பூரத்தின் ஏற்பாடுதானே என்ற சந்தேகம் எழும். உடனே மூட நம்பிக்கை குறுக்கிடும். பேய் பூதத்தை நம்பி கற்பூரத்தின்மீது நினைத்த குற்றச்சாட்டைத் திரும்பப் பெற்றுக் கொள்வாள். ஆனாலும் கடைசிவரையில் மூட நம்பிக்கை வென் றிடவில்லை. பேய் பிடித்திருக்கலாம்; நியாயம்— அதற்காக சிங்காரம் தன் வீட்டில் ஏன் இருக்க வேண்டும்? இருந்து விட்டுப் போகட்டும்; ஒருவருக்கு உதவி செய்வதால் பாபம் வந்து விடாது! ஆனால் இரண்டு வித ஆபத்துக்கள் அல்லவா படை யெடுத்து முற்றுகை யிட்டிருக்கின்றன!

கற்பூரம், இந்த சாக்கில் தன் அண்ணனுக்குப் பெண் பார்க் கிறாள். அவள் போகும் போக்கைப் பார்த்தால் ஊரிலே கதை கட்டி விட்டாலும் விட்டு விடுவாள், சிங்காரம்—பொன்மணி சங் கதி தெரியுமா என்று ஊரார் பேச ஆரம்பித்து விடுவார்கள். அதை வைத்துக் கொண்டு கற்பூரம், தன் அண்ணன் தி ரு மணத்தைத் தன் இஷ்டப்படி முடித்துக்கொள்வாள். இதோடு போகிறதா—அந்தக் கரகமாடி கண்ணன் வேறு இந்தச் சாக்கில் பேய் ஓட்டுபவனைப்போல வந்து வீடெங்கும் விழியோட்டுகிறான். அவன் அடிக்கடி வீட்டுக்கு வருவது பெரிய ஆபத்து— எந்த சமயத்தில் எப்படி நடந்து கொள்வானே தெரியாது — இது போன்ற குழப்பமான எண்ணங்கள் பொன்மணியின் இதயத் தைக் கனமாக்கின. எல்லாவற்றுக்கும் பரிகாரம், எப்படியாவது சிங்காரம் வீட்டை விட்டுப் போய் விடுவதுதான்! தெய்வத்தின் கட்டளை — தேவந்த ஆவேசம் வந்து கூறியதே என்ற பயம் சிறிது நேரம் தலைக்காட்டியது. கற்பூரத்தின் மீது இருந்த கோபத்தில் அந்தப் பயமெல்லாம் நீடித்து நிற்கவில்லை.

அவள் சிந்தனையைக் கலைக்கும் வகையில் சிங்காரம், "தண்ணீ! தண்ணீ!" என்று சப்தம் போட்டான்.

பொன்மணிக்கு என்னசெய்வதென்று புரியவில்லை. "அம்மா! அம்மா!" — கூப்பிட்டுப் பார்த்தாள். குறட்டை ஒலி கொஞ்சம்

நின்று மீண்டும் துவங்கியது. முன்னைவிட பலமாக! எழுந்து அம்மாவிடம் சென்ருள். அதிக சப்தம் போட்டு எழுப்பினுல், நோயாளியான அப்பா விழித்துக்கொண்டு விடியமட்டும் தொந் திரவு பொறுக்காமல் கஷ்டப்படுவாரே என்று சங்கடப்பட்டாள். ஈன சுரத்தில் "அம்மா!" என்ருள்.

அதற்குள் "பொன்மணி!" என்று சிங்காரம் மெல்ல அழைத்தான். அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தண்ணீர் கேட்கத்தான் அவன் அழைக்கிருனு—அல்லது தவருன எண் ணத்தோடு அழைக்கிருனு? அவளுக்கு நெஞ்சு படபடத்தது. மௌனமாகவே இருந்தாள்.

மறுபடியும் "பொன்மணீ!" என அழைத்தான். அவள் பேசவில்லே.

"தயவு செய்து கிட்டவா தங்கச்சீ!" என்ருன். அந்த அழைப்பில் அன்பு இழைந்தது. பரிதாபம் தலே காட்டியது. கெஞ்சுதல் மிஞ்சியிருந்தது. பொன்மணிக்கு அவளேயறியாமல் ஒரு மன எழுச்சி! "தங்கச்சீ!" என்ற சொல்லில் பொதிந் திருக்கும் உறவையும் உண்மை அன்பையும் அவள் மதிக்கத் தவறவில்லே.

"என்னுண்ணே வேண்டும்?" எனக் கேட்டபடி அருகே சென்ருள்.

"தங்கச்சீ!... என் நிலேமையை நீயாவது யோசிக்கப் பாரும்மா! எனக்குப் பேயும் பிடிக்கலே; மண்ணும் பிடிக்கலே! எல்லாம் அக்கப்போர். என் தங்கை கற்பூரத்திற்கு வர்ர ஆவே சத்தினுல் வந்த வினே இதெல்லாம். என்னேத் தப்பா நினேக் காதே— இதுதான் சமயம்— கட்டுகளேயெல்லாம் அவிழ்த்து விட்டுட்டு கதவையும் திறந்து விடு. நான் ஓடிப்போறேன். முதல்ல கொஞ்சம் தண்ணி கொடு!"

சிங்காரத்தின் வேண்டுகோளில் இருந்த பரிவைக் கண்டு மனமுருகினுள் அவள். தண்ணீர் கொண்டுவந்து தந்தாள்.

அதைக் குடித்த சிங்காரம் "ஒரு திரான் சாராயம் அகப்பட்

டதுன்னு இந்த உடம்பு வலி தீரும்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

பொன்மணி எதுவும் பேசவில்லை பிறகு அவளைப் பார்த்து சிங்காரம், "தயவு செய்து என்னை விட்டு விடு தங்கச்சீ—எனக்கு பேயுமில்லை; ஒண்ணுமில்லை!" என்று மறுபடியும் மறுபடியும் கெஞ்சினான் சிங்காரம்.

"நீங்க உள்ளபடியே என்னைத் தங்கச்சியாகத்தானே நினைக்கிறீங்க?"—பொன்மணி நடுங்கிக்கொண்டே கேட்டாள்.

"ஆமாம் — அதிலே ஏன் உனக்கு சந்தேகம்?" என்றான் அவன்.

"இல்லே.....உங்க தங்கச்சி கற்பூரம் இருக்காளே; அவன் உங்களைப்பத்தி எங்கிட்டே சொன்னது வேற விதம்!"

"என்ன விதம்? சொல்லும்மா; சொல்லு!"

"நீங்கள் கல்யாணம் செய்து கொள்ள....."

"ஓகோ ..... உன்னைக் கல்யாணம் செய்துக்க விரும்புறேன்னு சொன்னதா என் தங்கச்சி?... பொன்மணீ! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. நான் உன்னை எப்போதும் என் தங்கச்சியாகத்தான் நினைக்கிறேன்!"

"அப்பாடா! என் மனசு நிம்மதியாச்சு...!" என்றவாறு அவனது கட்டுக்களை அவிழ்த்து விட்டாள் பொன்மணி.

அவனும் சிரமத்தோடு எழுந்து உட்கார்ந்து, "உனக்கு ரொம்ப நன்றி தங்கச்சீ! தெருக்கதவையும் அப்படியே திறந்து விடு!" என்று கேட்டுக்கொண்டான்.

அவள், அவனை மெதுவாகக் கைபிடித்து அழைத்துக் கொண்டே "அண்ணே! நான் தான் உங்களை வெளியே அனுப்பினேன்னு யாருகிட்டயும் சொல்லிவிடக் கூடாது!" என்று கேட்டுக்கொண்டாள். அவனும் அதற்கு தலையசைத்துச் சம்மதம் தந்தான்.

தெருக்கதவு திறக்கப்பட்டது சிங்காரம் நன்றியோடு பொன்மணியைப் பார்த்து விடடு வீட்டை விட்டு வெளியேறினான். பொன்மணி, கதவைத் தாளிட்டுவிட்டு தன் இடத்திற்கு வந்து படுத்தாள்.

அவள் படுப்பதற்குள் தெருப்பக்கத்தில் பயங்கரமான சப்தம்!

"அய்யோ!" என்ற பெருங்கூச்சல்!

பொன்மணி திடுக்கிட்டெழுந்தாள்; "அம்மா! அப்பா!" என்று அவளையுமறியாமல் அலறியபடி!

பூஞ்சோலை, பொன்னையா — இருவரும் விழித்துக்கொண்டார்கள்.

பொன்மணி, ஓடிபோய்த் தெருக் கதவைத் திறந்தாள்!

அவள் வீட்டுக்கு எதிரே ஒரு முரட்டுக் காளை — அதன் கொம்புகளுக்கு நேரே ஒரு ஆள்! அந்த ஆள் தெருவிலே கிடந்தான்! அவனை சரியாக அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை! பந்துபோல் உருண்டு கிடந்த அவனிடமிருந்து இப்போது ஒளியவில்லை! காளை மட்டும் மூர்க்கமாக அவனை முட்டித்தள்ளி தெருவில் உருட்டிக்கொண்டே யிருந்தது!

## 12

பொன்மணி, பூஞ்சோலை இருவரும் போட்ட கூச்சலின் தூரத்திலேயுள்ள வீடுகளிலே இருந்து ஒரு சிலர் விளக்குகளுடன் ஓடிவந்தனர். அப்போதுதான் வீட்டை விட்டு வெளியேறிய தீச்சட்டி சிங்காரம் சப்தத்தைக் கேட்டுப் பதைப்போடு திரும்பினான். என்றாலும் ஒரு மரத்தடியில் ஒளிந்து நடப்பதைக் கவனித்தான். ஏனெனில் ஒரு வேளை தான் ஓடிவந்ததைத் தான் பூஞ்சோலை தெரிந்துகொண்டு கத்துகிறாளோ என்ற அச்சம் அவனுக்கு. திரும்பி வந்து மீண்டும் அவர்களிடையே சிக்கிக்கொண்டு அவஸ்தைப்பட அவன் தயாராயில்லை.

அதற்குள் பக்கத்துத் தெருவினர் வீட்டு முன்னே கூடிவிட்

டனர். காளை தன்னுடைய பாய்ச்சலை நிறுத்தவில்லை. அதன் தாக்குதலுக்கு ஆளான அந்த மனிதன், தரையிலே கிடந்த ஒரு பருமனை மரத்துண்டோடு தன் உடலை மறைத்து ஒட்டிக் கொண்டு கிடந்ததால் காளையின் கொம்புகள் அவன்மீது குத்திட இயலவில்லை. மரத்துண்டின்மீது ஏற்பட்ட பெரிய காயங்கள் அவன் மேனியில் பட்டிருக்குமேயானால் அவன் உருத்தெரியாமல் சின்னு பின்னமாகி யிருப்பான். தெருவினர் ஓடிவந்து எவ்வளவோ கத்தியும் காளை அவனை விட்டுத் திரும்பவில்லை. அவர்களுக்கோ அதனிடம் நெருங்குவதற்குப் பயம். தூர நின்று கல் எறிவதற்கும் அவர்கள் தயாராயில்லை. ஏனெனில் அது கோயில் காளை! ஆண்டவனுக்குக் கோபம் வரும். அதைவிட அதிகமாக அந்தக் காளைக்கே ஆத்திரம் வரக்கூடும். நினைப்பு வைத்துக்கொண்டு அடையாளம் பார்த்துத் தனித் தனியாக ஒவ்வொருவரையும் அது பழி வாங்கிவிடும் என்ற பயம் அவர்களைப் பிடித்துக் குலுக்கியது.

அய்யோ, அந்த ஆள் செத்து விட வேண்டியதுதானு என எண்ணி பொன்மணி கண் கலங்க, "யாராவது ஓடிபோய் காப்பாற்றுங்களேன்!" என்று கெஞ்சினாள். யாரும் துணியவில்லை, கடைசியாக அவளே அந்தக் காளையிடம் ஓடினாள். அதன் எதிர்ப்புக்கு ஆளான மனிதனுக்கு நேரே சென்று காளையை எதிர்த்தாள்.

"நீங்கள் எல்லாம் ஆண் பிள்ளைகள்தானு? அந்தக் காலத்தில் காளைகளை அடக்குகிறவர்களைத்தான் கல்யாணம் செய்து கொள்வோம் என்று பெண்கள் கூறிவிட, அதற்காகப் போட்டிப் போட்டுக்கொண்டு உயிரைத் துரும்பாக மதித்துக் காளைகளுடன் போரிட்ட வீரர்கள் இருந்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேமே — உங்களை யெல்லாம் பார்க்கும்போது அதெல்லாம் கட்டுக்கதை போல் தோன்றுகிறது!" என்று பொன்மணி நினைத்துக் கொண்டாளோ என்னவோ தெரியாது. ஆனால் அவள் காளைக்கு எதிரே ஓடிய அந்த வீரச்செயல், அவள் ஊர் மக்களைப் பார்த்து அப்படி நினைத்திருப்பாள் என்றே எடுத்துக்

காட்டுவதாக இருந்தது. அவளைக் கண்டதும் காளை, தன் பாய்ச்சலை அவள் பக்கம் திருப்பி பயங்கரமாகப் பார்த்தது.

அதைக் கண்ட பூஞ்சோலை, "அய்யோ! பொன்மணி! பொன்மணி!" என்று அலறிக்கொண்டு மகளிடம் ஓடி வந்தாள். இந்தக் கூச்சலும் குழப்பமும் காளையின் வெறியை அதிகமாக்கி விடவே உதவிற்று. காளை தன் முழு பலத்தையும் கொண்டு மூர்க்கமாகப் பொன்மணியின் மீது பாய எத்தனித்தது.

பூஞ்சோலை, "அய்யய்யோ!" என்று கதறி விட்டாள்.

சிறிது கால்களைப் பின் வாங்கி முன்னுல் பாய்வதற்குக் காளை ஆவேசப் பெருமூச்சு விட்டதற்கும் எங்கிருந்தோ புல்லாங்குழலின் ஒலி வருவதற்கும் சரியாக இருந்தது. அந்தக் கொடுமையும் குலை நடுக்கமும் கொண்ட சூழ்நிலையில் குளிர்ச்சியான ஒலி நுழைந்தது மேலும் பயங்கரமாக இருந்தது. ஆனுல் அந்த ஒலி கோயில் காளையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றது என்பதை காளையிடம் திடீரென ஏற்பட்ட மாற்றத்திலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. குழலொலி வந்த திசையைப் பார்த்தவாறு காளை நின்றது. எல்லோருமே அந்த திசையை கவனித்தனர். குழலூதியவாறு இருட்டில் ஒரு சிறுவன் வந்து கொண்டிருந்தான். விளக்கொளிக்கு அருகாமையில் அவன் வர வர சுருளிமலை தான் அவன் என்பது தெளிவாகி விட்டது காளையிடம் வந்து நின்ருன். காளை சாந்தம் பெற்றது. தன் நாக்கால் அவன் கையைத் தடவிக் கொடுத்தது. அவனும் அதன் முதுகில் இரண்டு தட்டு தட்டி ஏறி உட்கார்ந்து கொண்டான.

காளை அவனைச் சுமந்து கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றது. எல்லோரும் வியப்போடு அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பூஞ்சோலை, பொன்மணியைக் கட்டிப்பிடித்துகொண்டு "அம்மாடி! நீ பிழைச்சியோ?" என்று உச்சி முகர்ந்தாள். முத்தமிட்டாள். "நான் கும்பிட்ட தெய்வமெல்லாம் நல்ல தெய்வம்"

என்று தன்னுடைய தேர்ந்தெடுக்கும் திறமையைப் பாராட்டிக் கொண்டாள்.

காளையால் முட்டப்பட்டு மரத்துண்டுக் கருகில் சுருண்டு கிடந்தவனைத் தூக்கி உட்கார வைத்தார்கள் தெரு மக்கள். அவன் உடலில் பெரிய காயம் எதுவுமில்லை. காளையின் கொம்புகளுக்கு அவன் இலக்காக வில்லை. ஆகியிருந்தால் வயிறு அல்லது மார்புக்கூடு கிழிக்கப்பட்டிருந்திருக்கும். உடலெங்கும் ஊமைக்காயங்கள்—அதனால் அவன் பேசும் சக்தியிழந்து மயக்க முற்றிருந்தான்.

ஒருவன் தன் கையிலுள்ள விளக்கை அவன் முகத்திற்கு நேரே பிடித்தான். அமைதி நிறைந்த அழகான முகம் படைத்த வாலிபன்! அரும்பு மீசை ... நாகரீகத் தோற்றம்..... இருபத்தைந்து வயதே யிருக்கலாம் ஏறத்தாழ! விழிகள் மூடியிருந்தன! கிராப்புத் தலையும், மீசையும் இல்லாவிட்டால் கௌதமரைப்போலவே காட்சி தரக்கூடும்; அவ்வளவு சாந்தம் கொஞ்சிக் கொண்டிருந்தது அந்த இளமை ததும்பும் வதனத்தில்.

பொன்மணி, அவசர அவசரமாக ஓடிப்போய் தண்ணீர் கொண்டு வந்தாள். அதை வாங்கி, பூஞ்சோலை அவன் முகத்தில் தெளித்தாள். "மெதுவாக உள்ளே தூக்கிக்கொண்டு வாங்க!," என்று பூஞ்சோலை கேட்டுக் கொண்டதின் பேரில் சிலர் அந்த வாலிபனை வீட்டுக்குள்ளே தூக்கி வந்தனர். அவனை எங்கே படுக்க வைப்பது என்று பூஞ்சோலை சுற்றுமுற்றும் பார்க்கும்போது தான் சிங்காரம் தப்பி விட்டான் என்பது அவளுக்குத் தெரிந்தது. "அடிஅம்மா! சந்தடி சாக்கிலே நம்ப கண்ணில் எல்லாம் மண்ணைத் தூவிட்டானே!" என்று ஆச்சரியமும், ஆதங்கமும் கொண்டு சிங்காரம் படுத்திருந்த கட்டிலியே அந்த வாலிபனையும் படுக்க வைக்கச்சொன்னாள்.

இதையெல்லாம் பார்த்த பொன்னையாவுக்கு பெரும் சங்கடமாகி விட்டது. "அடடா! இது என்ன பெரிய எழவாப் போச்சு! இது வீடுதானா? இல்லை, ஆஸ்பத்திரியா? தெருவில்

அடிப்படுகிறவன், உதைப்படுகிறவன் எல்லாரும் இங்கதானு?" என்று முணுமுணுத்தார். நல்ல வேளை; அதற்கு மேல் அவரைப் பேச விடாமல் சரியான சமயத்தில் இருமல் தடை போட்டது. "எக்கேடாவது கெட்டுப்போங்க! எனக்கு என்ன வந்து கிடக்கு? என்று இருமிக்கொண்டே தன் பேச்சுக்கு முத் தாய்ப்பு வைத்தார் அவர்.

பூஞ்சோலையும், பொன்மணியும் தெருவிலேயுள்ள சிலரும் சேர்ந்து அந்த வாலிபனுக்குத் தேவையான சிகிச்சைகளைச் செய்யத்தொடங்கினர். எல்லாவற்றையும் ஒழுங்காகக் கவனித் துக்கொண்டு ஒளிந்திருந்த சிங்காரம், அதை விட்டுக் கிளம்பி தன் நடையிலே வேகம் காட்டினான். நெடுநேர சிகிச்சைக்குப் பிறகு, மயக்கமுற்றிருந்த வாலிபன், சிறிது கண் திறந்து தன்னைச் சுற்றியிருப்பவர்களை யெல்லாம் வியப்போடு பார்த்து விட்டு, புரண்டுப் படுத்துக் கொண்டான். "இனி பயமில்லை — அயர்ந்து தூங்கட்டும்" என்று அனைவரும் பூஞ்சோலை வீட் டை விட்டு வெளியேறினர்.

மங்கலாக எரிந்துகொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தில் வாலிபனின் முகத்தைப் பார்க்கக்கூடிய தூரத்தில் பொன்மணி உட்கார்ந்திருந்தாள். வாழ்க்கையில் அதுவரையில் பெற்றிராத ஒரு புதிய உணர்ச்சிக்கு அவள் அடிமையாக நேரிட்டது. அவ னையுமறியாமல் அவன் முகத்தை அவள் பார்த்துக் கொண்டே யிருந்தாள். தான் ஏதோ தவறு செய்வதாக ஒரு எண்ணம் தோன்றுவதும், தோன்றிய வேகத்தில் அந்த எண்ணம் மறை வதும் — அவளுக்கு ஒரு புதுமையாக இருந்தது. தன் உள்ளத் தை இது வரையில் யாராலும் பறித்துக்கொள்ள முடியவில்லை. இப்போதோ அவளே வலிய வந்து தன் இருதயத்தை இந்த வாலிபனுக்குப் படைத்திடத் தயாராகிவிட்டாள். தெளிந்த நீரோ டையில் மின்னி மிதக்கின்ற கெண்டை மீன்களைக் கொத்திச் செல்ல சாய்வாகவும் — குறி தவருமலும் பாய்ந்து செல்லும் "கிருட்டிண"ப் பறவைகளைப் போல இவள் கண்கள் அவன் முகத்தை நோக்கி படையெடுத்தன. என்றுமில்லாத ஒரு விளக்க

முடியாத உணர்ச்சி அவளை ஆட்டிப் படைத்தது.

அவன் வலியின் காரணமாக முனகும்போதெல்லாம் அருகே யிருந்து உடம்பைத் தடவிக்கொடுக்கலாம் போலிருந்தது அவ ளுக்கு. அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, தன் மெல் லிய விரல்களால் அவனது அழகான நெற்றியை வருடிக்கொண் டேயிருந்தால் அயர்ந்து தூங்குவானே என்று தனக்குத்தானே ஆசையோடு நினைத்து வெட்கப் பட்டுக்கொண்டாள்.

"பொன்மணி! போய்ப் படம்மா!... என்னமோ தெரியிலே ஊரே கெட்டுக் கிடக்கு— இத பாரு ...அந்த சிங்காரம் வேற தப்பி ஓடிவிட்டான். ஆவேசம் வந்து ஆபத்துன்னு சொல்லுச்சு! பேயை இங்கு விட்டுட்டு போயிட்டானே என்னமோ ... யார் கண்டது! தெய்வங்களா! — குடும்பத்துக்கு ஒரு குறைவும் வராம காப்பாத்துங்க!" என்று உருக்கமான வேண்டுகோ ளோடு பூஞ்சோலை, பொன்மணியைத் தூங்கச் சொல்லிவிட்டுத் தானும் சற்று கண் அயர்ந்தாள்.

பொன்மணிக்குத் தெரியும் அளவில் பொழுதும் விடிந்தது. அலைந்து கொண்டிருந்த அவள் கண்கள், பகல் நேரத்திலே அந்த வாலிபனின் முகத்தைத் தெளிவாகப் பார்க்கப் போகிறோம் என்ற ஆசையோடு அவளைத் தட்டி எழுப்பி கூடத்துப் பக்கம் நடக்கச் செய்தன.

பூஞ்சோலையும் அதற்குள் எழுந்து, "தம்பீ! தம்பீ!" என்று அந்த வாலிபனை எழுப்பினாள்.

வாலிபன் கண் விழித்தான், "நான் எங்கிருக்கிறேன்?" என்று கேட்கவில்லை. எங்கேயோ பத்திரமான இடத்தில் இருக் கிறோம்; யாரோ பரிவுமிக்கவர்கள் தன்னைக் காப்பாற்றியிருக்கி ருர்கள் என்று மட்டும் புரிந்து கொண்டான்.

"எப்படி யிருக்கிறதப்பா உடம்பு?" என்று கேட்டாள் பூஞ்சோலை.

"பரவாயில்லை; ரொம்ப நன்றியம்மா!" என்ருன் வாலிபன்.

பொன்மணி, தூண் மறைவில் நின்று கொண்டு அவன் இதழசைவில் தெரிகின்ற எழிலை— குரலில் இழைகின்ற சங்கீதத்தை ரசித்துக் கொண்டிருந்தாள்.

''லொக் ! லொக் !';— இருமல் சப்தம் ! பொன்னையா மெதுவாக கூடத்துப் பக்கம் வந்தார்.

''இந்தப் பயல் எங்கே போனான் ? உருப்படாதக் கழுதை இப்படி ஊர் சுத்திஞல் கடைசியிலே கையிலே திருவோடு எடுக்க வேண்டியதுதான் !'' என்று பொன்னையா கூறி முடிப்பதற்கும் — ''அரகர மகாதேவா ! அன்னக்காவடி தர்மம் தாயே! அண்ணுமலைக்கு அரோகரா !'' என்று ராகம் போட்ட படி சுருளிமலை உள்ளே நுழைவதற்கும் சரியாக யிருந்தது.

''எங்கேடா போனே ? என்னடா நினைச்சுக்கிட்டிருக்கே உன் மனசிலே ! ஆயும் அக்காளும் கஷ்டப்பட்டு சம்பாதிச்சு போட்டா சப்தம் போடாம சாப்பிட்டுட்டு ஊர் சுத்தலாம்னு திட்டம் போட்டிருக்கியா— சோம்பேறிக் கழுதை ! இங்கேதான் சத்திரம், ஆஸ்பத்திரி எல்லாம் நடக்குது— ஒண்ணும் உருப்படாது! ஒண்ணும் உருப்படாது ! எழவெடுத்த வீடு ! எழவெடுத்த வீடு! என்ற படி கொல்லைப் பக்கம் போனர் பொன்னையா.

தட்டுத் தடுமாறி நடப்பதைக் கவனித்த சுருளிமலை, ''மெள்ள ! மெள்ள ! கோபத்திலே கீழே விழிந்து விடாதிங்க அப்பா !'' என்று அவர் கையைப் பிடித்துக் கொல்லைப்புறம் அழைத்துப் போனுன்.

தன் தந்தையின் பேச்சால் அந்த வாலிபரின் முகத்தில் ஏதோ ஒரு மாற்றத்தைக் கண்ட பொன்மணி மிகவும் கலங்கி விட்டாள். அதிர்ச்சி அடைந்து விட்டாள். பூஞ்சோலைக்கும் சட்டென்று ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆனல் சமாளித்து, 'தம்பீ.. எப்போதுமே எங்க வீட்டுக்காரு இப்படித்தான் ; ஒரு முசுடு பிடித்த மனுஷன் ! மனசு நல்ல மனசு ! வாய்தான் சும்மா இருக்காது— லோகத்திலே சில பேரு சக்கரையாட்டம் பேசுவாங்க ! காரியத்திலே வேப்பங்காய்தான்— ஆனு எங்க வீட்டுக்காருக்கு மனசுலே கல்மிஷமே இல்லே ! வெளியில்தான்

இப்படி ஏதாச்சும் பேசி கிட்டு கெட்ட பேரு எடுப்பாரு! நாலு பேருக்கு செய்யவோ கொள்ளவோ அவருக்கு ரொப்ப ஆசை தம்பீ! நீங்க ஒண்ணும் நினைச்சுக்காதிங்க தம்பீ!" என்று அவள் சமாதானப்படுத்தினாள்.

"பரவாயில்லே! பரவாயில்லே! உங்க உபகாரத்துக்கு நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கிறேன். மெதுவா என்னால வெளியே போய்விட முடியும்— எனக்கு உத்திரவு கொடுங்கள்!" என்றான் அந்த வாலிபன்

அதற்குள், அங்கே சுருளிமலையும் வந்துவிட்டான். உடனே பூஞ்சோலை, அவனுக்கு சுருளிமலையை அறிமுகப் படுத்திவைத்து, "இது தான் என் மகன்— அதோ நிக்கிற பெண்ணுக்கு இளையவன்!" என்றாள் பூஞ்சோலையம்மாள்.

வாலிபன், திரும்பிப் பார்த்தான். விழிகளைத் திருட்பி எடுக்க மிகவும் கஷ்டப் பட்டுப் போனான்.

பூஞ்சோலை தொடர்ந்து. "இவன்தான் தம்பி உங்களைக் காப்பாத்தினான், இவன் இல்லாவிட்டால் நீங்களும் என் பெண்ணும் அந்த கோயில் காளையோட கொம்புக்குப் பலியாக வேண்டியதுதான்!" என்று கூறினாள்.

"அப்படியா?" என்று ஆச்சரியப்பட்டான் வாலிபன்.

"ஆமாம்— உங்களை காளை முட்டித் தள்ளி நீங்க மூச்சு பேச்சு இல்லாம விழுந்து கிடந்திங்க. ஊர் ஜனங்கள் ஓடியாந்தாங்களே தவிர ஒருத்தரும் கிட்ட நெருங்கலே! அப்ப என் மகள் பொன்மணிதான் தைரியமா ஓடியாந்து காளையை எதித்து நின்றாள்! காளை, என் மகளையும் கொன்னுடப் பாத்துது! அப்ப வந்து சேர்ந்தான் என் பிள்ளையாண்டான் சுருளிமலை! தம்பீ— நீங்க நம்பமாட்டீங்க; புல்லாங்குழலை எடுத்து ஊதினானே இல்லையோ; காளைமாடு அப்படியே அவனுக்கிட்ட மயங்கி மண்டியிட்டு விட்டது தம்பீ!"

"அப்படியே குழலோசை கேட்டு கேட்டுப் பழகியிருக்கிற மாடு! பையனுக்குப் பழக்கமான மாடுதான்— இல்லையா?—

என்றவாறு அந்த வாலிபன் சுருளிமலையையும் பொன்மணியையும் மாறி மாறிப் பார்த்தான்.

சுருளிமலை, எதுவும் பேசாமல் நின்றான். பொன்மணியோ கண்களால் பேசிவிட்டு தன்னைத் தூணில் மறைத்துக்கொண்டாள். அந்த வாலிபனுக்கு எங்கேயோ கேட்ட நிலவுப்பாட்டு ஞாபகத்திற்கு வந்தது.

"நீலவான ஆடைக்குள் உடல் மறைத்து
நிலவென்று காட்டுகிறாய் ஒளி முகத்தை!—
கோல முழுதும் காட்டி விட்டால் உலகம்
காதற் கொள்ளையிலே சாமோ?"—

என்ற பாட்டை முணு முணுத்துக் கொண்டான்.

பூஞ்சோலை பேச்சை நிறுத்தவில்லை. "தங்கமானபிள்ளையா தெரியிறீங்களே—நீங்க யாரு தம்பீ? எந்த ஊரு?" என வினவினாள்.

"நான் ஒரு ஆரம்ப ஆசிரியன்— என் பெயர் அறவாழி! எனக்கு இந்த ஊர் பள்ளிக்கூடத்துக்கு மாற்றலாகியிருக்கு— இதுவரையிலே சேலம் ஜில்லாவிலே ஒரு கிராமத்திலே இருந்தேன்!" என்றான் வாலிபன்.

"உங்களை ஏன் இங்க மாற்றிட்டாங்க?" என்று கேட்டாள் பூஞ்சோலை.

"எனக்காகத்தான் மாற்றியிருப்பார்கள்!" என்று தனக்குள்ளே பதில் சொல்லிக்கொண்டாள் பொன்மணி.

## 13

"நான் இருந்தால் அந்தக் கிராமத்துக்கே ஆபத்து ஏற்பட்டுவிடுமாம். அதற்காக அவசர அவசரமாக என்னை வேறு ஊருக்கு மாற்றியாகவேண்டும் என்று அதிகாரிகள் தீர்மானித்து விட்டார்!" என்றான் அறவாழி.

"பார்த்தா—பிள்ளை, பசுபோல இருக்குது! உங்களால் என்ன தம்பி ஊருக்கு ஆபத்து?"— ஆவலோடு கேட்டாள் பூஞ்சோலை.

"ஊரிலே இருக்கிற ஜனங்களையெல்லாம் புத்திசாலிகளாய் இருக்கவேண்டுமென்று நான்கூறினேன். அது, மிகவும் தவறான காரியமாம். சம்பாதிக்கிறபணத்தை வீணே செலவு செய்யாமல் சிக்கனமாக வாழ்க்கை நடத்துங்கள் என்று சொன்னேன்; அது குற்றமாம். எல்லோரும் நாகரீகமாகவும், சுகாதாரமாகவும் நடந்து கொள்ளவேண்டுமென்று பாடுபட்டேன்; அது பாபமாம் அதற்காக என்னை விரட்டி விட்டார்கள்!"

"அய்யோ! இதெல்லாம் சொன்னுஎன்ன தப்பு?...அப்படி என்ன தம்பி அந்த ஊருக்காரங்க செலவு பண்ராங்க? குடி ஜாஸ்தியோ?"

"குடியைவிட மோசமான செலவெல்லாம் செய்கிறார்கள். எவனுவதுவந்து எதையாவதுசொல்லி ஏமாற்றிப்பணம் பறித்துக்கொண்டு போய்விடுவான். ஒரு நாளைக்கு ஒரு கும்பாபிஷேகம் பண்ணுவார்கள். இரண்டு திருவிழா நடத்துவார்கள்!"

"தம்பீ, தம்பீ, என்னுது? கும்பாபிஷேகம் பண்றதும், திருவிழா நடத்துறதும் மோசமானசெலவா? என்னு தம்பி இப்படி சொல்றீங்க? இப்பவுல்ல தெரியுது அந்த ஊர்க்காரன் ஏன் விரட்டினுன்னு! அய்யய்யோ.....நீங்க சாமிக்கு எதிரியா? அதான் நம்பகோயில் காளைகூட உங்களை விரட்டியிருக்கு!"

"நான்சாமிக்கு எதிரியில்லம்மா; நான் தான் உண்மையானபக்தன்! சாமிபேரைச்சொல்லி ஊரை ஏமாத்துருனே அவனுக்குத்தான் நான் எதிரி! சாமிக்கு என்மேல் கோபம் கிடையாது. சாமியைவைத்துக்கொண்டு பிழைக்கிருனே அவனுக்குத்தான் என்மீது ஆத்திரம்! உங்க ஊர்கோயில் காளை என்னை ஏன் விரட்டியது? வந்ததும் வராததுமாக அதற்கு என்னைப்பற்றித் தெரிந்துவிட்டதா என்ன?"

"ஏன் தம்பி தெரியாது? அது சாமியோட காளையாச்சே! அதுக்கு எல்லாமே தெரியும்!"

"கோயில் காளை என்னை முட்டித் தள்ளியதற்கும், உங்க ஊரிலே இருக்கிருனே, கரகமாடிக் கண்ணன் — அவனுக்கும் நிறைய சம்பந்தமிருக்கிறது."

' யாரு; கரசுமாடிக் கண்ணனு? அவனுக்கு என்னு வநதுச்சு உங்கமேல கோபம்? ஓகோ.. ...சரிதான்! கண்ணன் பெரிய கரகமாடி !... அதோட அவனுக்குத் தெரியாத தெய்வமே கிடையாது பெரிய மந்திரவாதியாச்சே அவன்! அவனுகிட்ட போபி நீங்க தகராறு பண்ணலாமோ? அதான் அவன் கோயில் காளைக்கு மந்திரம்போட்டு ஏவி விட்டிருக்கான் ".

" அவனுடைய மந்திரமும் தந்திரமும்! எல்லாம் ஏமாற்று வித்தையென்று எங்கள் ஊரிலே நிரூபித்துக் காட்டிவிட்டேன். அதிலே அவனுக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு வந்ததும் வாரததுமாக பழிவாங்கிக் கொள்ளப்பார்த்தான் அவ்வளவு தான்!" என்று அறவாழி சற்று நிமிர்ந்து உட்கார்ந்து பொன் மணியிருந்த திக்கை நோக்கினன். அவள் அங்கேதான் அசையாமல் நின்று கொண்டிருந்தாள்."

அவனுக்குக்கூட தன்னை அந்த ஊரிலிருந்து மாற்றியது நல்லதாகத்தான் போயிற்று என்ற எண்ணம் மின்னி மறைந்தது. அவன் தன்னைப் பார்த்ததும் அவன்மீது படர விட்டிருந்த தன் பார்வையைத் திடீரென்று தரைக்குத் திருப்பிக்கொண்டான் பொன்மணி, அதையும் அவன் கவனிக்காமல் இல்லை. இன்னும் ஏதாவது பேசிக்கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு. அவனது உடல் வலியெல்லாங்கூட ஒதுங்கிக் கொண்டது போன்ற உணர்ச்சி! பூஞ்சோலையம்மாள் புதிய கேள்விகள் எதுவும் போடமாட்டாளா என்று ஆவலோடு எதிர் பார்த்தான்.

பூஞ்சோலைக்கோ சற்றுக் குழப்பம் ஏற்பட்டது. இவன் என்னமோ புரியாததும், புதியதும், இதுவரை நம்பிவந்த பழமைக்கு விரோதமானதுமான கருத்துக்களைப் பேசுகிறானே என்ற ஆச்சரியத்தில் ஏற்பட்ட குழப்பமே அது. இருந்தாலும் அவளுக்கு அறவாழியின்மீது வெறுப்பு ஏற்பட்டு விடவில்லை. என்னமோ சின்னப்பிள்ளை — ரத்தப் துடிப்பில் எதுவோ பேசுகிறான் என்று அவனை மன்னித்துவிடத் தயாராக இருந்தாள். அவனது அன்பு ததும்பியமுகம், பூஞ்சோலையம்மாளுக்கு அவன்மீது ஒரு புதிய பாசத்தை ஏற்படுத்தியது.

சுருளிமலை, வழக்கமான அலட்சியத்தோடு அறவாழியின் பேச்சைக் கேட்டானுயினும், அந்தப் பேச்சினிடையே எதையோ ஒரு விஷயத்தை எதிர்பார்ப்பவனைப்போலக் காணப்பட்டான்.

இப்படி அவர்கள் எல்லாம் அறவாழியைப்பற்றி சிந்தித்துக் கொண்டு மௌனமாக இருந்தார்களே தவிர, புதிய கேள்வி எதையும் போட்டு அவன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வில்லை. அறவாழியும் சிறிது நேரம் காத்திருந்தான். பிறகு அவனே தன் பேச்சைத் தொடரத் தொடங்கிவிட்டான்.

"உங்கள் ஊர் கண்ணனை எங்கள் ஊரில் அவமானப் படுத்தி விட்டேன் என்றேனே—அதையெப்படியென்று யாருமே கேட்கவில்லையே; இதோ நானே செல்லுகிறேன் கேளுங்கள்!" என்று உதட்டில் புன்னகையை வரவழைத்துக்கொண்டு மூவரையும் மாறிமாறிப் பார்த்தான் அறவாழி.

பொன்மணியின் பார்வையிலே ஆவல் நிறைந்திருந்தது. பூஞ்சோலையம்மாள் அவனைப்பார்த்து, 'என்னமோ தம்பீ — நீங்க செல்கிறது அதிசயமா இருக்கு! கண்ணன் பெரிய மந்திர வாதி — அவனைப் போயிநீங்க இப்படிச் சொல்றதுன்னு ...' என்று பேச்சை இழுத்தாள்

"எங்கள் ஊர் ஜனங்களும் இப்படித்தான் அவனைப்பற்றித் தப்புக்கணக்குப் போட்டிருந்தார்கள். நான்கூட அவனைப் பார்த்ததும் இவன் ஏமாற்றுக்காரனுய் இருக்கமாட்டான்; தான் செய்கிற தந்திரங்களை மக்களிடம் விளக்கமாக எடுத்துச் சொல்லித் தன் திறமையை வெளிக்காட்டி ஊதியம் பெறுபவனுகவே இருப்பான் என்று எண்ணினேன். ஆனுல் அவன் என்னையும் சேர்த்து ஏமாற்றிவிடப் பார்த்தான்" என்று அறவாழி கூறியதும், பொன்மணிக்கு உற்சாகம் தாங்கவில்லை. கரகமாடிக் கண்ணனைப்பற்றித் தான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தையே அறவாழியும் கொண்டிருப்பது அவளுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. கண்ணன் தன் பிரியத்துக்குரிய அறவாழியிடம்எப்படி அகப்பட்டுக் கொண்டான் என்பதை அறிய அவள் துடித்தாள். அதே சமயம் அவளுக்கு வேறொரு பயமும் வந்து

விட்டது. தனக்கும் அறவாழிக்கும் குறுக்கே கரகமாடிக் கண்ணன் வெறும் காமாந்தகாரனுக மட்டுமல்ல; அறவாழியைப் பழிவாங்க நேரம் பார்த்திருக்கும் பகைவனுகவும் நின்று கொண்டிருக்கிருனே யென்பதுதான் அந்தப் பயம்.

அறவாழி, கண்ணனேப்பற்றிய கதையைத் தொடர்ந்தான்:

"எங்கள் ஊருக்கு கரகமாடிக் கண்ணன் வரப்போகிருன் என்று பத்துநாட்களாகவே ஒரே பரபரப்பாக இருந்தது. அவனேப்போலக் கரகமாட யாரலும்முடியாது என்று அந்தப் பகுதியிலேயே ஒரேபேச்சு! கிராமத்து மாரியம்மன்கோயிலில் பெரியதிருவிழா! திருவிழாவின் கடைசிநாள்தான் கண்ணனின் கரகஆட்டம்! உள்ளூர் பெரியமனிதர் ஒருவர் — மாரியம்மன் கோயில் தர்மகர்த்த மட்டுமல்ல; ஊரிலேயே அவர் வைத்ததுதான்சட்டம்! அந்த அதிகாரத்தின்படி கண்ணனுக்குத் தங்குவதற்கான இடவசதி எங்கள் பள்ளிக்கூடக் கட்டிடத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானும் பள்ளிக்கூடக்கட்டிடத்திலேயே ஓர் அறையில் தங்கியிருந்தேன் காரணம், அந்த ஊரில் வேறுவீட்டுவசதியில்லே. தப்பித்தவறி ஒன்றிரண்டு வீடு இருந்தாலும் அவர்கள் கல்யாணமாகாதவர்களுக்கு வீடு தருவதில்லேயென்று கூறிவிட்டார்கள். அதனுல் நான் பள்ளியிலேயே தங்கிடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது."

"ஓகோ! உங்களுக்கு இன்னம் கல்யாணமாகலியா தம்பீ?" என்று இடைமறித்தாள் பூஞ்சோலே. பொன்மணிக்கு பூரிப்பு பொங்கியது.

அவன், "இல்லே!" என்று அவள்பக்கம் திரும்பிக்கூறிவிட்டு மேலே தொடர்ந்தான்.

"ஊரார் எதிர்பார்த்து ஏங்கியிருந்த கரகமாடிக் கண்ணன், குறிப்பிட்ட தினத்தன்று அதிகாலேயிலேயே எங்கள் பள்ளிக்கூடத்தில்வந்து இறங்கினுன். அவனதுதோற்றம் அவன்மீது எனக்கு வெறுப்பை ஏற்படுத்தவில்லே. நடையுடை பாவனைகளில் கிராமீயம்இருந்தது. பேசும்தோரணையிலும் கிராமீயக் கனிவு தென்பட்டது. சாயங்காலந்தான் அவனுக்குக் கரகஆட்டம் —

அதுவரையில் அவன் பள்ளிக்கூடத்தில்தான் தங்கியிருந்தான். ஊரிலேதிருவிழா என்றால் பள்ளிக்கூடம் இருக்கலாமா? அதனால் எனக்கும் நல்லவாய்ப்பு! பகற்பொழுதில் நானுமகண்ணனும் பேசிப்பழகும் சந்தர்ப்பம்கிடைத்தது. பேச ஆரம்பித்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் நான் அவன் எப்படிப்பட்டவன் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டேன். மாலையில் கரக ஆட்டத்திற்கு என்னை அவசியம்வரவேண்டுமென்று அழைத்தான். 'அதுஒரு கலைதானே; வந்துபார்க்கிறேன்' என்றேன் நான். 'என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? கலையாவது மண்ணாவது; எல்லாம் கடவுள் சக்தி' என்று வாதிட்டான் அவன்.

"மாலையில் நானும்போனேன் விழாவேடிக்கைபார்க்க! ஊர்மக்கள் அனைவரும் கூறியதுபோலவே அதி அற்புதமாக கரகக்கலையை அவன் கற்றிருந்தான். தலையில் கரகத்தை வைத்துக்கொண்டு அவன் பம்பரம்போல் சுற்றி ஆடியதை இப்போதும் நான் பாராட்டத்தயாராய் இருக்கிறேன்."

"சுருள்கம்பி சுற்றிக்கொண்டு ஆடினான். மண்டியிட்டுத் தவழ்ந்து தலையிலேயுள்ள கரகத்தைமட்டும் கிறு கிறுவென்று சுற்றிக்காட்டினான்."

"முனைமழுங்கிய கத்திதான்; ஆனாலும் அதன் விளிம்பின் மீது நின்றுகொன்று போட்டிபோட்டு முழங்கிய பம்பைக்கும் உடுக்கும் வாத்தியத்திற்கும் அறைகூவல் விடுத்து அவன் ஆடிய ஆட்டம் அனைவரையும் கவர்ந்தது. இன்னும் கண்ணை விட்ட கலாத காட்சி!"

"இத்துணை சிறப்புவாய்ந்த கலை விருந்தை அளித்தவன் திடீரென்று ஊர்மக்களை தெய்வசக்திக்குப் பலியிடத்தொடங்கிய போதுதான் எனக்கும் அவனுக்கும் இவ்வளவுபெரிய பகை மூள்வதற்கான சூழ்நிலை உருவாயிற்று!"

— இதைச்சொல்லிவிட்டு அறவாழி ஒரு பெருமூச்சுவிட்டுக் கொண்டான். அவன் கூறியவார்த்தைகளில் உள்ள ஆழ்ந்த பொருளை உணர்ந்து கொள்ளாவிட்டாலும் கதைகேட்பதுபோல பூஞ்சோலையும் பொன்மணியும் சுருளிமலையும் அவன் பேச்சைக் கேட்டனர்.

அறவாழிக்கேகூட சந்தேகம் தோன்றியது — யாரோ தன்னையொத்த விஷயமுணர்ந்த பேர்வழிகளிடம் பேசுவது போல் பேசுகிறோமே; புரியுமா என்று! இயல்பாக அவனுக்கு எழும் ஆர்வத்தின் விளைவாகவே அந்தப்பேச்சு அமைந்தது.

"ம! அப்பறம்?" என்றுள் பூஞ்சோலை.

அடேடே .... ஆவலாகத்தானே கேட்கிறார்கள் என்று விட்ட இடத்திலிருந்து தொடங்கினன் அறவாழி:

"கரகமாடிக் கொண்டிருந்த கண்ணன்" கடைசியாகக் கோயில் வாசல்வந்ததும் திடீரென தெய்வ ஆவேசம் வந்து ஆடினன் தர்மகர்த்தாவும் ஊர்ப்பிரமுகர்களும் அருகேபோய் வரம் கேட்டனர் கண்ணன், 'எல்லோருக்கும் கேட்டகாரியம் சித்திஅடையும்' என்றும் கூறிவிட்டு, இறுதியாக ஒருபெரிய குண்டுபோட்டது போன்ற பயரங்கரமான செய்தியை ஊர்மக்களுக்கு நடுவே சொன்னன்...

"இந்த ஊருக்குப்பெரிய கெடுதி செய்யவேண்டுமென்று மலையாள மந்திரவாதியொருவன் நாலுதிசையிலும் தகடு புதைத்திருக்கிறான் அதை உடனே எடுக்காவிட்டால் ஊரே அழிந்து விடும்!" — இப்படிக் கத்தினன் அவன்.

"உடனே ஊரார் அலறி அடித்துக்கொண்டு 'எப்படியாவது தகட்டைஎடுத்து எங்களைக் காப்பாற்று தாயே!' என்று பிரார்த்தனை செய்தனர்." பிறகு சாமி மலையேறியது.

"கரகமாடிக் கண்ணன், மலையாள மாந்திரீகர்கள் புதைத்திருக்கும் தகடுகளைத்தானே மந்திரம்போட்டு எடுத்துவிடுவதாக உறுதிகூறி அதற்குக் காணிக்கையாக நூறுரூபாய் வேண்டுமென்றும் கேட்டான். தர்மகர்த்தாவும் காணிக்கை தருவதற்கு சம்மதம் தந்தார். மறுநாள் காலையில் தகடு எடுப்பது என்று முடிவாயிற்று!"

"கண்ணன், பள்ளிக்கூடத்தில் வந்து படுத்துக்கொண்டான். கரக ஆட்டத்தைப்பற்றி என்னிடம் விமர்சனங்கூட கேட்டான். நான் மிகவும்புகழ்ந்தேன். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி! பிறகு தூக்கம்வருகிறது என்றுசொல்லி என்னை என் அறைக்கு

அனுப்பிவிடடான். நானும் அறையில் வந்து படுத்தவன். ஏதேதோ நினைத்துக் குழம்பியபடியே தூங்கிவிட்டேன். இரவு இரண்டு மணியிருக்கும் திடுக்கென விழித்துக்கொண்டேன் பிறகு தூக்கம் வராமல் படுக்கையில்புரண்டு கொண்டிருந்தேன் என் அறைப்பக்கம் யாரோ வந்ததுபோல் தெரிந்தது. அசையாமல் படுத்துக்கொண்டேன்.''

"வாத்தியாரே!" — என்று ஒரு குரல்! அது கண்ணனின் குரல்தான்! பேசாமல் படுத்திருந்தேன். கண்ணன் அறையை விட்டு நகர்ந்தான். நான் மெதுவாக எழுந்து வெளியே வந்தேன் கண்ணனைக் காணவில்லை அவன் படுக்கையில் போய்ப் பார்த்தேன். படுக்கை காலியாக இருந்தது. தெருப் பக்கம் வந்தேன். கண்ணன் தெருவில் போய்க்கொண்டிருந் தான்...எனக்கு அவனைத் தொர்டந்து செல்லவேண்டும் போலிருந்தது. அதனால் தொடர்ந்தேன்..."

## 14

"தெற்குத்தெருவைத் தாண்டி தூரத்திலே இடிந்து காணப் படும ஒரு மண்டபத்தின் பக்கம் கண்ணன் நடந்துகொண்டிருந் தான். அந்த மண்டபத்தைத் தன் அழுத்தமான வேர்க்கரங் களால் சுக்கல் சுக்கலாகப் பிளந்து வெற்றிச் சிரிப்பு சிரித்துக் கொண்டு நிற்கும் அரச மரமும், அதனை யொட்டி இடிந்தும் இடியாமலும் இருக்கிற பலி பீடமும் இரவு நேரங்களில் அந்தப் பக்கம் போவோர் வருவோரை பயமுறுத்துவதுண்டு."

"அந்தப் பலி பீடத்திலே பாயச முனி என்று ஒரு பயங்கர மான முனி வாசம் செய்கிறதாம். அந்த முனிக்கு காட்டேரி யம்மன் என்று ஒரு வைப்பாட்டி உண்டாம். அந்தக் காட்டேரி, ரத்தவெறி பிடித்தவளாம். மனித ரத்தமென்றால் விடமாட்டாளாம்."

"ஒருநாள் அவள் ரத்தப் பசிகொண்டு, ஆள் ஒருவரும் கிடைக்காமல் கடைசியாகத் தனக்குப் பூஜை செய்யும் பூசாரி முத்தண்ணனையே அடித்து ரத்தம் குடித்து விட்டாளாம். பலி பீடத்தின் முன்னேயே பிணமாகக் கிடந்த பூசாரியை மறுநாள் காலையிலே கண்ட ஊர் மககள் காட்டேரிமீதுதான் பழியைப் போட்டார்கள்."

"இரண்டொரு நாள் கழித்து சிலர் இப்படியும் பேசிக் கொண்டார்கள். அதாவது, பூசாரிக்கும் அடுத்த ஊரிலேயுள்ள ஒரு பயில்வானுக்கும ஏதோ தகராறு! அந்த பயிலவான் பூசாரியை கொலை செய்து விடுகிறேன் என்று சபதம் போட்டான் பூசாரியும் எதிர் சபதம் போட்டார். ஒருநாள் பயில்வான் பூசாரியைக் கொல்வதற்காக கத்தியின் உதவியை நாடாமல் புத்தியின் உதவியை நாடிவிட்டான். இரவு நேரத்தில, பூசாரி பலி பீடத்திற்கு பூஜை செய்திவிட்டுத் திரும்பும்போது மண்ட பத்திலேயிருந்து கருஞ்சேலை கட்டிய பயங்கர உருவமொன்று காலில் சதங்கை கட்டிக்கொண்டு "கோ!" என்று கூச்சலிட்டது. பூசாரி அலறினார். அவ்வளவுதான் மூக்கிலும் வாயிலுமா ரத்தம் வழிந்தது. தீர்ந்துவிட்டது மூச்சு! அடித்தோ, குத்தியோ கொன்றால் கொலை வழக்காகிவிடும்; இப்படிக் காட்டேரியின் பெயரால் கொன்று விடுவதே தனக்குப் பாதுகாப்பு என்று கருதிய அடுத்த ஊர்ப் பயில்வானின் நாடகம்தான் அது"

"அப்படிப்பட்ட காட்டேரியும், பாயச முனியும் வாழுகின்ற பாழ்மண்டபத்தை நோக்கித்தான் கண்ணன் நடந்தான். நானும் விடவில்லை. மறைந்து மறைந்து பின்னால் சென்றேன். பலி பீடத்தருகேபோய் கண்ணன் நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். பிறகு கீழே உட்கார்ந்து பீடத்தின் கீழேயுள்ள கற்கள் இரண்டைப் பெயர்த்தான் சில நிமிஷ நேரம் ஏதோ வேலையில் ஈடுபட்டான் நான் நன்றாக ஒளிந்துகொண்டு நடப்பதை கவனித்தேன். பிறகு கண்ணன் அதைவிட்டுப் புறப்பட்டான்."

"அவன் போனதும் பலிபீடத்தின் பக்கம்போய் உற்றுப் பார்த்தேன். கண்ணன் அங்கே சிறு குழி தோண்டி எதையோ புதைத்திருக்கிறான் எனக் கண்டு கொண்டேன். சந்தேகப்பட்ட இடத்தைத் தோண்டிப் பார்த்தேன். ஒரு பழைய தகடு—ஒரு மஞ்சள் துண்டு — சிறிய எலும்பு ஒன்று — இன்னும் ஏதேதோ குப்பைகள் இருந்தன. அவைகளை யெடுத்து வெகு தூரம் வீசி யெறிந்தேன் குழியை முன் இருந்ததுபோல் வித்தியாச மில்லாமல மூடி வைத்துவிட்டு, அவசர அவசரமாகக் கண்ணனைப் பின் தொடர்ந்தேன் அவன் தெற்கு வீதியைக கடந்து

களவாய்க்கரைப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தான். நானும் மெதுவாக அவனை விடாது தொடர்ந்தேன்."

"அங்கே ஓர் அய்யனூர் கோயில்! மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். சபரி மலை அய்யப்ப சாமியின் சித்தப்பா பிள்ளையாம் அந்த ஊரிலே உள்ள அய்யனூர் சாமி! அவருக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு பலபேர் குதிரைகள் செய்து கோயில் வாசலிலே நிறுத்தியிருந்தனர். குதிரைப் பந்தயத்தில் மற்ற குதிரைகளை ஓட்டுகிற 'ஜாக்கி'களுக்கு லஞ்சம் கொடுத்துத் தன் குதிரையை ஜெயித்ததாக அறிவிக்கச் செய்து ஒரே சமயம் பத்து லட்ச ரூபாய் சம்பாதித்த பதஞ்சலிப் பிள்ளை என்ற சூதாடி யொருவர் மஞ்ச கல்யாணிக் குதிரை யொன்றை அந்தக் கோயில் வாசலில் பொம்மையாகச் செய்து வைத்து பிரார்த்தனையை செலுத்திக் கொண்டார் அய்யனூர், இரவு நேரங்களில் அந்த மண் குதிரை மேல் ஒன்றில் ஏறிக்கொண்டு ஆற்றையெல்லாம் கடப்பாராம்."

"அப்படிப்பட்ட கோயில்வாசலில உள்ள குதிரைகளில் ஒன்றின் காலுகளுக்கு கீழே கண்ணன், தன் வேலையைத் தொடங்கினான் அவன் அதைவிட்டுப் போனதும் நான் அதே இடத்தில் என் ஆராய்ச்சியை நடத்தினேன். பலிபீடத்தருகே இருந்தது போன்ற பழைய பொருள்களேதான்! அவைகளை யெடுத்து களவாய்நெருப்பில் வீசிவிட்டு முன்போலக் குழியை மூடிவிட்டுத் திரும்பினேன்."

"பின்னர், மேலத் திசையில் உள்ள ஒரு பாலத்தின் கீழே தன் வேலையை நடத்தினான் கண்ணன். நான் என் வேலையை நடத்தினேன்"

'கடைசியாக, வடக்குத் திசையில் வாய்க்கால் ஓரத்தில் மனுற ஓங்கி வளர்ந்திருக்கும் இரு கிளை முளைத்த தென்னமரத் தடியில் கண்ணன் போய் அமர்ந்தான் நானும் சற்றுத் தொலை விலிருந்து கவனித்தேன். அவன் கீழே குழி தோண்டுகிறானா என்று கவனித்தேன். பேசாமல் உட்கார்ந்து சுற்று முற்றும் பார்த்தான் பிறகு எழுந்தான். எனக்கொன்றும் புரியவில்லை. மளமளவென்று தென்னை மரத்தில் ஏறினான். அடியிலேயே இரு கிளையாய்ப் பிரிந்து வளர்ந்திருக்கும் அந்த மரத்தில் ஒருகிளையில்

ஏறி உச்சிக்குப் போனான். சிறிது நேரத்திற்குப் பிறகு கீழே இறங்கினான். தன் மடியிலிருந்து எதையோ எடுத்தான் மரத்தில் தடவினான் பிறகு போய்விட்டான் நான் புரிந்து கொண்டேன் தகட்டை மரத்தின் உச்சியில் மறைத்திருக்கிறான் என்பதை! என்ன செய்வதென்று புரியவில்லை ஏனென்றால் எனக்கு மரம் ஏறத் தெரியாது. ஆழ்ந்த யோசனையுடன் மரத்தினிடம் சென்று கவனித்தேன். படியிலிருந்து ஏதோ எடுத்து தடவினானே; என்ன என்று பார்த்தேன் புரிந்து விட்டது. அவன் ஏறித் தகடு வைத்த கிளையைச் சரியாக அடையாளம் வைத்துகொள்வதற்காகக் கொஞ்சம் சுண்ணும்பு தடவியிருக்கிறான் ஈரத்துடனேயே அந்த சுண்ணும்பை விரலால் வழித்து அடுத்த கிளையில் தடவி விட்டு — முதலில தடவப்பட்டிருந்த இடத்தில் சிறிதும் வெள்ளை தெரியாமல் அழித்து விட்டேன். பிறகு அவசர அவசரமாகக் கணணனைத் தொடர்ந்தேன்"

"அவன் பள்ளிக் கூடத்திற்குத் திரும்பிவிட்டான். அவன் என்னைப் பார்த்து விடக்கூடாதே என்பதற்காக எப்படியெப் படியோ ஒளிந்து உள்ளே சென்றேன். அப்போதுதான் கண்ணன் நான் படுத்திருந்த இடத்தில் இல்லாததைக் கண்டு திரும்புகிறான் நானும் போய் விட்டேன். 'எங்க வாத்தியாரே போனீங்க? தூக்கமே வரமாட்டேன்னுது...நீங்க தூங்காம இருந்தால் பேசிகிட்டு இருக்கலாமனு வந்தேன்' என்று சமாளித்தான் கண்ணன்."

"நானும் அவனை விட ஒரு படி அதிகமாகவே போய், 'அப்படியா சேதி! நான் ஆனந்தமாகத் தூங்கினேன். இப்பத்தான் தெருப்பக்கம எழுந்து போனேன்...அந்த சமயத்தில் நீ என்னை எழுப்ப வந்திருக்கிறாய்!' என்று ஒரு பொய்யை மெய்யாக்கினேன்."

"பிறகு இருவரும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம், 'இந்த ஊரில் கிளை முளைத்த தென்னைமரம் இருக்குதாமே?' என்று தெரியாதவனைப் போலக் கேட்டான் கண்ணன். நானும் அவனைப் புரிந்து கொள்ளாதவனைப் போல 'ஆமாம்—ஆச்சரியமான தென்னைமரம் அது! அந்த தேங்காய்கள் கூட எல்லாக் காய்களையும்விட அதிகமில்லை!' என்று கூறினேன்."

"இந்த ஊர்லே எவ்வளவு நாளா இப்படிக் கஷ்டமாயிருக்கு?" என்று அடுத்தபடி யாகக் கேட்டான்."

"கஷ்டமா? என்ன கஷ்டம்? யாருக்கு?' என்றேன்."

"அதான் ஊரிலே நோய், நொடி, சாக்காடு — வறுமை கிறுமை — இப்படி யெல்லாம் இருக்கே — அது எத்தனை நாளா இருக்குன்னு கேக்கிறேன்' என்று விசாரித்தான் கண்ணன். 'அது பல நாளாய் இருக்கு!' என்று அலட்சியமாகச் சொன்னேன் நான்."

'நாலுயிலிருந்து இந்த ஊரைப் பிடிச்ச பீடை தொலையுது! என்றான்."

"'ஏன்? நீ ஊருக்குப்போகிறாயோ?' என்றேன். அந்தக் கிண்டலை அவன் புரிந்துகொள்ளவில்லை. 'தகடு எடுக்கப் போகிறேன்; தகடு!' என்றான் கம்பீரமாக! நேரம் அதிகமாகி விட்டது. சிறிதுநேரம் தூங்கலாம் என்று விடியற்காலை கண்ணை மூடினேன்."

'மறுநாள் ஊரே அமர்களகப்பட்டது. கரகமாடிக் கண்ணன் மலையாள மாந்திரீகன் புதைத்த தகட்டை எடுக்கப் போகிறான் என்ற சேதி காட்டுத் தீ போல் பரவிட்டது. ஆயிரக் கணக்கான மக்கள் அந்தச் சிறிய கிராமத்தில் கூடிவிட்டார்கள் கரக ஆட்டத் திற்கு வந்ததைவிட நாலு மடங்கு அதிகமான கூட்டம்! எல்லோ ரும் பீதியோடும் வியப்போடும் தகடு எடுக்கும் சம்பவம்பற்றி பேசிக்கொண்டார்கள். தகடு எடுக்கும்போது மலையாள தேவதை அதிக பலத்தோடு சண்டை போட்டு கண்ணன் விடும் தேவதை யை விரட்டிவிட்டால் அதே இடத்தில் கண்ணன் சாக வேண்டி யதுதான் வாயாலும் மூக்காலும் ரத்தங் கொட்டிப் பிணமாகி விடுவான்; பாவம்— என்றெல்லாம் அனுதாப உணர்ச்சியோடு குழுமினர். 'பாவம்-அழகான வாலிபன்! இவனுக்கேன் இப்படிப் பட்ட துணிச்சல்? இவன் ஏன் மலையாள தேவதையிடம் தன் கைவரிசையைக் காட்டப்போகிறான்?' என்று செல்லமாகக் கண்டனம் தெரிவித்துக் கூறினர் பலர்."

"காலையில் கண்ணன் நன்றாகக் குளித்து முழுகி, உடம்பெல் லாம் சந்தனம் பூசி, அகலமான குங்குமப் பொட்டு ஒன்றை

நெற்றியிலே இட்டு, செவந்திப்பூ மாலையென்றைக் கழுத்திலே குறுக்கே போட்டுக்கொண்டு, ஒரு கட்டை வண்டிலே ஏறி நின்று கொண்டான். வண்டியும் அழகாச் சிங்காரிக்கப்பட்டு, வாழைக் கன்றுகள் சுற்றிலும் கட்டப்பட்டு, சாம்பிராணி தூபம் புகையை எங்கும் பரப்பிவிட, காண்பவரைக் கவரும் வகையில் ஏற்பாடாகி யிருந்தது. தாரை, தப்பட்டை, கொம்பு முதலிய வாத்தியங்கள் முழங்க கரகமாடிக் கண்ணன் ஊர்வலமாக அழைத்து வரப் பட்டான். அவன் கண்களை மூடிக்கொண்டு, கையை உயரத் தூக்கி 'ஹே காளிகா தேவி! மாரியம்மா! தாயே! சக்தி! சக்தி!' என்று கத்திக்கொண்டே வந்தான். அந்த வேடத்தைக் கண்டு யாருமே ஏமாந்து விடுவார்கள்."

"'அதோ...கீழத்தெரு பாயச முனி மண்டபத்துக்கு விடு!' என்று கூச்சலிட்டான்! வண்டி, மண்டபத்திற்குச் சென்றது. 'இதோ! இந்தப் பலிபீடத்துக்குக் கீழேதான் மலையாள மாந்திரீ கன் முதல் தகட்டைப் புதைத்திருக்கிறான்--ஹே காளி! ஹே மாரீ! உன் சக்தியால் அந்தத் தகட்டை எடுத்துத் தூளாக் குகிறேன் பார்!' என்று பலிபீடத்துக்குக் கீழே பாபாவென்று தோண்டினான். அங்கேதான் தகடு இல்லையே...அதைத்தான் தான் அப்போதே எடுத்து விட்டேனே....."

என்று அறவாழி, புன்னகையோடு பூஞ்சோலையிடம் கூறிக் கொண்டே பொன்மணி பக்கம் திரும்பினான் அவள் சிலையாக இருந்தாள். சிலை, சிரிக்குமா? இந்தக் கேள்வி அறவாழியைக் குடைந்தது!

"ம் அப்புறம்?.... கண்ணன், நாலு திசையிலும் தேடிப் பாத்து ஏமாந்துட்டாணு? அட பாபமே! நீங்க ரொம்ப குறும் புக்காரப் புள்ளே தம்பி அப்புறம் என்னு நடந்துச்சு? சொல் லுங்க?" என்று பூஞ்சோலை கேட்டாள்.

அறவாழி. பதில் சொன்னான்.....

"எல்லா இடங்களிலும் கண்ணன் ஏமாந்து, அவனை நம்பிய மக்களும் ஏமாந்து, இறுதியில் கிளை முளைத்த தென்னை மரப் பக்கம் வந்தார்கள். கண்ணன் தானிட்டிருந்த அடையாளத்தைக்

கவனித்தான். அது மாற்றப்பட்டது அனுக்கு எப்படித் தெரியும்? பாவம்-மளமளவென்று ஏறினுன். அய்யோ, பரிதாபம்-ஏமாற்றத்தோடு திரும்பினுன் கூட்டத்தில் பல வகையான பேச்சுக்கள்! கண்ணனின் தலே தானுகவே குனிந்து கொண்டது இருந்தாலும் தந்திரத்தை விடவில்லே...ஆவேசம் பிடித்தது போல் முரட்டுத்தனமாகப் பல்லேக்கடித்துக் கொண்டு கத்தினுன் 'ஹே மலேயாளபகவதி! நீ என்னே ஏமாற்ற முடியாது! இருக்கட்டும்—நாளே காலேயிலே உன் கொட்டத்தை அடக்குகிறேன்"...என்று சபதம் செய்தான்.

"உடனே, நான் குறுக்கிட்டு, 'நான் இப்போதே உன் கொட்டத்தை அடக்குகிறேன்!' என்று கூறினேன் கண்ணன் உட்பட அனேவரும் என்னேயே அதிசயமாக நோக்கினர்.

"முதல்நாள் இரவு நடந்த ரகசியம் முழுவதையும் எல்லோர் முன்னிலேயிலும் விளக்கினேன். கண்ணன் தகடு வைத்திருந்த சரியான கினேயைக்காட்டி 'இதோ இந்தக் கிளேயில் இருக்கிறது; தகடு! எடுங்கள்!' என்றேன்

"ஒருவன், மரத்திலேறி நான் சொன்னபடி தகட்டை எடுத்து வந்தான் ஊரார் கோபம் கண்ணன்மீது திரும்பியது. அவனே அங்கேயே அடித்துக் கொன்றிருப்பார்கள் நான் மாத்திரம் தடுக்காவிட்டால்! கடைசியாக, தகடுஎடுக்கும் விழா பார்க்கவந்த பொதுமக்கள் என்னுடைய பிரசங்கத்தைக்கேட்டு வீடு திரும்பினுர்கள்.

"கண்ணன், என்னே ஒரு பார்வை பார்த்துவிட்டு அதை விட்டு அகன்றுன். அந்தப் பார்வையின் 'அர்த்தம் பழிக்குப்பழி!' என்பதுதான்! எனக்கு சிற்றூருக்கு மாறறல் ஆனதுமே கண்ணனின் ஞாபகம்தான் வந்தது. அதோடு, அவனுடைய பார்வையின் நினேவும் எழுந்தது. இருப்பினும் பரவாயிலேலேயென்று புறப்பட்டேன். ஊரைவிட்டுப் புறப்பட்ட நான் ரயில், கார் முதலிய வாகவடங்களேக் கடந்து கடைசியில் கட்டை வண்டியொன்றில் ஏறி ஊருக்குள் வந்து கொண்டிருந்தேன் இரவெல்லாம் ஒரே பிரயாணக் களேப்பு—விடியற்காலே நாலு மணிக்குத்

தான் இந்த ஊரை அடைய முடியும் என்று திட்டமிட்டு என் பயணம் துவங்கியது. அதன்படி ஊருக்குள் நுழைந்தேன் ஊர் கோடியில் வண்டிமாடுகள் படுத்துக்கொண்டு எழவே முடியாதென மறுத்துவிட்டன பிறகு வண்டிக்காரனுக்கு கூலியைக் கொடுத்துவிட்டு பெட்டி படுக்கைகளை நானே தூக்கிக்கொண்டு நடந்தே வந்துகொண்டிருந்தேன்.

"அப்போதுதான் திடீரென கண்ணனை சந்திக்க நேர்ந்தது! .. கண்ணனை மட்டுமல்ல ... கண்ணனின் 'உதவியால' ... உங்களைப் போன்ற நல்லவர்களையும் ..... " என்று பேச்சை இழுத்து இழுத்து நிறுத்த முடியாமல் வழிகளை மட்டும் பொன் மணியின் பக்கம் விடுத்தான் அறவாழி!

## 15

பூஞ்சோலைக்கு அறவாழி சொன்னகதை வியப்பை அளித்தது என்றாலும் அதில் நம்பிக்கையில்லாமல் போய்விடவில்லை. அறவாழியின் முகமும், மென்மையான பேச்சும் அவளுக்கு அவனிடத்திலே அத்தகைய பற்றுதலையும் பாசத்தையும் ஏற்படுத்தி விட்டது.

பழமை எண்ணங்களுக்குப் பக்தி பூர்வமாகப் பணிவதற்குக் கற்றிருந்தாளே தவிர — பூஞ்சோலை; புதிய கருத்துக்களின் திக்கு நோக்கித் திரும்பியதுமில்லை. அத்தகைய மூதாட்டியை அறவாழியின் பேச்சு ஒரேயடியாகத் திருப்பி விடாவிட்டாலும், கரகமாடிக் கண்ணன் ஒரு ஏமாற்றுக்காரன் என்று தீர்மானிக்கிற அளவுக்கு உதவிற்று. மந்திர மாயங்களின் சக்திகள் எல்லாம் உண்மைதான்! ஆனால் கரகமாடிக் கண்ணன் தனக்கு அந்த சக்தியிருப்பதாக நடித்து மக்களை மயக்கி யிருக்கிறான் என்ற நிலைக்கே அவளால் இறங்கி வர முடிந்தது.

அறவாழியைக் கோயில்காளை ஏன் துரத்தவேண்டும் என்பதை அறிந்துகொள்ள அவள் மிக ஆவலாக இருந்தாள். அம்மாவைவிட மகளுக்கு அந்தக் கதையைக் கேட்பதிலே ஆர்வம் அதிகம்.

இருக்காதா என்ன! பண்புகொண்ட ஒரு தாயின் உள்ளம் அறவாழினை அன்புக் கயிற்றால் பிணைக்கிறது. பொன்மணியின் இருதயமோ, வேறு எவரும் இருப்பதற்கு இடமின்றி அற வாழியை மட்டும் உள்ளே வைத்துமூடி தாமரை மொக்கு போலக் குவித்துகொள்கிறது. அந்தச் செயல்மூலம் அவளுக்கோ எவ் வளவோ பெரிய ஆறுதல்! பெருமூச்சு! வெற்றிகண்டு விட்ட தாகவே ஒரு நினைவு! இன்பக்கனவு! ஏற்கனவே ஒளியேறிய விழிகளில் மகிழ்ச்சிக் கண்ணீர் வேறு பெருகேற்றியது. அந்த விழிகளால் அவனை அணு அணுவாக விழுங்கி இதயத்தில் திணித்துக் கொண்டிருந்தாள்.

அவனும் அவளுக்கு முன்பாகத் தன் இதயத்தைத் திறந்து வைத்துக்கொண்டு கண்ணால் வரவேற்புத் தோரணங்கட்டி "வண்ணக்கிளியே! வருக! வருக!" என அழைத்துக் கொண்டிருந்தான்.

"தம்பி! அதெல்லாம் போகட்டும் — அவன் கிடக்கிறான் அந்த மோசக்காரக் கண்ணன்! உங்களைக் கோயில்காளை எப்படித் துரத்துச்சு? அதைச் சொல்லுங்க விபரமா!" என்று கேட்டு அறவாழியின் சிந்தனையை உடனடியாகக் கலைத்தாள் பூஞ்சோலை.

"கண்ணன், என்னைப் பழி தீர்த்துக்கொள்ள செய்த ஏற்பாடு தான் அது!" என்று அறவாழி திட்டவட்டமாகக் கூறினான்.

"பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு நான் மட்டும் தெருவிலே வந்துகொண்டிருந்தேன்.....பொழுதுவிடியும் நேரம் .....ஒன்றிரண்டு சேவற்கோழிகள்கூட அவசரப்பட்டுக் கூவத் தொடங்கின. திடீரென எதிரே கண்ணன் வந்துகொண்டிருந் தான். நான் அவனைப் பார்த்த அதேசமயம் அவனும் என்னைப் பார்த்தான். 'வாருமய்யா, பகுத்தறிவு! வந்து சேர்ந்தீரா! சபாஷ்! சபாஷ்!!" என்று உரக்கக் கத்தினான். நான் பதட்ட மடையாமல் அப்படியே நின்று புன்னகை புரிந்தேன். என்னு டைய புன்சிரிப்பை அவன் பார்த்தானோ என்னமோ தெரியாது— நான் எதிர்பாராதநிலையில் என் தலையை நோக்கி ஓங்கி ஒரு

குத்துவிட்டான். கைகளில பெட்டி படுக்கையிருந்த காரணத் தால் என்னுல் உடனடியாக அதைத் தடுத்துக்கொள்ள முடிய வில்லை. கைகளில் உள்ள பொருள்களைக் கீழே வைத்துவிட்டு நான் எதிர்ப்பதற்குத் தயாராவதற்குள் மறுபடியும் ஒரு குத்து நெஞ்சிலே விழுந்தது.....

இதைக்கேட்டதும் "அம்மாடி! என் தங்கம்!" என்று பூஞ் சோலை மன முருகினுள்.

பொன்மணியின் நெஞ்சிலே ஈட்டிகள் பாய்ந்தது போலிருந் தது..அறவாழியின் மார்பக்கத்தில் எவ்வளவு வேதனையிருக்கு மோ — என எண்ணி நடுக்குற்ருள். அவனையறியாது அவள் கன்னங்களில் கண்ணீர் பெருக் கெடுத்தது

அறவாழி சண்டையை வர்ணிக்க ஆரம்பித்துவிட்டான்:

"நெஞ்சிலே குத்துவிழுந்தது நிலை தடுமாறிவிட்டேன். இருந்தாலும் மூச்சைப் பிடித்துக்கொண்டு கண்ணனை எதிர்ப் பதற்குத் தயாரானேன். அவன் என்னுடு நேர்மையான சண்டைக்குவரவில்லை. நான் எதிர்க்கப் போகிறேன் எனக் கண் டதும் ஒரு பெரிய கருங்கல்லைக் கையிலே தூக்கிக்கொண்டு என் தலையை நோக்கி வீசுவதற்குக் குறி பார்த்தான். சுற்று முற்றும் பார்த்தேன் எனக்கு ஒரு ஆயுதமும் கிடைக்கவில்லை. அவனும் கல்லை என்மீது எறியவில்லை. குறிதவறிக்கீழே விழுந்து விட்டால் விழுந்த கல்லை நான் எடுத்துக்கொள்வேன் என்ற பயம் போலும், அவனுக்கு! கல்லோடு என்னைத் துரத்தினுன். நான் ஓடுவதைத்தவிர வேறுவழியில்லை. ஒரு மரத்தடிப் பக்கம் ஓடினேன். கோயில்காளை அங்கேதான் படுத்திருந்தது. அங்கே ஒரு சுமைதாங்கியில் யாரோ ஒரு ஆள் படுத்திருப்பது தெரிந்தது. அதைக் கண்ணனும் பார்த்துவிட்டான். திடீரெனக் கல்லை வெகு வேகமாக என்னைநோக்கி வீசினுன். நான் குறியினின்று தப் பினேன். ஆனல் அந்தக் கல், காளையின்மீது விழுந்தது. காளை, ஒரு பெரிய சப்தத்துடன் துள்ளியெழுந்தது. கண்ணன் பறந்து விட்டான் அதை விட்டு. அவ்வளவுதான் எனக்குத்தெரியும். காளை என்மீது பாய்ந்தது. ஓடினேன். ஓடினேன். தெருவிலே உருண்டேன். சுமைதாங்கியில் படுத்திருந்த ஆள் ஏதோ சப்தம்

போட்டதுபோல் தெரிந்தது. என்ன ஒலியொன்று தெளிவாகக் கேட்கவில்லை. காளை, தன்மீது கல்வீசியவன் நான்தான் என்று எண்ணிக்கொண்டு என்னை வெருட்டியது. அதற்குப் பிறகுதான் எல்லாம் உங்களுக்கே தெரியுமே!" என்று நிறுத்தினான் அறவாழி.

"சுமைதாங்கியில் படுத்திருந்தது யார் தெரியுமோ? நான் தான்!" என்று சிரித்துக்கொண்டே சொன்னான், சுருளிமலை.

"என்ன, நீயா? அப்படியானால் ஏதோ சப்தம் போட்டாயே; அது என்ன?" எனக்கேட்டான் அறவாழி.

"விடாதே! கொல்லு! கொல்லு — என்று சப்தம் போட்டேன்" என்று சாதாரணமாகச் சொன்னான் சுருளிமலை.

"அடப்பாவி! அப்படியா சத்தம் போட்டே?" என்று திட்டினாள் பூஞ்சோலை.

"பிறகென்னவாம்-யாரோ என் காளையைக் கடத்திச்செல்ல வந்திருக்கிறார்கள் என்று பயந்தேன் — அதனால் அப்படிச் சொன்னேன்!" என்று கூறிவிட்டு "கடைசியில்தான் காப் பாற்றிவிட்டேனே!" என்று பெருமையும் பட்டுக்கொண்டான் சுருமலை.

அறவாழி, சுருளிமலையை அன்பு ததும்ப, நோக்கி "காளை மாடு உனக்கு நெருங்கிய நண்பனே?" என்று கேட்டான்.

"ஏன்? அது கேவலமா? மனுஷனோட சிநேகிதம் பண்றதைவிட மாடுகளோடு சிநேகிதம் பண்றது எவ்வளவோ மேல்! நன்றிகெட்ட துரோகிகளோட பழகுறதைவிட நாய், கழுதை, குதிரை, மாடு, ஆடு, கோழி, இதுகளோட பழகாலம் என்பது என் அபிப்பிராயம்!"

சுருளிமலையின் பதில் அறவாழிக்குத் திகைப்பையும் நகைப் பையும் உண்டாக்கிறது.

"ஏதேது—பெரிய வேதாந்தி மாதிரி பேசுறியே...." என்று சிரித்துக்கொண்டே கேட்டான் அறவாழி.

"இதுக்கு ஏன் வேதாந்தம் சித்தாந்தம் எல்லாம்!... அனுபவம் போதாது....அனுபவம்?" என்றான் சுருளிமலை.

"அனுபவமா? உனக்கு இந்த வயதுக்குள்ளே என்ன தம்பீ அனுபவம்வந்தது?"

"அனுபவத்துக்கு வயசு முக்கியந்தான் — அதை ஒத்துக் கொள்கிறேன. ஆனல் வயசான வங்களுக்குக் குழந்தைப்பிள்ளை அனுபவமும்-சின்னப்பிள்ளைகளுக்கு வயசான வங்க அனுபவமும் -இருக்கிறதிலே ஒரு ஆச்சரியமும் இல்லையே! நானும் கோயில் மாடு சிவாவும் ஏன் சிநேகிதம் ஆனேம் — எப்ப சிநேகிதம் ஆனேம் — தெரியுமா உங்களுக்கு?"

"எனக்கு எப்படித் தெரியும்? அனுபவஸ்தனை நீயே சொல்லேன்!"

"நீங்கள் இந்த ஊர்லதானே இருக்கப் போறீங்க... இன்னுங்கொஞ்ச நாள் கழித்துச்சொல்றேன்!"

"இதற்கு ஏன் தம்பி நாளை ஒத்திவைக்கிறாய்? சும்மா இப்பவே சொல்லு!"

"ஊஹூம் இப்பசொல்லமுடியாது! அப்பறம் சொல்றேன்!" —சுருளிமலை இதைக்கூறியவாறு, எழுந்து வேகமாக வீட்டை விட்டு வெளியேறினன்.

அவன் போவதையே அறவாழி, கவனத்தோடு பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, இறுதியில் பொனமணியின் பககம் திரும்பினன். பொன்மணியை அந்த இடத்தில் காணவில்லை. அவள் எங்கே போய்விட்டாள் என்று அவன் நினைப்பதற்குன் கொல்லைத் தாழ்வாரத்துப பக்கமிருந்து, "அம்மா! அம்மா! ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்!" என்ற குரல் கேட்டது.

"அய்யோ! என்னடி பொன்மணி!" என்று பூஞ்சோலை ஓடினுள். கொல்லைப் பக்கம் போன பொன்னையாவுக்குத்தான் ஏதோ நேர்ந்துவிட்டது என்று பூஞ்சோலை நடுங்கினுள்.

நல்ல வேளையாக அப்படி ஒன்றும் ஆகிவிடவில்லை. பொன் மணிக்குக் கை விரலில் தேள் கொட்டிவிட்டது! அடுப்புக்கு வரட்டி எடுக்கப் போயிருக்கிறுள்; அதிலிருந்து தேள் நன்றுக அவள் விரலைப் பதம் பார்த்துவிட்டது. பொன்மணி, துடித்தான்: துவண்டாள்.

அறவாழியும் மெதுவாக எழுந்து கொல்லைத் தாழ்வாரத்திற்கு பரபரப்போடு வந்து விடடான.

"அய்யோ! தேள் கொட்டி விட்டதே பெண்ணுக்கு நான் என்ன செய்வேன் .." என்று பூஞ்சோலை ஒப்பாரி வைத்தாள். ஊருக்கெல்லாம் வைத்தியம செய்யப் போவான் — தன் வீட்டிலேயே ஆபத்து எனறதும எதிலும் புத்தி ஓடவில்லை அவளுக்கு.

தட்டுத் தடுமாறி அந்த இடத்திற்கு வந்து விட்ட பொன்னையா, "ஓடிப்போய் கணனனை அழைத்து வா — மந்திரம் போட்டு விஷத்தை இறக்கி விடுவான்!" என்று அவசரக் குரல் எழுப்பினர்.

"ஆமாம கண்ணனுச்சு-மண்ணுச்சு! அவன் வேண்டாம்-அவனுக்கு என்ன தெரியும? அவன் மந்திரத்தில மாங்காய் விழாது!" என்று சடக்கென்று பதில் சொல்லிவிடடுத் தொடாந்து அழுதாள் பூஞ்சோலை

பொன்மணிக்கோ வலியும் கடுகடுப்பும் தாங்க முடியவில்லை. உடம்பெல்லாம் வியர்த்துக கொட்டியது எதிரே அறவாழி நிற்பதைக்கூடப் பொருட்படுத்தாமல் கூச்சல் போட்டாள

அறவாழி, பூஞ்சோலையை நோக்கி "நான் வைத்தியம் செய்யட்டுமா இதற்கு?" என்று கேட்டான்

"தெரியுமா உங்களுக்கு? எப்படியாவது தேவலையாக்குங்க! கோடி புண்ணியமுண்டு!" என்று கெஞ்சினாள் பூஞ்சோலை

அவ்வளவு வேதனையிலும், வலியிலுமு, நரம்புகளைச் சூழல வைத்துத் தலையைக் கிறு கிறுக்க வைக்கும் விஷக் கொடுமையிலும் எப்படித்தான் புன்னகை வந்ததோ தெரியவில்லை பொன்மணிக்கு! காதலின் மகத்துவமே மகத்துவம்!

அறவாழி, கொல்லைப்பக்கம் போய் வேலியோரத்தில் அவசர அவசரமாக எதையோ தேடினான் பிறகு ஒரு செடியிலையிருந்து பத்துப் பதினைந்து பச்சிலைகளைப் பறித்துக்கொண்டு வீட்டுக்குள்ளே வந்தான். பறித்த பச்சிலைகளைத் தன் வாயிலே போட்டு மென்றான். பொன்மணியின் அருகே வந்து "காதை இந்தப்

பக்கம் திருப்பு!" என்றான் கருத்தையே அவன் பக்கம திருப்பி யிருந்த அவன், தேளை வாழ்த்திகொண்டு காதை திருப்பினான். பச்சிலையைக் குதப்பியிருக்கும வாயினுல அவள் காதிலே பலமாக ஊதினான் அவளுக்கு வலி வேறு— காதிலே ஊதப்பம் கூச்சம் வேறு!

"மந்திரம் ஒண்ணும் சொல்லாமல் பச்சிலைக் காற்றை ஊதினுல் மடடும் போதுமா?" என்று ஆச்சரியத்தோடும் அல்லற்படுத்தும் இருமலோடும கேட்டார் பொன்னையா!

"பச்சிலை விஷத்தை இறக்க! மநதிரம. பணத்தை கறக்க!" என்று சிரித்துகொண்டே பதில் சொன்னுன் அறவாழி

காதில் பச்சிலை காற்றை ஊத ஊத பொன்மணிக்கு விஷக் கொடுமை சிறிது சிறிதாகத் தணிவது தெரிந்தது. இன்னுங் கொஞ்சம் பச்சிலையை விரலில் வைத்துக் கடடினுன். தேளின் கொடுக்கு பட்ட விரலில் ஏற்பட்ட அந்தப் புதிய ஸ்பரிச உணாச்சி தேகமெங்கும் தென்றல் பட்டதுபோல பரவிற்று.

அரை மணி நேரத்திற்கு மேலாக சிகிச்சை தொடர்ந்து நடைபெற்றது. பொன்மணியின் மேனியில் தோன்றிய வியர்வை வெள்ளம் மறைந்து விட்டது. விஷக் கொடுமை முழுவதுமே தீர்ந்துவிட்டது. கடுகடுப்பே இலலை வேதனை முற்றிலும் அகன்று விட்டது. அதை அறவாழி நன்முகப் புரிந்து கொண்டான்.

ஆனலும் அவளை நோக்கிக் கேட்டான். "இப்போது எப்படி யிருக்கிறது?" என்று!

"அப்பப்பா! தாங்க முடியவில்லை...ஆ...அய்யோ!..." என்று துடித்தாள் அவள். அவள் துடித்த வேகத்தில் அவனும் காதில் ஊத ஆரம்பித்தான். அவசரத்திலும பரபரப்பிலும் அவன் உதடுகள் அவள் காதின் விளிம்பில் ஒருமுறை படடு விட்டன. இன்னெருமுறை கன்னத்தின் ஓரத்தையே தொட்டு விட்டன.

"இப்ப எப்படியம்மா இருக்கு?"— சிறிது நேரம் பொறுத்து தாயார் கேடடாள்.

எப்படியிருக்கு என்பதைத் தாயாரிடம் எவ்வாறு விவரிக்க முடியும்! "மணிக்கட்டு வரையில் கடுக்கிறதம்மா!" என்றாள்.

ஊகூல் சிகிச்சை தொடர்ந்து நடைபெற்றது

ஊதல் "சிகிச்சை"யென ஒருமுறை தனக்குத்தானே சொல்லிகொண்டான் அறவாழி. ஊதல் — ஊடல் — ஆகிவிட்டாவே? அறவாழிக்கே உடம்பில் புல்லரித்தது. அளவிலா ஆனந்தம்!

"இப்ப எது வரையில் கடுக்கிறது?"—தாய் கேட்டான்!

"விரல் வரையில்!" என்றாள் மகள்!

"ஊதினான்—ஊதினான்—விடாமல் ஊதினாள்!

"சரியாய்ப் போயிற்று?" என்றாள் பூஞ்சோலை. அதை மனதாக "ஆம் அம்மா!" என்றாள் பொன்மணி கடைசியில் அந்தத் தேளை அடிக்காமல் விட்டு விட்டோமே என்று தேடத் தொடங்கினாள்; பூஞ்சோலை!

"நல்ல வேளை தப்பியது—நானாக்கும் வந்து என்னைக் கொட்டாதா?" என ஆவலுடன் உள்ளத்துக்குள் முனகிக் கொண்டாள் பொன்மணி.

## 16

பூஞ்சோலையின் வீட்டிலிருந்து வெளியேறிய தீச்சட்டி சிங்காரத்திறகு நேரே எங்குபோவது என்று புரியவில்லை. தற்கொலை செய்துகொண்டமைனு, பழியைத் தன்மீது சுமத்திய தற்குக்காரணம் என்னவாயிருக்கும் என்ற கேள்வி வேறு அவனைக் குடைந்து கொண்டேயிருந்தது. எதற்கும் போலீஸ் அதிகாரிகளிடம் தானே நெரில்சென்று விபரம் அறிவதும், விஷயத்தை அவர்களுக்கு விளக்குவதும்தான் நல்லது என்று தீர்மானித்தான் நாம் நடப்பதை ஒழுங்காக நடந்துகொண்டால் அதற்குமேல் சரியா தவரு நடப்பது நடக்கட்டும் என்ற துணிவு ஏற்பட்டது அவனுக்கு.

போலீஸ் அதிகாரிகள் மைனுவின் சேலை முந்தானையில் முடிந்திருந்த கடிதத்தை அவனிடத்திலே காட்டினார்கள். கடிதத்தில அவள கையெழுத்திலலே. சிங்காரத்திற்கு சந்தேகம் எழுந்தது; கையெழுத்தில்லாமல் கடிதம் எழுதுவாளா என்று! அவனுக்கு அவளது எழுத்தும் அடையாளமபுரியாது. அதிகாரிகள் அவனேககேட்டனர். "இது அவளது கையெழுத்துத் தானே? என்று! சிங்காரம் நிலைமையைச் சிறிது விளககினுன். மைனுவைபபற்றிய விபரங்களைப் போலீசாருக்கு ஓரளவாவது தெரிவிகக வேண்டுமென்று விரும்பினுன். அந்த விளககம், தன்னை வீண் டழியிலிருந்து விடுவிக்காதா என்ற ஆவல் வேறு அவனுக்கு! மைனுவின் சவத்தைப் படம் பிடித்து வைத்திருந்தார்கள் போலீசார் அதைப் பார்த்துச் சிங்காரம் வடித்த கண்ணீர் அவர்களுக்கே ஆச்சரியத்தை உண்டாக்கியது. மைனுவின் கையெழுத்தை அடையாளம கண்டுபிடித்து. இது மைனுவின் கடிதமல லவென்று முடிவு கூறப்பட்டுவிட்டால் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம், மாசு நீங்குமே யென்று அவன் துடி துடித்தான். மைனுவுக்கு ஒரு கணவன் இருப்பதை அறிவித்து, பேரூர் பீதாம்பர பாகவதர் என்ற முகவரியையும் போலீசாருக்கு அவனே தந்தான் அவனே போலீசாரிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டதின் பேரில் ஒரு அதிகாரி, அவனுடன் பேருருகக்குச் சென்று பீதாம்பர பாகவதரிடம் விபரமறியப் புறப்பட்டார். எப்படியாவது தான் களங்கமற்றவன் என்பதை நிரூபித்தாக வேண்டுமே — அதனல் சிங்காரம் மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டான்.

●

திடுமெனப் போலீஸ் அதிகாரி, தன் வீட்டுக்கு வந்ததைக் கண்ட பீதாம்பரம் நடு நடுங்கிப் போனுர். பயப்பட வேண்டாம் என அவருக்கு ஆறுதல் கூறிவிட்டு, மைனுவின் போட்டோ படத்தை எடுத்துக் காட்டி, "இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?" என்று அதிகாரி கேட்டார்

"யாரது? என் மைனு போல இருக்கே!..... அய்யோ, இது என்ன படம்? மைனு செத்து விட்டாளா?" என்று அலறினுர் பாகவதர். சிங்காரம், விழி கலங்க நின்று கொண்டிருந்தான்.

"மைனு என்பது யார்? உங்களுக்கு என்ன உறவு?" — அதிகாரி கேட்டார்

"அவள் என் ....."

மனைவி" என்று கூற நினைத்தார் பாகவதர் ஆனால் வார்த்தை வெளிப்படவில்லை அவளை இனி மகளாகவே கருதுவதாக அவளிடமே வாக்களித்திருக்கிறாரே!

அதிகாரி விடவில்லை. "மைனு உங்கள் மனைவிதானே...?" என்றார்

பாகவதர் மறுக்கவில்லை. ஒத்துக்கொண்டு தலையை மட்டும் அசைத்தார்.

"மைனு, தற்கொலை செய்துகொண்டாள் ..." — அதிகாரி முடிப்பதற்குள் "எனக்கு முன்பே தெரியும்; அவளுக்கு அதைத் தவிர வேறு வழியில்லை என்னைப் போன்ற பாவிக்கு வாழ்க்கைப் பட்டால் ஒரு பெண்ணுக்கு இதுதான் முடிவாக இருக்கமுடியும்..." என்று கண்கலங்க, நாக்குழறப பேசினார் பாகவதர். அதோடு நிறுத்தவில்லை அவர் அதிகாரியிடம் தன் உள்ளத்தை அப்படியே திறந்து காட்டிவிட விரும்பினார் மைனுவுக்கும் தனக்கும் நடைபெற்ற திருமணம் — இருவரிடையே ஏற்பட்ட ஏமாற்றம்—ஏக்கம்- பிரிவு இறுதியாக மைனுவை சந்தித்தது— எல்லாவற்றையும் கூறிவிட்டு நடிகர் தேம்பித் தேம்பி அழுதார்.

சிங்காரத்தின் இருதயத்திலே நூற்றுக்கணக்கான சம்மட்டி யடிகள் விழுந்து கொண்டேயிருந்தன மைனு இந்த சோகக் கதையைத் தன்னிடம் சொன்னபோதே அவனைத் திருத்திக் கணவன் வீட்டுக்கு அனுப்பியிருக்க வேண்டியதல்லவா தன் னுடைய கடமை யென்று எண்ணி வேதனைப்பட்டான் ஆனால், அடுத்த கணம் அவனே தன்னைத் தேற்றிக் கொண்டான். மைனு கணவன் வீட்டில் என்ன சுகங் காணப் போகிறாள் ... அவள் இளமைக் கனவுகள பலித்திட அங்கென்ன மார்க்கமிருக் கிறது... ஆகவே தான் செய்ததும் ஒரு விதத்தில் சரியென்று தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான்.

ஒரு கணவன், தன்னுடைய மனைவியின் மனநிலைகளை இவ்வளவு அபபட்டமாக வாணிப்பதையும், தான் செய்த தவறு களைத் தானே உணர்ந்து அதற்காகக கலங்குவதையும் கண்ட அதிகாரி, உண்மையிலேயே மனமுருகினர்

"ஏன்? என் மனைவி தறகொலை செய்துகொண்டதற்காக என்மீது ஏதாவது நடிவடிக்கை எடுகக்ச் சட்டமிருக்கிறதா? இருந்தால் கொடுக்கிற தண்டனையை நான் ஏற்றுக் கொள் கிறேன். என கதையெலலாம் கேட டீர்கள் எனக்கும் என் மைனைவுக்கும் எவ்ளவு தொடர்பு என்பதையும் புரிந்து கொண் டீர்கள் அவள் என்னைவி டுத் தனிமையில் வேறு ஊரில் வாழ்ந்ததையும் அந்த ஊரிலை யாரைக் கேட்டாலும் சொலவார்கள். அதற்கு மேலும் ஏதாவது என்மீது குற்றப சுமத்த ழியிருந் தால் தாராளமாக அதை ஒத்துக்கொணடு அடங்கி நடக்க சித்த மாயிருக்கிறேன்" என்று பீதாயபரம் தழு தழுத்த குரலில் மொழிந்தார்.

"அப்படியெல்லாம் நீங்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை மைனு எழுதிய கடிதம் ஏதாவது உங்களிடம இருக் கிறதா? ஒரு கையெழுத்தை ஒபபிட்டு அடையாளம பார்ப்பதற் காக அது தேவைப்படுகிறது — இருந்தால் தர முடியுமா?" என்ருர் அதிகாரி

பீதாயபரம் சிறிது நேரம் யோசித்தார். பிறகு, ஏதோ நினைவு வர எழுந்து உள்ளே சென்ருர் வெகு நேரமாகியும் வெளியே வரவிலலை உள்ளே ஏதோ பபட்டி சட டிகள் உருளுகிற சப்தம் மாத்திரம் கேடடுக் கொண்டிருந்தது. 'மியாவ்' என்ற ஒலியோடு மைனுவின் பூனைக்குட டி தெருப்பகக்ம் வந்தது. அதைக்கணட சிங்காரம், வாரியெடுத்து மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான் மைனுவை அனைத்துக் கொளவது போலவே ஒரு உணர்ச்சி அவனுக்கு! அவன் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்ததை அதிகாரி கவனிகக்வில்லை. கண்ணை மூடிககொண்டான் தீச்சட்டி ஆட்டம் — வீட்டுத் திணணை யோரத்திலே மைனு — அந்த மோகனப் பார்வை — இரவு சந்திப்பு — இன்ப வெள்ளம் — அன்புப் பிரிவு — அடுக்

கடுக்காக உள்ளத் திரையில் படக் காட்சியைப்போல் மாறி மாறித் தோன்றின.

"இதோ இருக்கிறது—மைனாவின் கடிதம் அவள் எனக்கு எழுதிய முதல் கடிதமும் கடைசிக கடிதமும இதுதான்" என்று கூறிகொண்டே பீதாம்பரய வெளியே வந்தார்

"தன்னுடைய அழகான உருவப் படதததையும் வைத்து, மணந்து கொள்ளவேண்டும் என்ற விண்ணப்பதததையும் இணைத்து அவள் அனுப்பிய ஓலை இதுதான என் மைனு எனகு அன்போடு எழுதிய கடிதம் இதுதான்!"

பீதாம்பரம், மேலும் வேதனையோடு கடித்தை அதிகாரியிடம் கொடுததார். அதை, சிங்காரமும் ஆவலோடு பார்த்தான். பிரேதத்தின் சேலையிலிருந்து எடுக்கப்பட்ட கடிதத்தை அத்துடன் ஒபபிட்டுப் பார்த்தார், அதிகாரி இரண்டுக்கும் நிரம்ப முரணபாடு.

சிங்காரத்திற்கு ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது. "அப்பாடா! தப்பினேம் பெரிய பழியிலிருந்து!" எனத் தனக்குத் தானே கூறிகொணடான். ஆயினும் அவனுக்குத தறகொலைக் கான சரியான காரணம் புரியவில்லை பீதாமபரம கூறிய விளக்கத்திலிருந்து ஒரு வேளை அவர் அவளை இறுதியாகச் சந்தித்த பிறகு தற்கொலை முடிவை தேர்ந்தெடுத்திருபபாரோ என்ற சந்தேகம அவனைச் சூழ்ந்து கொண்டது அதிகாரியை ஊருக்கு அனுபபிவிடு எபபடியாவது பாகவதரிடம் அந்த உணமையை அறிந்து கொணடு வரவேணடுமென அவன் பரபரப்பு கொணடான்.

அதிகாரிக்கு சிங்காரத்தின் மீதிருந்த சந்தேகம் நீங்கி விட்ட தென்றுலும், மைனாவின் சேலையில அந்தக கடிதத்தை சிங்காரத்திறகு விநோதமாக முடிந்து வைத்தது யாராக இருக்குமென்ற ஐயப்பாடு பலமாக எழுந்தது அதைக்கண்டு பிடிக்க வேணடுமெ என்ற ஆவலும பிறந்தது சிங்காரமும, சிலரைச் சந்தேகப்பட்டானே தவிர, யாரையும் குறிப்பிடடுச் சொல்ல அவன் துணியவில்லை

பீதாம்பரம், மைனுவின் கடிதம் என்றென்றும் ஞாபகத்திற் காக இருக்க வேண்டுமென்று திருமபக் கேட்டார் அபோது, தீச்சுடி சிங்காரத்தைப்பற்றிக் கூறவேண்டிய அவசியம் அதிகாரிக்கு ஏற்பட்டது "சிங்காரத்தின்மீது போடப்பட்ட பழியை இந்தக் கடிதம்தான் மறுக்கிறது. அதனல் இது சில நாளைக்குப் போலீசாரிடம்தான் இருக்கவேண்டும் பிறகு உங்களிடம் திருப்பித் தந்து விடுகிறோம" என விளக்கினர்

'தீச்சுடி சிங்காரத்திற்கு தன்னைப் பற்றிய விபரங்கள் எப்படித் தெரியும்? அவன்மீது பழி எவ்வாறு சுமத்தப்பட்டது?' என்று பீதாமபரம் அறிய விரும்பினர் ஆனல அதிகாரியின் முன்னிலையில அவைகளை கேட்க விரும்பவில்லை சிங்காரமும் பீதாம்பரமும இருவரும் தனியே சந்தித்துப் பேச விரும்பினர் கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விபரம் தேவைப்பட்டது. அதனல் ஒருவரையறியாமல் ஒருவர், போலீஸ அதிகாரியை மட்டும் தனியே முதலில் அனுப்பிவிட வேண்டுமென்று தீர்மானித்தனர் ஆனல் அதிகாரி, சிங்காரம் தன்னேடு திருபபி ஊருக்கு வரவேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்தி, தற்கொலைக்கும் அவனுக்கும் எவ்வித சமபந்தமுமில்லை யென் பதை நிரூபிக்க வேண்டியதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டிய நிலையையும் எடுத்துக்கூறி அவனையும் அழைத்துக்கொண்டு பீதாமபரத்திடம் விடைபெற்றுப் புறப்பட் டார். சிங்காரம், அந்தப் பூனைக்குட்டியை மீண்டும் ஒரு முறை ஆவலாகத் தூக்கி முத்தமிட்டு பிறகு அதை பீதாமபரத்தின் கையில்லை கொடுத்துவிட்டுக் கிளமபினன்.

அண்ணன்மீது சுமத்தப்பட்டிருந்த பழி நீங்கிவிட்டதைக் கேட்டு கற்பூரம் மகிழ்ச்சிக கடலில் குதித்தாள ஊராரும் சிங்காரத்தைப பார்த்துத் தங்கள சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டனர். "பயந்தே விட்டேன் அண்ணு! உன்மீது போடப் பட்ட வீணபழியை நம்பி, எங்கே பொன்மணி உன்மீது தவறன அபிப்பிராயம் கொண்டு விடுகிறளோ என்று!"—கற்பூரம் மெது வாகப் பேச்சைத் தொடங்கினள்.

"பொன்மணியா? அவள் எந்தக் காலத்திலும் என்மீது தவறான அபிப்பிராயம் வைக்க மாட்டாளே!"—சிங்காரம் சிரித்துக் கொண்டே சொன்னான்.

"ஓ, அந்த அளவுக்கு வந்து விட்டதா? நான் இதற்குள் இவ்வளவு எதிர்பார்க்கலியே ..

"ஏன், எதிர்பார்க்கல்லே ... என்னை வீடுதேடி செஞ்சி வெளியே அனுப்பியதே அவளதானே!"

ஓகோகோகோ...அப்படியா சங்கதி? அண்ணே! எனக்கு அது கூட ஆச்சரியமில்லே—உன் மேல பிடிச்ச பேய்கூட பொன்மணி கிட்ட வந்ததும் ஓடிப்போய் விட்டதே அதான ஆச்சரியம!"

"எல்லாம் எனகுத் தெரியும் கற்பூரம்! எனக்கும பொன் மணிக்கும் முடிச்சுப் போட நீ ஆடிய நாடகம்தான அதுன்னு எனக்கு நலலாத் தெரியும்!"

"ஆ !"

"பயப்படாதே! அண்ணன் மேல உள்ள அன்பிலேதான் அப்படி செஞ்சியே தவிர, வேற தவறுக நீ செய்யவிலை! ஆனாலும் உன்னைப்போல இருக்கிற பெண்களுக்கு இந்த மாதிரி புத்தியெல்லாம் வரக்கூடாது!"

"நீ எதுவேண்டுமானாலும் என்னைத் திட்டு—கவலையில்லை, அந்த அழகான பச்சைக் கிளி, பொன்மணி, எங்க அண்ணனுக்குக் கிடைசசா அதுவே போதும்!"

"நானும் பொன்மணியும் ஒப்பந்தம் செய்துகொண்டோமே; உனக்குத் தெரியுமா?

"அடேடே.....ஒப்பந்தங்கூட ரகசியமாக ஆகிவிட்டதா? அடி கற்பூரம்! நீ கெட்டிக்காரிடி—கெட்டிகாரி! அண்ணே! என்ன ஒப்பந்தம் அது?"

"இனிமேல் எப்போதும் நான் அண்ணன்—பொன்மணி என் அன்புத் தங்கச்சி! இதுதான் ஒப்பந்தம்!"

"விளையாடாதே அண்ணே!"

"விளையாட்டு ஒண்ணுமில்லே கற்பூரம்! இனிமேல் இந்த சிங்காரத்துக்குக் கல்யாணமே கிடையாது! ஒரு வேளை, மைனு மறுபடியும் உயிர் பிழைச்சு வந்தாதான் குடும்ப வாழ்க்கை! இல்லாவிட்டால் இதே நிலைமைதான் எப்போதும்! உலகத்திலே பிறந்திருக்கிற பெண்கள் முழுவதும் எனக்குத் தாய்கள், தங்கைகள், அக்காள்கள்! ஒரே ஒருத்தி எனக்கு மனைவியாகப் பிறந்தால்—அவள் மாண்டுவிடடாள்! மாண்டுவிடடாள்!" இதைக் கூறிவிடு சிங்காரமி 'கோ' வென்று அழ ஆரம்பித்தான். கற்பூரம் எதுவும் பதில் பேச முடியாமல் நின்ருன்.

அப்போதுதான் அவன் வீட்டிலே நுழைந்த அடுத்ததெரு அகிலாண்டம், "அடி கற்பூரம்—கேட்டியா சேதியை! உங்க அண்ணன், போலீசுக்கு லஞ்சம் கொடுத்துக் குற்றத்திலிருந்து தப்பிச்சுக்கிட்டான்னு நம்ப சரகமாடிக் கனைனன் ஊரெல்லாம் பிரச்சாரம் செய்துகிட்டிருக்கிருன்!" என்று நீடடி முழக்கினுள்.

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததுதான் தாமதம் "ஆ! அவன் வாயை மூடிககிட்டு இருக்கமோட்டானை? பார்க்கிறேன் ஒரு கை, அவனை! ஒண்ணு இந்த ஊர்ல நான் ஒழியணும்—இல்லே அவன் ஒழியணும்!" என்று உறுமிக்கொண்டு பாய்ந்தான சிங்காரம்.

கற்பூரம், "அண்ணு, அண்ணு! நில்லு!" என்று பதை பதைப்போடு அவனைத் தடுத்தாள். அவன் கேட்பதாயில்லே, வீட்டு மூலைக்குஓடினுன். முரடடுக்கம்பு ஒன்றைகையிலே எடுத்துகொண்டான். திரும்பகமம் வந்தான். கற்பூரம். அவன் காலடியிலிழுந்து தடுத்துப் பார்த்தாள் தங்கையை உதறித் தள்ளிவிட்டுப் புலிபோல ஒலியெழுப்பித் தெருவுக்கு ஓடினுன் சிங்காரம்

## 17

சிங்காரத்தின்மீது எப்படியாவது பழிவந்து சேரவேண்டும்; அவனைப்போலீசார் மிரட்டவேண்டும்; அவன் தவிக்கவேண்டும்; ஊரார் சிங்காரத்தைப் பார்க்கும்போது வெறுப்பும் அலட்சியமும்

கொள்ளவேண்டும்; அதையெல்லாம் பார்த்து மகிழ்ச்சியடைய வேண்டும்—எனகோட்டை கடடிக்கொண்டிருந்த கண்ணனுக்கு சிங்காரம பழியிலிருந்து மீண்டசெய்தி மிகுந்த வருத்தத்தை அளித்ததில் ஆச்சரியமில்லை

பொதுவாக நேரில் கண்டு குலவிகொள்கிறவர்களே காணுத இடத்தில் கதைகள் கட்டிப்புறம் பேசுவது சமுதாயத்தில் புரையோடிவரும் வழக்கமாக இருந்துவரும் காலத்தில் ஜென்மப் பகையாளி என்று ஆகிவிட்ட கண்ணன், சிங்காரத்தைபபற்றி அவதூறுகள் பேசாமலிருப்பானு என்ன! செய்தி கேள்விப் படடதும் முதலில் பஞ்சாயத்தார் வீட்டுக்குத்தான் போனுன். கண்ணன் வந்தாலே ஏதாவது சிங்காரத்தோடு தகராறு இருக்கும் என்று முடிவுகட்டிகொண்டு பேசசை ஆரம்பிக்கப் பழக்கப்படுத்திக்கொண்ட பஞ்சாயத்தார் "வாப்பா கண்ணு! ஊர்ல ஒண்ணும் வம்பு, தும்பு இல்லியே?" என்று கேட்டார்.

"ஏனுங்க இல்லே? இருக்கிறவம்பும் பெரிசாகும்போல இருக்கு — போதாததுக்குப் புதவம்பு ஒண்ணு வரும்போல இருக்கு அநேகமாக அதுவும் வந்துட்டுது என்றே சொல்லாம்!"

"என்னப்பா திடீர்க்குண்டுகளாய்த் தூககிப போடுறே? கொஞ்சம விபரமாகவே சொல்லு!"

"போலீஸ்காரவுங்களுக்கு லஞ்சம் கொடுக்கிற அளவுக்கு சிங்காரம் பெரிய மனுஷனு ஆயிட்டான்!"

"என்னது? என்னது?"

"ஆமாங்க! அந்தப்பிணத்தோட முந்தானியிலே முடிஞ் சிருந்த கடுதாசுக்கும் சிங்காரத்துக்கும் சம்பந்தமிலலேன்னு போலீசிலே தீர்மானிசசுட்டாங்க! எப்படிங்க நியாயம் போற போக்கு?"

"சரி, விட்டுத்தள்ளு — நீ இதைப் பேசுவானேன் — அவன் சிங்காரம் ஆத்திரப்படுவானேன் — மேல மேல சண்டையை வளத்துகிட்டுப போகாதிங்க!"

"என்ன மோங்க — நான் வீண்வம்புக்குப் போகக்கூடா துன்னுதான் இருக்கேன் — ஆனு மனசுகேக்குதா? அநியாயம்

அக்ரமம் நடந்தா என்னுல் தாங்கமுடியிலே இதபாருங்க-பக்தி வழிநதோடுகிற நமபஊருக்கு ஒரு பாவிப்பயல் வாத்தியாரா வந்திருக்கான்..."

"யாரு—வாத்தியாரு வந்தாச்சா? இன்னும் வந்துசேர லேன்னு சொன்னுங்களே..."

"அவன் வந்துரெண்டு நாள்ஆச்சு! அவனுக்குப்பேரு அறவாழியாம்- ஒரே அதர்மம் பேசுகிருன் — நாஸ்திகப்பயல்! அவன் வரும்போதே அபசகுனம! ஆண்டவனுக்கே அவன் நம்ப ஊருககு வர்ரது பொறுக்கவில்லே. கோயில் காலையை விட்டு முட்டச்சொல்லியிருக்காரு — சரியான அடி வந்ததும் வராததுமாய்! அப்பறம் நம்பபூஞ்சோலை—அதுதான் ஊருக்கு ஒரு புண்ணியவதி யிருக்கே—அந்த அமமா வீட்லதானரெண்டு நாளாதங்கி உடம்புக்குப் பத்து போட்டுகிட்டு இருகிருளும்..."

"நீ சொல்றது வேடிக்கையாயிருககே-பிள்ளைகளுக்கு நல்ல வழியை சொல்லிக கொடுக்கவேண்டிய வாத்தயார், நாஸ்திகம் பேசுருரா?"

"ஆமாங்க—இப்ப வர்ரவாலிப வாத்தியார்கள் நூத்துக்குத் தொண்ணூறுபேர் அப்படிப்பட்ட ஆளுகளாயத்தான் வர்ராங்க... பகுத்தறிவாம பகுத்தறிவு...பள்ளிக்கூட மெல்லாம் பாழாகு துங்க!"

"ம...நம்ப வாத்தியாருபோக்கு எப்படியிருக்குன்னு கொஞ்சம் கொஞ்சமாப் பார்ப்போம்..."

"இதுக்கொல்லாம் காலம் கணிக்கக்கூடாதுங்க — மூளையி லேயே கிள்ளி எறியவேண்டிய சங்கதிங்க!"

"இப்பதானே என் காதிலே போட்டிருக்கிற சேதியை! நான்கவனிகக ஆரம்பிக்கிறேன்!"

கண்ணனுக்குக் கொஞ்சம் திருப்தி! சிரங்கைச் சொரிந்து விடும்போது ஏற்படுகிற இன்பத்தைப்பெற்ருன். சற்றுநேரத்திற் கெல்லாம். சிரங்கின் அரிப்பு மறைந்து எரிச்சல் கினம்புவது போல அவன் உள்ளத்திலும் வெறுப்பு நெருப்பென மூண்டது.

அறவாழிக்குத் தான் கொடுத்ததண்டனை போதாதென அவனுக்குப்பெரியகுறை. ஊர்முழுவதும் அறவாழியைப் பற்றிப பிரச்சாரம்செய்து ஊரிலுள்ள பகதி வெறியர்களுக்கும் அவனுக்கும் பெரிய போரட்டத்தை உண்டுபண்ணி ஆளுக்கு ஆள் அவனைத் துரத்தி அடிக்கவேண்டுமெனத் திட்டம போட்டான் தன் ஏற்பாடுகளுகுப் பிள்ளையார் சுழிபோடுவது போலப் பஞ்சாயத்தார் பரமசிவத்திடம் முதலில் படையெடுத்தான். தான்சொல்வதை அப்படியே எல்லோரும் நம்பிவிடுவார்கள் என்றுதான் அண்டப்புளுகன்கூட எணணிக்கொண்டு அழுகல் சரக்குகளை அவிழ்த்துக கொட்டுகிறான். அந்த நம்பிக்கையில் அவனுக்கு ஒரு பெரிய திருப்தி. அந்த திருப்பதியிலேயே வாழ்க்கைச் சக்கரம் சுழலுகிறது அவனுக்கு அதுபோலவே கண்ணனும் தான் சிங்காரத்தைப்பற்றிப் பரப்பும் கருத்துக்களை ஊரார் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள் என எண்ணிக்கொண்டிருப்பவன் — இப்போது அறவாழியையும் எதிரி என் இரண்டாக ஆக்கிக்கொணடு தன்வேலையைத் துவக்கினான். குடையைக் குழப்புவது பெரிய காரியமல்லவே — கேவலம்; எருமைமாடு கூடச் செய்துவிட்டுப் போய்விடும். குட்டையைச் சீர்செய்து, தெளிந்த நீரை — தூய்மையான நீரைக் கட்டிக் காத்து அனைவரும் பயனடையச் செய்வதுதானே சற்று சிரமமான காரியம் — இதில் முதல் செய்கையைத் தடுன்றிச் செய்வதில் மிகவும் கெட்டிக்காரன் கண்ணன்.

பஞ்சாயத்தார் காதில் இரண்டு பெரிய விஷயங்களைப் போட்டு விட்டோம்—மேலும் ஆகவேண்டியதைக் கவனிப்போம் என்ற உற்சாகததோடு கண்ணன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்! அப்போது பஞ்சாயத்தார் மகன் சிறுசீவி, "எப்போ! நம்ப ஊருக்கு வாத்தியார் வந்திருக்கார் அப்போ! அவரு உன்னைப் பாக்க வந்திருக்கார் அப்போ!" என்று கத்திக் கொண்டு உளளே ஓடிவந்தான் மகனைப் பார்த்த பஞ்சாயத்தார், அவன் முகமெல்லாம் கரிக்கோடுகள் இருப்பதைக் கண்டு, "இது என்னடா கர்மம்—முகமெல்லாம் கரி!" என்று முணு முணுத்துக் கொண்டார்.

"அந்த வாத்தியார்தான என் முகத்திலே கரி பூசி விட்டாரு —ரொபப நலலவருப்பா!" என்று குதித்தான் சிறுஞ்சீவி. வாத்தியார் வந்திருக்கிறார் என்றதும் ஆவலுடன் அவரைப் பார்கக எண்ணிய பஞ்சாயத்தாருக்கு மகன் முகத்தில் அவர்தான் கரிபூசினர் என்றதுமே ஒரு தடுமாற்றம ஏற்பட்டது.

"சரிதான்—ஆளு விஷமக்காரன்தான் போலிருக்கு வரச் சொல்லு! வரச்சொலலு!' என்று வரட்டுக் குரலில் உத்தர விட்டார். சிறஞ்சீவி குதித்துக்கொண்டு வெளியே ஓடினன்.

உடனே கண்ணன் 'பார்த்தீங்களா? இதோ கண்ணனுக்கு நேராகவே சாட்சி — நான் சொன்னதுக்கு என்னு — அவன் செஞ்சதுக்கு என்னு—ஊர்லே ஒரே ஒரு பெரிய மனுஷன் நீங்க, ஆலியில்லா ஊருக்கு இலுப்பைப்பூ மாதிரி! உங்க மகனுக்கிட்ட குறும்புத்தனம பண்ணி கரி பூசுகிற அளவுக்கு நெஞ்சழுத்தம் இருந்தா அவன் வேற என்னதான் செய்யமாட்டான்?" என்று தூபம் போட்டுவிடடு வெளியே கிளம்பினன். அவனுக்கு எதிரே உள்ளே நுழைந்த அறவாழி கண்ணனைப் பார்த்ததும் பார்க்காததுபோல பஞ்சாயத்தாருக்கு வணக்கம் தெரிவித்தான். பஞ்சாயத்தார் வெகு அலட்சியமாக அறவாழியைப் பாரத்துவிட்டு "யாருப்பா—நீதான் புதுசா வந்திருக்கிற வாத்தியாரோட மகனு?" என்று கேட்டார்.

அறவாழி சிரித்துக் கொண்டே, "இல்லிங்க பெரியவரே! நானேதான் ஆசிரியர் - பெயர் அறவாழி!" என்றன்.

"ஓகோ பள்ளிக்கூடத்திலே படிக்கிற புள்ளே மாதிரி இருக்கே — உனக்கு என்னு உலக அனுபவம் தெரியும்? நீ என்னுத்த சொல்லிக் கொடுத்து கிழிக்கப் போறே?" என்றார், கொஞ்சம் துடுக்காகப் பஞ்சாயத்தார்.

அறவாழியின் முகத்தில் அந்த வார்த்தைகள் எந்தவித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. கல்லோ-கம்போ-தூசியோ தும்போ விழுந்தால் தானே தொட்டியில் உள்ள நீர் கலங்கும். ஒரு பொருளின் நிழல்விழுவதால் நீர் கலங்குவதிலையல்லவா! பஞ்சாயத்தாரின் பேச்சை நீர்மேல்விழுந்த நிழலாகவே

கருதினுன் அறவாழி அவமானமான முறையில் பேசுகிருர்— ஆயினும் பொறுத்துக் கொளவோம் என்ற நினைப்புகூட வாரமலே அவன் அமைதியாக இருந்தான்.

"சின்னப் பிள்ளேங்கிறத்துக்கு சரியா, வந்ததும் வராதது மாக என்மகன் முகத்துலே கரியைபபூசிட்டியே!" என்று மேலும் தொடர்ந்தா பரமசிவம்.

"கரிபூசினேனு? நானு? இல்லவே இலேலியே — தம்பி முகத்திலே இருந்த கரிக்கோடுகளே அழிக்கப்பார்த்தேன்—தம்பி இணங்கவி- லே — இதோபாருங்கள்; அழித்ததில என்கைகூட கருப்பாகிவிடடது!' என்று கைகளே விரித்துக்காட்டினுன் அறவாழி.

"கையென்னுங்க; ஆளுமனசுகூட கருப்புதான்—பகுத் தறிவுக்காரருபாருங்க!' என்று கேலிச்சிரிப்பு சிரித்தான் கரக மாடிக கண்ணன்.

"நீ இன்னும் போகவில்லேயா?" என்ருர் பரமசிவம்.

"எப்படிங்க போகமனசுவரும்? பெரியமேதாவி வந்திருக் காரு—அவரைப் பார்த்துக்கிட்டே இருக்கலாம் போலிருக்கே!" என்று கூறிவிட்டு கண்ணன் அறவாழியை ஒருமுறை முறைத்து விட்டு. 'தூ!' எனசொல்லிக கொண்டே இரண்டாம் தடவை யாக வெளியே சென்ருன். அவன் வெளியில் சென்ற சில விநாடிகளுக்கெல்லாம் சிறுஞ்சீவி, "அப்போ! அப்பா!' என்று கூறிகொண்டு குதித்தோடிவந்து பஞ்சாயத்தாரைக் கட்டிப் பிடித்துக்கொண்டான். அவர் திணறினர். அந்த விசித்திரமான வீட்டைப்பார்க்க அறவாழிக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என்னடா நடந்தது?" என்ருர் தந்தை.

"அப்போ! தெருவிலே பெரியசண்டை வரப்போறது— யானேசேனை குதிரைப் படையெல்லாம் வரப்போறது! கப்பல் சண்டை—பீரங்கிச் சண்டை! அப்பறம சாவு-கொலே! அப்பறம் அமைதி—சுடுகாடு—மண்ணுங்கட்டி—அரோகரா—கோவிந்தா— கோவிந்தா!" இப்படி சிறுஞ்சீவி ஆட்டபாட்டத்தோடு கத்த ஆரம்பித்தான்.

"ஏதாவது நடக்காமல் இவன் உளறமாட்டான்" என்று கூறிக்கொண்டே பஞ்சாயத்தார் வெளியே வந்தார். வந்ததும் சிரஞ்சீவி சொன்னது உண்மையாகி விட்டதை நேரில் கண்டார். கப்பல, பீரங்கி, விமானங்கள் இல்லாவிட்டாலும், அதைவிடக் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்து கண்ணனும், சிங்காரமும் சொற் போர் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

"அடேய் அயோக்கியப் பதரே! என்னைப்பற்றி நீ ஏண்டா தப்புப் பிரச்சாரம் செய்யவேண்டும்?.. உனக்கும் எனக்கும்தான் செத்தால் வாழ்ந்தால்கூடக் கிடையாது — உறவு அற்றுப் போச்சு! என் பேச்சு பேசாவிட்டால் தூக்கம் வராதா உனக்கு?"

"என்னடா மிரட்டுகிறாய்? நெருப்பு மாதிரி வார்த்தைகளைக் கொட்டுறியே; என்ன சங்கதி? அதெல்லாம் உன் தீச்சட்டியோட வச்சுக்க!"

"தொழிலைப்பற்றிப் பேசாதேடா முண்டமே! என் பேச்சைப் பேசுனத்துக்கு மரியாதையா பதில் சொல்லு! இல்லேன்னு மன்னிப்புக் கேட்டுக்க — நான் இப்ப உன்னை சும்மா விடமாட்டேன்!"

"மன்னிப்பு கேட்கணுமா? அது இந்த ஜென்மத்திலே இல்லே! நீ என்ன மகா மனுஷன் — உனகிட்டே நான் மன்னிப்புக் கேட்க? ஊரிலே அக்ரமம் பண்றே — பாவம்; யாரோ அனுதைப் பெண்ணு — படுபாவிப் பயல் உன்னுலே தூக்கு மாட்டிகிட்டு உசிரை விட்டிருக்கு — அதைக் கண்டிச்சுப் பேசினா உனக்குக் கோபம் பொத்துக்கிட்டு வருதோ? வரட்டும்; வரட்டும் எனக்கொன்னும் பயமில்லே! என்ன வேணுமானாலும் செய்யி!"

கண்ணன் வரிந்து கட்டிக்கொண்டு, கை முஷ்டியை மடக்கி வாறு சண்டைக்குத் தயாராக நின்று கொண்டான். தெருமக்கள் கூடிவிட்டார்கள்.

பஞ்சாயத்தார் "டே டே டே! நிறுத்துங்க பேச்சை!" என்று கூச்சல் போட்டார்.

"ஆமாம்; பேச்சை நிறுத்திட்டு-சண்டையை ஆரம்பிங்கோ; சண்டை நடக்கட்டும்—உலகம் அழியட்டும்!" என்று கை கொட்டியவாறு கத்தினன் சிரஞ்சீவி

அவன் தலையில் ஓர் அறை கொடுத்துவிட்டுப் பஞ்சாயத்தார், சிங்காரத்தைப் போய்ப் பிடித்து நிறுத்தினர் சிங்காரம், பஞ்சாயத்தாருக்குப் பணிந்து நின்ற சமயத்தில், கண்ணன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சிங்காரத்தின் நெற்றியில் பலமாக ஒரு குத்து விட்டான் அதற்குமேல் சிங்காரம் பஞ்சாயத்தாரின் பிடிக்குள் இருக்க முடியவில்லை கையிலிருந்த கம்பைக் கீழே போட்டுவிட்டு கண்ணன்மீது பாய்ந்தான். இருவரிடையே சரமாரியாகக் குத்துக்கள் விழுந்தன. தெருவினரும் பஞ்சாயத்தாரும் குறுக்கிட்டு இருவரையும் திமிர விடாமல் அமுக்கிப் பிடித்துக் கொண்டனர். பஞ்சாயத்தார் வீட்டுக்கு நேரே நடை பெறும் ரகளையை அறவாழியும் வியப்போடு பார்த்துக்கொண்டு நின்றான்.

"நான் போலீசுக்கு லஞ்சம் கொடுத்தேன் — தப்பித்துக் கொண்டேன் என்று ஊரெல்லாம் தண்டோரா போடுகிறானே, இவனுல் நிருபிக்க முடியுமா?" என்று கத்தினன், உதட்டில் வழியும் ரத்தத்தைத் துடைத்துக்கொண்டே சிங்காரம்!

"லஞ்சம் மாத்திரமா கொடுத்தாய்? போலீஸ் அதற்கு மாத்திரம் வளையுமா? அழகான தங்கச்சியைக்கூட....."என்று கண்ணன் சொன்னதுதான் தாமதம்; சிங்காரத்திற்கு எங்கிருந்து அந்த வேகம் வந்ததோ தெரியாது; "என்ன சொன்னுய்?" என்று ஒரே பாய்ச்சல்; புலி பாய்வதுபோல! அவ்வளவுதான்; கண்ணன் தரையிலே சாய்ந்துவிட்டான். சிங்காரம் அவன் மார்பிலே உட்கார்ந்து கொண்டு மாறி மாறிக் குத்திக்கொண்டே யிருந்தான், அவன் ஆத்திரம் தணியுமட்டும்! தெருவினர்கூட சில விஞடிகள் அப்படியே அயர்ந்து போய் நின்றுவிட்டனர்.

கண்ணன், சிங்காரத்தின் தங்கையை பேச்சின் நடுவே மிகவும் கேவலமான வகையில் இழுத்துப் பேசியது யாருக்கும் பொறுக்கவில்லை. அதனுல் சிங்காரத்திற்கு சிறிது நேரம் அவன் கோபத்தைத் தணித்துக்கொள்ள சந்தர்ப்பம் அளித்து ஒதுங்கிக் கொண்டனர்.

கண்ணன், "அய்யோ அய்யோ" என்று அலறினான்.

அப்போது "ஓ" என்று கதறிக்கொண்டு அங்கே கற்பூரம் பிரவேசித்தாள். அண்ணனின் கையைப் பிடித்துக்கொண்டு "நிறுத்து! நிறுத்து!" என்று கூச்சலிட்டாள்

"தங்கச்சீ! நீ குறுக்கிடாதே போ!" என்று சீறிய சிங்காரம்—திடுமென ஏதோ உணர்ச்சி வசப்பட்டு "அய்யோ கற்பூரம்! உன்னைப்பற்றி...உன்னைப்பற்றி..." என்று சொல்ல வாயெடுத்து, சொல்ல முடியாமல் விம்மி அழுது மீண்டும் கண்ணன் முகத்தில் குத்துக்களைப் பொழியத் தொடங்கினான்.

"விடு அவரை! ஒன்றும் செய்யாதே! விடு! விடு!" என்று கத்தினாள் கற்பூரம். சிங்காரம் கேட்கவில்லை. கற்பூரம் அண்ணனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, கண்ணன்மீது அடிகள் விழாதபடி தடுத்தாள்.

"சிங்காரம், கற்பூரத்தை இழுத்துத் தள்ளி, கற்பூரம்! போ வீட்டுக்கு!" என்று உத்திரவிட்டான், கடுமையாக!

"முடியாது! நீ அவரை அடிக்கக்கூடாது!"

"அடிப்பதா? அவனைக் கொல்லுவேன்!"

"சொன்னால் கேள் அண்ணேன்—அவரை ஒன்றும் செய்யாதே—அவ்வளவுதான் செல்வேன்!"

"அவனுக்கு நீ வக்காலத்து வாங்குகிறாயே? ... ... போ, மரியாதையாக வீட்டுக்கு!"

"அப்படின்னா என்னையும் இங்கேயே கொல்லு!"

"கற்பூரம் நீ என்ன சொல்றே?"

"எதுக்காக மறைக்கணும்—நான் அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்—நான் அவருக்கு மனைவி ... எனக்குக் கணவனைவிட அண்ணன் பெரிசு இல்லே!"

"கற்பூரம் ஆத்திரமாகப் பேசி அழுதாள். சிங்காரத்தின் எல்லா நாடிகளும் ஒடுங்கிவிட்டன. பிரேதம் போலாகிவிட்டான். முகம் வெளுத்துவிட்டது. "ஆ!" என்ற ஒரே சப்தம்—அப்படியே

சிலேபோல நின்றுவிட்டான் கண்ணன் எழுந்தான். சிங்காரத்தைப் பலங்கொண்ட மட்டும் தாக்கினான். சிங்காரம் எதிர்த்து ஒரு அடி கூடத் திருப்பித் தரவில்லை. எல்லா அடிகளையும் மௌனமாக வாங்கிக்கொண்டான்.

கற்பூரம் குறுக்கே வந்து, "அண்ணே! அண்ணே!!" என்று கத்தினாள் அவளையும் இழுத்துத் தள்ளிவிட்டுக் கண்ணன் சிங்காரத்தை மேலும் தாக்கினான். சிங்காரம் அசையாமலே நின்றான்.

## 18

கண்ணனுக்கே கைவலியெடுத்து களைப்பு மேலிட்ட பிறகே அவன் சிங்காரத்தை அடிப்பதை நிறுத்தினான்.

சிங்காரத்தின் உதடுகளிலேயிருந்து ரத்தம்கசிந்து கொண்டிருந்தது. காதோரத்தில் ரத்தம் பெருகிவழிந்து கொண்டிருந்தது கன்னமும் நெற்றியும் மளமளவென உப்பி வீங்கி விட்டன. அசையாமல் நின்றுகொண்டிருந்த அவன் ஒரு சூடான பெருமூச்சால் பூமியில் தூசியைக் கிளப்பிவிட்டு சிறிது நகர்ந்தான். கால்களை ஒரு அடிகூட எடுத்துவைக்கமுடியவில்லை. ஆனால் அந்த சிரமத்தை அவன் அவ்வளவு பேருக்கும் நேராகக் காட்டிக்கொள்ள விருமபவில்லை. இதுபோன்ற நெருக்கடி அவனுக்கு எத்தனையோ முறை அவன் தொழிலில் ஏற்பட்டிருக்கிறது

தீச்சட்டி தூக்கி உற்சாகத்தோடு ஆடிக்கொண்டிருக்கும் போது கை கொப்பளித்துவிடும். அனல் பறக்கும். உடல்தகிக்கும். அப்போதெல்லாம் உறுதியோடு சமாளித்துப் பழக்கப் பட்டிருக்கிறான். அதனால் பல்லைக் கடித்துக்கொண்டு அதை விட்டு நடக்கத் தொடங்கினான். கூட்டத்தில் ஒரே அமைதி குடி கொண்டிருந்தது. கற்பூரம்மட்டும் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். எல்லோருமே அவளுக்கு ஆவேசம் வந்துவிடும் என்று எதிர்பார்த்தார்கள். நல்ல வேலையாக அப்படியொன்றும் ஆகவில்லை.

அமைதியைக் கிழித்துக்கொண்டு சிரஞ்சீவி போட்டசப்தம் மட்டும் பஞ்சாயத்தாரை ஆத்திரத்திற்காளாக்கியது. "மாலே கொண்டாங்க! மாலே கொண்டாங்க! கரகமாடிக் கண்ணனுக்கு ஜேபோடுங்க! செத்தபாம்பை அடிக்கும் வீராதி வீரனுக்கு ஜே! ஜே! ஜே!" என்று சிரஞ்சீவி கத்தி, அதற்குப் பரிசாகத் தந்தையிடம் ஒரு முரட்டுக்குட்டும் தலையில் பெற்றுக்கொண்டான்.

இத்தனை வேதனையான வேடிக்கைகளையும் பார்த்துக் கொண்டிருந்த அறவாழியின் உள்ளம் இயற்கையாகவே சிங்காரத்தின் பின்னல் ஊர்ந்திடத்தொடங்கியது. சிங்காரத்தின் உருவம் சித்தரிக்கிற குணுதிசயமும் அவன் நடவடிக்கை காட்டுகிற குணுதிசயமும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு அறவாழியைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டன. அந்த அதிசயமான மனிதனைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியது மிக அவசியமென அறவாழி முடிவுசெய்துகொண்டான்

சிங்காரம் தெருக்கோடி திரும்பும்வரையில் காத்திருந்து விட்டு, அவன் திரும்பியதும் அவனைப்பின் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தான். அவன் நேரில்கண்ட விசித்திரமான காட்சிக்கு எப்படியாவது விளக்கம் பெற்றுக வேண்டுமென்ற ஆசை அலை மோதிற்று. சிங்காரமோ தெருவில் எங்கும நின்றுனில்லை. எந்த வீட்டிலும் நுழைந்தானில்லை. எந்த இடத்திலும் உட்கார வும் இல்லை. மெதுவாக எங்கேயோ போய்கொண்டிருந்தான். அதேவேகத்தில் அறவாழி அவனைத் தொடரவேண்டியதாயிற்று.

சிங்காரத்தின் இருதயத்திலே எத்துணை பயங்கரமான சுழற்சிகள்! சூறுவாளிக்காற்றும்-இடியும் மின்னலும்-பெருமழையும் —பூகம்ப அதிர்ச்சியும்—இவைகளுக்கிடையே ஒரு தாயில்லாக குழந்தையும் போல—அவன் இருதயம் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது. சினுங்கி அழும்-'வீர், வீர்' எனக்கத்தும்-செறுமும் -'கோ' வெனக்கதறும்-இப்படிப் பலவித அழுகையுடன் அவன் உள்ளம் துடிதுடித்துத் தவித்தது. எந்தத் தங்கையை அவமானகரமான வார்த்தையால் அந்தக் கண்ணன் திட்டினானே; அதே தங்கை அதே கண்ணனிடம் தன்னை ஒப்படைத்து விடத் துணிந்து விட்டாள்—துணிந்தது மட்டுமல்ல; அண்ணனைவிட

அந்த அயோக்கியனே பெரியவன் என்று வாதிடவும் தைரியம் பெற்றுவிட்டாள்—அதோடு மட்டுமல்ல; அவனை அண்ணன் அடிக்கக்கூடாது-ஆனால், அண்ணனை அவன் மனம்போனவாறு தாக்கிக் கொல்லவும் செய்யலாம் என்ற அளவுக்குத் தன் மனசைக் கல்லாகவும் மாற்றி சகோதர பாசத்திற்குச் சீட்டுக் கொடுத்து அனுப்பிவிட்டாள். இந்த அநியாயமான மாறுதலை-திடீர் அதிர்ச்சியைத் தீச்சட்டி சிங்காரத்தால் எப்படித் தாங்கிக் கொள்ள இயலும்.

தங்கை கற்பூரத்தைக் கண்போல் காத்தவன் தந்தையும், தாயும் தங்கள் மரணத்தறுவாயில் அவனிடம் பெற்ற வாக்குறுதியே கற்பூரத்திற்கு எந்தவித மனத்தாங்கலும் வராமல் அவள் இஷ்டப்படி நடத்தவேண்டும் என்பதுதான் அதோடு இன்னொரு சத்தியத்தையும் அவன் தந்தை அவனிடம் ரகசியமாகப் பெற்றிருக்கிறார் அதை நினைக்க நினைக்க அவன் நெஞ்சு நெருப்பு பட்ட புண்போல ஆயிற்று. மார்பகத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டான்—அவனையும் மீறி இதயமும் சுவாசப்பைகளும் காற்று தாங்காத பலூனைப்போல வெடித்துவிடும் பீதி அவனுக்கு!

கடைசியில், எங்கேதான் போய் அவனது கால்கள் நிற்கப் போகின்றன? இந்தக் கேள்வியோடு அறவாழி பின்சென்று கொண்டிருந்தான்.

அதோ அந்த வேப்பமரம்! சிங்காரம் அங்கேபோய் நின்றான். அறவாழி, தூர இருந்து கவனித்தான். சிங்காரம், தலையை நிமிர்த்தி மரத்தின் கிளையை அண்ணாந்து பார்த்தான். அவ்வளவுதான் — அவன் இருதயத்தை அழுத்திக் கொண்டிருந்த வேதனை யத்தனையும் மண்ணுக கடியிலிருந்து எரிதழல் கிளம்பி வழி வதுபோல் பொங்கி வழியத் துவங்கிற்று. "அய்யோ, மைனு!" என்று முகத்தில் அறைந்து கொண்டு 'கோ' எனக் கதறி அழுதான். சிறு பிள்ளையைப் போல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். வேப்பமரத்தின் அடிபாகத்தைத் தழுவிக் கொண்டு புலம்பினான்.

அறவாழிக்கு மேலும் வியப்பு ஏற்பட்டதே தவிர, விளக்கம் கிடைக்கவில்லை. அருகே சென்று தீர விசாரித்துவிடுவது என்று தீர்மானித்தான். மரத்தடிக்கு வந்தான். தன்னை யறியாமல் அழுதுகொண்டிருந்த சிங்காரத்திற்குத் தன் தோள்படடையில் யாரோ கைவைத்திருப்பது வெகு நேரத்திற்குப் பின்பே தெரிந்தது யார் என்று அறிய திரும்பிப் பார்க்கக்கூட அவன் நினைக்கவில்லை போலும்— கண்ணனுகத்தான் இருக்கும் என அவனே முடிவு கட்டிக் கொண்டானே — அல்லது அப்படி ஒரு திடீர் உணர்ச்சி அவனை நினைவிழக்கச் செய்ததோ — எப்படியோ 'சரே'லெனத் திரும்பியதும் திரும்பாததுமாக அறவாழியின் கன்னத்தில் ஒரு குத்து விட்டான் அறவாழி. வலி தாங்க முடியாமல் தன் முகத்தைப் பொத்திக்கொண்டு பின்னுக்கு நகர்ந் தான். அதன் பிறகுதான் சிங்காரத்திற்குத் தான் தவறு செய்து விட்டோமென்பது புரிந்தது கண்ணனுல் புண்ணுகிவிட்ட அவன் உடல் வேதனைகூட அப்போது மறந்து போயிற்று. அறவாழி யின் முகத்தைப் பார்த்துக்கொண்டே நின்ருன். அந்தப் பார்வையில் மன்னிப்புக் கேட்கும் ஜாடையிருப்பதை அறவாழி உணராமல இல்லை.

"கவலைப்படாதே! எனக்கும் இந்த ஊருக்கும் சரியான பொருத்தம்— வந்ததும் வராததுமாக சரியான வரவேற்பு! நல்ல அடி—உதை—குத்து—முட்டு—பிரமாதமான உபசரிப்பு! மகத் தான உபசரிப்பு!" என்று சிரித்துக்கொண்டான் அறவாழி

சிங்காரத்திற்கு முழு விபரமும் புரியா விட்டாலும், அறவாழி தன்மீது கோபப்படவில்லை யென்பதை அவன் பேச்சிலே காணப்பட்ட மென்மையிலும் இனிமையிலும் தெரிந்துகொண் டான். அருகே சென்று அவன் கன்னத்தைத் தடவி கொடுத்து, "தவறுதலாக ஆத்திரத்தில் அடித்து விட்டேன்—மன்னிச்சிடு தம்பி!" என்று தழு தழுத்த குரலில் கெஞ்சினுன்.

அறவாழிக்கு விழிகளில் நீர் துளிர்த்தது. அவனும் சிங்கா ரத்தைத் தழுவியவாறு, வேப்பமரத்து மேடையில் அமர்ந்தான்.

"நீ ஒரு அதிசயமான மனிதன்!" என்ருன் அறவாழி.

"என்னைவிட நீதான் தம்பி பெரிய மனுஷன்!" என்று அவனைத் தட்டிக் கொடுத்தான் சிங்காரம்.

"ஆமாம்—இதுவரையில் நடந்த விநோதமான நிகழ்ச்சிகளுக்கு நான் காரணம் புரிந்து கொள்ளலாமா?" என்று ஆவலாகக் கேட்டான் அறவாழி. சிங்காரத்தால் பேச முடியவில்லை. ஆனாலும் தன் இருதயச் சுமையை யாரிடமாவது உடனடியாக இறக்கிவிட வேண்டும் போலிருந்தது.

"அந்தத் தெருவிலே நடந்த சண்டை ஆரம்பத்திலேயிருந்து நீ என்னைக் கவனித்து வருகிறாயா?"

"ஆமாம் — உன்னைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன் ஆனால் இன்று நான் கண்ட உன் புதுமையான போக்கிற்கு என்னால் காரணம் கண்டு பிடிக்கவே முடியவில்லை."

"என்னைக் கை வலி யெடுக்கிறவரை தாக்கினானே அவன் தான் கதகமாடிக கண்ணன்!"

"அவனை எனக்கு நன்றாகத் தெரியும் — அவனைப் பற்றிய கதையை நானே உனக்குச் சொல்வேன்."

"அவன் எனக்குப் பரம விரோதி — என் தாயின் கர்ப்பத்தில் நான் ஜனிப்பதற்கு முன்பே அவன் வீட்டுக்கும் என் வீட்டுக்கும் செத்தால் வாழ்ந்தால் கிடையாது என்கிற தூரத்துக்கு அவ்வளவு பகை! அவனைப்போயி என் தக்கச்சி கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாளாம் — நியாயமா இது? நீயே சொல்!"

"காதலுக்குக் கண்ணில்லை யென்பார்கள்!"

"மூளையில்லை — அன்பில்லை — பாசமில்லை — மானமில்லை — ரோஷமில்லை — என்றெல்லாம் கூடச் சொல்லலாம் போலிருக்கிறது என் தங்கச்சியின் காதலைப் பார்க்கும்போது!"

"என்றைக்கோ பகைமை என்பதற்காக அதை எப்போதும் வளர்த்துக் கொண்டிருக்கலாமா? புலியும் பசுவும்கூட ஒரு குளத்தில் ஒரே துறையில் தண்ணீர் குடித்தன என்று புராணங்களில் படிக்கிறோம்!"

"அட சும்மா இரப்பா! அது நொண்டிப் புலியா இருக்கும்— அதனுல்தான் பாயமுடியாம ஆகியிருக்கும் — இல்லேன்னு மாட்டு ரத்தத்தைக் குடிச்சுத்தான் அது தாகம் தணிச்சிகிட்டுப் போயிருக்கும்!"

"அய்யய்யோ ...! நீ என்னு புராணத்தையே மறுத்துப் பேசுகிருயே — அது பாபமாயிற்றே?"

"புராணமாவது முண்ணுங் கட்டியாவது — நான் எல்லாத் தையும் மறுப்பேன் — எல்லாத்தையும் கொண்டாடுவேன் — என் மனசுக்கு எது சரின்று படுதோ அதைச் சொல்றதுக்குப் பயப்படவே மாட்டேன். நான் ஒண்ணும் பகதனும் அல்ல!— பரம பாதகனும் அல்ல! என் பிழைப்பே ஊரை ஏமாத்துற பிழைப்பு! ஆனலும் அந்தப் பிழைப்பு சரியா நடக்கிறதுக்குக் காரணம் கடவுள் அருள்தான்; காளிகாதேவி கருணைதான் அப்படிங்கிறத்திலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை யிருக்கு. தெய்வம் கொஞ்சம்தான் வழிகாட்டும் அதுக்குமேல நடந்துபோக வேண்டியது நம்ப கடமைதானே! ஊருக்குப் பாதை காட்டுகிற கைகாட்டி மரம், கூடவே துணைக்கு வருமா என்ன?"

சிங்காரம் தன் மனதில் உள்ளதை யெல்லாம் கோர்வை யில்லாமல் அடுசுகிக்கொண்டு வருவதைக கண்ட அறவாழி, அவனேடு மேலும் பேச்சுக் கொடுத்து அவனேப்பற்றிய விபரங் களே அறியலாம என்ற நம்பிக்கை கொண்டான்

"உன் வாழ்க்கையிலே கடவுள், கைகாட்டி மரமாகவாவது நின்று வழிகாட்டி யிருக்கிருர். ஆனல் பல அணுதைகளுக்கு அவர் தூக்கு மரமாக உருவமெடுத்து மேல் உலகத்திற்குதான் வழிகாட்டியிருக்கிருர் என்று நான் நினேக்கிறேன்!"

—அறவாழி, சாவதானமாக இதைச் சொன்னதும் சிங்காரம் குழப்ப மடைந்தான். 'தூக்குமரம்' என்ற வார்த்தை காதில் விழுந்ததும் மைனுவும், அவள் தொங்கிய மரக்கிளையும் தான் அவன் மனக்கண் முன்னே தோன்றி மறைந்தன. "மைனு!" என்று ஒருமுறை சொல்லிக் கொண்டான்.

"யார் அந்த மைனு? அவளுக்கும் இந்த மரத்திற்கும் என்ன தொடர்பு? ஒருவேளை அவள்...?" என்று கேள்வியைச் சற்று நீட்டினுன் அறவாழி.

"அவளா? அவள்தான் என் வாழ்கையிலே முதலாவதாகவும் கடைசியாகவும் பிரவேசித்து என்னை இப்படி நாசமாக்கி விட்டவள்!" என்று மறுபடியும் அழுதிட ஆரம்பித்தான் சிங்காரம்

"அவள் உன் காதலியா?"

"அதைப்பற்றிப்பேசி என்னை இன்னும் அழவிடாதே—நான் போகிறேன்; முடிந்தால் நான்கொஞ்சம் வெறியடங்கியிருக்கும் போது என்னை சந்திக்கவா! இப்போது என்ன பேசுகிறேன் என்று எனக்கே புரியவில்லை. முக்கியமாக என்வாய்பேசுவது என்காதிலே விழுவில்லையென்றுல் பாரேன்!" என்று சொல்லி விட்டு எழுந்தான் சிங்காரம்.

வேதனைக் களமாகிவிட்ட உள்ளம், அவனை நிலைதடுமாறச் செய்கிறது எனப்புரிந்துகொண்ட அறவாழி, அவனைப் போக விடாமல் தடுத்துப் பக்கத்திலேயே உட்காரவைத்துக் கொண்டான்.

"மைனுவைப்பற்றி நான் ஏதும் கேட்கவில்லை! அதைக் கேட்டால் தானே உனக்கு விசாரம்பிடிக்கிறது, அதிமாக! உன் தங்கையைக் கண்ணன் திருமணம்செய்து கொள்வதில் உனக் கென்னதடை? அதைச்செல்!" எனக்கேள்வி போட்டான்.

"அவன் எப்படிப்பட்டவன் என்பதை நீயே நேரில்கண்டாய் எந்த அண்ணனுவது இதுபோன்ற ஒரு ஈனப்பிறவிக்கு-கடைந் தெடுத்த அயோகியனுக்குத் தன்தங்கையைக் கொடுத்து அவளைப் பாழாக்குவானு?"—சிங்காரம் பதில் இது!

"சரி-உன்னையும் மீறி அவள், அவனையே திருமணம்செய்து கொண்டால்?"

"தங்கையின் மனங்கோணுமல் நடக்கவேண்டும் என்ற தகப்பனுரின் வாக்குறுதியைக் காப்பாற்றுவேன்—ஆனல் இதன்

மூலம் அவருக்களித்த இன்னொரு உறுதியைக் காற்றிலே பறக்க விட்டுவிடுவேன் அப்படி பறக்கவிட்ட பிறகு எனக்கேன் வாழ்க்கை? நானும் என் மைனுவுடன் போய்விடுவேன்!"

"அப்படியென்ன தந்தையிடம் உறுதி அளித்திருக்கிறாய்?"

"கரகமாடிக் கண்ணனின் அப்பன்—அது தவறினுல் அவன் மகனுகிய இந்தக் கண்ணன்—இருவரில் ஒருவரைக் கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கழுதையில் ஏற்றி ஊர்வலம் விடவேண்டும் என்பதே அந்த உறுதி! அவன் அப்பன் தப்பித்துக்கொண்டான் —மகனுக்காவது அந்த விழாவை நடத்தலாம் என்று வெகு நாளாக நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதற் குள்ளேதான் இப்படி வந்துவிட்டது!"

"ஏ அப்பா—எவ்வளவு பயரங்கரமான சபதம்! ஏன் இப்படி யொரு உறுதியெடுக்கவேண்டும்? அப்படி என்ன அவர்கள் குற்றம் செய்துவிட்டார்கள்?"

"அய்யோ—அந்தக் குற்றத்தைச் சொல்வதற்கே நாக்கு கூசுகிறது. தயவுசெய்து என்னைக்கேட்டுத் தொந்திரவு பண்ணவேண்டாம்!"

அறவாழிக்கு ஆவல் அடங்கவில்லை. எடுத்துக்கொண்டிருக் கிறசபதமோ பயங்கரமாயிருக்கிறது; பழிவாங்கவேண்டுமென்ற உணர்ச்சியோ கொந்தளித்துக் கிளம்புகிறது; அதற்கான காரணத்தைமட்டும் புரிந்துகொள்ளாமல் போய்விடமுடியுமா என்ன? தானே அதிகமாக அறிமுகமாகாதவன். மேலும் வற்புறுத்திக்கேட்கவும் சிறிது பயமாக இருந்தது இருந்தாலும் உடனே தளர்ந்துவிடாமல், "நான் உனக்குப் பழக்கப்பட்டவன் அல்ல; என்றாலும் ஏதோ ஒரு உணர்வு, உன்பால் இழுத்து விட்டது. உன்கதையைக் கேட்கவேண்டும் போலிருக்கிறது. உன்கண்ணீருக்குக் காரணம் அறியவேண்டும்போல் உள்ளம் துடிக்கிறது. உன்சபதத்தை நினைத்தாலே நடுக்கம் பிறக்கிறது? ஆனுல் சபதம்எழுந்த விதத்தைமட்டும்கூற மறுக்கிறாய்! இது நியாயமல்ல — என்னை நீ நம்பலாம் — தயவுசெய்து சொல்லு— எவ்வளவு பெரிய ரகசியமாக இருந்தாலும் அதைக் காப்பாற்று

வது என்பொறுப்பு!" என்று சொல்லால் அவனை வளைத்து விடத் தீர்மானித்தான் அறவாழி.

சிங்காரம் வாய்திறக்கவில்லை. அறவாழியையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். தூரத்திலிருந்து புல்லாங் குழலின் ஒலி காற்றிலேமிதந்து வந்துகொண்டிருந்தது.

## 19

"அதோ கேட்கிறதே புல்லாங்குழல் சப்தம்—காதில் விழு கிறதா? அது யார் தெரியுமா? அவன்தான் இந்த ஊருக்குக் கிருஷ்ணன்—சுருளிமலை யென்று ஒரு சுட்டிப் பயல்!" என்றான் சிங்காரம்.

"பார்த்தேன் — பார்த்தேன் — தெரியும் அந்தப் பையனை!" என்று அறவாழி கூறிக்கொண்டே தன்முகத்தில் ஏற்பட்ட உணர்ச்சியின் சாயலை சிங்காரம் பார்த்துவிடுவானே எனப் பயந்து வேறுபக்கம் திரும்பிக்கொண்டான்.

சுருளிமலை யென்றதும் அவனுக்குப் பொன்மணியின் உருவமே விழிகளில் சதிராடத் தொடங்கியது. அவள் வீட்டுக்குச் செல்ல நேரிடடதும்—அவள்தாய் தந்தஅன்பு உபசரணைகளுக்கு ஆளானதும் — அனைத்தையும்விட தேள் கொட்டிய நிகழ்ச்சியில் பெற்ற ஆனந்தமும் — அவன் உள்ளத்தை இனிப்பாக்கிக் கொணடிருந்தன.

அந்த இன்பநினைவுகளைக் கலைக்கும் வகையில் சிங்காரம் பேச்சுக கொடுத்தான்.

"இந்தப் பயலுக்கு ஒரு அக்காள் உண்டு — அழகான பொண்ணு! ரொம்பநல்லகுணம்! பொன்மணியென்றால் பொன் மணியேதான்! பெயருக்கேத்த பெண்ணு! அவளை எனக்குக் கல்யாணம்செய்து வைக்கணுமனு என்தங்கச்சிக்கு அபாரமான ஆசை!"

அறவாழியின் முகம் திடீரெனமாறியது. அந்த மாற்றம் வெளியேதெரியாமல் இருக்க அவன்பெரிதும் கஷ்டப்பட்டான். மிக அலட்சியமாக அந்தச்சேதியைக் கவனிப்பதுபோல் பாசாங்கு செய்தான்.

"ஏன்; நல்ல பெண் என்றுல் தங்கச்சி இஷ்டப்படி கல்யாணம் செய்து கொள்வது தானே?" என்று கேட்டும் வைத்தான். அதைக் கேட்கும் போது அவனுக்கு ஒரே பயம். எங்கே, 'ஆமாம்; அப்படித்தான் நினைத்திருக்கிறேன்' என்று அவன் சொலி விட்டால் என்ன செய்வது என்று!

நல்ல வேளையாக சிங்காரம் அப்படி யொன்றும் அதிர்ச்சி தரக்கூடிய பதிலை அளிக்கவில்லை. "என்னுடைய இரண்டாவது தங்கச்சியாகப் பொன்மணியை நான் நினைத்திருக்கிறேன்!"

சிங்காரத்தின் இருதயத்து ஆழத்திலேயிருந்து அந்த வார்த்தைகள் பீறிட்டு வெளிக் கிளம்பியதை அறவாழி உணர்ந்து கொண்டான். ஆயினும் தன் உணர்ச்சிகளை அங்கே கொட்டி விடாமல் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான்.

"என் தங்கச்சி கற்பூரம் இருக்கிறதே, அது அசல் கற்பூரமேதான்! நெருப்புக் குச்சி பட்டால் பற்றிக் கொள்ளும். 'திடீர், திடீர்' என ஆவேசம் வந்து ஆடும். அதைப் போலவே கோபமும் வந்துவிடும் — ஒருவர்மீது அன்பும் வந்து விடும்! பாரேன்; ஒரு வேடிக்கையை! அந்தப் பொன்மணி மீது ஒரு கண்ணை வைத்துக் கொண்டு சுற்றி அலைகிறான் அந்தக் கண்ணன். இந்த விஷயம் புரியாமல் அவன் மீது ஆசை கொண்டு திரிகிறாள் என் தங்கை!. அவளோட காதலன் தேடியலையும் பெண்ணை என் மனைவியாகப் போகிறாளாம். என் குடும்பத்துப் பரம விரோதியை அவள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாளாம் — எப்படியப்பா என் தங்கச்சியின் பைத்தியக்காரத் தனம்!" என சிங்காரம் ஆயாசத்தோடு கேட்டான், அறவாழியைப் பார்த்து.

அறவாழிக்கோ, கண்ணன் தன் காதல் விவகாரத்திலும் பகைவனுகவத்து முளைத்து விடுவான் போலிருக்கிறதே யென்ற பயம் தோன்றியது.

இருப்பினும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக. பெண்வீட்டாருக்குக் கண்ணனுக்குக் கொடுக்க சம்மதம் தானே?" என்று ஆவலாக வினவினான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே அப்படியே அவுங்க சம்மதித் தாலும் நான் அந்தக் கல்யாணம் நடக்க விடமாட்டேன். கண்ணனுக்குப் பெண்ணு கொடுக்கிறதைவிட கடலில் கட்டி மிதக்க விடலாம்!"

இப்படி ஆவேசமாகப் பேசினான் சிங்காரம். தன்னுயிர்ப் பொருளைக் காப்பாற்றிடும் வேலைக்கு இன்னொரு துணை வலுவில் கிடைத்திருப்பதை யெண்ணி யெண்ணி மகிழ்ந்தான் அறவாழி, அவனுக்கு சிங்காரத்திடம் இன்னும் நெருங்கி உறவு கொள்ள வேண்டும் போலிருந்தது.

"நாமிருவரும் ஒருநாள் பழக்கத்திலேயே எவ்வளவோ பேசிவிட்டோம். ஆனால்—உன் மனசிலேஉள்ள சுமை எதையும் என்னிடம் இறக்கவில்லே!" என்று வருத்தப்பட்டுக் கொண்டான்.

"கவலைகள் துன்பங்கள் எல்லாம் என்னோடு இருக்கட்டும். நீவேற அதையெல்லாம்கேட்டு வீண மனதை அலட்டிக் கொள்ளாதே தம்பீ!"—சிங்காரம் கண்களை மூடிக்கொண்டான். அவன் விழிகள் குளமாகியிருப்பதை மறைக்கவே அப்படிச் செய்தான். ஆனால் அவன் நினைத்தற்கு மாருக, இமைகள் வழியே நீர்த் துளிகள் முட்டி மோதிக்கொண்டு அவன் கன்னத்தை நனைத்தான்.

"பழி தீர்த்துக் கொள்ள சமயம் பார்த்திருக்கிறேன். அந்தப் பாதகன் குடும்பத்திலேயே சம்பந்தம் செய்யத் துடிக் கிருளே; என் தங்கை! அய்யோ! அப்பா! நான் என்ன செய்வேன்? உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை எப்படி நிறைவேற்றுவேன்?" என்று வாய்விட்டு அலறினான் சிங்காரம். முகத்தைக் கையால் பொத்திக்கொண்டு மீண்டும் அழத் தொடங்கினான்.

"மகனே! நீ செய்து முடிப்பாய் என்று நம்பித்தான் நான் மகிழ்ச்சியோடு சாகிறேன். அந்தக் குடும்பம் பூண்டற்றுப் போய் விட வேண்டும். குழந்தை குட்டிகள் இருக்கிறார்களே என்று கொஞ்சமும் கருணை காட்டாதே! ஊரார் தூற்றுவார்களே யென்று ஒரு கணமும் தயங்காதே! சட்டம் தடுக்குமே யென்று

அஞ்சாதே! ஊரையும் ஊராளும் சட்டத்தையும் விடப் பெரியது தந்தையின் சொல் என்பதை மறவாதே! நீ செய்யப் போகும் காரியத்தை யார் தடுத்தாலும் கவலைப்படாதே! மசனே! நானே ஒரு சமயம் மீண்டும் உயிர்பெற்று வந்து உன்னைத் தடுத் தால்கூட நீ கேட்கக்கூடாது! கரும்புள்ளி! செம்புள்ளி! கழுதை ஊர்வலம்! அந்தக் காட்சியை ஊரார் காணவேண்டும் அதன் விளைவு கொலையாக இருந்தாலும் சரி; எதுவாக இருந் தாலும் சரி; உனக்கு ஆயுள் தண்டனை—தூக்குமேடையே கிடைத்தாலும் சரி; கொஞ்சமும் அஞ்சாதே! உயிருக்குத் துணிந்து என் கட்டளையை நிறைவேற்று! இதோ, உன் தங்கை—இவளுக்கு நீ வாழ்வளித்தால் போதும். உன் வாழ் வைப்பற்றிக் கவலைப் படாதே! இவள் வயிற்றில் தோன்றும் குலக்கொடி நம் குடும்பப் பெருமையை பல தலைமுறைகளுக்கு நீட்டிச் சொல்லட்டும்—நீ அதை யெண்ணி உன் வாழ்க்கையை என் கட்டளைக்காக தியாகம் செய்து விடு! எந்த அப்பனும் தன் மகனுக்கு இப்படியொரு கடுமையான தண்டனையைத் தரமாட் டான்—ஆனால் நான் தருகிறேன்! காரணமில்லாமல் தரவில்லை யடா என் கண்ணே! பழி யுணர்ச்சிக்குக் காரணம் முழுதும் உனக்குக் தெரியும்! எந்தப் பாவியும் செய்யத் துணியாத படுபாதகச் செயலைச் செய்த குடும்பம் அது! அந்தக் குடும்பம் வாழலாமா? அதற்குப் பெருமை இருக்கலாமா? ஊரார் அந்தக் குடும்பத்தின ஊழலைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கலாமா? ஆகவே பழிவாங்கு மகனே—பழி வாங்கு! பதிலுக்குப் பதில்! பழிக்குப் பழி! என் கட்டளையை நிறைவேற்றிவிட்டு அதன் பிறகு என் சமாதியை வந்துபார்! அதுவரையில் என் சாமாதியை நீ தூர இருந்தும் பார்க்கக்கூடாது! எந்தக் காரணத் திற்காகவாவது நீ என் கட்டளையை நிறைவேற்றுமற் போய் விட்டால்..... நீ என் சமாதி மீது காரி உமிழ்ந்ததாக அர்த்தம்! என் சமாதிக்கு எருக்கம்பூ மாலை சாத்தியதாக அர்த்தம்!"

—மரணப்படுக்கையில் தந்தை கூறிய அந்த வாசகங்கள், சிங்காரத்தை அணு அணுவாகக் கூறு போட்டுச் சித்திரவதை செய்தன. தந்தையின் கட்டளையை நிறைவேற்றுமற் போய் விட்டால்...?

அய்யோ ... தந்தை சொன்ன கடுமையான மொழிகளை நினைக்கவே நெஞ்சு தகிக்கிறதே யெனப் புலம்பி அழுதான்

"யார் தடுத்தாலும் கவலைப்படாதே!"—இது தந்தையின் வீர உரை!

இப்போது தடுத்து நிற்பதோ தங்கை! அந்தத் தங்கைக்கோ நல்வாழ்வு அளிக்கவேண்டுமென்று தந்தையின் கட்டளை!

இந்த விசித்திரமான சூழ்நிலையை அவன்யாரிடம் சொல்லிப் பரிகாரம் தேடமுடியுமா? கடற்கரையில், ஒரு அலைகொண்டு வந்து எறிந்தபொருளை, இன்னொரு பெரியஅலைவந்து இழுத்துக் கொண்டுபோய், மீண்டும் ஒரு அலை அதைக் கரைக்குக் கொணர்ந்து, மற்றொரு அலை கடலுக்கே எடுத்தேகி—இப்படி மாறி மாறி ஆட்டிவைப்பதுபோல், தந்தையின் உத்தரவு அவனை அலைக்கழித்தது. மனப்போராட்டத்தில் மிகுந்த அவஸ்தைப் படுகிறான் என்பதை அறிந்த அறவாழி, மேலும் அவனை வேதனைப்படுத்த விரும்பாமல் மௌனமாகவே உட்கார்ந் திருந்தான்.

"ஏன்தம்பி மௌனமாகிவிட்டாய்! ஏதாவது பேசேன்" என்று கன்னத்தைத் துடைத்துக் கொண்டான் சிங்காரம்.

"இப்போது ஒன்றும் பேசவேண்டாம். நாளைக்கு எனக்குப் பள்ளிக்கூடம் விடுமுறை. எங்கும் போகாமல் பள்ளியிலேயே உட்கார்ந்திருக்கிறேன். தயவு செய்து நீ அங்கு வந்தால்....." என இழுத்தான் அறவாழி.

"கட்டாயம் வருகிறேன்—அவசியம் வருகிறேன்!" என எழுந்தான் சிங்காரம்.

எழுந்தவன் மரத்தைப் பார்த்து "மைனு" என ஒருமுறை கூறினான். பிறகு, அதைவிட்டு நகரத் தொடங்கினான்.

அறவாழி அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு ஆழ்ந்த சிந்தனையுடன் திரும்பினான். கோயில் காளைமீது சவாரி செய்துகொண்டு சுருளிமலை வந்தான். அவனைக் கண்டதும் அறவாழிக்கு ஏதோ ஒரு விவரிக்க வொண்ணா மகிழ்ச்சிப் பெருக்கு!

"என்னு தபீ சுகமா? வீடடிலே அப்பா, அமமா, எல்லோரும் சுகமா?" எனக் ம்கடடான.

"அக்காள் சுகமா?" என்று கேட்கவிலை அப்பா அம்மா வைப்பற்றிக் கேடடதெல்லாம் வெறும் உபசாரத்திற்கு' 'அககாள் சுகமா?" என்றுதான் அவன் கேடடிருக்க வேண்டும அதைக் கேட்க அவனுக்கே ஒரு வெட்கம்!

சுருளிமலையோ சாதாரணமாகப் பதில் சொன்னான்; "அக்காள் உட்பட அனைவரும் சுகம்!" என்று!

சுருளிமலை இந்தப் பதிலை வேண்டுமென்றே — கிண்டலாகவோ சொல்லவிலை. அக்காள் இருப்பதை அறவாழி மறந்து விட்டானே யென்று கருதி அவன் அப்படி விடையளித்தான். ஆனால் அறவாளிகு அது சுருககென்று தைத்தது. குற்றமுள்ள நெஞசல்லவா?

ஆமாம் — எப்ப பார்த்தாலும் கோயில் கானா — புல்லாங் குழல் இப்படி-ஊர்சுற்றுகிறாயே; படிப்பதில் உனக்கு ஆசையே கிடையாதா?"—அறவாழியின் கேளவிக்கு சுருளிமலை பதில் கூறவில்லை. அறவாழி தொடர்ந்தான்.

"நான் சொல்வதைக் கேள். ஒரு நானைக்குக் கொஞ்ச நேரமாவது படி!"

பதில் இல்லை. சிரித்தான் சுருளிமலை.

"நானையிலே யிருந்து படிக்கிறாயா?"

இதற்கும் மௌனம்தான்!

"படிப்பு என்றால் உனக்குப் பிடிக்காதா?"

சுருளிமலை அறவாழியையே உற்றுப் பார்த்தான்.

"இளமையில் கல் என்பது முதுமொழி தம்பி! இந்த வயதிலே படித்தால்தான் நல்லது. ஐந்தில் வளையாதது பிறகு ஐம்பதில் வளையாது! எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும். படிப்பு மிகவும் அவசியம்! மிகவும் அவசியம்! சொல்வது புரிகிறதா தம்பி!"

சுருளிமலை இன்னும் உன்னிப்பாக அறவாழியைக் கவனித்தான் பதில் கூறவில்லை.

"என்ன விழிக்கிறாய்? நான் சொல்வது ஏதோ பைத்தியக்காரன் உளறல்போல இருக்கிறதா? அப்படியெல்லாம் நினைக்காதே படித்தால்தான் உலக விஷயம் தெரியும். அறிவு பிரகாசமடையும் அலட்சியமாய் நினைக்காதே தம்பி!"

இப்போது சுருளிமலை, கலகலவென நகைத்தான். அறவாழிக்கு ஒன்றும் புரியவில்லை திகைத்தான். பின் சுருளிமலை தன் மடியிலிருந்து ஒரு காகிதச் சுருளை யெடுத்து அறவாழியிடம் கொடுத்தான். அறவாழி, அதை ஆவலாக வாங்கிப் பிரித்துப் பார்த்தான். அவனே உடனடியாக அந்த ஊரைவிட்டு வேறு ஊர் பளனிக்கூடத்திற்கு மாற்றவேண்டுமென்று ஊர்மக்கள் கையெழுத்திட்ட மகஜர் அது!

மகஜரைப் பார்த்ததும் அறவாழி அவ்வளவு திடுக்கிடவில்லை. அவன் எதிர்பார்த்ததுதான். அதில் எழுதப்பட்டிருந்த குற்றச் சாட்டுக்களும் அவனைக் கலக்கிடவில்லை. ஐந்தாறு தாள்கள் இணைக்கப்பட்டிருந்த அந்த மகஜரில் முதல் தாளில் அறவாழியை மாற்றிட வேண்டும் என்பதற்கான காரணங்கள் எழுதப்பட்டிருந்தன. மரியாதை யில்லாதவன்; ஊராரிடம் ஆணவமாக நடந்து கொள்கிறான்; எல்லாம் தெரிந்தவனைப்போல் மற்றவர்களுக்குப் புத்தி சொல்கிறான்; ஒழுங்காகப் பாடம் நடத்துவதிலை; பிள்ளைகளை உருப்பட வைக்கமாட்டான்; வீண் கதை பேசுவதே பள்ளிக்கூடத்தில் வேலை — இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளை முதல் பக்கம் முழுதும் நிரப்பிவிட்டு, அடுத்த தாள்களில் ஊர்மக்கள் தங்கள் கையெழுத்துக்களை நிரப்பியிருந்தார்கள்.

பஞ்சாயத்தார் பரமசிவத்தின் கையெழுத்தே முதல் கையெழுத்து! யார் யார் கையொப்பமிட்டிருக்கிறார்கள் என்று வரிசையாகப் பார்த்து வந்த அறவாழி, இதயத்தில் சம்மட்டியடி விழுந்ததுபோல் திடுக்கிட்டான்—வேதனைப்பட்டான்.

காரணம்; கையெழுத்து வரிசையின் கடைசியில் பொன்மணியின் கையெழுத்தும் இருந்தது!

## 20

அறவாழியினுல் அதற்கு மேல் எதுவும் பேச முடியவில்லை. எந்த ஒரு சந்திப்பை நினைத்து நினைத்து நெஞ்சத்தைத் தேனில் நனைத்துக் கொண்டிருந்தானே; அந்தச் சந்திப்பு கடைசியில் பெரும் ஏமாற்றத்தில் முடிந்தது கண்டு திகைத்தான். அவன் படித்த எத்தனையோ காதல் கதைகளில் கூட இதுபோன்ற ஒரு அதிர்ச்சி தரக்கூடிய சம்பவத்தை அவன் கண்டதில்லை. காதலர் களைத் தங்கள் பேனு முனையினுல் சிருஷ்டிக்கும் எழுத்தாளர்கள் கூட கொஞ்ச நாளைக்கு அவர்களை கொஞ்சி மகிழ வைத்து, அதற்குப்பிறகே இருவரிடையே பிளவு—பிரிவு—ஏக்கம்-வேதனை —வாட்டம்—இதுபோன்ற நிகழ்ச்சிகளை நுழைய விடுவார்கள்.

அறவாழியோ, தன் கதை முற்றிலும் புதிதாக அமைந்து விட்டதை எண்ணிச் சோர்ந்து போனுன் ஊரை விட்டுத் தன்னை மாற்ற வேண்டுமென்பதற்கு அவள் ஏன் ஒப்பமளிக்க வேண்டும்? புரியாத புதிராக இருந்தது! ஒருவேளை, முதல் நாள் சந்திப்பில் விதைக்கப்பட்ட காதல் சிறிது சிறிதாக செடியாகி, மரமாகி தன் தலையிலேயே விழுந்து விடும் என்று பயந்து முனையிலேயே கிள்ளி யெறியலாம் என்று அந்த முடிவுக்கு வந்திருப்பாளோ? அறவாழிக்கு பதில் சொல்ல அங்கே யார் இருக்கிறார்கள் ஆலோசனையோ, ஆறுதலோ கூறுவதற்கு யாருமில்லை. சுருளிமலை மட்டுமேயிருந்தான். அவனும் அறவாழியின் உள்ளத்துப் புகைச்சலை உணர்ந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை

மகஜர் தாளை சுருளிமலையிடம் கொடுத்து விட்டு அறவாழி அந்த இடத்தை விட்டு வேகமாகப் புறப்பட்டான்.

"என்ன ஒண்ணும் சொல்லாமல் போறீங்க?" என்று கூவினுன் சுருளிமலை.

"சொல்ல என்னப்பா இருக்கிறது? உங்க வீடே எனக்கு எதிரியென்றுல் இனிமேல் இந்த ஊரில் எனக்கென்ன வேலை?" என்று கூறிவிட்டு அறவாழி அதை விட்டகன்றுன்.

சுருளிமலை அறவாழி போவதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு தன் வாகனத்தைத் தட்டிவிட்டான். நேரே பஞ்சாயத்தார் பரமசிவம் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். திண்ணையில் உட்கார்ந்திருந்த பஞ்சாயத்தார், "என்னப்பா! உங்க வீட்டுக் கையெழுத்து வாங்கிட்டு வந்துட்டியா?" என்று கேட்டதும், சுருளிமலை மகஜரை அவரிடம் நீட்டினான்.

அவர் அதைப் பார்த்துவிட்டு "பேஷ்! பேஷ்! அநேகமாக எல்லோருடைய கையெழுத்தும் ஆகிவிட்டது! இதை நீயே கொண்டுபோய் தபாலில் சேர்த்துவிடவேண்டும்!" என்று சுருளி மலைக்கு உத்தரவு போட்டார்.

காகமாடிக்கண்ணனும், பஞ்சாயத்தார் பரமசிவமும் அறவாழியின் மீதுள்ள வெறுப்பை உடனடியாகக் காட்டிக் கொண்டு, அவசர அவசரமாகக் ஊராரிடம் கோள் மூட்டி, மகஜரைத் தயாரித்து விட்டனர். சிங்காரம் — கண்ணன் இருவரின் சண்டையைக் காண வந்தவர்களிடமே அநேகமாக மகஜருக்கு வேண்டிய கையொப்பங்களை வாங்கிச் சேர்த்துவிட்டார்கள். மிச்சமுள்ள ஒன்றிரண்டு கையெழுத்துக்களும் சுருளிமலை பொறுப்பில் விடப்பட்டன. அவன்னும் தன் வீட்டார் உட்பட மிச்சக் கையெழுத்துக்களைப் பெற்று வந்து தந்து விட்டான். மகஜரை அனுப்பவேண்டிய பொறுப்பும் அவன் தலையிலேயே கட்டப்பட்டதும் மிக்க மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

அவனுக்கு நன்றாகத் தெரியும், மகஜர் அனுப்பப்பட்டதும் அறவாழிக்குத் தொந்தரவு ஏற்படும் என்று! இந்தச் செய்தியை வீட்டிலே சொல்லி கையெழுத்து வாங்கச் சென்றபோது அவன் தாய் ஒத்துக்கொள்ளவில்லை. தமக்கையும் இஷ்டப்படவில்லை. அப்போது சுருளிமலை தந்த விளக்கத்தால் அவர்கள் இறுதியில் இணங்கிவந்தார்கள்.

ஊரில் முக்கால்வாசிப்பேர் கையெழுத்துப் போட்டு விட்டார்கள். இனி, பூஞ்சோலைவீட்டார் போட்டாலும் போடாவிட்டாலும் நடக்கப்போகிறகாரியம் நடக்கத்தான் போகிறது. போடாமல் கெட்டபெயர் வாங்கிக்கொள்வதைவிட்டு, நல்லபெயர்

வாங்கிக்கொள்ளலாமே-என்பதே அவன்வாதம். அதன் பிறகும் கவலைப்பட்ட தாயாரிடமும் அக்காளிடமும அவன் சொன்ன சமாதானம்; எப்படியும் அந்த மகஜா தபாலில் அனுப்பப் படாமல் இங்கேயே தன்னுல் கிழித்தெறியப்படும என்பதாகும.

மகஜர் போய்ச்சேராதவழிக்கு சுருளிமலை தந்திரம்கையாளு கிருன் எனக்கண்ட பொன்மணிகுத் தாங்கமுடியாத பூரிப்பு! பஞ்சாயத்தாரையும் மற்றவர்களையும் ஏமாற்றி மகஜரை அவன் கைக்குவரும்படிச் செய்துகொண்டானே தபபி என்று அவனை வாழ்த்தினுள் பொன்மணி. அந்த வாழ்த்துதலைப்பெறறு பஞ்சாயத்தார் வீட்டுக்குப் போகிற வழியிலேதான் அவன் அறவாழியைச் சந்தித்தான். இதுவரையில அவன் எணணியபடி எல்லாமே நடந்துவிட்டது. இறுதியாக மகஜரை நாசடபத்தி விட்டு. தபாலில் சேர்த்துவிட்டதாகப் பொய்யும் சொல்லலாமென்ற துணிவும் அவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

ஆனல் பாபம்; அவனும அவன் வாகனமும் பஞ்சாயத்தார் வீட்டைவிட்டு கொஞ்சதூரம் நகருவதறகுள், அவசர அவசரமாகக் கரகமாடிக கண்ணன் அங்கே வந்து சேர்ந்தான்.

அவேன, சுருளிமலையிடமுள்ள அந்த மகஜரைக் கொடுக்கும் படியும, தானே கொண்டுபோய் அஞ்சலில சேர்த்துவிடுவ தாகவும் கூறினுன். பஞ்சாயத்தாரும் அதை ஒத்துக்கொண்டார். சுருளிமலை எதுவும் பேசமுடியவில்லை. தானே எடுத்துச்சென்று அதைக் குபபையில் போட்டுவிட எண்ணியிருந்தான் ஆனல் நிலைமை மாறிவிட்டது. மகஜர் கரகமாடிக கண்ணன் கையில்ல சிகிவிட்டது அன்றைக்கே அது தபாலிலும் அனுப்பப்பட்டது.

இந்தச் செய்தியை பொன்மணியிடம் சுருளிமலை கூறியதும் அவளுக்கு நெருப்பிலே விழுந்ததுபோல இருந்தது தன் கையெழுத்தையும அறவாழி பார்த்துவிடடான் என்பதைத் தமபி மூலமே தெரிந்துகொண்டு மிக மிக வருந்தினுள்.

எப்படியாவது அறவாழியைப்பார்த்து, தான் செய்த தவறுதலுக்கு மன்னிப்பு கேடகவேண்டுமென முடிவுசெய்தாள். இரண்டு மூன்றுநாட்கள் முயன்ருள்; முடியவில்லை. இரண்டு

நாட்கள் கழிந்தபின் ஒருநாள், சந்தைக்குச் செல்வதற்காகப் பானைசட்டிகளைக் கூடையில் அடுக்கிகொண்டு புறப்பட்டாள் பொன்மணி!

போகும் வழியிலேதான் அந்தப்பள்ளிக்கூடம்! எவ்வளவோ நாட்கள் அதன் வழியே சந்தைகுச் சென்றிருக்கிறாள் அன்று மட்டும் ஏதோ ஒரு காந்தசக்தி அவளை இழுத்து நிறுத்தியது!

காலைநேரம் ... பள்ளியின் சுற்றுப்புறங்களைச் சீர்படுத்தும் வேலையில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தார்கள் அவர்கள் எப்போது அந்த இடத்தைவிட்டு நகருவது? பிறகு, அவர்களுக்குத் தெரியாமல் எப்போது அறவாழியைப்போய் சந்திப்பது? இப்படி எண்ணமிட்டவாறு அங்குமிங்கும் நடை பழகிக்கொண்டிருந்தாள். அறவாழியைச் சந்திககாமல் போவதில்லையென்ற திடமான முடிவுடனேயே சமயத்தை எதிர் பார்த்திருந்தாள்.

ஒரு ஆண்மகனுடன் வலியச்சென்று பேசுவது கிராமீயப் பெண்களின் இலக்கணத்திற்கு ஒத்ததல்ல என்பதை அவள் புரிந்துகொண்டிருந்தாலும். தன்னைப்பற்றி அறவாழி கொண் டிருக்கும் தவறான எண்ணத்தை எப்படியாவது மாற்றியாக வேண்டும்—அதற்கு ஒரேவழி அவனைநேடு மனம்விட்டுப் பேசுவது தான் என்பதைப் போராடிகொண்டிருக்கும் அவள் உள்ளத் திற்கு அறிவுறுத்தினாள். பள்ளிக்கூடத்து ஒதுக்குப்புற அறை யொன்றில் அறவாழி நடமாடுவது அவளுக்குத் தெரிந்தது. ஆனால், அவன் அவளைக் கவனிக்கவில்லை. பொன்மணி அந்த அறையைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தாள். அறவாழி வேறு புறம் திரும்பி உட்கார்ந்துகொண்டான். காலையில எழுந் ததும் வழக்கமாக அவன் பாடுகிற,

"உலகமிசை உணர்வெழுப்பி உதித்துவிட்டான்
செங்கதிரோன்"

என்ற பாடலை உறக்கப் பாடினான். பாடியவன் தனக்குத்தானே வெட்கப்பட்டுக்கொண்டான்.

காரணம்; அவன் பாடிய சமயத்தில் கிழக்கே செங்கதிர் இல்லை. வானம் இருண்டிருந்தது. மழை வருவதற்கான அறி குறிகள் காணப்பட்டன. சிறிது நேரத்தில் மழைத் தூறலும் விழ ஆரம்பித்தது அறவாழி ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு மறுபடியும் உட்கார்ந்து கொண்டு திருக்குறளை எடுத்துப் புறட்ட ஆரமபித்தான்.

எத்தனையோ நாட்கள் அவன் அதிகாலையில் திருக்குறளை எடுத்துப் படித்திருக்கிறான் அப்போதெல்லாம் நூலைப் புறட்டும் போது அறத்துப்பால் — பொருட்பால் — என்ற பகுதிகள் கண்ணிலே படும் அன்றைக்கு என்னவோ சொல்லிவைத்தது போல மூன்றாவது பாலதான் அவன் கண்ணெதிரே வந்து நின்றது.

"காலையும் பகலெலாம் போதாகி
மாலையாய் இந்த நோய்!"

— நூலை மூடி தடவை திருப்பித்திருப்பி அந்தக் குறளை மனம் பாடம் செய்வதுபோல படித்தான் அடுத்தக் குறளில் அவன் விழி தாவிற்று தெருவில் தொழிலாளிகள் பணித் தூறலைக் கண்டதும் அவசர அவசரமாக வேலையை முடித்து விட்டுக் கரை யேறியது பொன்பணிக்கு சௌகரியமாகப் போயிற்று பானை சட்டிகளைக் கீழே இறக்கி வைத்தாள். மெல்ல மெல்ல நடந்து அறைப்பாகம் போனாள். பொன்னியின் வருகை கண்ட அறவாழிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"யார்? நீயா?" என்றான் ஆச்சரியத்தோடு!

"ஆமாம்! என்றாள் அவள நாணத்தோடு!

"தடால்..."

"படபட!' என்று தெருவிலே ஒலி கேட்டது பானைகள் உடைந்த சப்தம்தான அது! பொன்மணி, தெருப்பக்கம் ஓடிப் போய்ப் பார்த்தாள

வாசலில நின்ற தென்னை மரத்திலையிருந்து ஒரு பெரிய மட்டை கீழே விழுந்து, பானைகளை சுக்கல் சுக்கலாக உடைத் தெறிந்துவிட்டது.

## 21

சிதறிவிட பானைகளைப் பார்த்தவாறு அப்படியே அயர்ந்துப்போய் திகைத்து அசைவற்று நின்றாள் பொன்மணி.

அறவாழியும் வாயிற் புறம் வந்து அனுதாபத்தோடு அவளை உற்று நோக்கினான். "ச்சு! ச்சு! எல்லாப பானைகளுமே உடைந்துவிட்டதா?"... அவனது அனுதாப வார்த்தைகள் அவளுக்கு ஆறுதலாக இருந்தன. எத்தனை பானைகள் உடைந்தால் என்ன; தன்னைபபற்றி அறவாழியின் உள்ளத்திலே முதல் நாள் தோன்றிய அன்பு அரும்பு உடைந்துவிடாமல் இருந்தால் அதுவே போதுமே அவளுக்கு!

ஆனால் ஒன்று உடைந்து சிதறிக் கிடக்கும் பானைகளோடு கள் ஒவ்வொன்றிலும் அவளது தந்தை பொன்னையாவின் உருவமும், தாயார் பூஞ்சோலையின் வடிவமும் வேதனைக் கோலத்தில் விழிநீர் பெருகியவாறு நிற்பதுபோல் தோன்றியது அவளுக்கு.

அந்தப் பானைகளை அன்று சந்தையில் விற்றுவரக் கூடிய காசில்தான் அப்பாவுக்கு வைத்தியர் சொன்ன மிக முக்கியமான மருந்தொன்றைத் தயாரிக்க முடியும் அதை நினைத்ததும் அவளையும் மீறி ஆற்றெனப் பெருகிவிட்டது கண்ணீர்.

தாயார் மாலையில் தன் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருப்பாளே — தந்தையும் அந்தப் போகும் மருந்தை நினைத்து நோயைப்பற்றிய கவலையிலிருந்து ஒரு சிறிது விடுபட்டிருப்பாரே — ஆனால் இப்போது எல்லாம் தூள தூளாகி விட்டதே — என் செய்வது — என ஏங்கினாள் அந்த ஏந்திழை. உடற் கட்டுக்கு மேலும் அழகு தருவதுபோல் ஒரு ஆழ்ந்த பெருமூச்சு! அப்பப்பா — அதிலே எத்துணை சோகம்! வேதனை! விசாரம்! பெருமூச்சின் அர்த்தததை கணிக்க முடியவில்லை அறவாழிக்கு! பானைகளை உடைத்து விட்டதற்கு வீட்டில் திட்டுவார்கள் என்றுபயப்படும் ஒரு பொன்மணி யென்ற அவன் கருதினான்.

"பய படாதே! வீட்டில் திட்டுவார்கள் என்றுதானே இவ்வளவு கவலை?..."

பொன்மணி பதில் கூறவில்லை. உடைந்த பாகைகளைப் பொறுக்கிச் சேர்த்தாள் ஒரே ஒரு அழகிய வேலைப்பாடமைந்த சிறு கலயம் மட்டும் மிஞ்சியிருந்தது. அதைக கையில் எடுத்தாள். அறவாழி, அருகே சென்று கலயத்தை வாங்க முயன்றான். அவளும் அவனிடம் அதைக் கொடுத்துவிட்டாள.

"ஆகா! கொம்ப அழகான கலயம் என்ன அருமையான வேலைப்பாடு! இதை நான் எடுத்துக் கொள்கிறேன் — இதன் விலை என்ன?"

பொன்மணி பதில் பேசவில்லை. அறவாழி அவளைப் பேச வைக்க முயன்றான.

"எவ்வளவோ பாகைகளும் உடைந்துவிட்டதே — இவைகளின் விலை எனன இருக்கும்?" என்று கேட்டான் அறவாழி.

"சந்தையில் விற்றால் எழெட்டு ரூபாய் கிடைக்கும்." என்றாள் பொன்மணி.

"அ கிருக்கடடும் — இந்தக் கலயத்தின் விலையைச் சொல்லு!" என்றான அவன்.

இல்லை! இதற்கு நான் ஒரு விலை நிச்சயித்திருக்கிறேன். இதன் விலை பத்துரூபாய்! இன்னும்கூட அதிகவிலை மதிப்பிடலாம் — ஆனால் ஆரம்ப ஆசிரியன் ஒருவன் போடக்கூடிய மதிப்பு இந்த நிலையில இவ்வளவுதான்!"

"உங்களுக்கு எதற்காக இந்த மண்கலயம்?"

"இது தெரியாதா உனக்கு? எனக்கு ஆசிரியர் வேலை 'அசோகரா' ஆகப்போகிறது! அதன் பிறகு இதை வைத்துக் கொண்டுதானே நாலுவீடு சோறுகளு சிவங்கிச் சாப்பிடணும் — அதுக்காகத்தான் எனது வருங்காலத தொழிலுக்கு அடிபபடையான இந்தக கருவியை வாங்குகிறன் நான்!"

அறவாழி விஷமப் புன்னகையுடன் இந்த வார்த்தைகளைக் கூறும்போது பொன்மணியின் முகம் முன்னிலும கவலைபடாந்த நிலையில மாறிவிட்டது. அறவாழி, தன்னைப்பற்றி தவருன கணகக போட்டிருக்ககூடும் என்பதையும் அவள் புரிந்து கொண்டாள்.

"அதைப்பற்றி உங்களிடம் விபரம் தரவே உங்களைத் தேடி வந்தேன்" என்று கூறியபடி பொன்மணி, கண்களில் சிந்தும் முத்துக்களைக் கன்னங்களில் உருளவிடாமல் துடைத்துக் கொண்டாள்.

மழையும் சற்று அதிகமாகப் பெய்யத் தொடங்கவே, அறவாழி அவளை உள்ளேவருமாறு அழைத்தான். அவளும் அறைக்குள்ளே சென்றாள். காற்றும் சற்று பலமாகவீச ஆரம்பித்தது சிறியதுண்டு ஒன்றைக்கொடுத்து மழைத்தூவலகளால் நனைந்துவிட்ட முகத்தைத் துடைத்துக்கொள்ளச் சொன்னான். பொன்மணிக்கு அந்த உபசாரங்கள் புகழ்த்திருப்தியை ஏற்படுத்த வில்லை தன்னிடம் பெருங்குறையொன்றைக் கண்டுவிட்ட வேறுபட்ட உளளத்தோடுதான் அவன் தன்னிடம் பழகுகிறான் என்று அவள் எண்ணி ஏங்கினாள். எதையும் மனம் விட்டுப் பேசக்கூடிய அளவுக்கு இருவரும் பழகிவிடவும் இல்லை. ஒரு நாள் சந்திப்பு-அதிலே அர்த்தம் பொதிந்த பார்வை-அவ்வளவு தானே தவிர இருவர் இதயங்களையும் உராய்ந்துவிட வைத்து அதிலே கிளம்பும் காதலெனும் தீப்பொறியை எதிர்ப்பு எனும் பஞ்சுப்பொதிகளின்மீது வீசிட வில்லை! அதனால் அவள் தயங்கினாள். ஆனாலும் தன் மீதுள்ள தவறான எண்ணத்தைப் போக்கியே தீர வேண்டுமெனத் துணிவு கொண்டாள்.

"ஊரிலே ஒரு மகஜர் அனுப்பியிருக்கிறார்களே" ... என்று ஆரம்பித்தாள்.

"ஆமாம் — கேள்விப்பட்டேன். அதில் கையெழுத்திட்ட அனைவருக்கும் என் நன்றி!" என்றான் அவன்.

பொன்மணி, அதற்கு மேலே பேச முடியாமல் தவித்தாள். அறவாழியே பேச்சைத் தொடர்ந்தான்.

"இந்த ஊரிலே இருந்துமட்டுமல்ல; இந்த வேலையிலே யிருந்துகூட என்னைவிடுதலை செய்துவிடுவார்களேயானால் மிகவும் சந்தோஷப்படுவேன்!"

"நான்கூட அதில்....." என இழுத்தாள் பொன்மணி.

"நீகூட?...நீகூட...?...என்ன? என்ன? புரியும்படிச் சொல்!" எனக் குறுப்பாகக் கேட்டான் அறவாழி

"எல்லோரும் கையெழுத்துப் போட்டான பிறகு நாங்கள் இரண்டு மூணு பேர் போட்டாலும் போடாவிட்டாலும் அந்த மகஜருக்கு உயிர் வரத்தான் போகிறது அப்படியிருக்கும்போது உனர்க் கட்டுப்பாட்டை ஏன் மீறவேண்டும் என்று பயந்துதான் எங்கள் வீட்டில் அதில் கையெழுத்துப் போட்டோம் அதைத் தவிர உங்கள் மேல் எந்த விதமான விரோதமும் இலை!"

"சேசே! அப்படி யார் சொன்னது? இந்த ஊரில யார்தான் எனக்கு விரோதி? எல்லோரும் ஊர் க்ஷேமமாக இருக்கவேண் டும் என்பதற்காகத்தானே என்னை விரட்டியடிக்க விரும்பு கிறார்கள்?.."

"நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. எங்கள் செய்கைக்கு மாசு கற்பிக்காதீர்கள். ஊரே ஒன்று கூடிவிட்ட பிறகு நமக்கு மட்டுமென்ன என்று வீட்டில் நினைத்து விட்டார்கள். அதமட்டு மல்ல; அந்த மகஜர் தபாலில் சேராத வழிக்கு அதைக் கிழித்து கொளுத்திவிட நானும் தாபியும் முடிவு செய்திருந்தோம். அந்த நம்பிகையில் மகஜா தபபியின் கையில் வரும என்பதனுலேயே பயமில்லாமல் அதில் கையெழுத்தும் போட்டேன்."

"அதனுல் என்ன; பரவாயில்லை — அதற்காக என்னைத் தேடிக்கொண்டா வரவேண்டும்? இது அற்ப விஷயம்!"

"உங்களுக்கு அற்ப விஷயம்! ஆனுல் எனக்கு?"

"உனக்கும் அப்படித்தான்!"

"எனக்கு அப்படியிருந்தால் இங்கே ஏன் வரப்போகிறேன்!"

—இதைக் கூறிவிட்டு அவள் தலையைக் குனிந்துகொண் டாள். அறவாழிக்கும் அவள் வாக்குமூலம சரியென்றே தோன் றியது. எத்தனையோ ஆண்டுகளாக ஊர்க்கட்டுப் பாடடுக்குள் அடங்கியிருந்துவிட்டு திடீரென ஒருநாள அறிமுகமான தனக் காக ஊராரை விரோதித்திக் கொள்ளக்கூடிய சூழ்நிலையைப் பொன்மணியின் குடும்பத்தார் உருவாக்கிகொள்ள வேண்டிய தில்லையென்றே அவனும் நினைத்தான்.

அனுல் அந்த ஊர் ஒற்றுமையையும் பொருடபடுத்தாமல் பொன்மணி தன்மீது கொண்ட பிரியத்தை செயல் மூலம காட்டி தன்னிருப்பிடத்திற்கே வந்துவிட்டதையெண்ணிப் புதியமகிழ்ச்சி கொண்டான் ஆவலும் அன்பும் பேச்சு உருப்பெற்றன

"இப்படியொரு விசித்திரமான கிராமத்தை நான் கண்டதே யில்லை எந்ததும் வராததுமாக என்னைக கண்டு வெறுப்பவரும்-விரட்ட என்ணுபவரும — விநபபங் காட்டுபவரும் — எல்லோ ரையும் சில தினங்களில் சந்தித்து விட்டேன்!"

"எல்லோரையும் பற்றி தனித் தனியே ஒரு தீர்மானத் திற்கு வந்திருப்பீர்கள!"

"நிச்சயமாக! ... உனக்கு யாரைப் பற்றிய என் தீர்மானம் தெரிய வேண்டும்?"

அவள் நாணினுள். "என்னைப் பற்றிக் கட்டியிருக்கும் முடிவு என்ன என்று ——..."

"உன்னைப் பற்றியா?....."

அவள் அவனையே பார்த்தாள். அவனும் அவளையே பார்த்துக் கொண்டு நின்ருன்.

மழை மிகவும் கனமாகப் பெய்தது—காற்றும் வரவரக்கடுமை யாயிற்று-புயல் வீசுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன!

வானச்தைவிடப் பெரும் புரட்சி — இங்கே இருவர் உள்ளங் களிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

## 22

இடி முழக்கமும் காற்றின் அலறலும் பொன்மணி, அறவாழி இருவரையும் மேலும் மௌனத்தில் ஆழ்த்தின. பெருமழையைக் காற்று வாரிவந்து பளிக்கூடத்திலுள்ளே ஊற்றிக களித்தது. அவள் அப்படியே அசைவற்று நின்று கொண்டிருந்தாள். அள்ளியிறைத்ததுபோல் அவள் மேலெல் லாம் மழைநீர்; பாதிகுமேல நனைந்துவிட்டாள்.

அறவாழி அவளருகே ஓடி, "அடடா" என அனுதாபம் தெரிவித்தான்.

அவள்; அவனை ஒரு முறை விழுங்கி விடுவது போல் பார்த்தாள். "நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு அவசரமாக வெளியே கிளம்பினாள்.

"என்னது? இந்த மழையிலா?" என எதிர்வந்து தடுத்தான் அறவாழி.

"இலேல! நான் போய் ஆகவேண்டும். அம்மா மழையைக் கண்டதும் ரொம்ப கவலைப்படுவார்கள். தேடிக்கொண்டு புறப்பட்டு விடுவார்கள்!"

"நீ என்ன பச்சைக் குழந்தையா? பாப்பாவா? மழைக் காற்றில் ஒரு இடத்தில் பாதுகாப்பாக ஒதுங்கக் கூடவா தெரியாது?

இந்தக் கேலியைக் கேட்டதும் அவள் சிரித்துவிட்டாள். ஆனால் அந்த சிரிப்பைத் தொடர்ந்து கண்ணீரும் எட்டிப் பார்த்தது.

"ஆகா! மின்னலைப்போல் சிரித்தாய்! உடனே மழையைக் போல் கண்ணீர் சிந்துகிறாய்! நன்றாயிருக்கிறது இதுவும்!" —மேலும் கேலி செய்தான் அறவாழி.

"சரி, நான் வருகிறேன். குடையிருந்தால் கொஞ்சம் கிடைக்குமா? தம்பியிடம் கொடுத்து அனுப்பிவிடுகிறேன்!"— கண்களைத் துடைத்துக்கொண்டே கேட்டாள் பொன்மணி.

"குடையா? இருக்கிறது! கொடுக்கவும் தடையில்லை. அதைத் திருப்பி நீயே கொண்டு வந்து தருவதாயிருந்தால் கொடுக்கிறேன்."

"விளையாடாதீர்கள், இருந்தால் கொடுங்கள். இல்லாவிட்டால் பரவாயில்லை. நான் வருகிறேன்."—வாயிற் புறத்தை நோக்கி நடந்த பொன்மணியின் கரம்பற்றி இழுத்து, "என்ன இது, பிடிவாதம்?" என செல்லமாகக் கண்டித்தான் அறவாழி.

பொன்மணி எதுவும் பேசவில்லை. கையை அவனிடமிருந்து விடுவித்துக் கொள்ளவும் இல்லை.

அறவாழி அருகே நெருங்கினான். பற்றிய அவள் சரத்தை நெற்றியில் ஒத்திக்கொண்டான். மழை நீரால் நனைந்திருந்த அந்தக் சரம் சூடாக இருப்பதை உணர்ந்தான்.

"பொன்மணி! நான் உனக்கு ஏதாவது தவறு செய்து விட்டேனு? ஏனி பபடி ஓடுகிருய்—இந்த மழையில்?"

"நான்தான் பெரிய தவறு செய்து விட்டேன். நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று இந்தக் குற்றத்திறகு மன்னிப்பே கிடையாது எனபதைப் புரிந்து கொண்ட பிறகுதான் எனக்கு நிம்மதியில்லாமல் போய் விட்டது!"

"அழாதே பொன்மணி" அழாதே! நீ செய்ததை இப்போது நான் குற்றமாகவே கருதவில்லை. உன்னையும் உன் குடும்பத்தாரின் பெருந்தன்மையயும் உணர்ந்துகொண்டேன்!"

"உண்மையிலேயே அப்படிச் சொல்கிறீர்களா? அல்லது என்மன சமாதானத்திற்காகவா?"

"பொன்மணி! இந்த ஊருக்கு வரும்போது என் நினைவெல் லாம் சகமாடிக் கண்ணனைப் பற்றியே இருந்தது. பழிவாங்கக் காத்திருப்பானே என்று எண்ணினேன். அதன் முதற்கட்டமும் நிறைவேறிவிட்டது. அடுத்தடுத்து அவனுல் வர இருக்கிற எல்லாத் தொல்லைகளையும் உன்னை நினைத்தே சமாளிப்பது என்ற புதிய துணிவை நான் பெற்றிருக்கிறேன். இதிலிருந்து புரிந்துகொள்; உன்னை நான் எவ்வாறு கருதுகிறேன் என்று! நீதான் என் வாழ்வுக்கு விளக்கு! என் நெஞ்சத்தில் நிறைந் திருக்கும் தெய்வமே நீதான் கண்ணே!"

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை அதோ பயங்கரமாக உறுமிக்கொண்டு "சோ" வெனக் கொட்டுகிற மழையில் மரம் செடிகள் ஆடுவதுபோல என்மனமும் அலைக்கழிக்கிறது. நான் சிறுமி—நீங்கள் உலகம் தெரிந்தவர். நான் ஏதாவது தவறு செய்தால் என்னைத் திருத்துங்கள். நீங்களும் என்னோடு சேர்ந்துகொண்டு என்னைப் பாழ்படுத்தி விடாதீர்கள்!"

"பொன்மணி! பைத்தியம்!"

"ஊஹூம்! இதுசரியில்லை! ஆமாம்; இதுசரியில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. என் அப்பாவும் அம்மாவும் என்னைமிகவும் ஒழுங்கான பெண் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் துரோகம் செய்ய மாட்டேன்!"

"நீயாருக்கும் துரோகம் செய்யவில்லை. இருவரின் நெஞ் சமும் ஒன்றுபட்டது. இயற்கைவகுத்த நெறிதானே தவிர அதற்கு முரண்பட்ட வழியல்ல இது! வெறும் ஆவேசத்திற்கும் உணர்ச்சிகளுக்கும் அடிமைப்பட்டு உன்னை அழித்துவிட ஒருக் கணமும் துணியமாட்டேன். இளமை வழங்கும் காதல் பாஷையை இலக்கணவரம்பு வழுவாது பயிலவே நான் விரும்பு கிறேன். பெண்களுடைய உயிரினும் மேலான கறபு நெறிக்குக் களங்கம் விளைவித்து அவர்கள் வாழ்வோடு விளையாடும் வரம்பு கெட்டவர்களின் பாதையிலே—நான் கண்ணிழந்த கபோதியாகி விட்டாலும்—காலெடுத்து வைக்கமாட்டேன். என்னை நீ தைரிய மாக நம்பலாம் பொன்மணீ!"

"உங்கள்மீது நம்பிக்கையில்லையென்று நான் கூறவில்லையே! நீங்கள் என்னை நட்டாற்றில் தவிக்க விட்டுவிடுவீர்கள் என்றும் சொல்லவில்லையே! சிறுபின்னேத்தனமாக ஏதாவது தவறு செய்துவிட்டு பிறகு நமக்கு நாமே வருந்தக்கூடாது என்று தானே சொல்லவந்தேன்!"

"அதோ, பெருமழையில் தெருவிலே ஓடுகிறதே ஆறுபோல் தண்ணீர் — அந்த நீரில் நான்தான் கப்பல்கள் செய்து மிதக்க விடுவதுண்டு; சிறுவனுயிருக்கும்போது! சதுரமான ஒரு தாளை நான்காக மடித்து, அதில் ஒரு முனையை மடக்கி, தோணிபோல ஆக்கி தெருவிலோடும் தண்ணீரில் மிதக்கவிடுவேன். அந்தக் கப்பலைப் பார்த்துக்கொண்டே மழையில் நெடுந்தூரம் நடந்து செல்வேன். உடம்பெல்லாம் நனைந்துவிடும். அன்றிரவு காய்ச் சலும் வந்துவிடும். தாய் தந்தையர் கஷ்டப்படுவார்கள். நான் ஏறிச் செல்ல முடியாத கப்பலை நான் செய்வானேன்? அது போகிற அழகைப் பார்த்துக்கொண்டு மழையில் நனைவானேன்? பிறகு அது மழை நீரில் அமிழ்ந்துவிடுவது கண்டு வருந்துவா

னேன்? இப்போது கேள்விகள் எழுகின்றன ஆனால் இளம் பிரா யத்தில் இந்தக் கேள்விகள எழுவதில்லை ஆனால் நிச்சயமாகச் சொல்வேன்; இப்போது அப்படி ஒரு கப்பலைச் செய்யமாட்டேன். அதன் பின்னால் மழையில் ஓடவும மாட்டேன். இப்போது நான் கட்டுகிற கப்பல் வாழ்க்கைக கப்பல் அதில் நானும் என் ராணி யும் ஏறிக்கொள்வோம். புரிகிறதா பொன்மணி! இந்தக் கப்பல் கட்டும் வேலை சிறுபிள்ளைத்தனமானது அல்ல என்பதை தயவு செய்து தெரிந்துகொள்!'

"பெரியவர்கள் கட்டுகிற கப்பலும் சமயத்தில் மூழ்கிவிடுகிற தல்லவா?"

"உலகம்கூடத்தான் ஒரு காலத்தில் சிதறிப்போய் விடும் என்கிறார்கள். சூரியன்கூட ஒரு காலத்தில் உடைந்த கண்ணாடித் துண்டுகள் போல தூள் தூளாகப் போய்விடக்கூடும் அதை யெல்லாம் நினைத்தால் மனிதர்கள் வாழவே முடியாது!"

"உங்கள் படிப்புக்கு நான் எம்மாத்திரம்? எதைச் சொன் னாலும் நம்ப வேண்டியது தானே?"

"அய்யோ—இந்தக் காலத்தில் படித்தவன்தான் ஊரை அதிகமாக ஏமாற்றுகிறான். அதனால்தான் எல்லோரும் படிக்க வேண்டுமென்று அறிஞர்கள் கூறுகிறார்கள்!'

"ஏன்? எல்லோரும் சேர்ந்து ஊரை ஏமாற்றவா?"

"இல்லை! எல்லோரும் படித்துத் தேர்ந்து விட்டால் பிறகு யாரும் யாரையும் ஏமாற்ற முடியாதல்லவா?"

"உங்கள் ஊரில் வந்து தகடு எடுப்பதாகச் சொல்லி எல்லோரையும் ஏமாற்றிய எங்கள் ஊர் கண்ணன் பெரிய படிப்பாளியா?"

"பழைய கால புராணங்களை யாவது படித்திருக்கிறான் அல்லவா? அதிருக்கட்டும்—நமது ஆராய்ச்சி எங்கேயோ சென்று கொண்டிருக்கிறது..!" எனப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பொன்மணியை அன்போடு தழுவிக்கொண்டான் அறவாழி.

"உஸ்!" எனக் கணடிகக்கும் பாவலையில பொன்மணி அவனைவிட்டு விலகுவதற்குப பயங்கரமான இடிகள் ஒனலைறத் தொடர்ந்து ஒன்ருக ஒலிப்பதற்குப் சரியாக இருந்தது.

"வீர!" எனக் கத்திக்கொண்டு அவள். அவனை ஓடித் தழுவிககொண்டாள். அவள் மேனி கிடுகிடுவென நடுங்கிற்று.

"பயப்படாதே! அச்சுனு! அர்ச்சுனு!' என்று மந்திரம் சொல்லு! இடி ஓடிவிடுப!" என சிரித்துக கொண்டே அவனை இறுக அனைத்துக் கொண்டான்.

"நான் ஏன் அவன் பெயரைச் சொல்லவேண்டும?" என்று குறும்பாக அறவாழியைப் பார்த்துககொண்டே தன்மெலலிய கரங்களால் அவன் கழுதைதைப் பிணிககொண்டாள.

"மாமழை போற்றுதும்!
மாமழை போற்றுதும்!

என இருவரும் பாடுவோமா?" என்று கேட்டான் அறவாழி.

அவள் பாசத்தோடு அவன் முகவாய்க்கட்டையில் தன்னுடைய கன்னத்தை ஒத்திகொண்டு கணகளை மெய்மறநது சாத்திக் கொண்டாள். இன்ப ளபரிசத்திலை உணாவிழந்திருந்த அறவாழியின் கண்கள மேசைமீது திரும்பின மேசையில் இருந்த கலித்தொகைப் புத்தகத்தில் மழை நீர் சொட்டி முழுவதுமே நனைந்து போயிருந்தது. ஓடிப்போய் புத்தகத்தை எடுத்தான். நூலின் மேலட்டை கையோடு வந்துவிட்டது. எல்லா பக்கங்களும் நனை நது கையோடு வந்துவிடடன. நெய்தற்கலியே எஞ்சியிருந்தது. அதில் "மைட தூக்க வணங்கிய தாமை!" என்ற அருமையான வரி அவன் கண்களில் தென்பட்டது. அந்த வரியின் பொருளை அவன் சுவைத்தான். அவளுக்கும மெல்ல மெல்ல சுற்றுக் கொடுகக வேணடும் என்று தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டு மகிழ்ந்தான.

"இந்தப்புத்தகம் முழுதும் என்ன இருக்கிறது, தெரியுமா?" எனக்கேட்டான.

"மழைத் தண்ணீர்!" என்று வெடுக்கெனப் பதில் சொன்னாள்.

"மழைதான்! அத்தனையும முத்துமழை! சர்க்கரை மழை! தேன் மழை! தெவிட்டாத இன்ப மழை! கண்ணே! கலித் தொகை யென்று இதற்குப் பெயர். எல்லாம் காதலிபபற்றியது தான்! பால் விற்கும் ஆயர்பாடிப்பாவையின் காதல்! மீன பிடிக்கும் மின்னல் கொடியின் காதல்!...அடடா....

"அப்ப...பானை சட்டி விற்கும பெண்ணின் காதல்...இதில் கிடையாதா?"

"எல்லாம் இருக்கிறது! தமிழ் நாட்டுப் பெண்களின் காதல் உள்ளத்திற்கு இந்தப் புத்தகம ஒரு கண்ணாடி!"

"அது கிடக்கட்டும் — நேரமாகிறதே — நான் போக வேண்டுமே!"

"அபபடியொரு நினைப்புக் கூட உனக்கு வருகிறதா?"

"பார்த்தீர்களா? இப்படித்தானே சொன்னீர்கள்; உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு விடக்கூடாது என்று! உலகத்தையே மறந்துவிடலாமா? தாய் தந்தை குடும்பம் இவைகளை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிடலாமா?"

"உண்மைதான் பொன்மணி — தாய், தந்தை குடும்பம், மட்டுமல்ல-எல்லாவற்றையும்விட மேலான நாடு-இவைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தாமல், இந்தப் பாசங்களை அதிகப் படுத்தக் கூடிய உணர்வுதான் காதல் என்பதை நான் மறந்துவிட் மாட்டேன். நீ போகலாம். நான் தடைசொல்லவில்லை ஆனால் ஒன்று; நாம பேசவேண்டியதை யெலலாமபேசி முடித்து விடடோமா?'

"இனிமேல் சந்திக்கவே மாட்டோமா?"

"நீ விரும்பினால் — மனம்வைத்தால்—எப்போதும் சந்திக் கலாம்—மழையும் காற்றும் தாங்கவில்லை. நானே உன்னைக் கொண்டுவந்து வீட்டில் விட்டு வருகிறேனே!"

"நாம் இருவரும் சென்றால் ஊரார் பார்த்து என்ன சொல்வார்கள்?"

"இந்த மழையில் யாரும்வெளியே கிளம்ப மாட்டார்கள். நாமிருவர்தான் ஒரே குடையின் கீழ் தெருவிலே முழங்காலைத் தொட்டுகொண்டு ஓடும் தண்ணீரில் நடந்துசெலலம் போகிறோம். நமக்குத் திருமணம் ஆனபிறகு இப்படி ஒரு அநுமையான வாய்ப்பை இந்த மழை விரைவில் அளிக்குமோ என்னவோ— அதனால் இப்போதே அந்த இன்பத்தை சுவைக்கலாம்; புறப்படு!" என்று குடையை எடுத்து விரித்தான் அறவாழி. குடைக்குள்ளேயிருந்து ஒரு தேள்கீழ விழுந்து ஓட இடம் பார்த்தது. தேளைப்பார்த்ததும் பொன்மணியின விழிகள் அவனை யறியாமலே அறவாழியின் விழிகளோடு மோதிக் குறும்பு புரிந்தன.

'தேளைப் பிடித்து தருகிறேன்; கையில் கொட்டிக் கொள்கிறாயா?" என்றான் அவன்

"வேண்டாம் — வேண்டாம்! முன்பு நீங்கள் என் காதில் போட்ட மந்திரம்தான் என்னை இந்தக் கதிக்குக கொண்டுவந்து விட்டது மறுபடியும் காதில் ஊதி ஊதி என் இருதயத்தை பலூன் மாதரி பெருக்க வைத்து வெடித்தும் போகுமபடிச் செய்து விடாதீர்கள்!" எனக் கூறி அவன் தோளில் முகத்தைச் சாயத்துக் கொண்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள் பொன்மணி.

காற்றின் வேகம் அதிகமானதே தவிர குறையவில்லை, மழையும் கொட்டிக் கொண்டேயிருந்தது எபபடியும் வீடு போய்ச் சேரவேணடும் என்ற துடிப்பு பொன்மணிக்கு அதிகமாகி விட்ட காரணத்தால் அறவாழி புறப்பட்டான். காற்றை எதிர்த்து, கதவைத்திறந்து கொண்டு வெளிககிளம்பினர்கள். அறவாழி குடையை மிகவும் பலமாகப் பிடித்துக் கொள்ள வேணடியிருந்தது. அவனோடு நெருங்கி பொன்மணி குடையின் கீழ நடந்தாள்.

வானமே இருண்டு, பூமியையும் இருளடையச் செய்திருந்தது. கண் தெரிய முடியாத அளவுக்கு ஒரே மழை! மழைத்

துளிகளைக் கற்கள் போல மேலே வீசியடித்தது காற்று! எந்த நேரத்தில் மேலே விழுமோ என்று பயங்காட்டி கொண்டிருந்தன தெருவோரத்திலேயிருந்த மரங்கள்!

அறவாழியும் பொன்மணியும் வெளியே கிளம்பியது தவறு என்று அஞ்சி நடுங்கினர்கள். பத்திரமாக வீடு போய்ச் சேர முடியுமா என்ற நம்பிக்கை அவர்களுக்கு இலேசு இடையிடையே நெஞ்சை உலுக்கும பயங்கர இடி முழக்கம்—கண்ணைப் பறிக்கும் மின்னல். எதைப் பற்றியும் கவலைப்படாமல் அறவாழி பொன் மணியை இறுக அணைத்துக்கொண்டு, மேலும் மேலும் நடக்கலானான்.

காற்றின் வேகத்தில் அவன் கையிலேயிருந்தகுடை பறக்க ஆரம்பித்தது. குடையைப் பறிகொடுத்துவிட்டு இருவரும் ஒரு மரத்தடியில் ஒதுங்கினர்கள். அவர்கள் கண்ணுக்கு நேரே, அவர்கள் ஒதுங்கிய மரத்திற்குப் பக்கத்து மரம்ஒடிந்து கீழே விழுந்தது. மரத்தடியில் நிற்கவும் பயம் தோன்றியது. என்ன ஆனாலும் சரி; வீட்டுக்குப் போய்விடுவது என்று இருவரும் உறுதியெடுத்துக்கொண்டு ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு நீர்வீழ்ச்சிபோல் கொட்டும் மழைக்கிடையே நடந்தனர்.

## 23

பொன்மணியை சந்தைக்கு அனுப்பிவிட்டுப் பூஞ்சோலை யம்மாள் கணவனைக் கவலையோடு கவனிக்க ஆரம்பித்தாள். இரண்டு நாட்களாகவே இருமலும் இழுப்பும் அதிகமாகிவிட்டது பொன்னையாவுக்கு. இரவுபோன உயிர் திரும்பிவந்தது என்று கூறுமளவுக்கு இருமல் அதிகமாகி, உடனடியாக மருத்துவர் வரவழைக்கப்பட்டு சிகிச்சைகள் செய்தே பிறகே பூஞ்சோலைக்கு சிறிது துயரம் குறைந்தது.

காலையில் எப்போதும்போல் கலகலப்பாகவே பேசிக்கொண் டிருந்தார் பொன்னையா. பொன்மணி, சந்தையிலே கிடைக்கிற பணத்தைக்கொண்டு வைத்தியர் கூறிய மருந்துப் பொருள்களை வாங்கி வருவாள் என்று இருவருமே நிம்மதியாக இருந்தனர்.

"சந்தைக்குப் போய்விட்டு வருகிறேனப்பா!" என்று பொன்மணி விடை பெற்றுக் கொண்டபோதுகூட அவர் தெம்மாகத்தான் காணப்பட்டார்.

அவள் வீட்டைவிட்டுப் புறப்பட்டு சிறிது நேரத்திற்கெல்லாம் வானம் கருத்திட ஆரம்பித்தது பொன்னையாவின் முகமும் கருத்திடத் தொடங்கியது. கயிற்றுக் கட்டிலில உட்கார்ந்து கொண்டு பூஞ்சோலையிடம் பேசிக் கொண்டிருந்த பொன்னையா இடையிடையே நெஞ்சில் கை வைத்துப் பார்த்துக் கொண்டார்.

பூஞ்சோலை பயத்தோடு "என்ன நெஞ்சிலே அடிக்கடி கைவச்சுப் பாக்கிறீங்க?" என்று கேட்டாள்.

"நெஞ்சாவது ஒண்ணாவது- அது எங்கே இருக்கு? அதைத் தான் கல்யாணம் ஆனவுடனே உனகிட்ட கொடுத்துட்டேனே!" என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னார் பொன்னையா.

தன் கணவன் அடிக்கடி இதுபோலக் குறும்பாகப் பேசுவார் என்றாலும் வயதான பிறகு இப்படியெல்லாம் பேசுவதில்லை. இப்போது திடீரென்று இளமை திரும்பி விட்டதே யென்று வியப்பும் மகிழ்ச்சியுமடைந்தாள் பூஞ்சோலை.

அவளது மனத் திரையில் இளமைக்கால நினைவுகள் படக் காட்சிபோல ஓடிக்கொண்டிருந்தன. மாப்பிள்ளை வீட்டார் தன்னைப் பெண் பார்க்க வந்ததும— அவர்களோடு வந்திருந்த மணாமகன் பொன்னையா, கொல்லைப்புறத்து சுவர் மறைவில் ஒளிந்து கொண்டு தன்னைப் பார்ப்பதற்கு முயற்சித்ததும — அதைத்தான் பார்த்து துள்ளிக் குதித்து வீடடுக்குள நுழைந்து கொண்டதும—மண மன்றத்தில இருவரும் எதிர்காலத்தை எண்ணியவாறு ஒருவர் முகத்தை ஒருவர் யாரும பார்க்காத நேரததில பாத்துககொண்டு புன்னகை புரிந்ததும் — முதல் நாள் பளியறையில் யார் முதலில் பேசுவது என்று திகைத்துத் தடுமாறியதும—போகப் போக இருவரும் ஒய்வு ஒழிச்சலின்றிப் பேசிப் பேசி சரியான வாயாடிகள் என்று பெயரெடுத்ததும— சில வருடங்களில் இருவரும் பெற்றோராகிவிடவே குடும்பப் பொறுப்பு முழுதும் தலையில் வந்து விழுந்ததும—அந்தப்

பொறுப்பினல் இயல்பாகவே அவர்களிடம் அடக்கமான பண்பு குடி கொண்டதும் — இப்படிப் படிப்படியாக பல மாற்றங்கள் பூஞ்சோலையின் நினைவிலே டரண்டு அவள் விழிகளை நீர்வீழ்ச்சி களாக்கின. அதைக் காட்டிக் கொள்ளாமல் கணவனின் மார்பகத்தைத் தடவிக் கொடுத்தாள்.

பொன்னையா, தன் அன்பு மனையாளை வைத்த விழி வாங்காமல் கவனித்தார்.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க? ஏன்?" என்று நடுக்கத் தோடு அவர் உடலை அசைத்தாள் அவள்.

"ஒன்றுமில்லை! உன்னைப் பார்த்துக்கொண்டே யிருக்கணும் போலிருக்கு!" — பொன்னையா தழு தழுத்த குரலில் பேசினார் அவர் கண்களும் கலங்கியிருந்தன.

"பூஞ்சோலை! எனக்கு ஒரே கவலை. நம்ப பொன்மணிக்கு ஒரு கல்யாணம் செய்து பார்த்து விடணுமுனு ரொம்ப நாளா ஆசையை மனசிலே வச்சிகிட்டு மங்குகிறேன். சீக்கிரம் நடக்கா துன்னுதான் எனக்குப்படுது!"

"எல்லாம் நேரம் வந்தால், தானே முடியும். நீங்கள் நிம்மதியா இருங்க!"

"நேரமாவது ஒண்ணுவது-நான் கண் மூடுவதற்குள் அந்த நேரம் வரவா போகுது?"

இடியும் மழையும் காற்றும் பொன்னையாவின் வியாதியை மேலும் அதிகப்படுத்திவிட்டன போலும். பேசிக்கொண்டே இருந்தவர் பலமாக இருமிட ஆரம்பித்தார்.

"பொன்மணி இப்ப வந்துடுமா?"

'இந்த சுருளிமலை எங்கே?"

—பொன்னையா மிகவும் ஆவலுடன் கேட்டார் மழை தாங்க முடியாமல பொழிந்தது மின்னல — இடி — காற்று - அவை களோடு அவரது இருமலும் சேர்ந்து கொண்டது.

"அப்பாடி! நெஞ்சை வலிக்கிறாப்ல இருக்கு!" என்று பூஞ்சோலையின்மீது சாய்ந்து கொண்டார்.

அளவுக்கதிகம் பெரிய அதிர்ச்சி! "ஐயோ! என்னை கொல்றீங்க?" பூஞ்சோலையின் நாக்கு குழறிற்று. ஆனாலும் தைரியத்தைத கைவிடவில்லை. அடுக்களைக்கு ஓடி வெந்நீர் தயாரித்து, அதைக் கணவனது நெஞ்சில் ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்தாள்.

பொன்னையாவுக்கு வலி பொறுக்க முடியவில்லை அதிகமாக முனகினார். "அய்யோ, தாங்கவில்லையே!" என்று கதறினார். வீட்டிலோ வேறு யாருமில்லை. பெண்மணி இந்த மழையில் எப்படித் திரும்பி வருவாளோ? சுருளிமலை எங்கே போய் விட்டானோ? பூஞ்சோலையின் மனம் தத்தளித்தது. மாங்கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டாள். "கடவுளே! என் மஞ்சள் குங்குமத்தைக் காப்பாற்று!" எனப் பிரார்த்தனை செய்தாள்.

பொன்னையாவுக்கு நெஞ்சு வலி தந்த வேதனையைவிட அதிகமான கஷ்டம் பூஞ்சோலையின முகத்தைப் பார்க்கும்போது ஏற்பட்டது. திடீரெனத்தான் இறந்துவிடுவோமோ என்று ஐயம் எழுந்தது. அவர் கவலைப்பட்டதெல்லாம் சாவதைப் பற்றியல்ல. தான் செத்துப்போன பிறகு தன் மனைவியும் மக்களும் சோக உருவங்களாகி விடுவார்களே என்பதை அவரால் ஆற்றுவாரில்லை; தேற்றுவாரில்லை யென்னும் நிலைமை ஏற்பட்டு விடுமோ — என்ற கவலைதான் அவரை ஆட்டிப் படைத்தது.

பூஞ்சோலை பூவோடும் பஞ்சளோடும் நிறை சுமங்கலியாகக் காட்சி தருகிறாள். அவள் இல்லாமல் எந்த வீட்டிலும் அந்த ஊரிலும் நல்லது கெட்டது நடப்பதில்லை. கலியாண வீடுகளில் மாப்பிள்ளை பெண்ணுக்கு ஆரத்தி எடுப்பதற்கு பூஞ்சோலை வந்தாக வேண்டும். பிறந்த குழந்தைகளை முதலில் பூஞ்சோலையின் மடியில்தான் படுக்க வைக்கவேண்டும். எங்கேயாவது முக்கியமான காரியமாகப் புறப்பட்டால் அப்படிப் புறப்படுகிறவர்கள் தங்களை எட்சிய சித்திக்காக எதிரே நல்ல சகுனம் எதுவும் வராதா? பூஞ்சோலை வரமாட்டாளா? என்று ஏங்கித் தவிப்பார்கள்.

இப்படிப்பட்ட 'ராசாத்தி'யின் முகாசியை அந்த ஊரார் பரிபூரணமாக மதிக்கிறார்கள். இவ்வளவு ஏதுனால? பஞ்சின் குங்குமப் பாக்கியமினால!

அது அழிந்து விட்டால் பூஞ்சோலைக்கு மதிப்பு இருக்காது. நல்ல காரியங்களுக்கு அவமானம் குறுக்கிடக் கூடாது என்கிற அளவுக்கு அவளை புறக்கணிக்கப்பட்டு விடுவாள் விதவைச் சகுனம் விஷச்சகுனம் என்று ஆகிவிடும பூஞ்சோலை முகிலியில் மூடங்கிவிடுவாள

அவளுக்கு அப்படியொரு அவமதிப்பு வராமல் இருப்பதற்காகவாவது தான் சாகாமல் இருக்கக்கூடாது என்று மனதிலே தனக்குத்தானே சொல்லிக்கொண்டார் அப்போது அவர் இருதயத்தின் அழுகை சப்தம் பூஞ்சோலையின காதில் விழவில்லை அவள நினைவு முழுவதும் ஆண்டவனிடம் சென்றிருந்தது பூமியை உருத்தெரியாமல கரைத்துவிடக் கூடிய கொண்டது போல பெய்து கொண்டிருந்த மழையையும் அவள் பொருட்படுத்தவில்லை. மருத்துவரை அழைப்பதற்கும் புறப்பட்டாள்

"ஏன்னடாம் பூஞ்சோலை! இனியொன்றும் பிரயோசனம் மூடாது!" என்றார் பொன்னையா

"நேரத்தைப் போக்காதே தட்டாதீர்கள் — இதோ ஒரு நொடியில் மருத்துவரை அழைத்து வருகிறேன!"

"மருத்துவரையும் மீறிவிட்டது — இன்னும் சிறிது நேரந்தான அவருக்குப் பிறகு."?

"ஐயோ அப்படியெல்லாம் சொல்லாதீர்க!"

பூஞ்சோலை தன் கணவனின காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள.

"மைதிலியைக் கூடவிட நீயும் போய்விட்டால் .... நான் தனியாகக் கிடந்து உயிர் விடனுமா?"

இதற்குப் பூஞ்சோலையால் பதில்கூற முடியவில்லை. கதறிக் கதறி அழுதாள் துடித்தாள் தவித்தாள தனக்குத் தெரிந்த மருத்துவங்களை யெல்லாம செயது பார்த்தாள் வலி அதிகமாகிக் கொண்டே போனது பூஞ்சோலைக்கு ஒன்றும் புரியவில்லை. பொன்னையா ஏமாற்றமடைந்தார்.

'வேண்டுமானால் போய் வைத்தியரை அழைத்து வா. உன் ஆசையை ஏன் கெடுப்பானேன் ?''

பூஞ்சோலை புறப்பட்டாள் ; புயலிலும் மழையிலும் பயமின்றி போகும துணிவு கொண்டாள் அவளை அழைத்து, பொன்னையா தன் படுக்கையின் அடியில் தலையணை ஓரமாக ஒளித்து வைத்திருந்த ஒரு மூடப்பட்ட காகித உரையைக் கொடுத்து "இதைப் படித்துப பார்த்து இதன்படி நடந்து கொள்ளுங்கள்" என்று கண்டிப்பும கனிவும கலந்த குரலில கூறினர். காகித உரையைப் பூஞ்சோலை மடியில வைத்துக கொண்டு மருத்துவர் வீட்டுக்குப் புறப்பட்டாள.

பொன்னையாவோ 'ஆ' என அலறினர் நெஞ்சைப் பிடித்துக கொண்டார். மயக்கமுற்றுக் கீழே விழுந்தார் அவர் வாயிலையிருந்து ரத்தம வழிந்தது. தூக்கி உட்கார வைத்தாள். அவரால் பேச முடிய வில்லை அதிகமாக! பூஞ்சோலையின் மடிமீது சாய்ந்து கொண்டார் பூஞ்சோலை இனியும் தாமதிக்கக் கூடாதென்று வெளியே ஓடினாள மருத்துவர் வீடு நோக்கி!

*　　*　　*

ஒரு பக்கத்தில் பூஞ்சோலை மழையில் ஓடிக கொண்டிருக்கிறாள். இன்னொரு பக்கத்தில பொன்மணியும் அறவாழியும எதிரே வந்து கொண்டிருக்கிறார்கள். மழையில இவர்கள் பார்க்காமல் ஓடியாடி அறவாழியும் பொன்மணியும் வீடு நோக்கி வருவதைப் பூஞ்சோலை பார்க்கவில்லை அவர்களும் அவளைப் பார்க்கவில்லை. அப்படா; தப்பினோம்" என்று கூறிக் கொண்ட மழையை வாழ்த்தியவாறு சிறிது வேகமாக நடந்தார்கள்.

வீட்டுக்குள்ளே நுழைந்துவிட்ட ஆடைகளுடன் பொன்மணி அடியெடுத்து வைத்தாள் அறவாழி வெளியிலேயே நின்று கொண்டான் அவனையும் பொன்மணி உள்ளே வலிய அழைத்துச் சென்றாள் வீட்டுக்குள் யார் நடமாட்டமும இல்லை. சுற்று முற்றும பார்த்தாள்

"அம்மா! அம்மா!!"

— பதில் இல்லை.

கயிற்றுக் கட்டில் பக்கம் சென்றாள்.

"அப்பா தூங்குகிறார்—எழுப்ப வேண்டுமா? வேண்டாம்!"

இறுதியில் ஒரு முடிவுக்கு வருகிறாள்; எழுப்பியே விடுவ தென்று!

"அப்பா! அப்பா!!"

— பதில் இல்லை.

ஏதோ ஒரு சந்தேகம்—அப்பாவைத் தொட்டுப் பார்க்கிறாள். உடம்பு ஜில்லிடுப் போயிருக்கிறது. மூச்சு நின்று வெகு நேரமாகிறது!

தாய், மருத்துவரை அழைத்துக் கொண்டு வேகமாக உள்ளே ஓடிவருகிறாள். வந்த வேகத்தில் நிலைப்படி தடுக்கி விடுகிறது அப்படியே கீழே விழுகிறாள் சரியான அடி! நினைவு இல்லை! இவைகளை யெல்லாம் காணாமல் அந்தக் குடும்பத்துத் தலைவன் நிரந்தரமாகக் கண்களை மூடிக் கொள்கிறான்!

## 24

டம்பிலே உயிர் ஒட்டிக்கொண்டிருக்கும் வரையில்தான் மனிதனுக்குக் கவலைகள்—ஆசைகள்—ஆட்ட பாட்டங்கள் எல்லாமே! 'தூங்குகையில் வாங்குற மூச்சு சுழிமாறிப் போனாலும் போச்சு' என்று பெரியவர்கள் சும்மாவா பாடினார்கள்? பெண்டுபிள்ளை நட்புசுற்றம் எதுதான் மனிதனுக்குப் பிரதானம்? வருகிறவரையில் எல்லா சுகமும் உடலைச் சாய்ந்து விட்டால் பிறகு சாம்பலைக் கூட மிச்சப்படுவதில்லை. உயிர் இருக்கும் வரையில் பிறருக்கு வீட்டுத் திண்ணையில்கூட இடம் கொடுக்க மனிதன் மறுக்கிறான். செத்துவிட்டாலே, நொறுங்கிப்போன் தன் எலும்புச் சாம்பலின்மீது ஆயிரம் பிணங்களை அடுக்கடுக்காகப் படுக்க வைத்தாலும் அவன் மறுபடியும் திரும்பி வருவதில்லை.

'அடடா; உயிர் உள்ளவரையில் என்னென்ன போட்டி—எவ்வளவு வம்பு—எத்தனை தீமை! பிணமாகிவிட்டால்

எறும்புகூட அவன் கண்களைப் பிடுங்கித் தின்றுவிடுகிறது. இருதயக் கூட்டில் புழுமேய்கிறது. யார் யாரை எப்படி அழிக்கலாம் என்று திட்டம் போடுகிறவர்கள் கொஞ்சம் அமைதியாக உட்கார்ந்து தங்களுக்கும் சாவுவரும் என்பதை ஆழ்ந்து சிந்தித்தால் உலகத்தில் கலகமேயிருக்காது எலலோரும் சந்தோஷமாகவே இருபார்கள் ஆனல் மனிதன் அதை நினைப்பதில்லையே! யார்வீட்டு உழைப்பிலாவது வாழவேண்டும்—யார் கேட்டுகிற வியர்வையிலாவது உல்லாசம் பெறவேண்டும்—யார் சிந்தும் இரத்தத்திலாவது வாழ்க்கைத் தோணியை மிதக்கவிடவேண்டும் — என்றல்லவா திட்டம் போடுத் திரிகிறுன்! காற்றடைத்த பைபோன்ற இந்த சரீரம் ஒருநாள் படீரென்று வெடித்துப் பல்பமாகிவிடும என்பதை என்றைக்காவது தானே அவன் நினைத்து உடனே மறந்துவிடுகிறுன்

' அய்யோ — யார் யார் மனம் நோகப் பேசிவிட்டோம்—எவர் எவர் குடியையெல்லாம் கெடுத்து விட்டோம் — நல்லவனைப் போல வெளிவேஷம் போட்டு நாம் குட்டிச் சுவாரகிய சூடும் பங்கள் எத்தனை! .. இந்தக் கணக்குகல்லாம் மரணப்படுகைகிடக்கும் மனிதன் சரியாகப்போடும் மணக் கணக்குளாகிவிடட்டனவே தவிர, உயிரோடிருப்பவனின் உள்ளத்துப் போராட்டமாயிருப்பதில்லையே!''

—சாவு வீடுகளில் வாழ்க்கையில் அலுத்து சலித்த பெரியவர்கள் துக்கம் விசாரித்துவிட்டு இதுபோலதான் கருத்துகளை பறிமாறிக்கொள்வார்கள்.

பொன்னையாவின் மரணச்செய்தி கேட்டுக் கூடியவர்களும் இத்தகைய தத்துவங்களைப் பேசிடத்தவறவிலை பொதுவாக வாழ்க்கைத் தத்துவ ஆராய்ச்சி பெருமபாலும் சாவு வீடுகளில் தான் மிகத்தீவிரமாக நடைபெறும் துக்கம் விசாரிக்க வந்த ஒவ்வொரு எதிர் காலப் பிணமும் வாழ்வின் நிலையாமை — வாழ்வில் இனிமேலாவது கடைப்பிடிகக்வேண்டிய முறைமைகள் எல்லாவற்றையுபபற்றி சிந்திக்கவோ அல்லது பேசிடவோ தவறுவதிலை ஆனல் இடுகாட்டிலிருந்து திரும்பியதும் அனைத்துமே மறந்துபோய் விடுகின்றன உயிர் விடும்போது தன் தவறு

களுக்காக வருந்திக் கண்ணீர்விட்டவன் கூட, தற்செயலாக இடு காட்டில் உயிர் பெற்றுத் திரும்பி வீட்டுக்கு வந்துவிட்டாள்கூட, சாகுபோது நினைத்தவற்றை யெல்லாம் நிச்சயம மறந்தே விடுவான் அதற்காக உலக வழக்கமாகிவி ட ' சாவு வீட்டும் பேச்சு " நின்று விடுகிறதா ? இல்லவே இல்லை

பொன்னையாவின உடலைத் தழுவிக்கொண்டு பூஞ்சோலை கதறினுள

பொட்டும் மஞ்சளும் பூவும் தாலியும் போய்விட்டதேயென்று தான் கணவனையிழந்த பெண்கள் கதறுவார்கள். " அவைகளை யெலலாம இழந்துவிடு ! உன் கணவனை தருகிறேன் " என்று யாராவது சொன்னால அப்போது மஞ்சளையும் தாலியையுமா பிடித்துக கொண்டிருப்பார்கள் ? மஞ்சள் குங்குமம் போனாலும் பரவாயிலலை, மனுளன் உயிர் பெற்றால போதும் எனறுதான் கூறுவார்கள்.

பூஞ்சோலைக்குத் தன் கணவனின் உயிர் மீண்டும் வந்து விடாதா என்ற ஆவலை அதிகமாக இருந்தது உடலைக் குளிப் பாட்டிப் படைக்கிலை வைக்கும் வரையில் அவள் அப்படித்தான் எதிர் பார்த்தாள்.

பொன்மணி தந்தையின் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, ' அய்யோ அபபா ! இனி எனக்கு யாரப்பா துணையி ருக்கிறார்கள் ? எங்களை யெல்லாம் அனாதைகளாய விட்டு விட டு இப்படி அசையாமல் படுத்திருக்கிறீர்களே அப்பா !" எனப் புலம்பினுள

சுருளிமலையின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண் ணீர வழிந்தது அடபடியே ஒரு மூலையில உட்கார்ந்திருந்தான்.

தீச்சடி சிங்காரம் ஆகவேண்டிய காரியங்களை அக்கறை யோடு கவனித்தான்.

கற்பூரம் பெண்கள்பகுதியில் தலைமை வகித்துக் காரியங்களை செய்தாள்

கண்ணனும் சிங்காரத்துடன் போட்டி போட்டுக்கொண்டு அங்குமிங்கும ஓடினுன்.

சவத்தின் நெற்றியிலே சிங்காரம் விபூதியைப் பூசுவான்; உடனே கண்ணன் அதன்மீது சந்தனப் பொட்டை வைப்பான்! சடலத்தை தப்பல்லக்கில் கிடத்த தலைப்பக்கம் பிடிப்பான் சிங்காரம்; கால் பக்கம் தாங்கிக் கொள்வான் கண்ணன்!

சுருளிமலையைக் குளிப்பாட்டி, அவனது கையிலே கொள்ளிச் சட்டியைக் கொடுத்து, அதைத் தன் கையிலே வாங்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான் சிங்காரம். கண்ணன் பல்லக்கின் ஒரு பகுதிக்குத் தோள் கொடுத்துத் தூக்கிக்கொண்டான். இவைகளையெல்லாம் அறவாழி கவனித்தவாறு, பிரேத ஊர்வலத்தின் பின்னே மெதுவாக நடந்து சென்றான்.

மனைவி மக்களை, மாடு மனைகளைப் பிரிந்து பொன்னையா, திரும்பிவராத பயணம் புறப்பட்டு விட்டார். வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டால் பிறகென்ன? ஓட்டமும் நடையுமாக அனைவரும் இடுகாட்டை அடைந்தனர்.

"நமக்கும் இதுதான் கதி!" எனச்சொல்லிப் பொன்னையாவின் மேனியைச் சிதையில் வைத்து நெருப்பு மூட்டினார்கள்.

"விளக்கின் மேலேயுள்ள கண்ணுடியைத் தொட மனிதன் பயப்படுகிறான் சுட்டுவிடுமென்று! இதோ, நெருப்பிலேயே இப்போது குளிக்கிறான்!" என்று முணு முணுத்தவாறு எல்லோரும வாய்க்காலில் குளித்துக் கரையேறினார்கள். அதற்குள் மயானத்துத் தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய ஊதியம், படி, முதலிய கணக்கு வழக்குகளைத் தீர்ப்பதில் சிங்காரமும் கண்ணனும் ஒருவரை மிஞ்சி ஒருவர் தீவிரம் காட்டினார்

ஊருக்குள் திரும்பும் வழியில் பொன்னையா குடும்பத்தின் எதிர்காலம் பற்றிய பேச்சு பலமாக எழுந்தது.

"அந்தப் பெண்ணை யார் தலையிலாவது கட்டியிருந்தால் நல்லா யிருந்திருக்கும்!"

"செத்ததுதான் செத்தான்; அந்தப் பெண்ணுக்கு ஒரு கல்யாணத்தை முடித்துவிட்டுச் சாகக்கூடாதா மனுஷன்?"

'கல்யாணம் பண்ணிவைகிறதுன்னு சாமான்யமா இருக்குதா? பணம் காசுவேண்டாமா? நல்ல மாப்பிள்ளை கிடைக்கவேண்டாமா?''

– இப்படி ஆரம்பமான பேச்சினூடே கரகமாடிக் கண்ணனும் கலந்துகொண்டான்.

'பொன்னையா மாமா மேலே ஒரு குற்றமும் இல்லே. குற்றமெல்லாம் என் மேலே தான்!''

–கண்ணனின் பேச்சுக்கேட்டு எல்லோரும் வியப்படைந்தனர்.

"உன்மேல் என்ன குற்றம்?'—ஒரு பெரியார் கேட்டார்.

"பொன்மணியைத் திருமணம செய்து கொள்ள வேண்டுமென்று என்னைப் படாதபாடு படுத்தினர் நான் தான் நாளைத் தள்ளிப்போட்டுக் கொண்டே காலங் கடத்தி விட்டேன்!'

கண்ணன் மிக அலட்சியமான முகபாவத்தோடு சர்வ சாதாரணமாக இதைச் சொல்லியவாறு நடந்தான்.

"கற்பூரத்தைக் கடடிக்கப் போறேன்னு ஊரெல்லாம் ரகளைப் படுது! நீ எங்க பொன்மணியைக் கல்யாணம் பண்ணிக்கிறது?" —இனனொருவர் சந்தேகம கிளப்பினர்.

"கற்பூரமாவது சூடனுவது? அந்தப் பயல் வீட்டில் யார் பெண் கட்டுவார்கள்? அவள் என்னமோ என் காலில் வந்து விழுகிறாள். அவளை நான் ஏற்றுகொள்ள வில்லையென்று தானை சில பேருக்கு ஆத்திரம் மீசை துடிக்குது!' என்றவாறு கண்ணன் சிங்காரத்தை ஜாடையாக நோக்கினான்.

சிங்காரமும கனல் தெறிக்கக் கண்ணனை உற்றுப் பார்த்து விட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

"கண்ணனுக்கும் பொன்மணிக்கும் பொருத்தம்தான். கடவுள் கிருபையினாலே சீக்கிரம் கல்யாணம் முடிஞ்சா பொன்னையாவோட ஆத்மாவும் சாந்தி அடையும்!' — ஒரு கிழவனர் கூனிக்கூனி நடந்தவாறு பொக்கை வாய் திறந்து இந்தப் பொன்மொழிகளைக் கொட்டினர்.

"சரிதான்; சுயமா வாங்க சாவு வீட்டிலே என்ன கல்யாணப் பேச்சு?"—தீச்சட்டி சிங்காரம் உரக்கக் கத்தினான் பயங்கரமான குரலில.

சிறிது நேரம் கூட்டத்தில் பேச்சில்லை எல்லோரும் அமைதியாக நடந்தார்கள். கண்ணன பேச ஆரம்பித்தான். அவன் குரலில இறுமாப்பும் தைரியமும் இருந்தது

"கல்யாணப் பேச்சு பேசினால் யாருக்கென்ன நஷ்டம்? தமக்குக் கிடைக்கவிலலையே என்று நாச்சைத் தட்டிக் கொண்டிருப்பவர்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும்- பாவம்!' என்று தனகதானை.

"எனக்கு எதற்கு கல்யாணம்? நான் நினைத்தால் ஆயிரம் பெண வரும்!"—சிங்காரம் கத்தினான்.

"வரும்! வரும்! வந்து தூக்கு மாட்டிக் கொள்ளும்!"

"அவனை மரியாதையாகப் பேசச் சொல்லுங்கள்!"

"கல்யாணம் வேண்டாம் என்கிறவன் என் கல்யாணத்தில் எதற்காகத் தலையிட வேண்டும்?"

"பொன்மணிக்காக வாதாட எனக்கு உரிமை யுண்டு!"

"வருங்காலக் கணவனுகிய எனக்கு இல்லாத உரிமை இவனுக்கு எப்படி வந்தது?

"கணவன்! உனக்கு மாலையிடத்தான் துடிக்கிறானோ?"

"பிறகென்ன—உனக்காக மாலையிடப் போகிறான்?

இருவரும் ஒருவரை யொருவர் கடித்து விழுங்கி விடுவதைப் போல எதிர் எதிரே நெருங்கி விட்டனர். யாரும் அவர்களை விலக்கிடத் துணியவில்லை.

அறவாழி, தீச்சட்டி சிங்காரத்தின் கையைப் பிடித்து தனியே அழைத்தான். அதற்குள், கண்ணன் பெருங் கூச்சலிட்டு அறவாழியின் கன்னத்தில் "பளார், பளார்" என அறைந்து விட்டான். அவ்வளவுத்தான்; சிங்காரம் கண்ணன் மீது பாய்ந்தான். இருவரும் தெருவில் கட்டிப் புரண்டார்கள்.

பொன்னையாவின் சாவுகூட பறந்து போய்விட்டது அவர்களை சமாதானப்படுத்துவதுதான் ஊராருக்குப் பெரிய தலை வேதனையாகிவிட்டது

நெடுநேரம் ஒருவருக்கொருவர் சளைக்காமல் சண்டையிட்டு, இறுதியில் இருவரும் எழுந்து நின்று புலியைப் போல் உறுமினார்கள். "உன் உயிரை எடுக்கிறேன் பார்!" என்று இருவரும் ஏக காலத்தில் கத்தினார்கள்.

பஞ்சாயத்தார் பரமசிவத்துக்கு செய்தி எட்டி அவர் அங்கே ஓடோடி வந்தார் நடந்ததை விசாரித்தார்

"பொன்மணி என் மனைவி" என்று முழங்கினான் கண்ணன்.

அறவாழிக்கு இருதயம் கனத்தது. தன்னைத் தானே அமைதிபடுத்திக் கொண்டான். தனக்கும் தன் காதலி பொன் மணிக்கும் அந்த ஊரில் ஒரே ஒரு துணை சிங்காரம் தான் என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

"பொன்மணி உன் மனைவியல்ல!" — சிங்காரம் ஆங்கார மாகப் பதில் சொன்னான்.

"யார் எதிர்த்தாலும் சரி- அவள் எனக்குத்தான் சொந்தம்!" —கண்ணன் கர்ச்சித்தான்.

"கனவு காணாதே! அவள் எனக்குத்தான் சொந்தம்!"— என்று சிங்காரம் ஆவேசக்குரல் எழுப்பினான்.

சிங்காரத்தின் குரலைக் கேட்ட அறவாழிக்குத் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. அப்படியே மரம்போல் நின்று விட்டான் தந்தையை இழந்த துக்கத்தில் வந்துகொண்டியிருந்த சுருளிமலை அவர்களுக்கு எதிரே வந்து நின்றான். அவன் கண்கள் சிவந்திருந்தன.

"என் அக்காளைக்ப் பற்றி தெருவிலே பேசி சண்டைபோட உங்களுக்கு என்ன யோக்யதை இருக்கிறது? எங்கள் வீட்டில் பெண்கட்ட வேண்டுமானால் ஒரு நிபந்தனை யிருக்கிறது!" என்றான் நிதானமாக!

"என்ன நிபந்தனை?"—பஞ்சாயத்தார் கேட்டார்.

"கோயில் காளை சிவாவை யார் அடக்குகிறார்களோ அவனுக்குத்தான என் அக்கா மாலையிடுவாள்!"

"ப்பூ! இதுவா பிரமாதம்? நான் அடக்குகிறேன் அந்தக் காளையை! எனக்கேதான் பொன்மணி!"—கண்ணன் வெற்றிச் சிரிப்பு சிரித்தான்

"சுருளிமலை! உன் நிபந்தனைக்கு நான் கட்டுப்படுகிறேன். ஆனால் ஒன்று; பஞ்சாயத்தார் அவர்களே! காளையை அடக்குகிறவனுக்குப் பொன்மணி! அடக்காமல் தோற்று விட்டால் அவன் கரும்புள்ளி செம்புள்ளி குத்திக்கொண்டு கழுதைபின் மீது ஊர்வலம் வரவேணடும்!" என்று கண்டிப்பாகக் கூறினான் சிங்காரம்.

"ஓ, நான் தயார்!" என்றான் கண்ணன்.

அறவாழிக்கு இருதயம் நின்றுவிடும் போலிருந்தது. யார் கண்ணிலும் படாமல் வேகமாகப் பள்ளிக்கூடம் நோக்கிப் புறப்பட்டான்.

## 25

காதல் ஒரு வானவில் என்பார்கள். அதன் வர்ண ஜாலங்களைக் கண்டறிய முடியாது என்பார்கள். ஒரு சிலர் காதல் வற்றாத ஜீவ நதி யென்பர். வேறு சிலர், கைபட்டால் உடைந்து விடும் கண்ணாடிதான் காதல் என விளக்கம் கூறுவர். காலையும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் நோய் என்று செல்லமாகத் திட்டினார் திருவள்ளுவர். காதல் ஒரு கடல்; அதற்குக் கரையே கிடையாது என்பவர்களும், காதல் ஒரு அழுக்குக்குட்டை; கால் வைத்தால் சேற்றில் அமிழ்ந்து விடவேண்டும் என்பவர்களும் உலகத்தில் உண்டு.

காதலைப்பற்றித் தெளிவாகச் சொன்னவர்கள் யாருமேயில்லை. காதல் என்பது இன்னதுதான் என்று மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், முடிவாக "அது ஒரு குழப்பம்" என்று

தான் சொல்ல வேண்டும். அந்தக் குழப்பத்திலே சிக்கி அபபோது தான் விடுபட்ட அறவாழிக்கு மேலும் ஒரு பெருங் குழப்பம ஏற்பட்டு விட்டது.

தன் காதலுக்கு எதிராகக் கரகமாடிக் கண்ணணும் ஆதர வாகத் தீச்சட்டி சிங்காரமும் இருப்பார்கள் என்றுதான் அ வ ன் கடைசியாகக் கணகுப் போட்டிருந்தான். இப்போது சிங்காரமும் எதிரியாகி விடடது போல் அவனுக்குத் தோன்றியது.

ஊரார் தீர்ப்பின்படி இருவரில் ஒருவர் காளையை அடக்கி வெற்றி பெறுவார்கள். பொன்மணி அவர்களில் ஒருவனுக்குத் தான் சொந்தமாகி விடுவாள். இனித் தன் நிலைமை என்ன ஆவது? அறவாழியினுல் பதில் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

பொன்மணியின் நிலைமையும் நெருக்கடியாகி விட்டது ஆயி னும் அவள் மனதில் மூண்ட வேதனையை வெளிக்காட்டிக்கொள் ளாமல் பொறுமையாக இருந்தாள் கற்பூரத்தின் உள்ளமோ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்ததும். கடைசியில் கண்ணன் தன்னே ஏமாற்றி விட்டானே யென்று ஏங்கினுள்

வீட்டுக்குள்ளேயே அவளுக்கு இரண்டு மூன்றுதடவை ஆவேசம்வந்து தானுகவே அடங்கிவிட்டது. வெளியில் கிளம் பவே அவளுக்கு வெட்கம்! அண்ணன் சிங்காரமும் வீட்டுக்கு வருவதில்லே. அவன் வந்தாலும் அவன் முகத்தில் விழிப்பதற்கு அவளால்முடியாது. அழுது அழுது முகமெல்லாம் வீங்கிவிட்டது. இப்பொழுது அவளுடைய பிரார்த்தனே யெல்லாம் காளையை அடக்குவதில் சிங்காரம் வெற்றிபெறவேண்டு மென்பதுதான். அவன் வெற்றிபெற்றுல் கண்ணன் பொன்மணியை இழந்து விடுவான். இறுதியில் அவன் தன்னே நாடித்தான் ஓடிவர வேண்டும். அப்போது அவனுக்குத் தகுந்த புத்திகள் கற்பித்துத் தன் அடிமையாக ஆக்கிக் கொள்ளலாம்.

இப்படி ஒரு ஆசை அவள் உள்ளத்தில் அலேமோதிக் கொண்டிருந்த காரணத்தால்தான் அவளால் உயிரோடிருக்க முடிந்தது. சுருளிமலே, தன் நன்பன் சிவாவுக்கு மிகுந்த சிரமப் பட்டு சத்துள்ள ஆகாரங்களே யெல்லாம் கொடுத்து வந்தான்.

காளையை இன்னும் வலுவுள்ளதாக ஆக்குவதற்கு என்னென்ன செய்யமுடியுமோ எல்லாம் செய்தான். சிங்காரமும், கண்ணனும் காளையை எதிர்ப்பதற்குத் தங்கள் உடலைத் தயார் படுத்திக் கொண்டிருந்தனர். இதற்குள் பொன்னையாவின் பதினாறும் நாள் நினைவு விழாவும் வந்துவிட்டது. பூஞ்சோலை, அந்த நாளை சிக்கனமாகவே செய்துமுடிக்க வேண்டியதாயிற்று.

கையிலிருந்த பொருளாதாரத்திற்குத் தக்கவாறு கணவனுக்குச் செய்யவேண்டிய சடங்குகளை அவள் நடத்திவைத்தாள். பஞ்சாயத்தார் பரமசிவம் ஊரிலுள்ள முக்கிய மானவர்களை மட்டும் கூட்டிக்கொண்டு பூஞ்சோலையைச் சந்தித்துப் பேசப் புறப்பட்டார். விதவைக் கோலமும் விழியிலே நீரும் கொண்ட பூஞ்சோலை, ஊர்ப் பிரமுகர்களின் வருகைக்கான காரணத்தை முதலில் புரிந்துகொள்ளமுடியவில்லை. அவளிடம் சிங்காரம் கண்ணன் இருவரின் மனை நிலை விளக்கப்பட்டது.

"இருவருமே பொன்மணியைத் திருமணம்செய்து கொள்ளப் போட்டி போடுகிறார்கள். இதை இப்படியே விட்டுக் கொண்டே போனால் திடீரெனப் பொன்மணியின் உயிருக்கோ, அல்லது கற்புக்கோ கூட ஆபத்து ஏற்படலாம். அதனால்தான் ஊரார் எல்லாம்கூடி சுருளிமலை சொன்ன நிபந்தனையின்படி இருவருக்கும் காளையடக்கும் போட்டியை உண்டாக்கித் தந்திருக்கிறோம்" என்று பஞ்சாயத்தார் பூஞ்சோலையிடம் விபரம் கூறினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது பொன்மணி குறுக்கே ஓடிவந்து தனக்கு யாரையும் திருமணம்செய்து கொள்ளவே இஷ்டம் இல்லையென்றும் தனக்கு இப்போது திருமணமே தேவையில்லை என்று கூச்சல் போடத்துவங்கினாள். அவள் புலம்பல் எதுவும் ஊரார் உபதேசத்தின் முன்னே எடுபடவில்லை. இறுதியாக ஊராரை எதிர்க்க பூஞ்சோலையும் இஷ்டப்படாமல் அவர்கள் முடிவின்படியே விட்டு விட்டாள். அங்கேயே போட்டிக்கு நாள் குறிப்பிடப்பட்டது. அந்த மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று போட்டிக்குத் தேதி நிர்ணயித்தார்கள்

இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது. பக்கத்து கிராமங்களுக்கும் எட்டியது. எங்கும் ஒரே பரபரப்பு!

"என்னடா இது; பழையகாலத்திலே கேள்விப்பட்டிருக்கிறோம்; யானையை அடக்கினான்–குதிரையை அடக்கினான்—பெண்ணைக் கருயாணம் செய்துகொண்டான் என்று! இப்போது கண் எதிரேயே நடக்கப் போகிறதே!" — எனப்பேசி வியப்பிலாழ்ந்தார்கள் அனைவரும். அமைதியின்றித் தடுமாறிக் கொண்டிருந்த அறவாழியின் முன்னே சிங்காரம் வந்துநின்றான்.

"என்ன அறவாழி! நான் எதிர்பார்க்கும் நேரம் மிக சீக்கிரமே வரப்போகிறது!" என்றான்.

"ஏது? போட்டி நாள்தானே?" என்றான் அறவாழி.

"போட்டி மட்டுமல்ல! போட்டியிலே கண்ணன் தோற்பான். தோற்றதும் அவனுக்குக் கும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதையிலே ஊர்வலம் விடுவேன். என் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விடுவேன்!"

"வாக்குறுதியை நிறைவேற்றுவது மட்டுமா? பொன்மணியுமல்லவா கிடைக்கப் போகிறாள்!"—அறவாழி, தன் வேதனையை மறைத்துக் கொண்டு பேசினான்.

"என் தந்தை எனக்கு ஏன் இப்படிக் கட்டளையிட்டார் என்பதை உனக்குச் சொல்லவேண்டுமல்லவா? அதற்காகவே இங்கு வந்தேன்!" என்று பல்லைக் கடித்துக்கொண்டு கூறினான் சிங்காரம். அவ்வளவு ஆத்திரம் அவனுக்கு அந்தக் கண்ணன் குடும்பத்தின்மீது!

"சொல்லுகிறேன் கேள்!" என்று அவன் மடமட வென்று பேச ஆரம்பித்தான்.

அறவாழிக்கு சிங்காரத்தின் கதையைக்கேட்க நேரமும் இல்லை; நினைப்பும் இல்லை. "இப்போது எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது" என்று சொல்லி அவனிடமிருந்து மெதுவாக நழுவிவிட்டான்.

சிங்காரத்திட மிருந்து விடுபட்ட அறவாழி, எதிரே சுருளி மலையைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

சுருளிமலையும் காளைப் போட்டியைப் பற்றியே அவனிடம் பேச ஆரம்பித்தான். அறவாழிக்கு அதைக் காது கொடுத்துக் கேட்க மனமில்லை. போடடியில் தன் காளையின் உயிருக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பது சுருளி மலைக்குப் பெருங் கவலை. ஏன் திடீரென்று ஆத்திரத்தில் இப்படி யொரு போட்டியைப்பற்றிச் சொன்னேனும் என்று அவன் தனக் குள்ளாகவே மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான். தானும் கோயில் காளை சிவாவும் எப்படி சிநேகிதமானேனும் என்பதை அறவாழியிடம் கூறவே அவன் வந்தான்.

அறவாழி அதை லட்சியம் செய்யாமல் அவனிடமிருந்து பிரிந்து சென்று விட்டான். அறவாழி, சிறிதும் சஞ்சலமின்றி நேரே பொன்மணி வீட்டுக்கே சென்றான். அங்கே பூஞ்சோலை மட்டுமே இருந்தாள். அவளிடம் பேசியதிலிருந்து பொன்மணி சந்தைக்குப் போயிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான். தந்தை இறந்த பிறகு பொன்மணி அவனை சந்திக்கவே யில்லை.

சிங்காரம்—கண்ணன் தகராறுகளையும் காளை மாட்டுப் போட்டிச் செய்திகளையும் கேள்விப்பட்டு அறவாழி எவ்வளவு மனமுடைந்திருக்கிறாரோ; எப்படி அவரை சந்திப்பது என்று அவள் மனக்கிலேசம் கொண்டிருந்தாள். அதேபோல் எண்ண மிட்டிருந்த அறவாழியும் அவளை சந்திக்க விரும்பாமல்தான் இருந்தான்.

போட்டி நாள் நெருங்க நெருங்க அவனுக்குப் பொன்மணி யைப் பார்த்துவிட வேண்டும் போலிருந்தது. சந்தை கூடு மிடத்தை நோக்கிப் புறப்பட்டான். சந்தை முடிந்து மக்கள் வழியில் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அந்தி மயங்கும் வேளை ...அறவாழி பொன்மணியின் வருகையை எதிர்பார்த்தவாறு போய்க்கொண்டே யிருந்தான். அவளும் பானைகளை விற்று விட்டு, வெறுங் கூடை யொன்றை மட்டும் தூக்கிக்கொண்டு எதிர் வந்தாள். இருவரும் சந்தித்தனர். ஒருவரோ டொருவர் பேசாமல் நின்றனர். இருவர் கண்களிலும் நீர் வீழ்ச்சியெனக் கண்ணீர் கொட்டியது.

பொன்மணி எதுவும் பேசாமல் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். அறவாழியும் அவளோடு வந்துகொண்டே யிருந்தான். ஊர்க் கோடியில் உள்ள ஒரு பாழுங் கிணற்றி னருகே வந்ததும் பொன்மணி நின்றுள். அவனும் நின்றான். அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவாறு அவனையே பார்த் தாள். அதுவரையில் பேசாமல் வந்த அவள் அவனிடம் இரண்டொரு வார்த்தைகள் கூறினுள்.

"எதுவும் முழுகிப் போய் விடவில்லை...உங்கள் பொன்மணி உங்களைத் தவிர வேறு யாருக்கும் சொந்தமில்லை. இந்தப் பேச்சு தவறுமேயானுல் என்னை எங்கும் தேடவேண்டாம்; இந்தக் கிணற்றுக்குள்ளேதான் கிடப்பேன்!" என்று கூறிவிட்டு அவன் பதில் சொல்வதைக் கேட்பதற்கு ஒரு விநாடிகூட நிற்காமல் மிக வேகமாக அதைவிட்டு அகன்றுள்.

அறவாழி, அவள் போவதையே பார்த்துக்கொண்டு அப்படியே நின்றான். அவன் நிலைமை அவனுக்கே வேடிக்கை யாக இருந்தது. அசைவற்று நின்று கொண்டிருந்த அவன் முதுகில் யாரோ ஓங்கித் தட்டவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த் தான். பஞ்சாயத்தாரின் மகன் பைத்தியக்கார சிரஞ்சீவி இளித்துக் கொண்டே அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

"ஓ...உங்க ரெண்டு பேருக்கும் இப்படி நடக்குதா விஷயம்? இப்பவே போயி எங்கப்பா கிட்ட சொல்றேன் பாரு!" என்று கத்தினுன்.

அறவாழிக்கு மேலும் வேதனை! பைத்தியம் அந்த இடத்தை விட்டு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தது!

## 26

கண்ணைக் கசக்கியவாறு வீட்டுக்கு வந்த பொன்மணியைப் பார்த்துப் பூஞ்சோலை திடுக்கிட்டாள். ஐந்தாறு நாட்களாகவே அவள் வாட்டமாயிருப்பதைப் பூஞ்சோலை அறிந்திருந்தும் எது வுமே அவளிடம் கேட்காமலிருந்துவிட்டாள். சந்தைக்குப்போன பெண் அழுதுகொண்டு வருவதற்குக் காரணம் எதுவாகயிருக்கும் என அறிவதிலே பூஞ்சோலைக்கு ஆவல் அதிகமாயிற்று.

"என்னம்மா இது; வருத்தமா வாரே? ஏன்—சந்தையிலே என்ன நடந்தது?"

பூஞ்சோலையின் கேள்விக்குப் பொன்மணியால் பதில் கூற இயலவில்லை. மௌனமாக இருந்தாள். அவளையும் மீறிக் கண்கள் நீரைப் பொழிந்து கொண்டிருந்தன.

"ஏன்? வழியில் பானைகளை உடைத்துவிட்டாயா? போனால் போகிறதே—அதற்காக அழுது என்ன பிரயோஜனம்?"

பூஞ்சோலை, அவளே ஒரு காரணத்தைக் கண்டு பிடித்துத் தேறுதலும் கூறினாள். அதுவல்ல காரணம் எனபதுபோல் பொன்மணி, பானை விற்ற காசுகளைத் தாயாரின் கையில் கொடுத்துவிட்டுத் தேம்பித் தேம்பி அழுதாள்.

"சொல்லம்மா விஷயத்தை! என்ன நடந்துச்சு?"

"இன்னும் என்னம்மா நடக்க வேண்டும்? எல்லோரும் சேர்ந்து என் தலையில் கல்லைப் போடப் போகிறீர்களே!"

தாயாரைக் கட்டிக்கொண்டு செருமிச் செருமி அழத் தொடங்கினாள். பூஞ்சோலையின் கண்களும் கலங்கின. அவளால் மகளை எப்படி சமாதானப்படுத்த முடியும்?

"ஏம்மா—ரெண்டு பேரும் போட்டி போடுருங்க! ரெண்டு பேரில் யார் ஜெயித்தாலும் உன்னை அன்பா வச்சுத்தான் குடித்தனம் நடத்தப் போருங்க! இதுக்கு ஏன் கவலைப்படணும்?

"இருவரையுமே எனக்குப் பிடிக்கவில்லையம்மா. அவர்களில் யாரோடு சேர்ந்து வாழ்க்கை நடத்தவும் நான் தயாராயில்லை வெற்றி பெற்றவன், வேண்டுமானால் என் பிணத்துக்குத்தான் தாலி கட்டவேண்டும்!"

"இது என்னம்மா சங்கடம்? இடி விழுந்து கிடக்கிற என் மனசிலே ஏதேதோ சொல்லி இன்னும் கலக்கத்தை அதிகப் படுத்துறியே கண்ணு! உனக்கு யாரைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு இஷ்டம்? அதைத்தான் சொல்லேன்!"

"என் இஷ்டத்தைத் தெரிவித்தால் அப்படியே நடத்தி விடுவீர்களா?"

"உன் ஆசையைத்தான் சொல்லேன்!"

"நம் ஊருக்கு வந்திருக்கிறாரே ஆசிரியர்—அவரும் நானும் திருமணம் செய்துகொள்வதாகத் தீர்மானம் செய்து கொண்டிருக்கிறோம் அம்மா!"

இதைக் கூறிவிட்டுப் பூஞ்சோலையின் காலடிகளில் விழுந்து அழ ஆரம்பித்தாள் பொன்மணி.

"அய்யோ! அப்படியா என் தங்கமே! இந்த வம்புக்கு நான் என்ன செய்வேன்? அந்த அறவாழி அருமையான பையன்தான். உன் அழக்குக்கு ஏற்றவன்தான். ஆனால் அந்தப் பிள்ளையாண்டானுக்கும் உனக்கும் கல்யாணம் செய்ய ஊர் ஒத்துக்கொள்ளாதே! ஊரார் தீர்மானத்துக்கு விரோதமாக நடந்தால் நம்மை அனுதைக் குடும்பமா ஒதுக்கி விடுவார்களே பொன்மணி!"

பூஞ்சோலை கதறினாள். பொன்மணி விம்மினாள். மகளின் மன வாட்டத்தைப் போக்க மார்க்க மறியாது தவித்தாள் அன்னை! அன்னையின் வேதனையை அதிகப்படுத்துகிறோமே யென்று தனக்குத் தானே நொந்து கொண்டு சுருண்டு கிடந்தாள் மகள்.

அப்போது சுருளிமலை வேகமாக உள்ளே நுழைந்தான். அவன் நடவடிக்கையில் அது வரையில் என்றுமே காணப்படாத சுறுசுறுப்பு அவனிடம் காணப்பட்டது. பேச்சிலும் விறுவிறுப்பு இருந்தது.

"ஏனம்மா கவலைப்படுறீங்க? உங்க கவலையும் அக்கா கவலையும் தீர ஒரு வழி கண்டுபிடிச்சுட்டேன்" என்றான். இருவரும் அவனைப் பரபரப்பாகப் பார்த்தார்கள்.

"போட்டியில் இப்போது கலந்து கொள்கிறவர்கள் ரெண்டு பேர் அல்ல—மூணு பேர்!" என்றான்.

"மூன்றுவது ஆள் யார்?"

"அதுதான் அறவாழி!"

"யார் அவரா?"-பொன்மணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவ்வளவு முரட்டுக் காளையை அடக்குவதற்கு அவரால்முடியுமா என்ற பீதி அவளைத் திகிலடையச் செய்தது.

"நீ ஏனக்கா வருத்தப்படுற? நீ அறவாழியையே கல்யாணம் பண்ணிக்கலாப; அவ்வளவுதானே!" என்று கூறிவிட்டுச் சுருளிமலை வீட்டைவிட்டு வெளியேறினான்.

சுருளிமலை தந்த தகவல் பொன்மணிக்கு மிக அதிர்ச்சியாகி விட்டது. சாப்பாடுகூடத் தேவையில்லை யென்று கூறிவிட்டு பட்டினியாகவே தரையில் படுத்து கண்கள் களைத்துப் போகும் வரையில் அழுது தீர்த்தாள்.

●

பைத்தியக்கார மகன் மூலம் அறவாழி பொன்மணி சிநேகி தத்தைக் கேள்விப்பட்ட பஞ்சாயத்துக்காரரும் அதிக ஆத்திர மடைந்தார். அருகேயிருந்த கண்ணனும் இந்த ஆத்திரத்தை அதிகப்படுத்தினான். அறவாழியை எப்படியாவது தொலைத்து விடதான் வேண்டுமென்று கங்கணம் கட்டிய அவர்கள் காதில், அறவாழியும் போட்டியில் கலந்து கொள்ளப் போகிறான் என்ற செய்தி எட்டியது.

"தொலைந்தான் பயல்!" என்றான் கண்ணன்.

பஞ்சாயத்தார் பரமசிவம், சிங்காரத்தையும் கண்ணனையும் சமாதானப்படுத்தச் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாகி, இப் போது இருவரையுமே மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் காட்சி யைக் காணுகிற நெருக்கடிக்கு ஆளாகி சங்கடப்பட்டுக்கொண்டு இருந்தார். அந்த சங்கடத்தை சற்றுத் துடைப்பதுபோல் அறவாழி போட்டியில் கலந்து கொள்வது அவருக்கு சந்தோ ஷத்தை அளித்தது. ஏனெனில் அறவாழியின் கொள்கைகள் அவருக்கு உடன்பாடானவை அல்ல. முதல் சந்திப்பிலேயே இருவருக்கும் மன எரிச்சல் அதிகமாகி விட்டது. கோயில் காளை சிவா, எப்படியும் அறவாழியைப் பதம் பார்த்துப் பாடம் கற்பித்து விடும் என்று அவர் நம்பினார். போட்டி நாளும் எல்லோருடைய ஆவலையும் தூண்டிக்கொண்டே நெருங்கிவிட்டது.

●

அன்றுதான் கடைசி ஞாயிற்றுக்கிழமை! சிற்றூரில் மாரி யம்மன் கோயில் திடலில் ஏராளமான மக்கள் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டார்கள். உள்ளூர் வெளியூர் மக்கள் கட்டு சாதமூட்டை

களுடன் திடலில் முகாமிட்டனர். பஞ்சாயத்தார் பரமசிவமும் வேறுசில முக்கிய பிரமுகர்களும் பிரதான இடத்தில் அமர்ந்து போட்டியைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்.

போட்டி தொடங்குவதற்குமுன் ஒரு சிறு ஐயப்பாடு எழுந்தது. மூவருமே காளையை அடக்கிவிட்டால் என்ன செய்வது என்பதுதான் அந்தக் கேள்வி! பைத்தியக்காரனுக இருந்தாலும் வேடிக்கையாக சிரஞ்சீவி கேட்ட கேள்வி அது! அது பெரும் பிரச்சினையாகி விட்டது. ஒவ்வொருவரும் காளையிடம் தனித் தனியே போரிடவேண்டும். மூவருமே காளையை அடக்கிவிட் டால், பிறகு மூவருக்குள்ளே வேறு ஒரு போட்டியை ஏற்படுத்தி அதில் ஜெயிப்பவர்களுக்குப் பொன்மணியைப் பரிசாகத்தருவது- என்று பேசி முடிவெடுக்கப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்தில் காளையுடன் சுருளிமலை திடலுக்கு வந்து சேர்ந்தான். கண்ணன், சிங்காரம், அறவாழி மூவரும் ஒருவர்பின் ஒருவராகத் திடலுக்குள் நுழைந்தார்கள்.

கற்பூரத்தின் கண்கள், பெண்கள் கூட்டத்திலேயிருந்து திடலிலே கம்பீரமாக நிற்கும் கண்ணன்மீது பாய்ந்து அவனை சபித்துக் கொண்டிருந்தன.

முதலில் சிங்காரம் போட்டியில் குதிக்க வேண்டும் என்று குலுக்குச்சீட்டு விழுந்தது. சிங்காரம் போருக்குத் தயார் ஆனான். அவன் நெஞ்சு விம்மியது. கண்கள் அகலமாயின. சிறிது அதிகமாகவே அவன் அருந்தியிருந்த சாராய வாடை கூட்டத் தினர் மூக்கைத் துளைத்தபடி யிருந்தது. போட்டியில் தனக்கே வெற்றி யென்று அவன் நம்பினான். அவன் இதயத்திலே பேச் சொலி எழுந்தது.

"பொன்மணியை அடைவதற்காக இந்தப் போட்டி இல்லை! இல்லவே இல்லை! போட்டியில் பரிசாகக் கிடைக்கும் அவளை என் தங்கையாக பாவிப்பேன். அவளை அடையவேண்டியவன் அறவாழி. முதலில் எனக்கு வெற்றி! அடுத்தது கண்ணனது தோல்வி! மூன்றுவதாக அறவாழியைப் போட்டியில் குதிக்காமல்

தடுப்பேன்! பொன்மணியை அவன் கையில் கொடுப்பேன். எனக்கு வேண்டியதெல்லாம் என் தந்தையின் கட்டளையை நிறை வேற்றுவதுதான். அந்தக் கண்ணனுக்கு கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கழுதை ஊர்வலம் விடுவதுதான்! என் தந்தையை அவமானப் படுகுழியிலே தள்ளிய குடும்பத்தைப் பழிவாங்கிக் கொள்ள சரியான நேரம் வந்துவிட்டது! கண்ணனுடைய அப் பன் என் தாயின் கற்போடு விளையாட முயன்றானும். அதைத் தடுத்து என் தாயைக் காப்பாற்ற முயன்ற தந்தையைச் செருப் பினால் அடித்தானும். இந்தச் செய்தியைக் கூறிவிட்டல்லவா என் தந்தை உயிர் துறந்தார்! "உன்னை மட்டுமல்லடா—உன் மகனை—என் மகன் செருப்பால் அடிப்பான். உன் பேரனை என் பேரன் செருப்பால் அடிப்பான்!" என்று சபதம் செய்தானும் அந்தச் சண்டாளன்! அய்யோ; அவன் என் கையில் சிக்க வில்லை. இப்போது அவன் மகன்தான் சிக்கினான்!"

சிங்காரம், கண்களில் கனல் பறக்கத் தோளைத் தட்டிக் கொண்டு காளையிடம் நெருங்கினான். வேக வேகமாகப் பொன் மணியும் அங்கு வந்து சேர்ந்தாள். அவளது மேனி நடுங்கிக கொண்டிருந்தது. காளையைச் சுருளிமலை அவிழ்த்து விட்டான். அதன் முதுகிலே ஒரு தட்டு தட்டிவிட்டான். சிங்காரமும் காளை யும் நெடுநேரம் போரிட்டார்கள். புழுதி பறந்தது திடலில். சிங்காரத்தின் உடம்பெல்லாம் காயம்! வெற்றி அவனுக்கா — அல்லது காளைக்கா — என்பதை யாருமே நிர்ணயிக்க முடியாமல் தவித்தனர். சிங்காரத்தின் உடல் வலிமைச் சிறிது சிறிதாகக் குறைந்தது. அதற்கு மாறுக உள்ளத்தின் வலிமை அதிகமா யிற்று. எப்படியும் ஜெயித்தே தீரவேண்டுமென்று காளையின்மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். காளை மிகலாவகமாக ஒதுங்கி தன் அழுத்தமான கொம்புகளால் அவன் தொடையைக் கிழித்து அவனைக் கீழே சாய்த்து விட்டது!

சிங்காரத்தினால் எழ முடியவில்லை. மண்ணில் குப்புறவீழ்ந் தான். சுருளிமலை ஓடிப்போய்க் காளையைப் பிடித்துக்கொண் டான். சிங்காரத்தை வைத்தியர்கள் சிலர் சூழ்ந்து கொண்டு சிகிச்சைக்குத் தூக்கிக்கொண்டு ஓடினர்கள்.

"சிவாவுக்கு சிறிது நேரம் ஓய்வு வேண்டும!" என்று கூறி சுருளிமலை காளையை ஓட்டிக் கொண்டு போனான்.

பிறகு பதினைந்து நிமிடம்கழித்துக் காளையுடன் சுருளிமலை திடலுக்கு வந்தான்.

இப்போது கண்ணன், போருக்குத் தயாராக நின்றான். சீட்டு அவன்பேருக்கு விழுந்தது. கண்ணனின் முதல் பாய்ச்சல் மிக முரட்டுப் பாய்ச்சலாக அமையவே, காளை சற்றுமிரண்டு கீழே விழுந்தது. ஆயினும் உடனே எழுந்து கண்ணன்மீது பாய்ந்தது. போட்டியைக் கண்ணுற்ற அனைவரும் வெற்றி கண்ணனுக்கே எனமுடிவு கட்டினர்கள். கற்பூரத்தின் நெஞ்சு நெருப்பாகியது. தீச்சட்டி சிங்காரத்தைவிட கண்ணன் வெகு தீவிரமாகக் காளையுடன் போரிட்டான்.

போரின் போக்கு கண்ட அறவாழி, பொன்மணி நின்ற பக்கம் திரும்பினன். அவள் கண்களை மூடிக்கொண்டு எங்கேயோ சிந்தையை அலையவிட்டுக் கொண்டிருந்தாள்.

அக்காளையும் அறவாழியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்ற சுருளிமலை அக்காளிடம் சென்று, "அக்கா! கவலைப்படாதே! கண்ணன் தோற்றுவிடுவான்!" என்றான்.

"அவன் தோற்றால் எனக்கென்ன? அறவாழி ஜெயிக்க வேண்டுமே!" என்று அவள் சொல்லவில்லை. நினைத்துக் கொண்டாள்.

அதற்குள், கூட்டத்திலிருந்து பெருங்கூச்சல் கிளம்பியது. கோயில்காளை சிவாவின் காலடியிலே கண்ணன் ரத்தவெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தான் அவனது வயிற்றுப் புறத்தைக் காளையின் கொம்புகள் குசி பார்த்துவிட்டன.

"உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லை!" எனத்தைரியம்கூறி வைத்தியர்கள் அவனை அவசர அவசரமாகத் தூக்கிச்சென்றனர். அறவாழியை பொன்மணி பார்த்தாள். ஓடிவந்து அவன் காலிலே விழுந்து.

"என்னை மறந்துவிடுங்கள் — இந்தப் போட்டி உங்களுக்கு வேண்டாம்!" என்று கதறினாள்.

## 27

அண்ணனும் தோற்றுவிட்டான்—கண்ணனும் தோற்று விட்டான் என்றதும் கற்பூரத்திற்கு ஒரே குழப்பமாகி விட்டது உள்ளம். கண்ணன் உயிர் பிழைப்பானு என்ற கவலை இப்போது அவளைச் சூழ்ந்து கொண்டது. போட்டியின் முடிவைப்பற்றி அவள் அறிவதற்கு ஆவல் கொண்டிருந்தாலும் அங்கு நிற்காமல் கண்ணனைப் பார்க்க ஓடிவிட்டாள்.

கண்ணன், விழிகளைத் திறக்காமல் பிணம்போல் கிடந்தான். மருத்துவர்கள் ஓடியாடித் தங்கள் திறமையைக் காட்டி கொண்டிருந்தார்கள்.

சிங்காரம் ஆபத்தான நிலைமையில் இல்லாவிட்டாலும் வலி பொறுக்க முடியாமல் கத்திக் கொண்டிருந்தான்.

கற்பூரம் இருவரையும் பார்த்துப் பார்த்து கண்ணீர் விட்ட படி அங்கு நின்று கொண்டிருந்தாள். அண்ணன் பக்கத்திலே அவளுக்கு நெருங்குவதற்குப் பயம்–என்ன சொல்லி விடுவானே என்ற அச்சம்!

இப்படி இக்கட்டான நிலையில் தவித்துக் கொண்டிருந்த அவள் காதில் மாரியம்மன் திடலில் ஒலித்துக் கொண்டிருந்த முழக்கம் சற்று வேகமாகக் கேட்டது.

வலியினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த சிங்காரம் "என்ன? அறவாழி போட்டியில் குதித்துவிட்டானு?" என்று தனக்குத் தானே உரக்கக் கேட்டுக் கொண்டான்.

அவன் நினைத்தபடியே அறவாழி, காளையுடன் போருக்குத் தயாராகிவிட்டான்! பொன்மணியோ அவன் காலடியில் கிடந்த வாறு, "என்னை மறந்து உயிர் வாழுங்கள்" என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

இதைக் கண்ணுற்ற ஒரு பெரியவர், "இனிமேல் எதற்காகப் போட்டி? போட்டி போட்டவர்கள் இருவருந்தான் தோற்று விட்டார்கள். பொன்மணி, அவளுக்கு இஷ்டமானவனைக் கட்டிக் கொள்ளட்டுமே!" என்றார்.

உடனே பஞ்சாயத்தார் பரமசிவம் அதை மறுத்தார். "போட்டியில் ஜெயித்தவன்தான் பொன்மணியை அடையலாம் என்பது பொதுவான பந்தயம். அதை மாற்றக்கூடாது!" என்பது அவரது வாதம்.

அறவாழி, அந்த வாதத்தை ஏற்றுக் கொண்டான். பொன் மணியினுல் முடியவில்லை. எப்படியாவது அறவாழியின் உயிரைக் காப்பாற்றிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு அவனுக்கு நேரே நின்று தைரியத்தோடு எதிர்த்தாள்.

அறவாழி, அவளைப் பார்த்து "பொன்மணீ...! என்னைக் கோழையாக்காதே!" என்று கத்தினுன்.

அதற்குள் சுருளிமலை காளையை சற்றுக் காலாற்றி ஓய்வளித்துக் கொண்டு வருவதற்காக ஓட்டிக்கொண்டு புறப் பட்டான்.

பொன்மணி, சுருளிமலையிடம் சென்று "தம்பீ! காளையோடு எங்கேயாவது ஓடிவிடு! அவரைக் காப்பாற்று!" என்று காதோடு காதாகக் கெஞ்சினுள்.

"அக்கா! பயப்படாதே! உன் இஷ்டப்படி எல்லாம் நடக்கும்" என்று சுருளிமலை பதில் கூறிவிட்டுக் காளையுடன் போனுன். காளையும் அவனுமாக வேப்பமரத்தடிக்குச் சென்ருர் கள். சுருளிமலை காளையின் முகத்தையே பார்த்துக்கொண்டி ருந்தான். அவன் கண்களிலிருந்து ஆறெனப் பெருகிற்று நீர்! காளையை அங்கேயே நிற்க வைத்துவிட்டு அருகேயுள்ள தோட்டத்து வேலிப்பக்கம் போனுன். அங்கே முளைத்துக் கிடந்த ஒருவிதப் பச்சிலையைப் பறித்தான். அதை ஏன் அவன் பறிக் கிருன்? அந்தப் பச்சிலை விஷ மூலிகை ஆயிற்றே? மாடுகளைக் கொல்லக் கூடிய சக்தியுடைய பச்சிலை யாயிற்றே அது! அதை அவன் பறிக்க வேண்டிய அவசியம் என்ன?

கை நிறைய இலைகளைப் பறித்துக்கொண்டு சிவாவிடம் வந்தான். சிவாவின் முதுகைத் தட்டிக் கொடுத்தான். அது அவனை நக்கிற்று. காளையையே உற்றுப் பார்த்தான். பிறகு, கையிலிருந்த இலைகளை அதன் வாயில் நீட்டினுன். அது தயங்

கிற்று. ஆனல் அவன் விடவில்லை. சற்று பிடிவாதத்துடன் இலைகளை அதன் வாயில் திணித்தான். காளை, மறுக்காமல் அவைகளை விழுங்கிற்று. சுருளிமலை விக்கி விக்கி அழுதவாறு, அதன் கழுத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டான். காளைக்கு ஒன்றும் புரியவில்லை. அசையாமல் நின்று கொண்டிருந்தது.

சுருளிமலை, காளையைப் பார்த்து "கண்ணே சிவா!" என்றுன் மெதுவாக. பிறகு ஓங்கிக் கூச்சலிட்டான். ஒரு சமயம் சிவாவை அவன் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறுன். அது முதல் தான் சிவா அவனுக்கு நண்பனுயிற்று!

ஒரு வயலில் இறங்கி விளைச்சலைக் கெடுத்துவிட்டு சரியான படி சேற்றில் சிக்கிக்கொண்டு தவித்த சிவாவை ஏழெட்டு முரடர்கள் கூடி அடி அடியென்று அடித்துத் தள்ளினுர்கள். அப்போது சுருளிமலைதான் ஓடிப்போய் அவர்களை யெல்லாம் விலக்கி காளையை மீட்டுக்கொண்டு வந்தான். அது முதல் சிவாவும் அவனும் இணைபிரியாதவர்களாகி விட்டார்கள்! முரட்டு மனிதர்களிடம் சிக்கிய சிவாவைக் காப்பற்றிய சுருளிமலை இப்போது அதைக் கொல்லவே தீர்மானித்து விட்டான்!

ஏன்?

தன் அக்காளுக்காக!

அறவாழியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக!

அவனுல் அழக்கூட முடியவில்லை. சிவாவை ஓட்டிக்கொண்டு திடலுக்கு வந்தான். அறவாழி முன்னே கொண்டுபோய் நிறுத்தினுன். பறையொலி தீவிரமாக முழங்கிற்று.

அறவாழி, காளையை எதிர்க்கத் தயாரானுன். பொன்மணி, மயக்கமுற்றுக் கீழே விழுந்தாள். காளை அறவாழியின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. அவன் சமாளித்துக்கொண்டு விலகினுன். நெடுநேரம் சண்டை! கூடியிருந்தார் வியக்கும் வண்ணம் அறவாழி காளையிடம் போரிட்டான். நாலைந்து முறை அறவாழியின் வயிற்றைக் கிழித்து ஆளையே நசுக்கிவிடும் என்று அஞ்சக் கூடிய அளவுக்கு அவன்மீது பாய்ந்த காளை குறி தவறித் தரையிலே தலையை மோதிக் கொண்டது.

சுருளிமலை கொடுத்த மருந்து வேலை செய்யத் தொடங்கி விட்டது போலும்!

அறவாழியும் காளையின் பலகீனத்தை உணர்ந்துகொண்டு அதை அதிகமாக ஆட்டிப் படைத்தான். ஓடவைத்தான். பாய வைத்தான். தரையை முட்டவைத்தான். அறவாழியின்மீது பாயும் போதெல்லாம் காளை சுழன்று சுழன்று கீழே விழுந்து எழுந்தது. நெடுநேரம் போராட்டத்திற்குப் பிறகு, அறவாழி அதன் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு முதுகில் ஏறி உட்கார்ந்தான். ஒரே மகிழ்ச்சி! ஆரவாரம்! பறையொலி முழங்கிற்று, உற்சாகமாக!

பொன்மணி, கண் விழித்துப் பார்த்தாள். அறவாழி ஜெயித்து விட்டான்! அவனைச் சுமந்து நின்ற காளை கீழே விழுந்தது. எல்லோரும் காளையிடம் ஓடிவந்தார்கள் — காளை செத்துவிட்டது! சுருளிமலையின் ஆருயிர் நண்பன் தன் ஆட்ட பாட்டத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டு சவமாகக் கீழே கிடந்தான்!

பொன்மணி, அறவாழியிடம் ஓடினாள். அறவாழி, சுருளி மலையைத் தேடினான். அவன் அங்கு இல்லை. பொன்மணியை அழைத்துக் கொண்டு சுருளிமலையைத் தேடுவதற்கு வேப்பமரத் தடிக்கு ஓடினான். சிவா இறந்து விட்டதற்காக அவனிடம் மன்னிப்புக் கேட்கவே அவன் ஓடினான்.

வேப்பமரத்தடியில் அவர்கள் கண்ட காட்சி! அய்யோ! சுருளிமலையின் புல்லாங்குழல் கீழே கிடந்தது! பொன்மணி, அண்ணாந்து பார்த்தாள்! சுருளிமலை மரக் கிளையில் பிணமாகத் தொங்கிக் கொண்டிருந்தான்! அக்காளின் நல் வாழ்வுக்காகத் தம்பி தன் தோழனையும், தோழனின் பிரிவுக்காகத் தன் உயிரையும் இழந்தான்!

இனி என்ன? பொன்மணியும் பூஞ்சோலையும் அழுதனர்; புலம்பினர்!

பொன்னையாவினுடைய கல்லறைக்கு அருகே சுருளிமலைக்கு ஒரு கல்லறை – அவன் கல்லறைக்கு அருகே கோயில்காளை சிவாவுக்கு ஒரு கல்லறை!


கண்ணன், உயிருக்கு மன்றுடிக் கொண்டிருந்தான் சிங்காரம் சிறுகச் சிறுகப் பிழைத்துக் கொண்டான். கிழிக்கப்பட்ட வயிற்றிலிருந்து வடிந்த குருதியின் வழியாக வஞ்சக நினைவுகள் போய்விட்டதுபோல் கண்ணன் வாயிலிருந்து நல்ல வார்த்தைகள் வெளிபட்டன. சிங்காரத்தின் காலில் விழுந்து தன் தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். சிங்காரமும் அவனை மன்னித்து விட்டான் பிணமாகத் தொங்கிய மைனுவின் முந்தானியில் சிங்காரத்தின்மீது பழி சுமத்திக் கடிதம் எழுதியதும் தானேதான் என்பதைக் கண்ணன் ஒப்புக்கொண்டான். தன் நெஞ்சிலே இருந்த பாரங்கள் இறங்கியதால் மன நிம்மதியே மருந்தாகி அவன் உயிரைக் காப்பாற்றியது. பிறகு கற்பூரத்தின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்

கழுதை ஊர்வலம் நடத்துவதாகச் சபதம் செய்த சிங்காரம், "கற்பூரம்-கண்ணன்" கல்யாண ஊர்வலத்தை நடத்திமகிழ்ந்தான்!

தந்தையையும் - தம்பியையும் இழந்த பொன்மணி, தாயின் அன்பிலும் அறவாழியின் முகங்காண்பதிலும் ஆறுதல் கொண்டு வாழ்வதற்குத் துணிந்தாள்!

பஞ்சாயத்தார் பரமசிவம் அனைவரையும் வாழ்த்துவதற்குத் தயாராய் வந்து சேர்ந்தார்!

[ முற்றிற்று. ]




Wrapper Printed by : RAINBOW PRINTERS, Tiruchirappalli-8